தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி

எழுதியவர்:
பேராசிரியர் ராவ்சாஹிப்
மு. இராகவையங்கார்.

பதிப்பாளர்:
மு. ரா. நாராயணையங்கார்,
அட்வொகேட், மானமதுரை.

விலை ரூ. 3—00

ஸ்ரீ:

தொல்காப்பியப்

பொருளதிகார ஆராய்ச்சி.

[மூன்றாம் பதிப்பு]

பேராசிரியர் ராவ்ஸாஹிப்

மு. இராகவையங்கார்

எழுதியது.

பதிப்பாளர்

மு. ரா. நாராயண ஐயங்கார்,

அட்வொகேட், மானாமதுரை.

1960 [விலை ரூபா **3-00**

C. Sri-Kanta

Litt. D.

Sri Vilas
Rosmead Place,
Colombo.
28-8-1912.

செந்தமிழ்ச் செல்வர்களாகிய ஸ்ரீமத் மு. ராகவையங்காரவர்களுக்கு விஞ்ஞாபனம்.

இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்தை அடிக்கடி தெரிவிக்க விரும்புகிறேன்.

சில மாதங்களுக்குமுன் பத்திரிகைகளிற் பிரசுரம் செய்வித்திருந்தபடி, எனக்கு வந்த தொல்காப்பியப் பொருளதிகார வியாசங்களைத் தக்க மத்தியஸ்தர்களைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கச் செய்ததில் தாங்கள் எழுதியதே முதன்மைபெற்று விளங்குவதாகத் தெரிந்தமையின், முன்பு பரிசு கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்திருந்த ரூ. 200-ஐயும் இன்று மணியார்டர் மூலந் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அதனை மிகவும் பெரிதாக மதித்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

தங்களுடைய பாஷாஞானமும், ஆராய்ச்சி வன்மையும் மிகவும் மெச்சத்தக்கன. தாங்கள் இது போன்ற காரியங்களைச் செய்துகொண்டு நீடூழி காலம் வாழ்ந்திருக்கும்படி எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளின் திருவருளைச் சிந்திக்கின்றேன்,

இங்ஙனம்,
அன்பன்,
கு. ஸ்ரீகாந்தன்.

FOREWORD.

With pleasure I accept the duty of writing a few words of introduction to this Essay on Tolkappiyam, which was originally written at my request.

The Tolkappiyam is so wealthy of content that a hundred commentators may annotata it, and leave it, as though untouched, to a hundred more. That this antique work should have excited the interest and curiosity of the Tamil people, age after age, is not to be wondered at. Its subject-matter is the history of thə race itself, the life of ancient Tamilakam.

Pundit Sri. *M. Raghava Iyangar* has done his work well. His book, like so many others from the same pen, has a rare combination of deep learning and felicitous phrasing.

"Good wine needs no bush," says the English proverb. Aad even so with this rare essay. It justifies itself when tasted. My humble office is merely to say: "*Taste.*"

SRI VILAS,
Rosmead Place,
COLOMBO.
14th Jan 1922.

(Sd.) C. Sri-Kanta.

ஸ்ரீ

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இற்றைக்குப் பதினூருண்டுகட்குமுன் என்னுல் எழுதப் பெற்ற தொல்காப்பியப் பொருளதிகாரவாராய்ச்சி வெளிவந் ததுமுதல் தமிழ் மக்களால் அது விருப்புடன் ஏற்றுப் படிக்கப் பெற்று வருவதற்கும், சென்னைச் சருவகலாசங்கத்தாரால் Madras University) உயர்தர ஆங்கிலப் பரீக்ஷைகட்கும் வித்) வான் பரீக்ஷைக்கும் பலமுறை பாடமாக வைத்துக் கௌர விக்கப்பெற்று வருவதற்கும் யான்பெரிதும் உவப்பும் ஊக்கமும் அடைகின்றேன். இதன் முதற்பதிப்பு முழுதும் செலவாயின மையால், இரண்டா முறையாக இப்பதிப்பு இப்போது வெளி யிடப்பெறுகின்றது. பெரியமாற்றங்களின்றிப் பெரும்பான்மை முன்னமைந்த முறையையே இப்பதிப்புங் கொண்டுள்ளது. ஆயினும், இன்றியமையாத திருத்தங்களும், புதிய செய்தி களும், கீழ்க்குறிப்புக்களும் ஆங்காங்கு அமைத்துள்ளேன். இறுதியிலுள்ள பொருட்குறிப்பகராதி (Index) புதியதாகவே சித்தஞ்செய்யப்பட்டது. பலர் விருப்பத்தின்படி, இப்பதிப்பினை நல்ல கடிதத்திற் சிறப்பாகவும், விரைவாகவும் அச்சிட்டு முடித்து உதவிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரது காலத்தினுற் செய்த உதவி மாணப்பெரிதாகும். இப்பதிப்புக்கு உரியவற்றை யெல்லாம், 'செந்தமிழ்' உதவிப்பத்திராதிபர் ஸ்ரீ திரு. கி. இராமாநுஜஐயங்காரவர்கள், எனக்கு ஒரு சிரமமுமின்றி முன் போலவே செய்துதவிய அன்பினை நான் மறுமுறையும் பாராட்டாதிருக்கக்கூடவில்லை. தமிழ்மக்கள் இப்பதிப்பினையும் அபிமானிப்பார்கள் என்ற உறுதியுடையேன்.

திருவல்லிக்கேணி
2—12—28.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்

முதற் பதிப்பின் முகவுரை.

கொழும்புமாநகர்த் தமிழ்ப்பிரபுக்களுள் ஒருவராகிய ஸ்ரீமாந் Dr. கு. ஸ்ரீகாந்தனவர்கள், 1912-ஆம் எனக்கு அனுப்பிய கடிதம்—முன்பக்கம் பதிப்பிக்கப்பட்டிருப்பதை நோக்குவோர்க்கு, இவ்வியாசத்தை யான் எழுத நேர்ந்த காரணமும் பிறவும் நன்கு விளங்கக்கூடுமென்று எண்ணுகிறேன். மேலும் இவ்வாராய்ச்சிதமிழறிஞராற் சிறப்பாகமதிக்கப்பெற்றசெய்தி அப்போது வெளிவந்த பத்திரிகைகள் வாயிலாகப் பலர்க்குத் தெரிந்திருத்தல் கூடியதே. ஆதலால், இந்நூலின் வரலாறு பற்றி அதிகமாக நான் எழுதுவது மிகையேயாம். இவ்வியாசத்தை நான் எழுதி முடித்து ஏறக்குறையப் பத்து வருஷங்களாகியும், இதுவரை அச்சிடப்படாமல் தாழ்க்கும்படி நேர்ந்தது என் துரதிருஷ்டமே. இவ்வாறு தாமதிக்க நேர்ந்ததற்கு—இதனை எழுதுவித்த பிரபுவினிடம் இருந்த இதன் சுத்தப்பிரதியை அவர் நண்பரொருவர் பார்வையிடும்பொருட்டு இட்டாலி (Italy) தேசத்திற்குக்கொண்டுபோகும்படி நேர, அப்போது ஐரோப்பிய மகாயுத்தந்தொடங்கி அத்தேசத்தையும் பீடித்ததே முக்கிய காரணமாகும். அப்பெரும்போர் முடிந்த பின்பே இதன் கையெழுத்துப்பிரதியை அவர்கள் பெறும்படியாயிற்று. பிரதி கிடைத்ததும் என் விருப்பத்திற்கிணங்கி யானே அச்சிட்டுக்கொள்ளுமாறு அப்பிரபு அவர்கள் அன்புகூர்ந்து அதனை அனுப்பியுதவினார்கள்.

இப்போது சிற்சில திருத்தங்களும் கீழ்க்குறிப்புக்களும் ஆங்காங்கு அமைத்திருப்பது தவிர யான் அனுப்பியிருந்த அம்மூலப்பிரதியில் உள்ளவாறே இவ்வியாசம் பதிப்பிக்கப்படலாயிற்று. தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு இளம்பூரணவடிகள் எழுதிய உரையுள் அகத்திணை புறத்திணைப் பகுதிகள்மட்டும் இப்போது வெளிவந்துள்ளனவாதலால், அப்பகுதிகளிற்கண்ட விசேடங்களையும் கீழ்க்குறிப்பிற் காட்டியிருக்கிறேன்.

'பரிசுக்கு எழுதப்படும் வியாசங்கள் (இப்புத்தகவுருவில்)* 100-பக்கங்கட்கு மேற்போகாமல் அமைந்திருத்தல்வேண்டும்' என்று நூலையாக்குவித்தவர்கள் ஆதியில் நியமித்திருந்தார்கள்.

---

* 'கிரௌன் சைசில்' 1ம் பதிப்பு அமைந்தது

அதனன்படி குறித்த அளவுக்குள் வரும்படி கூடியவரை சுருக்கி யெழுதியும், அச்சில் இவ்வியாசம் 114-பக்கங்கள் ஆயின. ஆயினும், பொருளதிகாரத்தின் பெருமையையறிந்த தமிழறிஞர்க்கு, இங்ஙனம் பக்கங்கள் பெருகநேர்ந்தது மிகையாகத் தோன்றுதென்பது திண்ணம்.

பொருளதிகாரத்தின் இடங்கள் விளங்கும்படி சூத்திர வெண்களும் பக்கவெண்களும் ஏற்றபெற்றி இவ்வியாசத்துக் காட்டப்பட்டுள்ளன. சூத்திரவெண்கள் (12) என்றாற்போல வும் பக்கவெண்கள் (பக். 12) என்றாற்போலவும் அமைந்திருக் கும். உரைபெருகிக்கிடக்கும் இடங்களை எளிதில் அறிந்து கொள்வதற்காகப் பக்கவெண்களைக் காட்டுவது இன்றி யமையாதாயிற்று. இவ்வெண்கள் யாவும் காலஞ்சென்ற ஸ்ரீ: சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பித்த பொரு ளதிகாரப்பிரதியையே அநுசரித்தவை என்பதுஅறிதற்குரியது. வேறு நூலென்பது குறிப்பிடப்பட்டாலன்றி மேற்குறித்த இருவகை எண்களும் பொருளதிகாரத்தைப் பற்றியனவாகவே கொள்ளற்பாலன.

அகப்பொருட்செய்திகள், அதற்குரிய இயல்களில்மட்டு மன்றி, ஏனையியல்களிலும் ஆசிரியராற் பரக்கக் கூறப் படுகின்றன. அங்ஙனம் பரவிக்கிடக்கும் செய்திகளைத் தொகுத்து, அகப்பொருள் எளிதில் விளங்குமாறு ஒரு கோவைப்படுத்தி எழுதியுள்ளேன். யானெழுதிய முறை இறையனார்களவியலுரை முதலிய பின்னூல்களோடும் பெரும் பான்மை ஒத்ததேயாம். அன்றியும் சூத்திரங்களாலும் மேற் கோட் செய்யுள்களாலும் இப்பகுதி நிரம்பாமலிருத்தல் கருதி ஏற்புடைய சிலவற்றுக்கே அவை காட்டப்படலாயின.

புறத்திணையியல், அகமொழிய ஒழிந்த இயல்களினுஞ் சிறந்ததொன்றுதலால், அப்பகுதிக்கு அதிகமாகவே பக்கங்கள் கொடுக்கப்பட்டன. புறச்செய்திகள் பெரும்பாலவும் பழைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளைக் குறிக்கக்கூடியன வாதலால் அவற்றின் பெரும் பாகமும் இவ்வியாசத்துட் குறிக்கப்பட்டிருக்கின்றன.

உவமவியல் மெய்ப்பாட்டியல்களைப்பற்றி யான் எழுதி யவை, அவற்றிற் கூறப்படும் பொருட்டொகுதிகளைச் சுருக்க மாக உணரவிரும்புவோர்க்கு உதவியாகுமென்றே நம்புகிறேன்.

ஆனால், செய்யுளியல் நீண்டதோர் பகுதியாதலாலும் அதன் பேராசிரியருரையுள் எண்ணிறந்த விசேடங்களுண்மையாலும் அதன் பொருட்கூறுகளையெல்லாம் இச்சிறுநாலுள் விளக்குதல் இயலாததாகும். ஆயினும் செய்யுளியலைப்பற்றிப் பொது வாகத் தெரிதற்குரிய பாகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மரபியலுட் பண்டை வழக்குகளைப்பற்றிய விசேடங்களுட் பெரும்பாலவும் காணக்கூடும்.

ஆசிரியரால் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப் பட்ட சரித்திரக்கூறுகளையும், மக்களியல்புகளையும், பண்டை வழக்கவொழுக்கங்களையுந் தெரிந்தவரை உரியவிடங்களிலெல் லாம் விளக்கியிருக்கின்றேன். இதன் பொருட்டுத் தமிழ்நூல் களும் பிற நூல்களும் கூடியவரை ஆராய்ச்சி செய்யப்பட் டுள்ளன என்பது நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

இவ்வியாசத்துக் கூறப்படும் பொருள்களை இடநோக்கி யுணர்தற்கு உதவியாகப் பொருட்குறிப்பகராதி ஒன்று இறுதி யிற் சேர்க்கப்பட்டது. முடிவிற் காட்டப்பட்ட பிழைகளை அவற்றின் திருத்தங்களுடன் படித்துக் கொள்ளும்படியும். காட்டப்படாத குற்றங்குறைகளைத் திருத்தி யமைத்துக் கொள்ளும்படியும் நல்லறிஞரை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இவ்வாராய்ச்சியை வேறு கவலையின்றி எளிதில் எழுதி முடிப்பதற்குத் தக்க சௌகரியம் எனக்கு வாய்த்தது, இராம நாதபுரம் ஸம்ஸ்தானாதிபதிகளாய் விளங்கும் மாட்சிதங்கிய ஸ்ரீமத்- ஸேதுபதியரசரவர்கள் ஆதரவின்கீழ் யான் என் சொந்தவூரில் வசிக்கநேர்ந்தகாலத்தே யாதலால், இச்சிறு நூல் அடைந்த நன்குமதிப்புக்கு அவ்வரசரவர்கள் அளித்த ஆதரவே சிறந்தகாரணம் என்பதை ஈண்டுப் பாராட்ட வேண்டியவனா யிருக்கின்றேன்.

இவ்வியாசத்தை மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் பிரசுரங் களுள் ஒன்றாகப் பதிப்பிக்கும்படி அனுமதியளித்த அச் சங்கத்தாருடைய அன்புடைமை, என்னால் என்றும் மறக்கத் தக்கதன்று.

இந்நூலை அச்சிடுமுயற்சியில் எனக்குச் சிறிதுங் கவலை யில்லாமல் அச்சுக்கு உரியவற்றையெல்லாம் என் விருப்பப்படி

செய்துதவிய "செந்தமிழ்" உதவிப்பத்திராதிபர் ஸ்ரீமத். திரு. கி. இராமாநுஜ ஐயங்கார் அவர்கட்குப் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

Dr. ஸ்ரீகாந்தனவர்கள், என் விருப்பத்தின்படி சமீபத்தில் எழுதி யனுப்பிய ஆங்கிலமுன்னுரையையும் (Foreword) முன் பக்கத்திற் பதிப்பித்துள்ளேன்.

"கடல்கண் டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்" என்று கம்பநாடர் கூறியவாறு, தொல்காப்பியக்கடலில் என் மனக்கண்ணுக் கெட்டியவரை கண்ட ஒரு சிறுபகுதியையே இவ்வியாசத்துள் எழுதலாயினேன். பின்னும் காணுதற்குரிய பாகங்கள் எத்தனையோ உள்ளன. அவற்றை நல்லறிஞரே ஆராய்ந்து காண்டற்குரியர்.

திருவல்லிக்கேணி,
சென்னை
20—1—22.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

பொருளடக்கம்.

ஸ்ரீ:

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

தொல்காப்பியத்தின் பெருமை.

இந்நிலவுலகின் கண்ணே, மக்கட்சாதியாரால் வழங்கப் பெற்றுவரும் பாஷைகள் எண்ணிறந்தனவேனும், அவற்றுள்ளே பழமையும்பெருமையுமுடையவாய்ச் சீர்திருத்தம் பெற்றுவிளங்கும் மொழிகள் சிலவேயாம். அங்ஙனம் சீர்திருத்தம் பெற்ற பரதகண்டத்துப் பழம்பாஷைகளிலே வடமொழியாகிய ஆரியமும், தென்மொழியாகிய தமிழும் சிறந்தவையென்பது நல்லறிஞர் பல்லோரால் முன்னரே தெளியப்பட்டது; ஆதலால் அதனை ஈண்டாராயப்புகுவது மிகையாகும். இனி அவ்விருமொழிகளுள் வடமொழியின் பழம்பெருமையை நிலைநாட்டுதற்கு அதன்பாலுள்ள வேதசாத்திரங்கள் எவ்வாறு சிறந்துவிளங்குவனவோ அவ்வாறே தென்மொழியின் பழம்பெருமையைக் குறித்தற்குரிய நூலொன்று மிகநெடுங்காலமாகத் தமிழ்மக்களாற் சேமிக்கப்பெற்று வந்துள்ளது. அவ்வரியபெரிய நூலாவது தொல்காப்பியமே,

இப்போது வழங்கும் தமிழ்நூல்களிலே இதனினும் முற்பட்டு தோன்று தென்மொழியில் இல்லையென்றே சொல்லலாம். இதன் ஆசிரியர் "ஆனைப் பேருமை யகத்திய னென்னும்—அருந்தவ முனிவனுக்கிய முதனூல்-பொருந்தக் கற்றுப்புரை தப வுணர்ந்தோ"ருட் சிறந்த தொல்காப்பிய முனிவரா வர். இவரை பார்க்கவ குலத்தவரான சமதக்கினியின் புதல்வர் என்றும் திரணதூமாக்கினி என்ற இயற்பெயருடை யவ ரென்றும்கூறுவர், நச்சினார்க்கினியர்.* இம்முனிவர்பெருமான், இடைச்சங்கமிருந்த நிலந்தருதிருவிற் பாண்டியன்காலத்தவ ரென்பதும், தமிழ்நாட்டில்வழங்கிய உலகவழக்குச் செய்யுள் வழக்குகளையும், தம்மாசிரியர் அகத்தியனாரியற்றிய முதனூலை யும் ஆராய்ந்து இலக்கண நூலொன்று இயற்றினரென் பதும், இயற்றியதனை முற்கூறிய பாண்டியனது அவைக் களத்தே அதங்கோட்டாசான் என்ற நல்லிசைப்புலவர்கேட்ப அரங்கேற்றினர் என்பதும், பிறவும், இம் முனிவர்க்கு ஒரு சாலைமாணுக்கரான பனம்பாரனார்கூறிய பாயிரச்செய்யுளால் அறியப்படுகின்றன. இடைச்சங்க நாள்தொடங்கி நல்லறி ஞர்க்கெல்லாம் பெரும்பிரமாணமாக விளங்கும் இலக்கண நூல் இத் தொல்காப்பியம் ஒன்றுமேயாம். இதன் முதனூ

---

* 'தொல்காப்பியன்-பழமையான காப்பியக்குடியில் உள்ளோன்' என்பது உரை; காப்பியம் என்பது பார்ப்பாரது பழைய குடிவகையு ளொன்று என்பது "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" என்னுஞ் சிலப்பதிகார வடியாலும் (30—83) விளங்கும், காப்பியம்—காவியம், கவியாகிய சுக்கிர னது வமிசம் என்பது பொருள். இவ்வமிசத்தோர் பிருகு மஹருஷியின் மரபினராதலால், பார்க்கவர் எனவும் படுவர். பல்காப்பியனார், வெள்ளூர்க்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பிய னார், முதலாய புலவர்களும், பார்க்கவ அல்லது காவிய குலத்தவராதல்வேண்டும். இனிக் கபிலர் என்ற புலவரின் வேறுபாடறியத் தொல்கபிலர் (குறுந்-14) என்ற புலவர் சங்க நூலிற் சிறப்பிக்கப்படுதல்போலக் காப்பியர்பலரின் வேறு பாடறிதற்குத் தொல்காப்பியர் என அடையுடன் வழங்கப் பட்டார் எனினும் பொருந்தும்; பராசரரென்ற முனிவரி னின்று வேறுபாடறிதற்கு "விருத்தபராசரர்" என வேறொருவர் வடநூலுட் கேட்கப்படுதலுங் கண்டுகொள்க,

லாகிய அகத்தியம், இடைச்சங்க காலம்வரை வழங்கியதாகத் தெரியவரினும், கடைச்சங்கநாளிலே அதன் வழக்கு வீழ்வதாயிற்று. இப்போதோ, அந்நூலிற் சில சூத்திரங்கள் ஆங்காங்கு உரைகாரர்களால் ஆளப்படுதல் தவிர வேறு காணப்படவில்லை. இவ்வாறு "வீங்குகடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்,—தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென" அருந்தவமுனிவரான அகத்தியனாரால் ஆக்கப்பட்ட முதனூலானது முற்றும் வழக்கொழிந்ததற்கு நச்சினார்க்கினியர் வேறு கதைக்காரணங் கூறுவர். ஆயினும், அதன் வழிநூலாகத் தோன்றிய தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளே அம்முதனூலின் வீழ்ச்சிக்குச் சிறந்தகாரணமென்று சொல்லலாம். இத்தொல்காப்பியந் தோன்றியகாலந்தொட்டு அது விதிக்கின்ற ஆணைப்படி நடப்பதையே முன்னோரும் பின்னோருமாகிய தமிழ்மக்களெல்லாம் தமக்குரிய கௌரவமாகக் கொண்டொழுகினர். "கூறிய குன்றினு முதனூல் கூட்டித் தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்—ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே" எனப் பல்காப்பியனார் என்னும் பழம்புலவர் கூறுதலுங் காண்க (தொல். பக்.809) இடைச்சங்கத்தில் இதனுடன் உதித்த நூல்களெல்லாம் ஏறக்குறைய இறந்தொழியவும் இந்நூன்மட்டும் இன்றுவரை நின்று நிலவுவது தமிழ்நாட்டாரது பெரும் பேறேயாம்.

தொல்காப்பியப் பகுப்பு.

இத்தகைய பெருமைவாய்ந்த தொல்காப்பியமானது, எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என முப்பெரும் பகுதியுடையதாய், அவ்வெழுத்துச் சொற் பொருள்களின் இலக்கணங்களை விரித்துச்செல்வதாம். எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்து அச்சொற்றொடர் கருவியாகப் பொருளுணர்ச்சி பெறவேண்டுதலால், அம்முறையில்வைத்துத் தொல்காப்பியம் அவற்றைக் கூறுவதாயிற்று. எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்த மாணாக்கன் பொருளதிகாரங் கற்பது இன்றியமையாததாக முன்னோர் கருதிவந்தனர். "எழுத்துஞ்சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின்

பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று களவியலுரை [1] நுதலிப் புகுதலால் விளங்கும். தொல்காப்பியத்தின் பகுப்பாகிய மூன்றதிகாரங்களும் தனித்தனி ஒன்பதியல்கள் உடையனவாக ஆசிரியரால் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், பொருளதிகாரத்து அமைந்துள்ள இயல்களையும் சூத்திரத்தொகையையும் புற்றிய இரண்டு வெண்பாக்கள் 2 அடியில் வருமாறு:—

"ஈட்டு மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியல்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுள்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

"பூமலர்மென் கூந்தால்! பொருளியலின் சூத்திரங்க
ளாவவறு நூற்றறுபத் தைந்தாகும்—மூவகையால்
ஆயிரத்தின் மேலு மறுநூற்றுப் பஃதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்"

இவற்றுற் பொருளதிகாரவியல்கள் ஒன்பதென்பதும், சூத்திரங்கள் 665-என்பதும், தொல்காப்பியமுழுமைக்குமுரிய சூத்திரத் தொகை 1610-என்பதும் விளங்குவனவாம். இப்போது பொருளதிகாரச் சூத்திரத்தொகை 666 ஆக உள்ளது. இஃது ஒரு சூத்திரத்தை இரண்டாகக்கொண்டு உரைகாரர் பொருள்கூறியதனுற் போந்ததாம். இவ்வொன்பதியல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கும் அகப்பொருளையும், புறத்திணையியல் புறப்பொருளையும், ஏனை யியல்கள், முறையே மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபுகளையும் விளக்குவன.

உரைகளும் வழிநூல்களும்

இத்தொல்காப்பியம் பழைய உலகவழக்கையும், செய்யுள் வழக்கையும் இலக்கணமுறையால் விளக்குவதாதலால், அவற்றைத் தெரிதற்கு முன்னோர் இயற்றிய உரைகள் பேருதவி

1 களவியல்-இறையனரகப்பொருள் (தொல். பக்-748).
2 செந்தமிழ். தொகுதி-உ; பக். 117.

யாவன. இவ்வுரைகளின் உதவி இல்லையேல், பெரும்பாகமும் இருண்டுகிடக்கும்தொல்காப்பியக் கடலிலுள்ள அரும்பெறன் மணிகளின் தன்மைகள் நம்மால் அளந்தறிய முடியாவாம். அதனுல் அவ்வுரைகாரர் கூற்றுக்கள் மூலத்தோடொத்த பெருமையுடையனவாக மதிக்கற்பாலன. தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவருள், இளம்பூரணவடிகள், பேராசிரியர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர் என்ற நால்வருஞ் சிறந்தோராவர். இவருள், நச்சினுர்க்கினியரியற்றிய உரையே பொருளதிகாரத்துக்கு இப்போது கிடைத்திருப்பது.[1] ஆயின் அச்சேறிய பொருளதிகாரப்பதிப்பிலே செய்யுளியலுக்குள்ள பகுதி, நச்சினுர்க்கினியரதன்றிப் பேராசிரியரியற்றிய தென்பது, "செந்தமிழ்" வாயிலாக முன்னரே பிரசித்தமானது.[2] இதுபோலவே அவ் வச்சுப்பிரதியிற்கண்ட மெய்ப்பாடு, உவமம், மரபியல்களின் உரைப்பகுதிகளும், பேராசிரியர் எழுதியன என்பது தெளிவாகிறது.[3] அவ்வுரைகள் யாவும் பழமையும் பெருமையும் உடையனவாதலால், அவற்றினுதவிகொண்டு தொல்காப்பியத்திற் கண்ட அரும் பொருள்களைத் தெரிந்துகொள்ளத் தடையில்லையாம். அன்றியும், இப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட அகம், புறம், மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபு என்பவற்றின் கருத்

---

[1] பொருளதிகாரத்துக்கு உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் எழுதிய உரையுள் அகத்திணையியல், புறத்திணையியற் பகுதிகள் இப்பொழுது அச்சாகி வெளியேறியுள்ளன. அவ்வுரையுட்கண்ட விசேடங்களை ஆண்டாண்டுக் கீழ்க்குறிப்பிற் காட்டியுள்ளேம்.

[2] இவ்விஷயம். சேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்களால் முதன்முதல் ஆராய்ந்தறியப்பட்டு, அவர்களால், செந்தமிழ்ப் பத்திரிகையில் உ-ம் தொகுதி கக-ம் பகுதியில் வெளியிடப்பட்டது. இப்போது நச்சினுர்க்கினியரது செய்யுளியலுரை முழுதும் தனிப்புத்தகமாக அவ்வர்களால் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுமுள்ளது.

[3] செந்தமிழ், தொகுதி-உ, பகுதி-கக.

துக்களைத் தெளிதற்குத் தொல்காப்பியத்துக்குப் பின்ன ரெழுந்த இறையனார்களவியல், நாற்கவிராச நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம், வீரசோழியம், முதலிய உரையுடன் கூடிய இலக்கணநூல் களும், சங்கச்செய்யுள்களும் பிறவும் தக்க கருவியாக உள் ளன. ஆதலால் இவ்வாராய்ச்சிக்கு இந்நூல்களும் ஏற்ற பெற்றி கொள்ளப்படுமென்க. இனி நூலுட் கூறப்படும் விஷ யங்களுட் புகுவோம்.

பொருளதிகாரம்

பொருளதிகாரமென்பது பொருளினது இலக் கணத்தை உணர்த்தும் அதிகாரம் என விரி யும். [அதிகாரம்-முறைமை] பொருளாவன அகப்பொருளும் புறப்பொருளுமாம். அன்றி, அகத்திணையில் இன்பத்தையும், புறத்திணையில் அறம்பொ ருள் வீடுகளையும் ஆசிரியர் கூறுதலால் உறுதிப்பொருள் நான்கையும் இவ்வதிகாரம் உணர்த்துவதென்று கொள்ள வும் படும். (பக்-க.)

இனி, மேற்கூறிய பொருள்களையே கூறவந்த ஆசிரியர், மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்பவற்றையும் சேர்த்துப் பொருளதிகாரத்துக் கூறியதென்னை? எனின், கூறுவேன். தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்துஞ் சொல் லதிகாரத்துஞ் செய்யுள்வழக்கிற்கும், உலகவழக்கிற்கும் உரியவற்றைக் கலந்துகூறிப் பொருளதிகாரத்திற் பெரும் பான்மை உலகவழக்குக்கு வேண்டுவனவே கூறத்தொடங்கி னர்: தொடங்கினவர் அவ்வுலகவழக்கை உணர்த்துவதற்குப் பெரிதும் உபகாரப் படுதலையுடைய மெய்ப்பாடு உவமங்களை யும், அவ்வழக்குப்பற்றிப் பாடுதற்குரிய செய்யுளிலக்கணங் களையும், உலகவழக்குச் செய்யுள்வழக் கிரண்டற்கும் பொதுவாகிய மரபுகளையும் பொருளியல்களோடு சேர்த்துக் கூறுவாராயினர் என்க. (செய்யுண் மரபியல்களின் அவதாரிகை.)

அகமும் புறமும்.

இனி, ஆசிரியர் தாம் கூறப்புகுந்த பொருட் டொகுதியை தமிழ்மக்கள் முறைப்படி[1] அகத் திணை புறத்திணை என இரண்டு பகுதியாகக் கொண்டு, அவற்றுக்கேற்ப இயல்கள் வகுத்துக்கூறுவர். அவற்றுள், அகத்திணை என்பது, அகவொழுக்கம் அஃதாவது ஒத்த அன்போடு ஒருவனும் ஒருத்தியும் கூடு கின்றகாலத்துப் பிறந்த வின்பம், அக்கூட்டத்தின்பின் இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படாததாய், யாண் டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதாம்; புறத் திணை என்பது புறவொழுக்கம்; அஃது ஒத்த அன்புடைய தலைவன், தலைவி, இவரானன்றி, எல்லாரானுந்துய்த்துணரப் படுவதும், இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவது மாம். இவற்றுள், இன்பப்பகுதியான அகத்திணையாவது களவியல்நெறி கற்பியல்நெறி என இரண்டாகப் பகுக்கப் பட்டு இப்பொருளதிகாரத்தே பல இயல்களால் விரிக்கப் படுகின்றது.

அகப்பொருளின் சுருக்கவரலாறு

இவற்றுட் களவியல் நெறியாவது—ஒருவனும் ஒருத்தியும் அந்தரங்கத்திற் கூடும் கூட்டம். இக்கூட்டம்பற்றித் தமிழ்நூல்கள் கூறும் வர லாற்றை முதலிற் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல் பின்வருஞ் செய்திகளையறிவதற்குப் பெரிதும் உபகார மாகும். அவ் வரலாறுவது:— உருவுந் திருவும் அறிவுங் குலமு முதலிய ஒப்புயர்வற்றுவிளங்குந் தலைவனொருவன் வேட்டைவிருப்பால் மலைச்சாரலொன்றன்பக்கத்தே தனி யாய் வந்தானாக—ஆங்குத் தன் தோழியரோடு தினைப்புனங் காத்துவந்தவளும் உரு, திரு முதலியவற்றால் ஒப்புயர்வற்ற

---

[1] "தமிழின் றுறைவாய் நுழைந்தனையோ" என்னும் திருக்கோவையடியின் (20) விசேடவுரையிற் பேராசிரியர் "தமிழின்றுறைகளாவன, ஈண்டகமும் புறமுமாகிய பொருட் கூறு" என்றெழுதுதல் காண்க. வடநூன் முறையாயின் அறம், பொருள், இன்பம் எனப் பாகுபாடுபெறுமென்பர் பரிமேலழகர் (குறள் காமத்துப்பால், அவதா.).

வளுமாகிய மலைவாணர்மகளொருத்தி விளையாட்டுவிருப் பாற் றோழியர் தனித்தனி பிரிந்தநிலையில், தானுந் தனியளாய்ச் செல்லும்போது அத்தலைவன்முன்பு எதிர்ப்பட் டனள். எதிர்ப்பட, இருவரும் ஊழ்வயத்தால் உள்ளங்கலந்து அவ்விடத்தே கூடிமகிழ்ந்து, பின்னர் ஒருவர்க்கொருவர் பிரிவாற்ருது ஒருவாறு ஆற்றுவித்துக்கொண்டு தத்தமிட நோக்கிச் சென்றனர். இவ்வாறு விதியாற் கூட்டப்பட்டுப் பிரிந்த தலைமகன் தான் காதலுற்ற தலைவியைத் திரும்பக் காணுமவாவினுற் றூண்டப்பட்டு, முன்னுட் கூடிய இடத்தை நாடிச்செல்ல, அங்ஙனமே அன்புதூண்ட ஆங்கு வந்தெதிர்ந்த தலைவியைத் தலைவன் முன்போல எதிர்ப்பட்டுக் கண்டு மகிழ்ந்து காதலாற் கலந்தான். இவ்விதம் மூன்ரு முறை கூடும்போது தன் பாங்கனல், தலைவியிருப்பிட மறிந்துசென்று அவளைச் சேர்வன். இனித் தோழியரால் எப்பொழுதுஞ் சூழப்பட்டுள்ள தலைவியை இங்ஙனமே பலகாலுந் தனியிடத்தெதிர்ப்பட்டுக் கூடுதல் அருமையா யிருத்தல்பற்றித் தலைவியைத் தடையின்றி அநுபவிக்கக் கருதியவனுய், அதற்குத் தக்க துணையாவாள் அவள் காதற்றோழியே என்பதை அறிந்துகொண்டு அவள்பாற் சென்று, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தன் குறைகூறி வேண்ட, அவள் பலபடியாக ஆராய்ந்து இருவர்க்குங் கூட்டமுண்மை உணர்ந்து, பின் 'இனி நாமும் இதற்கு உடம்படலே நலம்' என்று அவ்விருவரையும் கூட்டுவதற்கு முயல்வள். இங்ஙனம் தோழியாற் பலமுறை தலைவன் கூடி வருமிடையில், தலைவியாற் காக்கப்பட்டுவருந் தினைப்புன முற்றிக் கதிர்கொய்தலேனும் பிறகாரணமேனும் நிகழத் தலைவிக்கு அக்காவல் நீங்கி மனையகத்தே தங்கும்படிநேர் தலும், அக்காலத்து இரவில், தோழி அவ்விருவரையுங் கூட்டமுயலுவள். இங்ஙனம் நிகழும் களவொழுக்கம் முதலிற் சிறுகச் சிலர்பலர்க்குத் தெரியவந்து நாளடைவில் ஊரிற் பேரலராய்ப் பரவ, அதுகாரணத்தாற் பெற்ருேர் தலைவியை இற்செறித்துத் தக்கபடி காவற்படுத்துவர். அதனுல் தலைமகனைக் காணப்பெருத ஆற்ருமை தலைவிமாட்டுப்

பெருகுதல்கண்டு, தோழி, கற்புநெறிப்பட்ட இவள் இனி இறந்துபடவுங் கூடுமென்று கருதி இதற்கு வேறு உபாய மொன்றுங் காணாதநிலையில், அவள் தலைவனையடைந்து 'நீர் இவளை உடன்கொண்டுசென்று மணந்து கொள்வதே இனிச் செய்யற்பாலது' என்றுகூறி, ஒருவரும் அறியாவகை தலைவியை வெளியேற்றித் தலைமகன்பாற் சேர்ப்பிக்க, அவன் அவளை உடனழைத்துக்கொண்டு, தன்னூர்நோக்கிச் செல்வன்; செல்லுமிடையில், தலைவியின் சுற்றத்தார் அக் களவறிந்து வந்து தலைவனை மேற்செல்லாவாறு தடுக்கவும், அவள் தன் காதல் முழுவதும் தலைவன் பாற்சார்த்தி நிற்பது கண்டு இவள் கற்புநெறிப்பட்டாள்' என்று அறிந்து கொண்டு 'அவ்விருவர்க்குந் தீங்குசெய்யாது திரும்பிச் செல்வர். இங்ஙனமாகத் தலைவனுடன் மகிழ்ந்து சென்ற தலைவி அவனூரடைந்து வாழ்வளென உணர்க.

கற்பியல் நெறியாவது இங்ஙனம் உடன்கொண்டுபோய தலைவன் தன்னூரிலேனும், தலைவியின் சுற்றத்தார் சம் மதித்து வேண்ட அவளூரிலேனும் விதிமுறைப்படி அவளை மணம் புரிந்து இல்லற நடாத்தலும், பின் உலகின் நிலையின் மையை யுணர்ந்து வீடுபேறு முயறலுமாம்.

அகப்பொருள் பற்றிய இருவகை வழக்குகள்

இவற்றால், வேறுசில வேறுபாடுகளு முண் டேனும், மேற் குறித்த வரலாறே களவு கற்புக்களின் சுருக்கம் என்பது தெரியலாம் ஆகவே, இவ்விரண்டு பகுதிகளும் தமிழ் நாட்டாரது அநாதியான வாழ்க்கை முறையில், விவாகத்துக்கு முன்னும் பின்னும் நிகழும் இரண்டு முக்கியநிலைகள் என்பது அறியப் படும். இவ்விரு நிலைகள் பற்றியமைந்த ஒழுக்கங்கள் தமிழ் மக்கள் தொன்று தொட்டு வழங்கிய உலகியலகளாய்ப், பின்னரே புலவர்களாற் சிறப்பித்துப் பாடப்பெற்றும், இலக் கணங் கற்பிக்கப்பட்டும் செய்யுள் வழக்கடைந்தன, என உணர்க. இஃது, "உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்—வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே"

'நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என ஆசிரியரே குறிப்பித்தலால் அறியத்தக்கது. நச்சினார்க்கினியரும், "இஃது இல்லதெனப் படாது உலகிலேயாம்; உலகியலின்றேல், 'ஆகாயப்பூ நாறிற்று' என்றுழி அது சூடக்கருதுவாருமின்றி மயங்கிக் கூறினான் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்" (பக்-5-6 என் றெழுதினர். இவ்வாறு, இக் களவு கற்புக்கள் ஒரு சார் மக்களின் வழக்கத்தோடு சம்பந்தப்படாத வெறுங் கற்பனைகளே யாயின், அவற்றின் பல்வேறு விகற்பங்களைச் செய்யுள்வழக்கோடும் உலகியல் களோடும் பொருந்தவைத்து இத்துணையளவாகப் பழைய நூல்கள் எடுத்தோதா என்க. எனவே, பொருளதிகாரத்துக் கண்ட அகப்பொருள் பற்றிய செய்யுள்வழக்கெல்லாம் பண்டைத் தமிழ்மக்கள் கொண்டொழுகிய ஒருவகை உலகவழக்கினின்றே உற்பத்தியாகிவிரிந்ததென்பது போதரும்.

உலக வழக்கம்

இனி அவ்வுலகவழக்கம் ஆதியில் எவ்வாறு அமைந்திருந்த தென்பதை முதலில் நோக்குவோம். மேற்கூறிய அகப்பொருட் சுருக்கத்தை யாராயுமிடத்து — இல்வாழ்க்கை யடைவதற்குமுன் ஒருவன் ஒருத்தியை மறைவிற்கண்டு, தன்பாலுள்ள அன்பை அவட்கு வெளியிட்டுக் கூடி ஒழுகுதலும், அக்கூட்டம் வெளிப் பட்டபின் பெண்ணின் பெற்றோர் அதற் கிணங்குதலும் இணங்காராயின் அவரறியாம லப்பெண்ணைக் கரந்தழைத் துச்சென்று தனக்குரிய மனையாளாகக்கொண்டு வாழ்தலும் போன்றமுறை இந்நாட்டில் வழங்கிவந்தமை அறியப்படும். படவே, தமிழ்மக்களது பண்டையொழுக்கமானது எண் வகைமணங்களுள், ஒருவர்க்கொருவர் மனமொத்துக்கூடும் காந்தருவமணம் போன்றதென்று சொல்லலாம். ஆனால், களவுக்கூட்டத்தின் பின்னர், ஒருவன் ஒருத்தியை அவள்

---

[2] இராக்கதமணமானது தென்னாட்டார்க்குள்மட்டுமன்றி வடநாட்டு மக்களாலும் ஒருகாலத்தேபிரபலமாகஅனுஷ்டிக்கப் பட்டதேயாகும். இதனை, வியாசபாரதத்தில் "எட்டாவதான

சுற்றமறியாவகை உடன்கொண்டு போதலும் பழையவழக்கில் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது. எனினும் தலைவியின் சம்மதம்பெற்றே அவ்வுடன்போக்கு நிகழ்வதாகச் செய்யுள் வழக்கம் காணப்படுதலால், இவ்வொழுக்கத்தை ஒருதலைக் காமமாகிய இராக்கதமுறைப்படுத்தாது ஒத்த அன்புபற்றிய காந்தருவ முறையாகவே கொண்டனர் முன்னையோர். இங்ஙனம், செய்யுள்வழக்கிலே பழைய தமிழ்மணமுறையை மிகவும் சுத்தமுடையதாக முன்னோர் புனைந்து கூறியிருப்பினும், உலகவழக்கமானது அச்செய்யுள்வழக்கினும் சிறிது வேறுபட வழங்கியிருத்தல் கூடியதேயாம்; அஃதாவது தலைவியின் உடம்பாடுபெற்றன்றிப் பெருமலும் அவள்சுற்றமறியாமல் ஒருவன் ஒருத்தியைக் கொண்டுசெல்வது முதலியனவாம். தலைவியின் உடன்பாடின்றி அவளை வலிந்து கொள்வதும் முன்பு நிகழ்ந்துவந்ததென்பதைத் தொல்காப்பியனர், "மகட்பாற்காஞ்சி" என்ற புறத்துறையால் வெளிப்படக்கூறியதோடு, "பொய்யும் வழுவுந்தோன்றிய பின்னர்-ஐயர்யாத்தனர் கரணம் என்ப" என்ற கற்பியற் சூத்திரத்தாலுங் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே தமிழ்நாட்டில் காந்தருவம்போன்ற ஒழுங்கான களவுமுறையேயன்றி, ஒழுங்கற்ற களவுமுறையாகிய இராக்கதம் போன்றனவும் முற்காலத்து வழங்கலாயின என்பது உய்த்துணரத்தக்கதாம். இவ்வாறு ஒழுங்கற்ற மணமுறைகளை விலக்கி ஒத்த அன்புபற்றிய காந்தருவத்தையும், அதன்பின்னர்க் கற்பியலையும் முன்னோர் விதித்துப் போந்தனரெனவும், இங்ஙனம் விதிக்கப்பட்ட களவுங் கற்புமே இத் தொல்காப்பியத்துங் கூறப்பட்டன எனவும் உணர்ந்து கொள்க.[2]

---

[1] இம்மணம் "தமிழ்கூறு நல்லுலகத்து" வழக்காகிய ஒழுக்கத்தையே பெரும்பான்மை குறிக்குமென உணர்க.

[2] பிற்கூறிய சூத்திரத்தின் கருத்தாவது:- உலகியலாகிய பழைய களவுமணத்தில் "பொய்யும் வழுவும் தோன்றியதனுல் அக்குற்றங்கள் நீங்கக் கற்பியன்முறையை முனிவர் தமிழ்மக்கட்கு விதிக்கலாயினர்" என்பதாம்.

மேற்குறித்த கொள்கையை அடியிற்காணும் செய்திகளும் வலியுறுத்துவன. இக்களவொழுக்கமானது எல்லா நிலத்துக்கும் பொதுவாக உரியதேனும் (பக்.25. சூத்-105) குறிஞ்சியொழுக்கமாகவே பழைய நூல்கள் இதனைச் சிறப்பித்தலால் மலைநாட்டில் இவ்வழக்கு மிக்குவழங்கியமை உய்த்துணரப்படுகின்றன. இதற்கேற்ப, மலைவாணராகிய மக்களிடத்தே, அதன் மாதிரிகைகள் இன்றும் நன்குகக் காணப்படுகின்றன. இம்மக்கள் நிகழ்த்தும் விவாகச்சடங்குகளை நோக்குமிடத்து, அவை, அவரது புராதன சரித்திரத்தைப் புலப்படுத்துவனவென்றும், அம்மணமுறையினின்று இராக்கதமணம் போன்றதே அவர் கொண்டொழுகிய ஆதிவிவாகமென்பது நன்கறிப்படுமென்றும், அதுவே பிற்காலத்தில் நட்புமுறையாக மாறி நடக்கலாயிற்றென்றுங் கூறுவர்.[1] இம்மலைவாணராவார்—கஞ்சம்பிரதேசத்தே கொண்டர் சவரவர்களும், கோதாவரியிற் கோயிகளும், கோயம்புத்தூரில் ஊராளிகளும், திருவாங்கூர்ச் சீமையில் முதுவர்களும் வேறுசிலருமாவர். இவரெல்லாம் விவாக நிகழ்ச்சிக்குமுன் மெய்யாகவோ பொய்யாகவோ, தாம் விரும்பியபெண்ணை ஒருவரு மறியாவகை களவிற் கொண்டு

ராக்ஷஸமே அறிஞர்களால் விரும்பப்பட்டதென் றறியுங்கள் ....தருமசாஸ்திரமறிந்தோர் வலிந்து கொண்டு போகப் பட்டவளே சிறந்தவளென்று கூறுகின்றனர்'' எனவரும் பீஷ்மர் வாக்கியங்களால் அறியலாம். (ஆதிபர்வம், பக். 404; ஸ்ரீ. ம. வி. ராமாநுஜாசாரியரவர்கள் பதிப்பு). முற்காலத்தே க்ஷத்திரியர்க்குள் இம்மணம் மிக்கிருந்ததினால், ராக்ஷஸவிவாகத்துக்கு ''க்ஷாத்ரம்'' என்று ஒருபெயர் வடநூல்களில் வழங்கியதென்பர். ''காந்தர்வ ராக்ஷஸ மிரண்டும் க்ஷத்திரியர்க்குச் சிறந்தனவாதலால் இவற்றுள் இரண்டேனும் ஒன்றேனும், அரசர் செய்து கொள்ளலாம்'' என மனுவுங் கூறுதல் அறியத்தக்கது (அத். 3; சு. 26). தென்னாட்டிலும் இம்முறை தழுவப்பட்டதென்பதனை ''மையின் மதியின் விளங்குமுகத்தாளை, வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று'' என்ற குறிஞ்சிக் கலியடிகளும் குறிப்பிடுகின்றன. (கா. 2.)

[1] E, Thurstons' Ethnographic Notes in Southern India p. 8.

போமிடையிற் பெண்ணின் சுற்றத்தார் வந்து தடுக்கச் சம்பந்திகளைச் சார்ந்த இருபாலார்க்கும் போலியுத்தம் நிகழ்வதும், பின்னரே சுற்றத்தாரால் மணமுடித்துக்கொள்வதும் வழக்கங்களாக உடையர். இவருள் ஊராளிகளும் முதுவர்களும், தமிழ்முதுகுடியைச் சார்ந்தவர்கள். 'பிற்கூறிய முதுவரது மணநிகழ்ச்சியில், மணமகன் தான்விரும்பிய கன்னி தண்ணீரெடுக்கவேனும் விறகு பொறுக்கவேனும் வெளியேறும் சமயம் பார்த்திருந்து, அவளை ஒருவரும் அறியாவகை களவிற் கொண்டுசெல்வதும், சென்று மலையின் ஏகாந்தமான பிரதேசமொன்றிற் சிலவாரம் வரை கூடிவசிப்பதும், இதற்கிடையிற் சுற்றத்தார் அவளைத்தேடியுங் காணது போவராயின், அவ்விருவரும் திரும்பிவந்து பெண்ணின் பெற்ருேரால் மணமுடித்துக் கொள்வதும் இன்னும் நிகழ்ந்துவரும் வழக்கங்கள் என்பர்.[1]) இம் முதுவர் குறிஞ்சிநிலத்துப் பழைய தமிழ் மக்களே என்பதை, அவர் பெயரே குறிப்பிக்கும். இம்மலை நாட்டுப் புராதன மக்களிடம் பெண்கோடலை முற்காலத்தரசரும் விரும்பிவந்தனரெனவும், பெண்கொடுக்க அவர் மறுத்தனராயின், அவ்வரசர் தம்வலிகாட்டி வலிந்து கொண்டுசெல்ல முயன்றுவந்தனரென்றும், தொல்காப்பியனரே கூறுதல்நோக்கற்பாலது. இதனை நிகர்த்தும் மேல்வந்த வேந்தனெடு முதுகுடி—மகட்பா டஞ்சிய மகட்காஞ்சி யானும் (பக். 183) என்னும் புறத்திணைப் பகுதியால் உணர்க. இதன்பொருள்- "பெண்கொள்ளுதற்கு ஒத்தவனுயிருந்தும், மறுத்தலால் வலிந்துகொள்ளவந்த அரசனேடு அப்பெண்ணுக்குரிய முதுகுடித் தலைவர் தம் மகளைச் சேர்த்ததற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியாலும்" என்பது. இதனுட்கண்ட

---

[1] E. Thurston's Ethnographic Notes in Southern India p. 13 "வேடர் மறக்குலம்போலே வேண்டிற்றுச் செய்தென் மகளைக்-கூடிய கூட்டமேயாகக் கொண்டு குடிவாழுங்கொலோ" எனப் பெரியாழ்வாரும், களவிற்கொடு மகளிரை மணம்புரியும் வேடர் மறவர் வழக்கத்தைக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. (திவ். பெரியாழ். 3, 8, 5.)

"முதுகுடி" என்பதற்கு நச்சினார்க்கினியர், வணிகர் வேளாளரும் பிற கலப்புச் சாதியாருமே என்று பொருள்கூறினராயினும், மலைவாணராகிய பழைய மக்களையே அது குறிப்பதாம் ; என்னை ? "முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சி" என இளங்கோவடிகள், இக்காஞ்சித் துறையை மலைவாணரொழுக்கமாகவே கருதுதலால் என்க. இவ்வடிகளிலே பர்வத ராஜனாகிய இமவான் தன் மகள் பார்வதிதேவியைச் சிவபிரானுக்களித்த முறையை இக்காஞ்சித்துறைப்பாற்படுத்துக் கூறியிருத்தல் கண்டுகொள்க. இத்துறைபற்றிப் புறநானூற்றில் வரும் 335-முதல் 354-வரையுள்ள பத்தொன்பது பாட்டுக்களை நோக்குமிடத்தும் தமிழர்க்குள் ஒருகாலத்து இராக்கத மணமும் பெரு வழக்குடையதாயிருந்ததென்பது புலப்படத் தடையில்லையாம் ; ஒரு பெண்ணை வலிந்து கொண்டுசெல்ல அரசர் பலர் முயன்றசெய்தி இப்புறப்பாட்டுக்களால் வெளியாகின்றமையின்[1] இஃது இராக்கதப்பாற்படுமேயன்றிக் காந்தருவ முறைக்கு ஒவ்வாதென உணர்க.[2] இம்மகட்பாற்காஞ்சிக்குஉரியராக ஆசிரியர் கூறிய 'முதுகுடி' என்பதும் தமிழ் மலைவாணருள் "முதுவர்" என்ற கூட்டத்தார் பழைய ஒழுக்கத்தோடு இன்றுங் காணப்படுவதும் ஈண்டு ஒப்பிடத் தக்கன.

இனிக் களவுக்கூட்டத்தின்பின் நிகழ்வது கற்புமுறையாகும். ஆனால், களவொழுக்கமின்றியே தனிக் கற்புமுறை முன்பு வழங்கியதில்லை யென்பது, "முற்படப் புணராத

---

[1] பறம்புமலைக்கரசனாகிய வேள்பாரியின் மகளிரைத் தமிழ் வேந்தர் மணம்புரிய விரும்பிக்கேட்டும், அவன் இணங்காது மறுத்தமைபற்றியே அப்பாரியின் மலையை மூவேந்தரும் முற்றுகையிட்டு அவனையும் வஞ்சத்தாற் கொன்றனர் ; இச் செய்தி கபிலர் பாடிய 109, 110, 111-ஆம் புறநானூற்றுப் பாடல்களாலும் 'மகண்மறுத்தல்' என்னுந் துறைக்குறிப்பாலும் விளக்கமாகும்.

[2] கலம்பகங்களில் வரும் "மறம்" என்ற பகுதி இம் மகட்பாற்காஞ்சித்துறைபற்றியதாதல்வேண்டும்.

செலலின் மையிற்-கற்பெனப்படுவது களவின் வழித்தே" (இறை. களவி) என முன்னோர் மொழிதலாற் றெரியலாம்.[1] இக்கற்பிலே தலைவியின் பெற்றோர் கொடுப்பக் கொள்வதே யன்றி, ஒருவருமறியாமல் தலைவன் அவளை உடன்கொண்டு போனவிடத்துக் கொடுப்போரின்றியும் சடங்கின் வழியா லவளை அவன் மணப்பது உண்டென்பர் தொல்காப்பியனார். ஆரியவருணத்தார் மூவர்க்குமே இருடிகளால் ஆதியில் விதிக்கப்பட்ட இக்கற்புமுறை தங்கள் புராதனமுறையொன் றில் நின்றொழுகிவந்த தமிழர் முதலியோர்க்கும், பிற் காலத்தே அவர்களால் நியமிக்கப்படலாயிற்றென்று ஆசிரி யரே கூறுகின்றார். இதனை "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்-கீழோர்க்காகிய காலமும் உண்டே"[2] என்ற கற்பியற் சூத்திரத்தால் (3) அறிக.

செய்யுள் வழக்கம் அல்லது புலனெறிவழக்கம்

இவ்வாறு நடைபெற்றுவந்த உலக வழக் கமே காலாந்தரத்திற் புலவர்களாற் சிறப் பித்துப் பாடப்பெறும் நிலைமையை அடைந் தது. அவ்வாறு பாடப்பட்ட காலத்தே அன்புமுறைக்காகாத இராக்கத முதலிய அசுத்த பாகங்க ளெல்லாம் அடியோடு ஒதுக்கப்பட்டுக் காதலொத்து விளங் கும் கந்தர்வ மார்க்கமே தழுவப்பட்டது. அன்றியும், கூத்தர் விறலியர் முதலியோரால் இவ்வொழுக்கம் அபிநயித்து நடித் துக் காட்டப்பட்டும் வந்தது:- இது "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்றும் பிறவாறும் ஆசிரியர் கூறுதலால் உணர்தற்பால தாம். நாடகம் வேத்தியல் பொதுவியல் என இருதிறப் படுமென்றும், இவற்றுள் வேத்தியலென்பது — இவ்வகப் பொருள்பற்றிய கூத்தென்றும் முன்னோர் கூறுதலுங் காண்க

---

[1] "உலகியல் வழக்காய்ப் பின்பு இல்லற நிகழுங் கள வொழுக்கம்" என நச்சினார்க்கினியர் எழுதுதலுங் காண்க. (கலித். 136 உரை.)

[2] இச் சூத்திரத்துக்கு நேர்பொருள் இதுவேயாயினும், நச்சினார்க்கினியர் கருத்து வேறுதல் அவருரைநோக்கி யுணர்க.

(சிலப். பக்-88). களவொழுக்கம் பற்றிய செய்திகள் நாடகத்துக்கும் ஏற்றனவே என்பது "இத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படும்; கிளவி ஒழுங்குபடக் கோத்து கதைபோலவந்து நாடகத்திற்கேற்றலின்" எனத் தஞ்சை வாணன்கோவையுரைகாரர் கூறுவதாலும் புலனும். இங்கே கூறிய நாடகமென்பது, வடமொழியிற் பாத்திரங்களும் பிறவும் வகுத்து வழங்கும் சாகுந்தலமுதலிய போன்றதன்றிக் கதை தழுவிக் கூத்தர் கூத்தியரால் அபிநயித்து நடிக்கப்படும் கூத்தென உணர்க. நாடகம், கதை தழுவிவரும் கூத்தென்பர் அடியார்க்குநல்லார். (சில. பக்-64), இங்ஙனம் களவொழுக்கம் பற்றிப் புலவர் பாடுவதும், அபிநயித்து நடிப்பதும் பல்கி எல்லைகடந்த காலத்தே அவற்றுக்கு வரம்பாக முன்னோர் இலக்கணம் வகுத்து ஒழுங்குபடுத்தலாயினர். இத்தொல்காப்பியமும் அவற்றுள் ஒன்றும். இதன் பொருளதிகாரப் பகுதியிலுள்ள ஒன்பது இயல்களிலே இரண்டொன்று நீங்க ஒழிந்தனவெல்லாம் அகப்பொருள்பற்றிய வழக்குகளை வரையறுப்பதையே பெருநோக்கமாகக் கொண்டன. அறமும் பொருளும் பயக்கும் அரசியல் முதலியவற்றை உணர்த்தற்குப் புறத்திணையியல் என ஒன்றே கூறி, ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டம் பற்றிய விதிகளைப் பல வியல்களால் ஆசிரியர் கூறுவதை நோக்குமிடத்து, அவர்காலத்தே இவ்வின்பவொழுக்கத்துக்கிருந்த வழக்குமிகுதி தெரியலாகும் ஒருகால், இவ்வொழுக்கத்தைச் சிறப்பிக்கவேண்டித் தொல்காப்பியனரே புதியவாக இலக்கணங்கள் கட்டிக்கூறினரோ எனின்—பாயிரத்தில் "முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் — புலந்தொகுத்தோன்" என்று இவ்வாசிரியர் செய்தி கூறப்படுததால் அது முற்றும் பொருந்தாதென்க. நச்சினர்க்கினியரும் "இப்புலனெறிவழக்கினை இல்லதினியது புலவரால் நாட்டப்பட்ட தென்றுயோ எனின்—இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ்செய்யாதாகலானும், உடன் கூறிய உலகியல் வழக்கினை ஒழித்தல் வேண்டுமாதலானும் அது பொருந்தாது" (பக். 98) என மறுத்துக்கூறுதல் அறியத்தக்கது. எனவே, களவு கற்பென்று

வகுக்கப்பட்ட அகப்பொருள் விகற்பங்கள், புனைந்துரை வகையாற் புலவர்கள் பாடிவந்த உலகியல்களே என்பது வெளிப்படையாம். இங்ஙனம் புனைந்துரையும் உலகியலுங் கலந்து புலவர்பாடிய செய்யுள்வழக்கை ஆசிரியர் "புலனெறி வழக்கம்" என்று ஆளுவர் (சூத். 53). [புலன் நெறிவழக்கம்-நூல்நெறி வழக்கம்; "புலத்துறை முற்றிய" என்புழிப் போல.]

அகப்பொருட் பகுப்பு

இனி, இப்புலனெறி வழக்கைக் கூறுதற்கமைத்த பொருளதிகாரத்திற் பெரும்பாகம் அகப்பொருளே பற்றியதாயினும், சிறப்பாக அப்பொருளை உணர்த்தவந்த இயல்கள் நான்காம்; அவை-அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்பன. இவற்றுள், அகத்திணையியலிற் அப்புலனெறி வழக்கின் பொதுவிதிகளும், பொருளியலிற் களவியல் கற்பியல்களிற் கண்ட வழுக்களை அமைத்துக்கொள்ளுமாறும் கூறப்படுகின்றன. முதலிற் பொதுவிலக்கணங்களை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாதலின், அவற்றுட் சிறப்புடைச் செய்திகளை இப்போது ஆராய்ந்துகொள்வோம். பொருளியலிற் கண்ட பதினன்கு வழுவமைதிகளும்—களவு கற்பு வரலாறுகள் கூறுமிடத்துப் பெரும்பாலும் விளக்கப்படும். ஆகவே, ஈண்டு நாம் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பகுதிகள்—பொதுவிதிகள், களவியல், கற்பியல்—என மூன்றும் என உணர்ந்துகொள்க.

I. பொதுவிதிகள்.

அகப்பொருள்பற்றிய இன்ப வொழுக்கங்கள் ஆசிரியரால் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றன. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன.

(1) கைக்கிளை:—தலைவன் தலைவி யிருவர்க்குள் ஒருவரிடமே தோன்றி விளங்குங் காதல். [கைக்கிளை—சிறுமை

உறவு அதாவது ஒருமருங்குபற்றிய கேண்மை] இஃது ஒரு தலைக்காமம் எனப்படும்.[1]

(2) ஐந்திணை :- அவ்விருவர்க்குள்ளும் ஒத்து விளங்குங் காதல்; [ஐந்திணை—ஐந்து பகுதிப்பட்ட ஒழுக்கம். இது பின்னர் விரிக்கப்படும்.] இஃது ஒத்தகாமமாம்.

(3) பெருந்திணை :—தலைவன் தலைவியர்க்குள் அளவு கடந்து, இழிவான செய்கைகளுக்கு ஏதுவாகிய காதல். [பெருந்திணை—பெரிய ஒழுக்கம்.] இஃது ஒவ்வாக்காமம் எனப்படும்.

(1) கைக்கிளை.

இனி, முதலிற் குறித்த ஒருதலைக்காமமாகிய கைக்கிளை நிகழுமிடம் தொல்காப்பியத்தில் மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. முதலாவது—காமஞ்சாலா இளமையோளிடம் நிகழ்வது (சூத். 50). அஃதாவது—காமக் குறிப்பிற்குப் பொருந்தாத[2] பேதைப்பருவத்துப் பெண் ஒருத்தியிடம் ஒரு தலைவன் தன் காதற்குறிப்புத்தோன்றக் கூறுவது. இரண்டாவது—ஒத்த அன்பினராய ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வசத்தால் தம்முள் எதிர்ப்பட்டுக்கூடும் இயற்கைப் புணர்ச்சிக்குமுன், தலைவனிடம் பெரும்பான்மை நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்ற நான்கு செய்திகளுமாம். (சூ. 62). மூன்றுவது—வேதத்தே கூறப்பட்ட எண்வகை மணங்களுள், கொல்லேறுகோடல்[3] வில்லேற்றுதல் முதலி

---

[1] "பெருமையில்லாத தலைமக்கள் உறவு" என்பர் இளம்பூரணர் (பக்-4).

[2] வேட்கை பிறவாப் பருவத்தாளைப் 'பேதை' என்றும், பிறக்கின்ற பருவத்தாளைப் 'பெதும்பை' என்றுங் கூறுவது பழைய வழக்கு. "பேதைமை யல்லை மேதையங் குறுமகள்—பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென" (அகம்-7) என்னும் இடங் காண்க (சிந்தா-இலக்க. 152).

[3] கொல்லேறுகோடல்—கொடிய விடை தழுவி மணத்தல்.

யன் செய்துகொள்ளும் ஆசுரமும், தலைமகளாலும் அவள் தமராலும் பெருது வலிதிற்கொள்ளும் இராக்கதமும், மூத்தோர் களித்தோர் முதலியோருடன் கூடுதலாகிய பைசாசமும் ஆகும் [சூத்-105].

இவ்வாறு கூறப்பட்ட கைக்கிளைப் பகுதிகள் முற்கூறிய படி தலைவன் தலைவி யிருவருள் ஒருவர்மாட்டே அன்பு நிகழ்ந்து ஒருதலைக்காமமாதல் கண்டுகொள்க. இப்பகுதியுள், காமக்குறிப்பில்லாப் பேதையரிடம் நிகழும் கைக்கிளையொன்றும் ஆசிரியர் முதற்கண் எடுத்தோதுதலின், தமிழ் நாட்டிற் சிறுமிகளை விரும்பி மணந்த வழக்கும் முன்பு இருந்ததுபோலும். இக்கைக்கிளையைச் சிறப்புடைய தொன்றாக உரைகாரர் கூறுதலும், கலித்தொகை 56, 57, 58-ம் பாட்டுக்கள், இவ் வொருதலைக்காம வகையைச் சிறப்பித்தலும் காண்க. நாற்கவிராச நம்பியார், தம் அகப்பொருளில் இக்கைக்கிளைப் பகுதியை அகப்புறமென்றும், காமஞ்சான்றவளிடம் நிகழ்வதே அகத்திற்குரியதாம் என்றும் கூறுவர் (ஒழி-32). இனி, ஆசுர இராக்கத பைசாச மணங்களையும் ஆசிரியர் இப்பகுதியிற் சேர்த்தலால், அவை அவர்காலத்தே பொருந்தாக் காமமாகக்கொள்ளப்படாது ஒருவாறு தழுவப் பட்டமை புலப்படும். தலைவன் தலைவி இருவரிடத்துமன்றி ஒருவர்பாலே நிகழுங் காமமாதலின் இம்மணங்கள் கைக்கிளைக்குரியவாமென்க. இனிச் செய்யுள் வழக்கிற்குப் பெரிதுஞ் சிறப்புடையது இயற்கைப் புணர்ச்சிக்குமுன் னிகழுங் காட்சி.[1] ஐயம், தெளிதல், தேறல் என்னுங் கைக்கிளையேயென்பது கோவை முதலிய நூல்களால் நன்கறிந்தது.

---

[1] இராமபிரானும் சீதாபிராட்டியும் வில்முறிக்கப்படுவதன் முன் ஒருவரை யொருவர் கண்டு விழைவுமிகுத்தனர் என்று வான்மீகிமுனிவர் கூறுதிருப்பவும், கம்பநாடர், தாம் பாடும் தமிழ்முறைக்கேற்ப, அவ்விருவர்க்கும் உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாகச் சந்தர்ப்பங்கொண்டு இக் கைக்கிளை வகையைப் புனைந்து கூறுதலாலும் இதன் சிறப்பியல்பு அறியலாம் (மிதிலைக்காட்சிப் படலம்).

இனி, முல்லைநிலத்து ஆயர்க்குள் வழங்கிய 'ஏறுகோடற் கைக்கிளை' என்பதொன்று முன்னூல்களிற் கூறப்படுகின்றது. ஏறுகோடல் என்பது—ஆய்க்குலத்தலைவர் தம்மகளிர்க்குக் கன்னியாசுற்கமாகக் கொல்லேறு (விடை) ஒன்றை வெளியில் விடுத்து அதனைத் தழுவிப் பிடிப்பானுக்கே இவளுரியள் என்று நியமிப்பதாம். "ஆசுரமாகிய இவ் வேறுகோடற் கைக்கிளை, காமப்பொருளாகிய புலனெறிவழக்கில் வருங்கால், முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தர்வமாகிய களவொழுக்கம் ஒழுகி—வரையுங்காலத்து அந்நிலத்தியல்பு பற்றி வரைந்துகொள்வர்" என்பர் நச்சினார்க்கினியர். முல்லைக்கலியின் முதலிரண்டு பாட்டுக்களால் இதன் இயல்பு நன்கு உணரப்படும். இக்கைக்கிளை அவ் வாயர்குலமுதல்வனாகிய கண்ணபிரானாலும் அக் குலமகளாகிய நப்பின்னை பொருட்டு நிகழ்த்தப்பட்டதென்பர். "ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்துமி லேற்றுவன்கூன் - கோட்டிடை யாடினை கூத்தய லாயர்தங் கொம்பினுக்கே" என்றார் பெரியாரும். மேலேகாட்டிய கைக்கிளை மூவகையுமின்றிக் கடவுளரிடத்து நிகழும் ஒருதலைக்காமமும், ஒத்த அன்பினராய் முன்பு கூடியொழுகிப் பின்பு ஒருவன் ஒருத்தியைத் துறக்க அதனால் நிகழும் பெண்பாற்கைக்கிளையும் பிறவும் உளவாயினும் அவையெல்லாம் அகப்பொருட்குரியனவன்றிப் புறப்பொருட் பகுதிகளாமென்பர் (பக்-209).

(2) ஐந்திணை.

இனி ஒத்தகாமமாகிய ஐந்திணையே புனைந்துரை உலகியல்களோடு புலவர்களால் மிகுத்துப் பாடப்படுவது. அன்பொத்து விளங்கும் இவ்வொழுக்கம் ஐந்து பிரிவுடையதாதலின் ஐந்திணை எனப்பட்டது. அவை—முல்லைத்திணை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை என்பன. [திணை—ஒழுக்கம்] இவ்வைந்து பகுதிகளும் தனித்தனியே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருள்களையுடையனவாம்.

முதற்பொருளாவன:—நிலமும் பொழுதும்.

1. முதற்பொருள் இவற்றுள் நிலம்-முல்லை (காடு), குறிஞ்சி (மலை), மருதம் (நாடு), நெய்தல் (கடற்கரை), பாலை (கலப்புநிலம்) என்னும் பகுப்புடையது. இவை தம்முள், பாலை என்பது தனிநிலமன்றுதலால், தொல்காப்பியனார், "நடுவணைந்திணை நடுவண தொழியப்-படுதிரை வையம் பாத்திய பண்பே" என்பதனால் அதனை நீக்கி நான்கு நிலமே கொண்டார். இவர் கருதியவாறு, இப் படுதிரைவையம் ஆதியில் நான்கு நிலமாகவே, படைக்கப்பட்டது என்பதற்கு, நானிலம் எனப் பூதலத்துக்கு வழங்கும் பெயரே சான்றாகும்.[1] ஆயினும், பாலைநிலம்—"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து—நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்-பாலை யென்பதோர் படிவங்கொள்ளும்" (சிலப்) எனப்படுதலால் அஃது ஒரு தனிநிலமாக வைத்துப் புலனெறி வழக்கஞ் செய்யப்படுவதாயிற்று.[2] இனிப் பொழுது என்பது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற பெரும்பொழுதாறும்[3], மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு[4] என்ற சிறுபொழுதாறுமாம். இங்ஙனம் முதற்பொருளாகக் கூறப்

---

[1] "பாலைக்கு நிலமின்மையின், நானிலம் எனப்பட்டது" என்றார் பேராசிரியர் (திருச்சிற்-கோ-191).

[2] "நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட-வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை" என, ஸ்ரீ சடகோபர் திருவாக்கிலும் இப்பாலையின் இயல்பு வருணிக்கப்படுதல் காண்க (திருவிருத்-26).

[3] இவை முறையே ஆவணிமுதல் இரண்டிரண்டு மாத வளவினவாகிய ஆறு பருவமாகக் கொள்க.

[4] இவை ஒவ்வொன்றும் சூரியாஸ்தமனந் தொடங்கி முறையே பப்பத்து நாழிகை அளவினதாம். இவற்றுள் எற்பாடு என்பது பிற்பகல் என்பர் நச்சினார்க்கினியர் (எல்-சூரியன், படுகின்ற காலம்). சிவஞான முனிவர், பாடு-உண்டாதல் எனக்கொண்டு, "ஞாயிறு உதயமாகும் நாள்வெயிற் காலை" எனக்கூறினார்; இவர்க்குச் சிறுபொழுது ஐந்தென்பதே கொள்கையாம். (தொல்காப்பியச் சூத்திரவிருத்தி பார்க்க.)

பட்ட நிலமும் பொழுதும் முற்கூறிய ஐந்திணைகட்கும் ஏற்ற பெற்றி உரியவாகும். அஃதாவது—முல்லைக்குக் காடும் காடு சார்ந்த இடமும் நிலம்: பொழுது கூதிரும் யாமமும்[1] முன்பனியும். பாலை கலப்பாதலால் தனிநிலமன்று; பொழுது நண்பகலும் வேனிலும் பின்பனியும். மருதத்துக்குப் பழன மும் பழனஞ்சார்ந்த இடமும் நிலம்: பொழுது வைகறை யும் காலையும். நெய்தற்குக் கடலும் கடல்சார்ந்த இடமும் நிலம்: பொழுது எற்பாடு—என உணர்ந்துகொள்க. "மருதத்திற்கும் நெய்தற்கும் பெருப்பொழுது சொல்லிற் றின்மையான் ஐவகை யிருதுவும் உரிய" எனக் கொள்வர் இறையனார் களவிய லுரைகாரர் (பக்-16). நச்சினர்க்கினியர் "இவற்றுக்கு அறுவகை யிருதுவும் உரியவென்பதன்றிக் காரும் இளவேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப" என வும், "நெய்தற்கு ஒழிந்த மூன்று காலமும் பற்றிவரச் சான் ருேர் செய்யுட் செய்திலர்: அங்ஙனம் வந்த செய்யுள் உள வேல் அவற்றையுங் கொள்க" எனவும் கூறினர் (பக்-17). இங்ஙனம், ஐந்திணைக்கும் பெரும்பொழுது சிறுபொழுதுகள் பகுக்கப்பட்டது, அவ்வந் நிலத்துக்கேற்ப இப் பொழுது கள் தலைவன் தலைவியர்மாட்டுக் காமக்குறிப்பைச் சிறப்பித் தல் பற்றியேயாம். இளம் பூரணவடிகள் இதுபற்றி எழுது வன வருமாறு:- "இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ் வைந்திணைக்குரியவா றென்னை யெனின், சிறப்பு நோக்கி யென்க. என்னை சிறந்தவாறெனின், முல்லையாகிய நிலனும் வேனிற்காலத்து வெப்பமுழந்து மரனும், புதலும், கொடியும், கவினழிந்து கிடந்தன புயல்கள் முழங்கக் கவின்பெறுமாகலின் அதற் கது சிறந்ததாம். மாலைப்பொழுது இந்நிலத்துக் கின்றியமையாத முல்லை மலருங் காலமாதலானும் ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தமிகுதலின் அதுவும் சிறந்ததாயிற்று. குறிஞ் சிக்குப் பெரும்பான்மையும் களவிற்புணர்ச்சி பொருளாத லின், அப் புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டுமன்றே? அது

[1] "யாமமாவது, இராப்பொழுதின் நடுக்கூறு" என்பது இளம்பூரணம்.

கூதிர்காலத்துப் பகலும் இரவும் நுண்டுளிசிதறி இயங்குவாரிலராமாதலான் ஆண்டுத் தனிப்படல் எளிதாகலின், அதற் கது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறுதலின் அதுவும் சிறந்தது. மருதத்திற்கு நிலன் பழனஞ்சார்ந்த இடமாதலான் ஆண்டு உறைவார் மேன்மக்களாதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம்மனையகத்து உறைந்தமை பிறரறியாமை மறைத்தல் வேண்டி வைகறைக்கண் தம் மனையகத்துப் பெயரும்வழி ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சாரகில்லாளாமாதலால் அவை (வைகறையும் விடியலும்) அந்நிலத்துக்குச் சிறந்தன; நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலான், தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினும் இராப்பொழுது வருதற்கேதுவாகிய எற்பாடு கண்டார் இனிவருவது மாலையென வருத்தமுறுதலின் அதற்கு அது சிறந்ததென்க. பாலைப் பொருளாவது பிரிவு; அப்பிரிவின்கண் தலைமகற்கு வருத்தமுறுமென்று தலைமகள் கவலுங்கால் நிழலும் நீரும் இல்லாதவழி யேகினர் எனவும் கவலுமாகலின் அதற்கது சிறந்ததென்க (தொல். பொ. அகத். 12-இளம்). இவ்வாறே நச்சினார்க்கினியர் ஏற்புடைய காரணங் கூறிச் செல்லுதலை அப் பொழுதுகளின் உரிமை கூறும் சூத்திர வுரைகளால் உணர்ந்துகொள்க.

2. கருப்பொருள்

கருப்பொருள்:—என்பது, ஐந்திணைக்குமுரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் என்பன (சூத்-கஅ). இக் கருப்பொருள்கள் ஐந்திணைகட்கும் முறையே உரியவாமாற்றை ஈண்டு எழுதுமிடத்து விரியும்[1]. ஆசிரியர் தொல்காப்பியனார் இவற்றை விரித்துக்காட்டாது உரையிற் கொள்ளவே வைத்தாராயினும்,

---

[1]சிலப்பதிகாரப் பதிகவுரையின் தொடக்கத்தே, அடியார்க்குநல்லார் இக்கருப்பொருள்களையெல்லாம் அவ்வத் திணைக்கேற்பவைத்து விரித்து விளக்குதல் கண்டுகொள்க.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (5)

என்ற சூத்திரத்தால் அவ்வத் திணைக்குரிய தெய்வக்கருவை மட்டும் விளக்கினர். கோவலர் பல்லாவும் பயன் தருதற்கு 'ஆகுதி பயக்கும் ஆபல காக்க' எனக் குரவையாடி மடைபல கொடுத்தலின் அதுகொள்ளுந் திருமாலை முல்லைக்கும், குன்றக்குறவர் பலர் குழுமி, [1]வெறியாட்டயர் தற்கு வேண்டும் பொருள்கொண்டு வெறியயர்வராகலின் முருகக்கடவுளைக் குறிஞ்சிக்கும், நாடுசெழிக்கவும் காமச்சிறப்பு நிகழவும் வேண்டி எழிலிக்கும் இமையோர்க்கும் இறைவனை விழவு செய்து அழைத்தலின் இந்திரனை மருதத்துக்கும், நுளையர் (கடற்கரைமாக்கள்) வலைவளந் தப்பின் அவர்மகளிர் கிளையுடன்குழுமிச் சுறவுக்கோடுநட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின்[2] அதற்குரிய வருணனை நெய்தற்கும்—தெய்வங்களாகப் பண்டையோர் கொண்டனர் என்பர். "பாலைக்குத் தொல்காப்பியனுர் நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின், தெய்வமும் வேண்டிற்றிலர்; பிறர்[1] பகவதியையும் தெய்வமாக வேண்டுவர்" என்றுர் களவியலுரைகாரர். ஆயின் நச்சினர்க்கினியர் "பாலைக்கு ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனிற்றேன்றிய மழையினையும் காற்றினையும் அத்தெய்வப்பகுதியாக்கிக் கூறுபவால் எனின்-எல்லாத் தெய்வத்திற்கும் அந்தணர் அவிகொடுக்குங்கால் அங்கி ஆதித்தன் கட் கொடுக்குமென்பது வேத முடிபாதலின், ஆதித்தன் எல்லா நிலத்துக்கும் பொதுவென மறுக்க. ....எனவே, அவ்வந்

[1] முருகபூசையில் நிகழ்த்தும் ஒருவகைகூத்து. (வெறியாட்டு என்ற பொருட்குறிப்பிடம் பார்க்க).

[2] சுறுமீனின் கொம்பைநட்டு வணங்குதல், நெய்தனில மாக்கள்வழக்கென்பது, "சினைச்சுறவின் கோடுநட்டு-மனைச் சேர்த்திய வல்லணங்கினுன்" எனவரும் பட்டினப்பாலையடிகளான் (86, 87)உணர்க.

நிலத்துத் தெய்வங்களே பாலைக்குத் தெய்வமாயிற்று" என்றெழுதினர். இனி முல்லைக்குக் காமனையும்,[2] குறிஞ்சிக்குச் சூரரமகளிரையும் தெய்வவகையாகக் கூறுதலும் உண்டு.

இங்ஙனம், நானிலத்துக்கும் உரியராக ஓதப்பட்ட கடவுளர் ஆரிய வேதத்தில் ஆளப்பட்ட தெய்வங்களாகவே பெரிதுங்காண்டலால் அவரை வணங்கிவந்த தமிழ்மக்கள் தொல்காப்பியனர் காலத்துக்கு முன்பே, வைதிகக் கோட்பாடுடையவராதல் நன்குணரப்படும். இவ்வாறே ஆரியாசாரங்கள் பலவும் இவ்வாசிரியர்க்கு முன்பே தமிழகத்திற் பரவி வழங்கின என்பதற்கு இந்நூலுள் வேண்டிய பிரமாணங்கள் காணலாம்.

இனி, ஆசிரியர் "தெய்வ முணவே..................அன்ன **பிறவுங்** கருவென மொழிப" எனக் கருப்பொருள் கூறிய சூத்திரத்தில் 'பிறவும்' என்றதனல், பூ, நீர், ஊர், பெயர் என்பனவும் கொள்ளப்படும்; என்னை? "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்" (19) "திணைநிலப்பெயர்" (20) என ஆசிரியரே பூவும் பெயருங் கூறுதலால் என்க. இவற்றுட் பெயர்கள் மக்கட்கும் தலைமக்கட்கும் வேறுவேருகும்; அஃதாவது குறிஞ்சி மக்கள் பெயர் கானவர் வேட்டுவர் குன்றுவர்; குறத்தியர் வேட்டுவித்தியர் குன்றுவித்தியர் என்பன. தலைமக்கள் பெயர் வெற்பன் சிலம்பன் பொருப்பன்; கொடிச்சி முதலியன. முல்லைநிலமக்கள் பெயர் கோவலர் இடையர் ஆயர் பொதுவர்; இடைச்சியர் கோவித்தியர் ஆய்ச்சியர் பொதுவியர் என்பன. தலைமக்கள்பெயர் அண்ணல் தோன்றல் முதலியன. மருதநிலமக்கள் பெயர் களமர் உழவர் கடையர்; உழத்தியர் கடைசியர் என்பன. தலைமக்கள் பெயர் மகிழ்நன் ஊரன்:

---

[1] அடியார்க்குநல்லாரும் இவ்வாறே கூறுவர். (சிலப்பதிகாரம் 16-ம் பக்கம் பார்க்க.)

[2] காமன் மாயோன் மகனுதலின் அவனையும் முல்லைத் தெய்வமாக முன்னேர் கொண்டமை, 9-ஆம் முல்லைக்கலியான் உணர்க.

மனையோள் முதலியன. நெய்தனில மக்கள் பெயர் நுளையர் திமிலர் பரதவர்; நுளைத்தியர் பரத்தியர் என்பன. தலைமக்கள் பெயர் சேர்ப்பன் துறைவன் முதலியன. கலப்புநிலமாகிய பாலைக்குரிய மக்கள் பெயர் எயினர் மறவர்; எயிற்றியர் மறத்தியர் என்பன. தலைமக்கள் பெயர் மீளி விடலை காளை முதலியன எனக் கண்டுகொள்க. இவ்வாறே பூ[1] நீர் ஊர்களும் இலக்கிய நோக்கி உணரத்தக்கன.

இவற்றுள் ஒருநிலத்துமக்கள்பெயர் அந்நிலத்துத் தலைமக்கள் பெயராக வழங்குதலு முண்டு; அவை, ஆயர் வேட்டுவர் முதலாயின, (21, 22) மருதநிலத்திற்குமட்டும் அவ்வாறு மாறிவழங்குதல் அரிது என்பர். இங்ஙனம் கூறப்பட்ட ஐந்துநிலத்துத் தலைமக்களுமே அகப்பொருட்குச் சிறப்பாக உரியரேனும் அந்தணர் முதலிய நான்குவருணத்தவரும், குறுநிலமன்னரும் அப் புலனெறிவழக்கிற்குரியராகவும் கூறப்படுவதுண்டு. இதனை "ஏவன் மரபி னேனோரு முரியர்" (சூத்-24) என்புழித் தனிப்படக் கூறுதல் காண்க. இவ்வந்தணர் முதலியோர் தலைவராகப் பாடப்பெற்ற செய்யுட்களை உரையால் உணரலாம். ஆகவே, தமிழ்மக்களாகக் கருதப்பட்டார் இவ்வைந்து நிலத்தவரேயென்பது நாம் நன்கு உய்த்துணரலாகும். நம்பியாரும், "மறையோர் மன்னர் வணிகர் சூத்திரரெனும்–இறையோர் தமக்குமெய்து மற் றிதுவே" "அதுவே, மொழிந்தோர் நால்வரு மொழிந்த நிலத்துறை–இழிந்தோர் தம்முளு முயர்ந்தோரு மெய்துப" எனவும் (30, 31), அவற்றினுரையில் "மேற்சொல்லப்பட்ட கைக்கிளையை அந்தணர் முதலிய நால்வகைத் தலைமக்களுமன்றி, ஐந்துநிலத்தும் உறையும் நிலைமக்களுட்தலைமக்களும் பெறுவர்" எனவும் கூறுதலின் ஆயர் வேட்டுவர் கிழார் பரதவர் மறவர் ஐவகைமக்களுமே தமிழ்

[1] பத்துப்பாட்டுள், குறிஞ்சி முல்லைப் பாட்டுகளிலும் பிறவற்றிலும் அவ்வந் நிலப்பூக்கள் விசேடமாகக் கூறப்படுதல் காணலாம்.

நாட்டுக்குரியர் என்பது அவர்க்குங்கருத்தாதல் தெரிகின்றது.

இனி, மேற்குறித்த ஐந்திணைக் கருப்பொருள்களில் ஒரு நிலத்துக்குரிய பூவும் புள்ளும் மற்றொரு நிலத்தில் மயங்கியதாகக் கூறுவதும் வழக்காம் (சூத்-19). ஆயின், மற்றைக் கருப்பொருள்களும் அங்ஙனம் மயங்குமென்று ஆசிரியர் கூறாமையால், அவற்றை மயங்குவனவாகக் கூறுதல் முற்காலத்து வழக்கில்லைப்போலும். பிற்பட்ட நூல்களில் அவை வேறு நிலத்தும் மயங்குவனவாகக் கூறப்படுதல் நோக்கி, நச்சினார்க்கினியர் "ஒன்றென முடித்தலால், பிற கருப்பொருள் மயங்குவன உளவேனும் கொள்க" என்று அமைப்பர் (பக்-39).

3. உரிப்பொருள்

உரிப்பொருளாவன :-முற்கூறிய ஐந்திணைக்குமுரிய ஒழுக்கங்களாகும்; அவை புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவும் அவற்றின் நிமித்தங்களும். அவற்றுட் புணர்தலும் அதனிமித்தமும் குறிஞ்சி உரிப்பொருள்; பிரிதலும் பிரிதனிமித்தமும் பாலை; இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லை; இரங்கலும் இரங்கனிமித்தமும் நெய்தல்; ஊடலும் ஊடனிமித்தமும் மருத உரிப்பொருள் என உணர்க (14). அகப்பொருளாவது—ஒருவனும் ஒருத்தியுங் கூடும் கூட்டமாதலாலும், அக்கூட்டம் இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலாலும் முதலிற் புணர்ச்சியையும், அக்கூட்டத்தின்பின்னரல்லது பிரிவின்மையால் அதன்பின் பிரிவையும், தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி ஆற்றியிருப்பது முறையாதலின் அதனையடுத்து இருத்தலையும், தலைவன் பிரிவுநீட்டித்தவிடத்து அங்ஙனம் ஆற்றியிராது தலைமகள் இரங்குமாகலின் அதற்குப்பின் இரங்கலையும், பிரிந்த தலைவன் வந்துகூடியபின் இருவர்க்குமுள்ள காமக்குறிப்பைச் சிறப்பித்தலால் இறுதியில் ஊடலையும் வைத்து, இங்ஙனம் ஒத்த அன்புடைய தலைவி தலைவன் இவரிடத்து நிகழ்தற்குரிய இன்ப ஒழுக்கங்கள் இவ்வைந்

துமே எனக் கண்டு, அவற்றை முறைப்படுத்தோதினர் முன்னையோர் என்பது உணரத்தக்கது (பக்-30).

நிலங்களும் அவற்றிற்குரிய அகவொழுக்கங்களும்

இனி, மலைக்குப் புணர்ச்சியையும், பாலைக்குப் பிரிவையும், காட்டுக்கு இருத்தலையும், கடற்கரைக்கு இரங்கலையும், நாட்டுக்கு ஊடலையும் பண்டையோர் கொண்டதற்கு நூலிலேனும் உரையிலேனும் ஏற்புடைய காரணங் காண்டல் அரிதாம். ஆயினும், அடியில் வருமாறு கூறுதல் பொருந்துவதோ என்பது ஆராயற்பாலது. முற்காலத்து மலைநாட்டு மகளிர் வளமும் எழிலும் வாய்ந்து விளங்கினமையால் தமிழ்த்தலைவர் அன்னாரைப் பெரிதும் காமுற்று வருங்காலத்துக்[1] களவிற்குச் சிறந்த பாருட்கங்குலில் (இடையாமம்) பரந்துடன் வழங்காது மாவும் புள்ளும் துணையுடன் மகிழ்ந்து வதிதலும், மலையின் இயற்கை வளமும் காமோத்திபகமாய் இருவர்க்கும் கழிபேரின்பம் விளைத்தலானும், குறிஞ்சி நிலத்துக்குச் சிறந்த கூதிராகிய ஐப்பசி கார்த்திகை மாதங்களும் இடையாமமும் இருள் தூங்கித் துளி மிகுதலாற் றலைவனுக்குக் களவிற்சேர்தல் அரிதாதல்பற்றிக் காமக்குறிப்பைப் பெருக்குதலானும் களவுக் கூட்டத்தைக் குறிஞ்சி நிலத்துக்கும்,[2] அங்ஙனம் குறிஞ்சி நிலத்தலைவியொடு கூடிய தலைவன், தனித்தாயினும் சுற்றத்தார் அறிந்து தடுத்தவிடத்துத் தலைவியை உடன்கொண்டாயினும் பிரிந்துபோமிடம் "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து—நல்லியல்பிழந்த" நிலமேயாதலாற் பிரிதலைப் பாலைக்கும், அவ்வாறு தலைவியை உடன்கொண்டுசெல்லும் இளைஞர் பெரும்பான்மை நாட்டுத் தலைவரேயாதலால், தாம் கொணர்ந்த பெண்டிரை மணந்து இல்வாழ்க்கை நிகழ்த்துங்காற் றலைவன் பரத்தமை காரணமாகப் பெரும்பான்மை நிகழும்

[1] தமிழ்த்தலைவர், முன்பு, மலைநாட்டு மகளிரையே பெரிதும் விரும்பிய செய்தி முன்னருங் குறிக்கப்பட்டது.

[2] வித்தியாதர காந்தர்வர்களும் பிற தெய்வக்கூட்டத்தாரும் மலையினிடங் கூடியுறைவதையே நூல்கள் சிறப்பித்தலும் இக்கருத்தை வற்புறுத்தும்.

ஊடலை மருதத்துக்கும், அவ்வாழ்க்கைக் காலத்துப் பகைகளைதல்பற்றிப் பிரிந்து வினைமுற்றி மீள்வோன், பாசறையினின்று ஊர்நோக்கிவருங்காலம் கார்ப்பருவமாகிய ஆவணி புரட்டாதி மாதங்களாதலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது நீரும் நிழலும் பெறுதலும், ஊர்ப்பக்கத்துக் காடுஞ் சோலையும் காட்சிபெருக, மாவும் புள்ளும் மகிழ்ந்து விளையாடுதலும், மாலையிற் பசுக்கள் மன்றிற்புகுதலும், தீங்குழலிசைத்தலும் பிறவும் காமக்குறிப்பை மிகுவித்துப் பிரிவாற்றிக்கொண்டு தனித்திருக்கும் தலைவியது கற்புநிலையைப் பெருக்கக் காட்டுதலின் இருத்தலை முல்லைக்கும்[1] தலைவனைப் பிரிந்த கிழத்திக்குக் கடலுங் கழியுங் கானலுங் காணுந் தோறுங் ஆற்றுமை கைம்மிக்கு இரங்கல் நிகழ்வதே இயல்பாதலின் அவ்விரங்கலை நெய்தற்கும் உரியனவாக்கி முற்காலத்தவர் புலனெறிவழக்கஞ் செய்தனர்போலும். இவற்றுக்கு இன்னும் ஏற்புடைய காரணமுளவேனும் அவற்றையுங் கூறிக்கொள்க.

நிலங்களின் பெயர்க்காரணம்

இனி, மேற்கூறிய ஐந்து நிலங்களும் முல்லை குறிஞ்சி முதலாகப் பெயர்பெற்றதன் காரணமும் நாம் ஆராய்ந்துகொள்ளற்பாலதாம். இப்பெயர்கள் மரம் அல்லது பூவிசேடங்கட்கு உரியன என்பதும், முல்லை முதலியவற்றின் மிகுதி அல்லது சிறப்புப்பற்றி அந் நிலங்கட்குப் பெயர்கள் வழங்கலாயின என்பதும் எளிதிற் புலப்படும்.[2] 'கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பு' (மதுரைக்காஞ்சி-300) "மருதஞ்சான்ற மருதத்தண்பணை" (சிறுபாண்-186.) "முல்லைசான்ற முல்லையம்புறவு"

---

[1] காடுவாழ்க்கை துணையின்றித் தனிநிலையிற்செய்யும் அறவோர் வாழ்க்கையாதலின் தலைவியின் தனிநிலைக்கும் அதனை இடமாக்கினர்போலும்.

[2] இளம்பூரணவடிகளும், குறிஞ்சி முதலிய பூக்களின் சிறப்புப்பற்றியே மலை முதலிய நிலங்கள் குறியிட்டாளப்பட்டன என்று உதாரணங்களுடன் விரித்தெழுதுதல், 'மாயோன்மேய' என்ற சூத்திரத்துக்கு அவரெழுதிய உரைநோக்கி யறியலாம்.

(ஷை 169).[1] "பாலைசான்றசுரம்" (ஷை 314) எனப் பூ அல்லது அதன் முதற்பொருளின் சிறப்புப்பற்றி அந்நிலங்கள் கூறப்படுதல் நோக்குக.[2] இனிக் களவியலுரைகாரரும் நச்சினார்க்கினியரும், இந்நிலப்பெயர்கள் அவற்றின் ஒழுக்கமாக மேலே கூறிய உரிப்பொருள்களடியாக வழங்கலாயின என்பர். அஃதாவது—முல்லைக்குரியதாகப் புலனெறிவழக்கஞ் செய்யப்பட்ட ஒழுக்கம் "இருத்தல்" என்பது: இவ்விருத்தற்கே முல்லையென்பது ஒருபெயர் என்பதாம்; "குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது; என்னை? விளக்காகிய சுடரிருந்த இடமே விளக்கெனப்பட்டது;போல" என்றார் களவியலுரைகாரரும் (16). மற்றைநிலங்கட்கும் இவ்வாறே கூறிக்கொள்க. இவற்றால் முல்லை குறிஞ்சியென்று கூறப்பட்ட ஒழுக்கங்களாற் காடு மலை முதலியவை அப்பெயர்பெற்றன என்பது அவ்வுரைகாரருடைய கருத்தாகத் தோற்றினும்-அவ்வொழுக்கந்தான் அவ்வாறு பெயர்பெற்றதன் காரணம் என்னை? என்ற கேள்வி திரும்ப எழக்கூடியதாகின்றது. அதனால் நிலங்கள் முற்குறித்தபடி பூக்களினடியாகப் பெயர்பெறுது போயினும் அந்நிலத்தொழுக்கங்களேனும் அவையடியாக வழங்கலாயின என்று கூறுதலேவேண்டுமென்க. ஆயின், நச்சினார்க்கினியர் "இவ்வாறன்றி, முல்லை முதலிய பூவாற் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அந்நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர்கூறுதலுமுரிய எனக் கடாயினாக்கு விடையின்மை உணர்க." என இக்கொள்கையை மறுத்திட்டனர். ஆயினும், ஒவ்வோரொழுக்கத்தை உணர்ந்

---

[1] "முல்லைசூழ்முல்லைவேலி" என்றார் திருத்தக்கதேவரும். (சிந். முத்தி. 464.)

[2] ஈண்டு நச்சினார்க்கினியர் 'மருதஞ்சான்ற மருதம்' முதலியவற்றுக்கு "மருதவொழுக்கமிகுந்த மருதம்" என்றிவ்வாறு பொருள்கொண்டாராயினும், "கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பு" என்புழி, 'கருங்கால்' என்ற அடையைக் குறிஞ்சியொழுக்கத்திற்கு ஆக்கிக்கொள்ள இடர்ப்படுதலால், அவர்க்கே அது கருத்தன்றென்க.

தற்கு ஒவ்வொரு பூவை அடையாளமாகக் கொண்டொழுகுவது பண்டைத்தமிழரது வழக்கேயாம். இது, புறத்திணையொழுக்கமாகிய நிரைகவர்தல் மீட்டல் முதலியவற்றுக்கு, வெட்சி கரந்தை முதலாய பூக்களை அறிகுறியாகக்கொண்டமையாலும் விளங்கும். இங்ஙனம் கொண்ட முறையைப் புறத்திணைச் செய்திகள் கூறுமிடத்து விளக்குவோம். எனவே, அகத்திணையொழுக்கங்கட்கும் அங்ஙனம் பூக்களை அடையாளமாகக்கொண்டு முன்னோர் வழங்க, அவற்றினடியாக இருத்தல் முதலிய ஒழுக்கங்கள்[1] முல்லை முதலாகப் பெயர் பெற்றன என்று கொள்ளுதல் இழுக்காதென்க.

பாலையொழுக்கமாகிய பிரிவின் வகை

இனி, ஐந்துரிப்பொருள்களிலும் குறிஞ்சித்திணை களவுப்பகுதிக்கும், முல்லை மருத நெய்தல்கள் கற்புப் பகுதிக்கும், பாலை களவு கற்பென்ற இரண்டற்கும் பெரும்பான்மை புலனெறிவழக்கஞ் செய்யப்படுவனவாம். இவற்றுட் பாலையொழுக்கமாகிய பிரிவு களவு கற்புக் காலங்களில் நிகழ்தற்குரிய பொதுவொழுக்கமாதலால், அதனைப்பற்றி ஆசிரியர் கூறிய விதிகளும் ஈண்டே அறியத்தக்கவை. இப்பாலையாகிய பிரிவு—ஓதல் பகை தூது காவல் பொருள் என்பவை பற்றி நிகழும். இவற்றுள் ஓதற்பிரிவு வேளாளரொழிந்த ஏனைவருணத்தார்க்கு உரித்தெனவும் (26) பகைமேற்பிரி

---

[1] இங்ஙனமே ஐரோப்பியரும், பண்டும் இன்றும், 'லில்லி' என்ற (Lily) வெள்ளையல்லிமலரைக் கற்புக்குறியாக வழங்கியுள்ளார். டென்னிஸன் மஹாகவி இயற்றிய "Lancelot and Elaine" என்ற கவியில், எலேன் என்ற பெண்ணின் கற்பின் றூய்மை குறிக்க—அவளை 'லில்லிப் பெண்' (Lily Maid) என்று கூறப்பட்டிருத்தல் தெரியவருகின்றது. இயேசுநாதரின் தாயாகிய மரியாவின் கரத்தில் அவளது கற்பின்றூய்மையைக்காட்ட லில்லிப்பூவொன்று வைக்கப்பட்டிருக்குமென்பர். இதுபோலவே, அன்புடைய இருவர் பிரியுங்கால், அப்பிரிவைக் குறிக்க, 'பர்கெட்-மீ-நாட்' 'Forget-me-not' என்ற பூவைக் கொடுத்தலும், துக்கமிகுதியை 'வீப்பிங்-வில்லோ' 'Weeping-willow' என்ற பூவாற் குறித்தலும் அவ்வைரோப்பியநாட்டு வழக்கங்களென்பர்.

வுங் காவற்பிரிவும் அரசர்க்கே உரிய எனவும் (27-28) பொருள்வயிற்பிரிவு வணிகர்க்குச் சிறந்தும் ஏனையர்க்குப் பொதுவாகவும் வழங்குமெனவும் (29) குறுநில மன்னர்க்கு அரசர்க்குரிய பிரிவுகள் உண்டென்றும் (32) கூறுவர். இவற்றோடு, உடன்போக்கும் (பக். 31.) மனையயற்கட் பரத்தையிற் பிரிவும் ஆசிரியர் அகத்திணையியலிற் கூறுதுபோயினும், இப் பாலைப்பாற்படும் என்பர், நச்சினர்க்கினியர் (63). இப்பிரிவு நால்வகை வருணத்தார்க்கு முரித்தாம் என்க.

பொருட்பிரிவு வணிகர்க்கேயன்றி மற்றைவருணத்தார்க்கும் உரித்தென்பதை "மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே" என்பதனல் ஆசிரியர் ஓதுவர். இதற்கு, நச்சினர்க்கினியர்—வணிகர்க்குப் பொருட்பிரிவுண்டென்பதனை, 'மேவிய சிறப்பின் '[1] என்ற முற்சூத்திரத்தில் ஆசிரியர் கூறிப் போந்தமையால், இச்சூத்திரத்துவரும் 'நால்வர்' என்றது, அவ் வணிகரொழிந்த நால்வரென்றும், அவராவார்—அந்தணர் அரசர் உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் என்றும் குறித்தனர். இவருள் உழுவித்துண்ணும் வேளாளரைப்பற்றி அவர் கூறுவன வருமாறு:— "இவர் மண்டிலமாக்களுந் தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமையெய்தினேரும் குறுமுடி

---

[1] இளம்பூரணர் "மேவிய சிறப்பி னேனேர் படிமைய... பிரிவே" என்ற சூத்திரத்துக்கு, "தேவரது பூசைமுதலாயினவும் மக்களும் முறைமைதப்பியவழித் தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும் பொருளாக்குதல் காரணமாகவும் பிரிவுளதாம்" என்று பொழிப்புக் கூறுவர். "படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித்திரிபு; அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கட் செய்தமைத்த தேவர்மேல் வந்தது" என்பது அவர் விசேடவுரை. இவ்வாறுயின், தொல்காப்பியனர் காலத்தே கோயில்களில் விக்கிரகங்கள் வைத்து வணங்கப் பட்டுவந்தமையும் அக்கோயி லறப்புறங்களை அரசர் பாதுகாத்துவந்தமையும் பெறப்படும்.

குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராம். உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும் அவன் மகனாகிய கரிகாற்பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட் கோடலும் கூறுவர்"(30) என்பது. இவ்வேளாளர்இங்ஙனம் அரசரைச் சார்ந்து உயர்ந்திருந்தமைபற்றி, அரசரேவிய திறமெல்லாவற்றினும் இவர் பிரிதற்குரியராயினரென்பது "மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப" என்ற அடுத்த சூத்திர வுரையாற் றெரியவருகின்றது. இங்ஙனம், உயர்வேளாளர் என நான்காம் வருணத்தவரில் ஒருசாராரைப் பிரித்து அவர்க்கு அரசர்க்குரிய வரிசைகளை உரைகாரர் கூறுதலால், முற்காலத்தே அவர்க்கு நாட்டிலிருந்த பெருமதிப்பு நன்கு வெளியாகத்தக்கது. வேளாளரது ஆதிவரலாறுகளும் அவ ரது பழம்பெருமைகளும் யானெழுதி வெளியிட்ட "வேளிர் வரலாறு" என்ற நூலால் நன்குவிளங்கும்.

இனி, [1]ஓதற்குப் பிரியும் பிரிவில், அந்தணர் அரசர் வணிகரென்ற மூவரும் வேதங்களும் வேதத்துப்பிறந்த வட நூல்களும் அகத்தியம் முதலிய தமிழ்நூல்களும் கற்றற்குரிய ரென்பதும், உயர்ந்த வேளாளர் வேதத்தினின்று பிறந்த வடநூல்களும், தமிழ்நூல்களும் கற்றற்குரியர் என்பதும் "உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான" என்ற சூத்திரவுரையால் தெரியலாம். "ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும். அல்லாக் கல்வி எல்லார்க்கு முரித்தே" என்றார் நம்பியாரும். இப்பிரிவு, தலைவனுந் தலைவியும் வரைந்துகொண்டபின் முதலில் நிகழ்வதென்பர் பேராசிரியர் (திருக்கோ, 308). இனிக் களவியலுரைகாரர்—ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்க்குற்றுழி (உதவி), பொருள், பரத்தை என ஆறு பிரிவுகள் கூறி, அவற்றுள் ஓதலை அந்தணர் அரசர்க்கும், காவலை அரசர்க்கும், தூது பரத்தையிற் பிரிவுகளை நால்வர்க்

[1] இப்பிரிவுகள்பற்றிய செய்திகளைத் தடைவிடைகளுடன் 35-ஆம் சூத்திரவுரையுள் இறையனார் களவியலுரைகாரர் விரித்துக்கூறுதல் அறியத்தக்கது.

கும், வேந்தர்க்குற்றுழி, பொருட் பிரிவுகளை வணிகர் வேளாளர்க்கும் உரிமைப்படுத்தினர்[1] (சூத். 35-39). இவற்றுள் பரத்தையிற்பிரிவு எல்லார்க்குங் கொள்ளுதல் தொல்காப்பியனார்க்கும் ஒக்குமென்பது "பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே" (224) என்னுஞ் சூத்திரவுரையாற் பெறப்படும். நாற்கவிராசநம்பியார் காவற்பிரிவு—அறப்புறங்காவல் (தர்மஸ்தாபனங்களைப் பாதுகாக்கை), நாடுகாவலென இருதிறப்படுமென்றும், முன்னது எல்லார்க்கும், பின்னது அரசர்க்கும் உரியவென்றும், (72-3) அரசராற் சிறப்புப்பெற்றோராயின் வணிகரும் சூத்திரரும் தூதிற்குப் பிரிவரெனவும், வேந்தர்க்குதவியாகப் பிரியும் பிரிவு அந்தணரொழிந்த மூவர்க்கும் உரித்தெனவும், பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும் நான்கு வருணத்தார்க்கு முரியவெனவும், இப்பிரிவுகளில் ஓதல், நாடுகாவல், தூதுபோதலொழிய ஒழிந்தவை, ஐந்து நிலத்து மக்களுள் தலைவராயுள்ளவர்க்கும்[1] உரியவாம் எனவும் கூறுவர். இவற்றால், பிரிவுவகைகளை அவ்வக்குலத்தவர்க்கு உரிமைப்படுத்துவதில், பின்புள்ளோர் தொல்காப்பியனர் கருத்தோடு சிறிது வேறுபாடுகொண்டிருந்தமை புலப்படும்.

இனி, ஓதல் தூது பொருட்பிரிவுகளிடத்தும், பலவாறு சூழ்ந்து போர்குறித்துநிற்கும் பாசறையிடத்தும், தலைவி தலைவனுடன் செல்லுதல் பண்டை வழக்கமின்மையால், அங்ஙனம் புலனெறி வழக்குஞ் செய்தலில்லை.[2] இதனை "முந்நீர் வழக்க மகடூஉவொ டில்லை" (34) "எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்" (175) என்ற சூத்திரங்களாலுணர்க. இவற்றுள் "முந்நீர்வழக்கம்" என்பதற்கு, 'பொருட் பிரிவுக்

---

[1] இக்கூற்றாலும், ஆயர், மறவர், கிழார், பரதவர், வேட்டுவர் என்ற ஐந்திணைமக்களும் தனித்தமிழரே என்பது விளங்கும்.

[2] நாட்டுக்கோட்டை வணிகருள் பொருட்பிரிவிடை மகளிரை உடனழைத்துச் செல்வது, பெரிதுந் தடுக்கப்பட்டிருத்தல் ஒப்பிடற்பாலது.

காரகக் கடலிலே மரக்கலத்திற் செல்லுதல் மகடூஉவொடு இல்லை' என்று பொருள்கூறி, எனவே காலிற் (தரையிற்) பிரியுமிடத்துத் தலைவியுடன் சேர்தலுண்டென்று கருத்துக் கூறுவர் ஒருசாரார்.[1] இங்ஙனங் கூறுமிடத்து, பொருட்பிரிவொழிய ஏனைப்பிரிவுகளில் மனைவியருடன் செல்லல்கூடும் என்பது பெறப்படுமென்றும் அவ்வாறு மனைவியருடன் சென்றுராக மரபில்லையென்றும், ஆகவே "முந்நீர் வழக்கம்" என்பதற்கு பெண்ணொடு செல்லத்தகாத "ஓதல், தூது, பொருள் என்னும் மூன்று நீர்மையான செலவு" என்று பொருள் கொள்ளுதலே ஆசிரியர் கருத்தாமென்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறினர். பொருள்வயிற்பிரிவு – கலத்திற்பிரிதல், காலிற்பிரிதல் என இருபகுதிப்படும்; 'கலத்தினுங் காலினுந் தருவனரீட்ட' என்றார் இளங்கோவடிகளும் (சிலப் 2–7) கலத்திற்பிரிவு-வணிகர்க்கும், காலிற்பிரிவு-மற்றை மூவர்க்குமுரியவென்பது ' இருவகைப்பிரிவும்" (11) என்ற சூத்திர உரைநோக்கி உணர்க. தலைமக்களையன்றி, அவர்க்கடிமையானவர் ஏவல்செய்வோர் இவர்களைப்பாடுமிடத்துப் பெண்ணொடுசென்றாராகக் கூறுதலுண்டென்றுங் கூறுவர் (176).

இனி "வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" (188) என்று ஆசிரியர் கூறுதலால், கல்வியின்பொருட்டுப் பிரியும் பிரிவு. மூன்றாண்டுக்கு மேற்படக்கூடாதென்பது, பழையவிதி என்பது தெரியலாம். நச்சினார்க்கினியர், இச்சூத்திரத்துக்குத் தத்துவப் பொருளொன்றை நலிந்துகொண்டனராயினும், வழிநூல்செய்த நம்பியார் கொள்கைப்படி (89) மூன்றாண்டென்பதே பொருத்தமாகும். மற்றைப் பகை, தூது, பொருள் பற்றிய பிரிவுகள், ஓராண்டுக்குள்ளாதல்வேண்டுமென்பது விதி (189-90) வடநூலார், ஓதற்பிரிவுக்கு ஆறாண்டும், அறப்புறங்காவற்கு எட்டாண்டுங் கூறுவர் (மனு. 9 அத்; 6–76). இனி, வேட்டைமேற் சேறல், நாடுகாணச் சேறல் முதலிய பிரிவுகளைப் பாலையொழுக்கமாகக் கொண்டு புலனெறிவழக்கஞ்செய்தல் கூடாதென உணர்க (பக், 49)

[1] தொல்-அகத்-37- இளம்,

இங்ஙனமாகப் பாலையொழுக்கத்தை ஆசிரியர் பலபடியாக வும் விரித்து ஏனைய திணைகளிலும் சிறப்பாகக் கூறுதலை நோக்குமிடத்து, இவ்வொழுக்கத்தைப்பற்றிய புலனெறி வழக்கமே முற்காலத்து மிக்கிருந்தமை விளங்கும். "பாலை பெருவரவிற்றாய்த் தொகைகளுள் வருமாறுபோல, வாகை யும் பெருவரவிற்றாய்வருதலுங் கொள்க" என நச்சினார்க் கினியரும், அகப்பொருள் புறப்பொருள்களிலே அதிக வழக் குப்பெற்ற பகுதிகளைக் குறிப்பிடுதலும் காண்க (பக், 157). இப்பிரிவுகளைப்பற்றி ஆசிரியர் கூறிப்போந்த விதிகள் வட நூல் வழக்குப்பெருமையால், தமிழ்நாட்டார் பண்டைக் காலத்து ஒழுகிவந்த தனி வழக்கங்களாகவே கருதத்தக்கன.

அகப்பாடல்களில் அமைதற்குரிய பொருள்கள்.

இதுகாறும் சிறப்புடைக் காமமாகிய ஐந் திணையின் பகுதிகள், தொல்காப்பியனார் கூறியமுறையே, ஆராயப்பட்டன. இப்பகுதி பற்றி எழுந்த பழைய சான்றோர் பாடல்களிலே, ஐந்திணை வகையாகிய முதல்கரு உரிப்பொருள்கள் விசேடமாக அமைந் திருத்தலை நாம் தவறாமற் காணலாம். இவற்றுள், முதற் பொருளினும் கருப்பொருளும், கருப்பொருளினும் உரிப் பொருளும் சிறப்புடையனவாகும்; அஃதாவது, அகப் பொருள்பற்றிய பாடல்களில் உரிப்பொருளாகிய புணர்தல் பிரிதல் முதலிய ஒழுக்கங்கள் இல்லாமற் பாடப்படுமாயின், அப்பாட்டுப் பொருட்பயனற்றதாகக் கருதப்படுமென்றும், அதற்கடுத்துக் கருப்பொருள் சிறந்ததென்றும், மூன்று பொருள்களுமே ஒருபாடலுள் அமைத்துப் பாடப்படுமேல், அது விளக்கமுற்றுத் திகழுமென்றும் உணர்க. ஆனால் செய் யுள் வழக்கிலன்றி உலகவழக்கிலாயின், மேற்கூறியபடியல் லாது தனித்தனியாகவும் வருமென்பர். உதாரணமாக அடி யில்வரும் வெண்பாவைக் காண்க.

"முல்லை நறுமல ரூதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாருமில் நெஞ்சினே மாகி யுறைவேமை
யீரு மிருண்மாலை வந்து"— (ஐந்திணையம்பது-6)

இது, பருவங்கண்டுவருந்திய கிழத்திக்குத் தோழிகூறியது. இதன் கருத்து—“வண்டுகள் முல்லைமலரை ஊதும்படி இருண்டுவரும் இம் மாலைக்காலமானது, கணவரைக் கூடிய மகளிர்க்கு இன்பஞ் செய்வதாயினும், அவரைப் பிரிந்துறைகின்ற நமக்குத் துன்பந்தருகின்றது” என்பதாம். இப்பாட்டுகள், கணவனைப்பிரிந்து தலைவி தனித்துறைதல் கூறப்படுதலால் முல்லைத்திணையின் உரிப்பொருளும், முல்லைப்பூ என அதன் கருப்பொருளும், மாலைப்பொழுது என அதன் முதற்பொருளும் வந்து, அகப்பொருள்வழக்கை அழகுபடுத்தியவாறு காண்க. இங்ஙனமே, நற்றிணை முதலிய அகப்பாடல்களெல்லாம் ஆராய்ந்து கொள்ளற்பாலன. இவ்வாறு, முதல் கரு உரிப்பொருட்பகுதியுடைய முல்லை, குறிஞ்சி முதலிய ஐந்திணை விகற்பங்களே, அகத்திணையிற் கூறப்பட்ட பொருள்களாகும். ஆகவே, களவு கற்பென்ற கைகோளிரண்டும் இவ்வைந்திணையிடமே நிகழ்வன என்றுணர்க. “அளவிலின்பத் தைத்திணை மருங்கிற்—களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்” என்றார் நம்பியாரும்.

(3) பெருந்திணை

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். அஃதாவது, ஒருவன் ஒருத்தியிடங் கழிகாமத்தனாகி அவளை அடையப்பெறாது, மடலேறுதல் வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக்கொள்ள முயலுதலும், தனக்கு இளையளாகாது ஒப்பும் மூப்புமுடைய பருவத்தாளைக் கூடுதலும், காமமிகுதியானே ஒருத்தியை எதிர்ப்பட்டு அவளை வலிதிற் புணர்தலும் ஆகும் (51). அன்றியும், தலைவனது பருவமுதிர்ச்சியி னிகழ்ச்சிகளும், இருவரும் முதிர்ந்த பருவத்திற் றுறவாது காமநுகர்தலும், நம்பியகப்பொருளில் “அகன்றுழிக் கலங்கல்” (243) முதலாகக் கூறப்பட்டனவும் இப்பெருந்திணைப்பாற்படுவன.

மடலேறல்

இப்பெருந்திணை வகையில், மடலேறுதலும் ஒன்றென்பது, "ஏறியமடற்றிறம்" என ஆசிரியர் கூறுதலால் வெளியாம். இது, பழைய புலவரால் புலனெறிவழக்கஞ் செய்யப்பெற்ற பண்டைத் தமிழ் வழக்கங்களுள் ஒன்றாகும். பிற்காலத்தாரும் "மடல்" என்ற ஒருவகைப் பிரபந்தங் கூறுவர் (தொல்-பக்-737). அவருள், தஞ்சைவாணன் கோவையுரைகாரர், இம் மடற்செய்திபற்றிக் கூறியவை இங்குக் குறிப்பிடத்தக்கன:—

"மடலேறலாவது, தலைவன் ஒவ்வாக் காமத்தால், பனங் கருக்காற் குதிரையும் பனந்தருவிலுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ் செய்து, அக்குதிரையின்மேலேறுவது; மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசி, கிழி ஓவியர் கைப்படாமற்றானே தீட்டி, கிழியின் தலைப்புறத்தில் அவன் பெயரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையுமிருத்தி, வேட்கை வயத்தனாய் வேறுணர்வின்றி ஆவூரினும் அழன்மேற்படினும் அறிதலின்றி மழை, வெயில், காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடி வந்து 'நீ மடலேறுதியோ? அவளைத் தருதும், சோதனை தருதியோ' என்றவழி இயைந்தானாயின் அரசனுக்கு அறிவித்து, அவனேவலால் அவனினைந்து நையத்தந்து 'மடலேறு' என்றவழி, ஏறுமுறைமையாவது-பூளைப்பூ எலும்பு எருக்கு இவைகளாற் கட்டிய மாலையணிந்து கொண்டு அம்மாவில் ஏற அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அதனுருளை உருண்டோடும்போது, பனங்கருக்கு அறுத்தவிடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியந் தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங் கண்டுழி அவனைக் கொலைசெய்துவிடுவது. இவை புலவர் நாட்டிய வழக்கென்றுணர்க" (பக்-89)

எனக் காண்க.

இவ்வாறு தஞ்சைவாணன் கோவையுரைகாரர் கூறிய வருணனைப்படியே மடலேற்றத்துக்குப் பழைய மேற்கோள் காண்டல் அரிதாயினும்,

"கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயி றன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டு(திருக்கோ,76)
"ஈசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே"
(ஷை 74)

"விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
வெள்ளென் பணிந்து பிறரெள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ" (குறுந்-282)

என்பன முதலியவற்றால், அவற்றுட் சிலபகுதி முன்னூல் வழக்குப் பெறுதல் காணலாம். கலித்தொகையுள் நெய்தற் கலி 21, 22, 24-ம் பாடல்களிலும், குறுந்தொகை 17, 173, 182, 286-ம் பாடல்களிலும், இம் மடலேற்றத்தின் வரலாறு நன்கு விளக்கப்பட்டிருத்தலுங் காணலாம். ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கைமன்னன் அருளிய திருமடல்களுக்கு மணிப்பிரவாள நடையில் வியாக்யானம் எழுதிய பேராசிரிய ரான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, இம்மடலேற்றத்தின் கருத் தைச் சுருக்கி, "மடலேறுகைதான், உண்ணுதே குளியாதே உகந்த விஷயத்தை ஒருபடத்திலே லிகித்து (எழுதி) அதனைக் கொண்டு திரிகையும், அற விளைந்தால் அதன்காற்கிடை யிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக் கிடக் கையும், அங்ஙனே முடிகையுமாம்; இத்தாற் பிரயோஜனம் என்னென்னின்–அவன் (திருமால்) கேட்குமென்கை; இல்லை யாகில் இதுதானே பிரயோஜனமாகை"—என்று எழுதி யிருத்தல் ஈண்டு அறியத்தகும். இதனால், ஆரியமக்களுள் விரும்பியன பெற இயலாவிடத்து நிகழ்த்தப்படும் பிரா யோபவேசம்[1] போல, இம்மடலேற்றமும் தமிழ்நாட்டார் முன்

[1] 'வடக்கிருத்தல்' எனத் தமிழ்நூல்கள் கூறுவது இம் முறையேயாம். (புறநானூறு பார்க்க)

ளுளில் வழங்கிவந்த தற்கொலை முறைவகை என்பதும்,[1] அதற்கு 'மடல்மா' ஒரு கருவியென்பதும் தெரியலாம். ஆயின் இம்முறை தான் விரும்பிய பெண்ணை அடையப் பெருதவிடத்துமட்டும் தமிழ் நூல்களில் வழங்குவதன்றி வேறிடத்து நிகழ்வதாகக் கூறப்பட்டிலது. இங்ஙனம் மட லூருமுறை ஆடவர்மட்டும் செய்தற்குரியதன்றிப் பெண்கள் எந்நிலையிலும் செய்யத்தக்கதன்றென்றும், அதனுல், பெண் மடல்பற்றிப் புலனெறி வழக்கஞ் செய்யக் கூடாதென்றும் தொல்காப்பியர் விதிப்பர் (35).

> "கடலன்ன காம முழந்து மடலேருப்
> பெண்ணிற் பெருந்தக்க தில்"

என வள்ளுவனுரும் இவ்விதியைக் குறிப்பித்தல் காணலாம். ஆயின், திருமங்கைமன்னன் தாமருளிய மடல்களிலே, பெண் ணெருத்தி திருமாலைக் காமுற்று மடலூர்வதாகப் பாடின ராதலால், அதற்குப் போக்கென்னை எனின்;—அப்பெண், மடல் ஏறியதாகக் கூருது ஏறுவேனென்ற துணையேயாத லின், இது பெருந்திணைக்குரிய மடலேற்றமாகாது கைக் கிளையின்பாற் படுமென்று கூறுவர். (சூத்-35)[2] பன்னிருபாட் டியலுடையார் மகளிர் மடலேருரென்றும், ஆனுல் கடவுள ரைத் தலைவராக வைத்துப் பாடுமிடத்து அவர் மடலேறுவ

---

[1] நீலகிரிமலைவாணரில் படகர் (Badagar) ஜாதியாரில், இளைஞனெருவன், தான் காதலுற்ற பெண்ணை அடையக்கூடா மல் நேருமாயின், 'அவளை எவ்விதத்தும் அடைவேன். இன் றேல், தற்கொலைபுரிந்துகொள்வேன்' என்று சபதஞ்செய்து அதனைப் பலர்க்கும் அறிவித்து முயல்வதும், அம்முயற்சியில் அவன் பெரும்பான்மை வெற்றியே பெறுவதும் இன்றும் வழக்கமென்பர் (E. Thurston's Ethnographic Notes in S. India. Page 21). மடலேற்றம்போலவே 'வரைபாய்' தலையும் அத் தகைய தற்கொலைமுறையாக உரைகள் கூறுதலும் அறியத் தக்கது.

[2] "கனவினுல் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்-பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன் – கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு" (147-58-60) எனக் கலித்தொகையில் வரும் பெண் பான்மடற்கும் இதுவே கொள்க.

தாகக் கூறப்படுமென்றும் இம்மடற் கிலக்கணங்கூறுவர். இதனை,

"மடன்மாப் பெண்டிர் ஏறூர் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே"
"கடவுளர் மேற்றே காரிகை மடலே" (241—6).

என்பவற்றால் அறிக. இதனாற் பெண்ணொருத்தி ஏறுவதாக ஆழ்வார் பாடியது, பிற்பட்ட இலக்கணமுறைக்குப் பொருந்துவதென்னலாம். மகளிர்க்கு மடலேறும் வழக்கில்லை என்பதை, ஆழ்வாரே பெரியதிருமடலில்,

"... ... ... காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றுநா மானேக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமுந்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்"

எனப் பெண்ணின் கூற்றில்வைத்து அருளிச் செய்தலும் ஈண்டு நோக்கற்பாலது.

பெருந்திணையின் மற்றைப்பகுதிகள்.

இனி, ஆரியமணங்களுள், பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்ற நான்கும் இப்பெருந்திணைப் பாற்படுமென்பது "பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" (105) என்னும் ஆசிரியர்கூற்றால் அறியப்படுகின்றது. இவற்றை இங்ஙனம் கூறியதற்கு, நச்சினார்க்கினியர்—"இந்நான்கும் ஒருதலைக் காமம்பற்றி நிகழாமையானும், ஒருவனோடு ஒருத்தியை எதிர் நிறுவி, அவருடம்பாட்டோடு புணர்க்குங் கந்தருவம் அன்மையானும், அவற்றின் வேறாகிய பெருந்திணையாம்" என்று

காரணங் கூறுவர்.[1] இப்பெருந்திணையும், முதலிற் கூறிய ஒருதலைக்காமமாகிய கைக்கிளையும்-ஐந்திணையாகிய இன்ப வொழுக்கம்போலச்-சிறப்புடையனவாகக் கொள்ளப்பட்டில வேனும் அகப்பொருட்கு உறுப்பாகக்கொண்டு ஆசிரியராற் றழுவப்பட்டன (பக். 177.). பேராசிரியர் இவற்றை அகத் தைச்சார்ந்த புறம் என்பர் (திருக்கோ. 4 உரை). நம்பியா ரும் இக் கைக்கிளை பெருந்திணைகளை அகமென்று பகுத்துக் கூறுதல் காண்க (243). இனி, ஐந்திணைக்கும் நிலமும் பொழுதும் மக்களும் வகுத்தாற்போல, இக்கைக்கிளை பெருந் திணைகட்குங் கூருது, எல்லா நிலமும் இவற்றுக்கு வழங்கு மென்றும் (13-17), பிறர்க்கு அடிமைகளா யுள்ளாரையும், ஏவல் செய்வாரையும் தலைமக்களாகவைத்துப் பாடுமிடத்து, அது சிறப்புடைக் காமத்திற் சேராமையால். இக் கைக்கிளை பெருந்திணைகளைச் சார்ந்தனவாகக் கொள்ளப்படுமென்றும் தொல்காப்பியனர் கூறுவர் (23) ஈண்டு "அடியோர் பாங்கி னும் வினைவல பாங்கினும்" என்று ஆசிரியர் ஆளுதலால், அவர்காலத்து அடிமை வழக்கம் நாட்டிலிருந்தமை பெறப் படுகின்றது. ஏவலாளரை "வினைவலபாங்கு" என வேறு பிரித்தலின், 'அடியோர்' என்பது விற்றுக்கொள்ளற்குரிய அடிமைகளையே குறிப்பதாதல் வேண்டும்.[2]

---

[1] "பெருந்திணை, நடுவணைந்திணையாகிய ஒத்தகாமத்தின் மிக்குங் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வமென்பன அத்திணைப் பாற்படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுட் பெருவழக்கெனப் பயின்று வருதலானும் அதுபெருந்திணை எனக் கூறப்பட்டது" என்பர் இளம்பூரணர் (தொல்-அகத். 1. உரை,)

[2] "குற்றிளையோரும் அடியோர்பாங்கும் ஆயமும்" (சிலப், 6. 84-5) என இளங்கோவடிகளும், ஏவல்கேட்போரினின்றும் இவ்வடிமைகளை வேறு பிரித்துக் கூறுதல் காண்க, "மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞென்னர்க், கடிமை புகுத்தி விடும்" (608), எற்றுக் குரியவர் கயவரொன் றுற்றக்கால், விற்றற்குரியர் விரைந்து" (1080) என வள்ளுவனரும் அடிமை வழக்கந் தங்காலத்திருந்த செய்தியைக் குறிப்பிடுதல் அறியத்

அகப்பொருட் பாடற்குரிய தலைமக்கள்

இனி, மேலே கூறிப்போந்த எழுதிணையையும் பற்றிப் பாடுங்காற் கவனித்தற்குரிய வழக்குகள் சிலவும் ஆசிரியர் கூறுகின்றார். ஐந்திணை பற்றிப் பாடும் பாடல்களில், தலைமக்கள் பெயரைவைத்துக் கூறுமிடத்து, திணைப் பெயர்களாக முன் குறித்த—வெற்பன், துறைவன், கொடிச்சி, கிழத்தி என்ற பொதுப்பெயர்களாற் கூறவேண்டுமேயன்றி, அத்தலைமக்களுடைய இயற்பெயரைச் சுட்டிக்கூறிச் செய்யுள்செய்தல் கூடாதென்றும், இயற்பெயரைச் சுட்டிக்கூறின் அஃது அகமாகாது புறமாம் என்றும், ஏனைக் கைக்கிளை பெருந்திணைகள் சுட்டி யொருவர் பெயர்கொண்டும் கொள்ளாதும் வருமென்றும் ஆசிரியரால் விதிக்கப்படுகின்றன. இவ்வாறு அகப்பொருட்கு உரியனாகிய தலைவன் பெயரைத் திணைப்பெயராற் கூறல் வேண்டுமென்ற நியதிப்படியே, அகத்தைச் சார்ந்த நற்றிணை குறுந்தொகை கலித்தொகை முதலாய பண்டை நூல்களும், பிற்காலத்துக் கோவைகளும் அமைந்திருத்தல் காணலாம். ஆயின், முன்னூல்களினும் பின்னூல்களிலும் அரசரியற் பெயர் முதலியன கூறப்படுகின்றனவே எனின்

தக்கது. கயவர் தம்மை விற்றுக்கொள்ளலாவது பிறர்க்கு அடிமைபுகுதலாம். "ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃ தொருவன், விற்றுக்கோட் டக்க துடைத்து" (குறள் 220) என்பதும் இவ்வழக்குப்பற்றி எழுந்ததே என்க. பிறற்கு அடிமை புகுந்ததன் குறியாக ஆள்பவனது இலச்சினையை அடியான் தன் மார்பினுந் தோளினும் பொறித்துக் கொள்ளுதல் பண்டை மரபு. இதனை—"மார்விற் பொறியொற்றிக் கொண்டாள்வல்" (கலித்தொகை, 84) என முன்னோரும், "மேவலர் மார்பினுந் திண்டோளினுஞ்...சேவெழுதும் பெருமாள்" (தமிழ்நாவலர்சரிதை 148) எனப் பின்னோரும் கூறுதலான் அறிக. அடிமையாக்குதல் என்ற பொருளில் 'மார்வெழுத்தாக்கல்' என்ற பழந்தொடர் வழங்குதலும் ஈண்டு அறியத்தகும் (திருவாய்மொழியீடு, 5, 10, பிர.). இறைவனையும் அவன் பத்தர்களையும், ஆண்டவன் அடியார் என்று வழங்குவனவும், கடவுளிலச்சினையை அவ்வடியார் பொறித்துக்கொள்வதும் மேற்குறித்த உலகவழக்குப் போன்றதே என்க. இன்னும் இதனை விரிப்பிற் பெருகும்.

-கூறுவேம்; அகப்பாடல்களில் இரண்டு வகைப் பெயர்கள் வழங்குவன; அவை, பாட்டுடைத் தலைவன்பெயரும் உரிப் பொருட் டலைவன் பெயருமாம். பாட்டுடைத் தலைவனை கோவைத்தலைவன்[1] என்றும், உரிப்பொருட் டலைவனைக் கிளவித்தலைவன் என்றும் கூறுதலுமுண்டு.

உதாரணமாக,—

"ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த னரிகே சரியணிவான்
தோய்கின்ற முத்தக் குடைமன்னன் கொல்லியஞ்
[சூழ்பொழில்வாய்
ஏய்கின்ற வாயத் திணையோ ரிளங்கொடி கண்டெனுள்ளம்
தேய்கின்ற தென்ப தழகிய தன்றோ சிலம்பனுக்கே"
(இறை. களவி. பாண்டிக்கோவை மேற்கோள்"

என்ற பாட்டில், "தமிழ் வேந்தனாகிய அரிகேசரியின் கொல்லி மலைச் சோலையில் ஓரிளங்கொடிபோன்ற பெண்ணைக் கண்டு என்னெஞ்சம் வருந்துகின்றது' என்று சொல்வது சிலம்ப னுக்கு அழகியதோ" எனப் பாங்கன், தலைமகன் கவற்சி கேட்டு மொழிந்ததாகக் கூறப்பட்டுளது. இதனுள் அரிகேசரி எனவரும் பாண்டியனியற்பெயர், பாட்டுடைத் தலைவன் அல்லது கோவைத் தலைவன் பெயர் என்று சொல் லப்படும். என்னை? அவ் வரிகேசரியே, ஒரு பெண்ணைக் கண்டு வருந்தியதாகக் கூறுது, 'அவனது சோலையில் உள்ள பெண்'-என, தலைவிக்கு விசேடணமாக்கி ஒரு புலவர் தன்னை அபிமானித்த அரசனைச் சிறப்பித்தலான் என்க. ஆயின் அப்பெண்ணைக்கண்டு வருந்தியவன் சிலம்பன். எனத் திணைப்பெயரால் வேறு கூறப்படுகிறான்· இஃது உரிப்பொருட்டலைவன், அல்லது கிளவித்தலைவன் பெயர் என்று வழங்கப்படும். இனிப் பாட்டுடைத் தலைவனாகிய பாண்டியனையே உரிப்பொருட்டலைவனாக வைத்துச் செய்யுட் செய்யுமிடத்து, அஃது, அகப்பொருட்குரியதாகாது புறப் பொருட்பகுதியாம் என உணர்ந்துகொள்க. இவற்றின்

---

[1] 'நாயகவாசி என்பது பிற்கால வழக்கு.

விரிவை அகத்திணையியலின் இறுதிச் சூத்திரத்தும் (55) "மெய்ப்பெயர் மருங்கிற் கூறுதல் வழியே" என்னும் புறத் திணையியற் சூத்திரத்தும் (37) உரைநோக்கி அறியலாகும்.

அகப்பொருட்குரிய பாக்கள்

இவ்வாறு விதிக்கப்பட்ட அகப்பொருள்கள் பண்டைக்காலத்தே, எல்லாப் பாக்களிலும் அமைத்துப் பாடப்பட்டதாகத் தெரிந்திலது. என்னே? இப்புலனெறி வழக்கம் கலிப்பா பரிபாடல் என்ற இரண்டுவகைச் செய்யுள்களுக்கே உரியதென்று ஆசிரியர் நியமித்தலான் என்க; இதனை,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு மருங்கினும்
உரிய தாகு மென்மனர் புலவர்"

என்ற சூத்திரநோக்கி உணர்க. [1]பரிபாடல் இன்பப்பகுதி பற்றியே பாடப்பட்டதென்பது செய்யுளியலில், "காமங் கண்ணிய நிலைமைத்தாகும்" எனப்படுதலாலும் உணரப் படும் (433). இதனல் ஆசிரியர் காலத்தே எல்லாப்பாக் களிலும் அகப்பொருள் அதிகமாக வழங்காமை தெரியலாம். ஆனல், தொல்காப்பியர்க்குப் பிற்பட்டு இவ்வரையறை யில்லாமற் போயிற்றென்பது, கடைச்சங்கத்து நூல்களிற் கலித்தொகை நீங்க ஒழிந்தனவும் பிற்பட்ட நூல்களும், ஆசிரியம் வெண்பா வஞ்சிப்பாக்களில் அமைக்கப்பட்டிருத் தலால் உணரப்படுகிறது. நச்சினர்க்கினியர், இப்பாக்கள் அகம் புற மிரண்டற்கும் பொதுவாம் என்று பிற்காலத்து நேர்ந்த மாறுபாட்டை உரையிற்கொண்டு அமைப்பர்.

மேற்கூறிப்போந்தவாற்ருல், பண்டைத் தமிழ்மக்கள் புலனெறி வழக்கஞ் செய்தற்குப் பகுத்துக்கொண்ட கைக்

[1] இப்போது, இந்நூலிற் கிடைத்த பாடல்கள், பரிமேலழ கர் உரையுடன் மகாமகோபாத்தியாய ஐயரவர்களால் அச்சி டப்பட்டுள்ளன.

கிளை ஐந்திணை பெருந்திணை என்ற காமப்பகுதிகளின் வரலாறுகள் நன்கு வெளியாகும். இவ்வெழு திணைபற்றியும் கூறற்குரிய வேறுசில விதிகளும் உள்ளனவேனும், சிறப்பாகத் தெரிந்துகொள்ளத்தகும் பொதுவிதிகள், முற்கூறியனவே. ஏனையவற்றில், ஏற்பனவற்றை உரிய இடங்களில் வைத்து உணர்த்துவேம். இனி, இவ் வெழுதிணைப் பொது விதிகட்கெல்லாம் மேற்கோட் செய்யுட்கள் எழுதுவதாயின், இவ்வாராய்ச்சி பெருகிவிடுமென்றஞ்சி உரை நோக்கி உணருமாறு விடப்பட்டன.

அகப்பொருள் பெருமை.

இவ் வைந்திணைகளையும் பற்றிப் புலவர்கள் பாடிவந்த வழக்கம் தொல்காப்பியனுர்க்கு முற்பட்ட காலத்தே பெருகி வழங்கியதாகல் வேண்டுமென்பது 'முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்தோன்' என இவ்வாசிரியரைப் பாயிரங் கூறுதலால் அறியலாகும். அங்ஙனமே தொல்காப்பியர்க்குப் பிற்காலத்தும் அவரிட்ட ஆணைவழியே நூல்கள் பாடப்பட்டுப் பெருகியிருந்தன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை"

என்று எண்ணப்பட்ட பழைய தொகைநூல்க ளெட்டனுள், புறம் பதிற்றுப்பத் தொழிந்தனவும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிற் பலவும், பத்துப்பாட்டிற் சிலவும்–இவ்வகத்திணை பற்றி அமைந்தனவேயாம். இவை பெரும்பான்மை குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணையும்—அத் திணைமுறையாக அன்றி வேறு திணைமுறையாக வைத்துக் கூறுவன. நச்சினர்க்கினியரும், "தொகை நூல்களிலும் கீழ்க்கணக்கிலும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு உணர்க"என்பர் (பக்-10). இவற்றுள் நற்றிணை முதலிய தொகைநூல்கள், ஒருவரானன்றிப் புலவர் பலராற் பாடப்

பட்டனவாம். அதாவது — ஒவ்வொருகாலத்து ஒவ்வொரு திணைதுறை விகற்பத்தைப்பற்றிப் புலவர் பாடிப்போந்த செய்யுட்கள், பிற்காலத்தவரொருவரால் தொகுக்கப்பெற்று முறைப்படி கோக்கப்பட்டன என்பதாம். இங்ஙனம் அகப் பொருளைப் பொருளாகக்கொண்டு, தம்மை யபிமானித்த அரசர் முதலியவரைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பாடும் வழக்கு முன்னுளிற் றமிழ்மக்களாற் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு திணையின் முதல் கரு வுரிப்பொருள் களின் இயற்கைச் சிறப்புக்களை யெடுத்து விளக்கி அழகாகப் பாடிவந்த அருமைபற்றிப் பண்டைப் புலவர்கள், பாலை பாடிய பெருங்கடுங்கோ, பாலைக் கௌதமனுர், மருத னிள நாகனுர், நெய்தற் காக்கியன், வெறிபாடிய காமக்கணியார், மடல்பாடிய மாதங்கீரன் என்றிவ்வாறு அத்திணை துறைப் பெயர்களாற் சிறப்பித்து வழங்கப்படுவாராயினர். அன்றி யும், பண்டைநாளில் அகப்பொருளிலக்கணங்களை அறிந் திராமை, புலமைக்கே பெரியதோர் இழுக்காக முன்னோரால் கருதப்பட்டும் வந்தது. கடைச்சங்க நாளில் ஒருகாலத்தே பொருளிலக்கணமறிந்த புலவர் கிடையாமற் பாண்டியன் புடைபடக் கவன்றபோது “என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொரு ளதிகாரம் பெறேமே எனின் இவைபெற்றும் பெற்றிலேம்” என அவ்வரசன் கூறினனென்றும், அக்காலத்தே இறைய னுரே முன்னின்று அவன் கவற்சி நீங்கப் பொருளிலக்கண மொன்றை அருளிச்செய்ய, அதற்குப் புலவரைக்கொண்டு அப்பாண்டியன் பொருள் கண்டனனென்றும் கேட்கப்படுஞ் செய்தி, பொருளாராய்ச்சியில் முன்னோர்க்கிருந்த ஊக்க மிகுதியைப் புலப்படுத்தும். இவையன்றி, பண்டைப்புலவர் தம் மனோதர்மங்களையும் கற்பனுசக்தியையும் வெளிப்படுத் தற்கு அகத்திணைத் துறைகளையே ஏற்ற நிலைக்களமாகக் கொண்டு, முற்கூறிய முதலுரி கருப்பொருள்களின் இயற்கை நலங்களெல்லாம் விளங்கும்படி பாடிவந்தமையால், தமிழ்ச் சுவை யறிந்த வேற்றுமக்கட்குங்கூட, அம்மொழியிற் சுவை யுண்டாம்படி அத்துறைகள் அமைந்து விளங்கின. ஆரிய

வரசனுகிய பிரகத்தனைத்[1] தமிழறிவுறுத்தவேண்டிக் கபில ரென்னும் நல்லிசைப்புலவர் அவனுக்குப் பாடிக்காட்டியது ,‘குறிஞ்சிப்பாட்டு” என்பது. இது, தலைவியின் வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடுநிற்கும் விகற்பத்தை அற்புதமாகக் கூறுவதாம். “சமயக்கணக்கர் மதிவழிகூருது, உலகியல் கூறிப் பொருளிதுவென்ற” தெய்வப்புலமைத் திருவள்ளுவனும் தாம் கூறப்புக்க காமத்துப் பாலைக் களவு கற்பெனப் பகுத்து அவற்றின் விகற்பங்களைத் தமிழ் நூல்களோடும்[2] பொருந்தக் கூறிச் செல்வரெனின், அக்காலத்தே இவ் வகைப்பொருட் கிருந்த சிறப்பியல்பு வெளிப்படையன்றே. இம்மட்டோ! உத்தம அன்பை வெளிப்படுத்தற்கு இவ்வகத் துறைகளினும் உயர்ந்த இடம் பிறிதின்மையால், முழுமுதற்கடவுளிடத்துப் பேரன்பு செலுத்தி ஆடிப்பாடி யகங்கரைந்த அடியார்களுங்கூட, அக் கடவுளையும் தம்மையும் நாயக நாயகியர்களாகக்கொண்டு இவ்வகத்துறைகள் வாயிலாகவே பத்தியென்னும் பெரு வெள்ளத்தி லிழிந்து முழுகி ஆனந்திப்பாராயினர். கடவுள ரிடத்துச் செலுத்துங் காமப்பகுதியைப் புறத்திணைக்குரிய தாக ஆசிரியர்கள் இலக்கணம் வகுத்தனராயினும் அதன் பொருட் கூறுகளெல்லாம் அகத்திணைத் தொடர்புடையன வாகவே அமைந்திருத்தல் கண்டுகொள்க. இவ்வாறு அகப்

---

[1] “ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்” என்பவன் இயற்றிய செய்யுளொன்று குறுந்தொகையுள் (184) வருகின்றது.

[2] காமத்துப்பாலைப் பெரும்பான்மை வடநூல் வழக்குப் பற்றியும் வள்ளுவர் கூறினர் என்பதே பரிமேலழகர் கருத்து. ஆயினும், மற்றொருசார் உரையாசிரியர் தமிழ்வழக்கேபற்றி அக்காமப் பகுதி ஓதப்பட்டதென்று கூறுவர்; அஃதாவது, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்ற ஐந்திணையும். முதல் கரு வுரிப்பொருள்களுள், பெரும்பான்மை உரிப்பொருள் பற்றி – திணையொன்றற்கு ஐந்ததிகாரமாக – இருபத்தைந்ததி காரங்களாற் காமத்துப்பால் கூறப்பட்டது என்பதாம். (1910-ம் வருஷம் என்னுற் பதிப்பிக்கப்பட்ட திருக்குறட் பரிமேலழகருரைப் (பாக்கெட் ஸைஸ்) பதிப்பினுள், திருவள்ளுவரைப் பற்றிய குறிப்பு 16-ம் பக்கம் பார்க்க)

பொருளாகிய இன்பத்துறைகள் வாயிலாக அடியார்கள் தம் பேரன்பைக் கடவுளரிடத்துப் புலப்படுத்திப்போந்த அருமை பெருமைகளைத் திருவாய்மொழி திருவிருத்தம், முதலாய திவ்யப்பிரபந்தங்களால் நன்கறியலாம், ஆகவே, சிற்றின்பத்துக்கு மட்டுமன்றிப் பேரின்பக்கடலில் இறங்குதற்கும், இவ்வகத்துறைகள் உரிமைபூண்டு திகழ்வன என்பது தெளிவாகும்.

II. களவியல்.

மேற்கூறிப் போந்தவற்ருல், பண்டைத் தமிழ்மக்களது வாழ்க்கை முறையில், களவு கற்பென்ற இரண்டு நிலைகளைப் பற்றிப் புலவர் பாடுதற்கு அமைத்துக்கொண்ட பொதுவிதிகள் விளங்கின. அந்நிலைகளின் வரலாறு இன்னவென்பது, பொதுவாக இவ்வாராய்ச்சித் தொடக்கத்தே சுருக்கிக் கூறப்பட்டதாயினும், அவற்றின் சிறப்பியல்களாக ஆசிரியர் கூறுவனவற்றை இனி விளக்குவேம்,

களவு கற்பென்ற கைகோளிரண்டனுட்களவாவது 'பிணி மூப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய், உருவுந் திருவும் பருவமும் குலனுங் குணமும் அன்பும் முதலியவற்ருல் ஒப்புமை யுடையராய தலைமகனுந் தலைமகளும், பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றி, ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது' பிறர்க்குரியளென்று இருமுதுகுரவராற் (பெற்ருேராற்) கொடை எதிர்தற்குரிய தலைவியை, அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின், இது, பிறர்க்குரிய பொருளை மறைந்துகொள்ளுங் களவுபோன்ற தன்றென்றும் வேதம் மறை என்று பெயர்பெற்ருற்போல, உழுவலன்புபற்றிய இவ்வொழுக்கமும் களவென்று பெயர்பெற்றதென்றும் கூறுவர். இக்களவு, அன்பொடு புணர்ந்ததாதலாற் "காமக் கூட்டம்" எனவும்படும். இஃது, ஆரியரது எண்வகைப்பட்ட மணவகைகளுள் காந்தருவத்தின்பாற்படுமென்பர். காந்தருவமாவது-கந்தர்வகுமாரரும் அவர்மகளிரும் தம்முள்

எதிர்ப்பட்டு மனமியைந்து கூடுதல்போலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டு மனமியைந்து கூடுவது. இதனை,

"அதிர்ப்பில்லைபம் பூணுரு மாடவருந் தம்மில்
எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் க்ண்ட கலப்பு"

என்ற வெண்பாவால் உணர்க. இங்ஙனம் தமிழ்மக்களது களவுப் புணர்ச்சியைக் காந்தருவமாகத் தொல்காப்பியனர் கூறினும், தமிழர்க்கு அவ்வொழுக்கம் ஆரியமக்களிடத்திருந்து வந்ததென்பது அவர்கருத்தன்று. இதனைக்,

"காமக் கூட்டங் கண்ணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"

என்ற அவர் கூற்றில், 'காமக்கூட்டத்தை ஆராயுமிடத்து அது யாழோரான கந்தருவரது இயல்புடையதாகும்' என்று ஒற்றுமையில் வேற்றுமை கூறுதலால் உய்த்தறியலாம். ஆகவே "தமிழ்கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளுமே" ஆசிரியர் ஓதியனவென்பதும், ஆரிய மணம்பற்றிய செய்திகளை அவர் கூறவந்தவரல்லர் என்பதும் உணரத்தக்கன. இவ்வொழுக்கம் தமிழ் வழக்கே என்பதைத் திருத்தக்கதேவரும்,—

"இலைபுறங் கண்ட கண்ணி யின்றமி ழியற்கை யின்பம்"
(சுரமஞ்சரி—9)

"தேவர் பண்ணிய தீந்தொடை யின்சுவை
மேவர் தென்றமிழ் மெய்ப்பொரு ளாதலின்"
(பதுமை—193)

எனச் சிந்தாமணியிற் கூறுதல் காண்க. யாழோர் கூட்டத்துக்கும் இக்காமக் கூட்டத்துக்குமுள்ள வேறுபாட்டை, நச்சினர்க்கினியர், "கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும், ஈண்டுக் கற்பின்றிக் களவு அமையாது" என்பதனல் விளக்கினர்.

இனித் தமிழ்வழக்காகிய இக்களவுக்கூட்டம் நான்கு வகையாக முன்னோராற் கூறப்படுகின்றது. இவை-இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம்-என்பன. ஆசிரியர் இவ்வகைகளை,

"காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே"

எனச் செய்யுளியலிற் கூறுவர் (499). இந்நான்கு பெரும் பிரிவுகளே, பலவிகற்பங்களும் பகுதிகளு முடையனவாக விரிந்து, ஒருகதைபோல வந்து முடிவனவாம். இங்ஙனம் முடியுங் களவு வரலாற்றில், பாத்திரங்களாக நின்று கூற்று நிகழ்த்தற்குரியார், அறுவர். அவர்-பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என்பார் (502). இவர்களல்லது இக்களவொழுக்கத்தில் வேறெவரும் பேசுதற்குரியவராக விதிக்கப்பட்டிலர். இவர்களுள்,—

(1) பார்ப்பான்—இவன் தலைவனுக்கு இழிவுநேரும் இடங்களிலெல்லாம் நெருங்கி யிடித்து உறுதிகூறுதற்கும், தலைவற்குவரும் தீமைகளை நிமித்தங்களால் அறிந்து விலக்கு முபாயங்களைச் சூழ்தற்கும் உரியன். தலைவியும் தலைவனும் உடன்போம்போது, இவன், அவ்விருவரையும் இடைவழியிற்கண்ட செய்திபற்றிச் செவிலி (தலைமகள் தாயரில் ஒருத்தி) முதலியோரால் உசாவவும், இறுக்கவும் உரியன் என்றுங் கூறுவர்.

(2) பாங்கன்—இவன் தலைவனுக்கு உசாத்துணையாகியவன். இவன் பார்ப்பனக்குலத்தவனே என்று களவியலுரைகாரரும் (பக் 55), 'இவன் பெரும்பான்மை பார்ப்பானும்' (பக். 245) என்று நச்சினார்க்கினியரும் கூறுவர். நம்பியார், தலைவற்குப் பார்ப்பானும் சூத்திரனுமாக இருவகைப் பாங்கருளரென்றும், இவ்விருவரும் தலைமகற்குரிய உயிர்த்துணைவராக அவர் தாய்தந்தையரால் அடைக்கலமாகக்

கொடுக்கப்பெற்ற உரிமையுடையார் என்றும் வகுத்துரைப்பர். (109).

(3) தோழி—இவள் தலைவியின் செவிலித்தாயினுடைய மகள் (125). இவள், தலைவிக்கு உசாத்துணையாய் நன்மையுந் தீமையும் ஆராய்ந்து, அவட்குவருந் துன்பந்தவிர்த்தற்கு உரியள். இவளை நல்லறிவுவாய்ந்தவளாகச் சொல்லுவர் (239).

(4) செவிலி— தலைவியைப் பெற்ற தாய்க்கு உயிர்த்தோழியாய்த் தலைவியின் துக்கநீக்கி நல்லறிவும் ஆசாரமும் பெருக அவளை வளர்த்தவள். இவள், பெற்றவளாகிய நற்றாயினும் தலைவியிடம் பெரிதும் அன்பும் அந்தரங்கமும் உடையளாதலால், இக்களவு வரலாற்றிற்குச் சிறந்தவளாய்த் தாய் என்றே சிறப்பித்துக் கூறப்படுவள் (124).

(5) தலைமகன்— இவ் வகவொழுக்கத்துக்குச் சிறப்புடைய தலைவன். இவன் பதினாறுண்டினனாய்ப் பெருமையுமுரனுமுடையனாய் உருவு திரு குலம் குணம் அன்பு அறிவு முதலியவற்றால் ஒப்புயர்வற்ற ஓர் உத்தமபுருடன்.

(6) தலைமகள்— இவ் வகவொழுக்கத்துக்குச் சிறப்புபுடைய தலைவி. இவள் பன்னீராட்டைப் பிராயத்தளாய், அச்ச நாண் மடன்களும் (99) செறிவு நிறை அறிவு அருமைகளும் (209) கொண்டு, உருவு திரு முதலியவற்றால் (273) தலைவனோடு ஒத்து விளங்கும் ஓர் உத்தம மாது.

இங்ஙனம் களவுப்பகுதியிற் கூற்றுநிகழ்த்துவதற்குரியவர்களைச் சுருக்கமாக உணர்ந்துகொள்க.

இவருள், தலைவன், தலைவி, தோழி, பாங்கன் இந்நால்வரும் ஒருவரையொருவர் அழைத்தற்குரிய உயர்திணைப் பொதுப்பெயர் ஒன்று ஆசிரியர் கூறுவர். அஃது "எல்லா" என்பது. இச்சொல்லால், தலைவியும் தோழியும் பெரும்பான்மை தலைவனையும், அத்தலைவன் சிறுபான்மை தலைவி

யையும் பாங்கனையும் அழைத்துக்கொள்வர் (220). பிற்காலத்து இச்சொல், எலா எல்ல எலுவ எனவும் திரிந்தது.[1] இனி, அன்னை என்னை என்னும் முறைப்பெயர்களும் இப்புலனெறிவழக்கில் வழங்கும். அன்னை யென்பது தலைவி தோழியையும், தோழி தலைவியையும் அழைக்கும் சொல்லாகவும், என்னை என்பது அவ்விருவருந் தலைவனை விளிக்குஞ் சொல்லாகவும் கொள்வர் (246).

தலைவன் தலைவியர்க்கு முறையே பதினாறும் பன்னிரண்டும் பருவ ஆண்டுகளாகக் கூறப்படுதலை, மெய்ப்பாட்டியலிற் "பிறப்பே குடிமை" (273) என்ற சூத்திரவுரையிற் காணலாம். இக் களவொழுக்கமானது இரண்டு மாதங்கட்குள் நிகழ்ந்து முடிதற்குரியதென்பது 'களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்—திங்க ளிரண்டி னகமென மொழிப" என்ற களவியற் சூத்திரத்தால் அறியற்பாலது. இதனுரைகாரர் "இதனல் 11 ஆண்டும் 10 திங்களும் புக்க தலைமகளோடும், [2] 15 ஆண்டும் 10 திங்களும் புக்க தலைமகனைப்போலும், புணரவேண்டியது என்பது பெற்றும்; இவளும் இருதிங்கள் களவொழுக்கத்தே ஒழுகப் பன்னிரண்டாட்டைப் பிராயத்தளாம்; அது மக்கட்பேற்றுக்குக் காலம்: களவொழுக்கத்துக்குப் பொருந்தாதென விலக்கப்பட்டதாம், ஆசிரியர்களான் என்பது. இவனும் இவ்விருதிங்கட் களவொழுக்கம் ஒழுகப் பதினாறாட்டைப் பிராயத்தனும்; அஃது ஆண்மை நிலைபெறுங் காலமாகலாற் களவொழுக்கத்துக்கு விலக்கப்பட்டதாம் என எழுதுதல் ஈண்டு ஆராயத்தக்கது. "பன்னிரண்டாண்டும் பதினாறாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பதுவேதத்தின் ஒப்ப முடிந்தமையின், அதுவும் ஒப்பெனவே படும்" என்பர் மெய்ப்பாட்டிய லுரைகாரர் (273). இனி ஒருசாரார் இக்களவொழுக்கம் பதினைந்து நாளில் நிகழுமென்றுரா

---

[1] செந்தமிழ்நாடான பாண்டிநாட்டில் 'எலா' என்று பெண்டிரை அழைத்தல் இன்றுமுள்ள வழக்காம்.

[2] பேராசிரியரும் இவ்வாறெழுதுவர் (திருக்கோவை. 9 உரை)

யினும், அஃது இக்களவியலுரைகாரரால் மறுக்கப்படுகின்றது (பக். 137).

இனி, மேற்கூறிய பார்ப்பான்முதலிய அறுவரும் இன்னவின்னவாறு கூற்றுநிகழ்த்தற்குரியர் என்று அக்கூற்றுக்களை ஆசிரியர் தனித் தனிச்சூத்திரங்களாற் குறிப்பிடுகின்ருர்.[1] ஆனல், பிற்காலத்து அகப்பொருளிலக்கணம்போல இக்கூற்றுக்களையெல்லாம் முறைப்படி வைத்து அவர் மொழியவில்லை. இங்ஙனம் தனித்தனி வைத்துக் காட்டப்பெற்ற கூற்றுகளைக் கோவைக் கிளவிகள் போலத் துறைப்படுத்திக் கூறுவதற்கு, ஆசிரியர்காலத்து வழங்கிய அகப்பொருண் முறைவைப்பு இன்னதென்பதை விளக்கு மிலக்கியங் கிடையாமையாற் சிறிது தடையாகின்றது. கடைச்சங்க நாளில் அகத்திணைபற்றி எழுந்த நற்றிணை முதலிய தொகைநூல்கள் பிற்காலத்துக் கோவைகளிற்கண்ட துறைகளையே பெரும்பான்மை கூறினும், அவை கோவைபோலக் காட்சி முதலாகத் தொடங்கிப் பரத்தையிற்பிரி விறுதியாக வைத்துக் கூருது, குறிஞ்சி பாலை என்ற திணை முறைப்படியே வைத்தோதுதலால், ஒரு துறைக்கு மற்ருெருதுறை தொடர்பில்லாமலே காணப்படும். இங்ஙனமாகத்-தொல்காப்பியனர் அவ்வவர் கூற்றுக்களைக் கோவைப்படக் கூருமற் சென்றதும், பழைய இலக்கியங்களும் அதற்கேற்பக் காணப்படுவதும் நோக்கும்போது, முன்னுளிற் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென்ற ஐந்திணையில், ஒரு முறைபற்றிப் பாடுதலே பெருவழக்காக இருந்ததென்பது புலப்படுகின்றது. ஆயினும், நுணுகி ஆராயுமிடத்துத் தொல்காப்பியத்தின் அகப்பொருண்முறைவைப்பு இன்னதென்பது விளங்கத் தடையில்லை. இதற்குத் தொல்காப்பியனர் கருத்துக்களையே பெரும்பான்மை தழுவியமைந்த இறையனர் களவிய

---

[1] ஆசிரியர் தம்நூலிற் கூற்றுக்களைத் தனித்தனி கூறும் முறைப்படியே, "செம்பூட் சேயார் கூற்றியல்" என்ற இலக்கணமொன்றும் இருந்ததென்பது, களவியலுரையாற் றெரிகின்றது.

லுரையும், அதனை அடுத்து நாற்கவிராச நம்பியகப்பொருளும் பெரிதும் உபகாரப்படுவனவாகும். இவற்றிற் சிறுபான்மை தொல்காப்பியத்தோடு மாறுபடும் இடங்களும் உண்டேனும், அவை உரிய இடங்களில்வைத்து விளக்கப் பெறும். இனி, இக்களவொழுக்கின் பெரும் பிரிவுகளாக ஆசிரியர் கூறிய இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டந் தோழியர் கூட்டங்களை முறையே கூறுவோம்.

1. இயற்கைப்புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியாவது, முற்கூறப்பட்ட இலக்கணம் வாய்ந்த தலைமகனுந் தலைமகளும் ஒருபொழிலிடத்தே எதிர்ப்பட்டுத் தெய்வ மிடைநிற்பப் பான்மை வழியோடித் தம்முள் ஒத்த காதலுடையராய்க் கூடுங் கூட்டம். இக்கூட்டம் நிகழ்வதற்குமுன், ஒருதலைக் காமமாகிய கைக்கிளைப் பகுதிகள் இவர்க்குள்ளே நிகழும். அவை—காட்சி, ஐயம், தெளிதல், தேறல்—என்பன (52). இவற்றுள், காட்சியாவது, இவ்விருவருந் தெய்வவசத்தால் எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் முதன்முதலாகக் காண்பது. இக்காட்சிக்குப் பின், 'இங்ஙனந் தோன்றுநின்ற மாது திருமகள் முதலாகிய தெய்வமோ, அன்றி-மக்கட்பிறப்பினளோ என்று மயங்கிக் கூறுவது ஐயமாம். இவ்வையமானது, அதனைத் தெளிதற்குரிய அறிவுவாய்ந்த தலைவன்கண்ணேயல்லது தலைவிக்கண்ணே நிகழாதென்றும், தலைவிக்கு ஐய நிகழின், அச்சமேயன்றிக் காமக்குறிப்புண்டாகாதென்றும் கூறுவர் (94 உரை). இங்ஙனம் தெய்வமோ என்று ஐயுற்ற தலைமகன், விண்ணவர்க்கன்றி மண்ணவர்க்கே யுரியகுறிகள் சில தலைவியிடம் நிகழ்தல்கொண்டு ஐயம் நீங்குவான். இவ்வையம் நீங்குங் குறிகளாக ஆசிரியர் கூறியவை- "வண்டே இழையே வள்ளி பூவே, கண்ணேயலமரல் இமைப்பே அச்சமென், றன்னவை பிறவு" மாகும் (95). இவை, வானத்தனவன்றி, வையகத்தனவாகக்கொள்ளுதல் கவிமரபாகும். [இவற்றுள் இழை-மக்

களால் இழைக்கப்பட்ட அணிகலம் வள்ளி—முலையினுந்[1] தோளினும் எழுதுந் தொய்யிற்கொடி. கண்–வான்கணல்லாத ஊன்கண்.] இவையன்றிக் கால்நிலந்தோய்தல், நிழலிடுதல், வியர்த்தல் முதலியனவும்அம்மக்கட் குறிகள் ஆகும். இவற்றால் 'இவள் மக்களுள்ளாள்' என்று தேறித் துணிந்த பின், தலைமகற்குப் புணர்ச்சிவேட்கையுண்டாகத் தலைவியைக் கூடக் கருதுதலும், அதன்பொருட்டு அவளை யுடம்படுத்தற் குத் தலைவன் வாக்கானன்றிக் கண்களாற் குறிப்பித்து உசாவுதலும் நிகழ்வனவாம். நிகழ அவளும் அஃதறிந்து (96) தன்னுறுவேட்கையை வெளிப்படக்கூறாது (118) கண்களின் குறிப்பாற் கூறுவள் என உணர்க. இவற்றை.—

"நாட்டமிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்" 96)

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்க ளின்றிய வாயிடைப்
பெய்ந்நீர் போலு முணர்விற் றென்ப" (118)

என ஆசிரியர் கூறுதலாலுணர்க. "கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க–ளென்ன பயனு மில" என்றார் வள்ளுவனாரும், இவ்வாறு தலைவியின் உடம்பாடறிந்து தலைவன் அவளைக் கூடக் கருதியதும், தலைவிக்குப் "பொறி நுதல் வியர்த்தல்" முதலிய மெய்ப்பாடுகள் நிகழும். [இவற்றை மெய்ப்பாட்டியலில் விரித்துக் கூறுதும்; ஆண்டுக் காண்க] இங்ஙனம், இருவர் குறிப்பும் ஒத்துநிற்றலை புணர்ச்சி என்றும், வழிநிலைக்காட்சி என்றுங் கூறுவர். வேறு வாயில்களின்றித் தாமே தூதுவராக நிகழ்த்தும் (119) இவ்வுள்ளப்புணர்ச்சியே. மெய்யுறு புணர்ச்சிக்கு நிமித்தமாகும் (97). இவற்றை,

[1] தொய்யிற்குழம்பிற் கொடியெழுதலும் காமன் சிலையாகிய கரும்பெழுதலும் மரபு (கலித்தொகை, 111–16, 17; 142—32; 33).

"உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங்
கள்ளப் புணர்ச்சியுங் காதலர்க் குரிய"
"பொருவிறந்தோர்க்குப் பெருமையு முரனும்
நன்னுதற் கச்சமும் நாணமும் மடனும்
மன்னிய குணங்களாதலின் முன்னர்
உள்ளப் புணர்ச்சி யுரியதாகும்" (34—35)

என நம்பியாரும் கூறுதல் காண்க.

இங்ஙனம். மெய்யுற்றுக் கூடிய தலைவன், தன்னன்பு தலைவிக்குப் புலப்பட அவளைப் புகழ்த்துகூறி, 'இனித் தலைமகளுடன் இவ்வாறு நீட்டித்திருப்பின் ஏதமாம்' என்று கருதி, அவளிடத்தினின்று பிரியக்கருதுவான். கருதுமவன். வண்டு நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கி அவற்றுக்குத் தன் கழிபெருங்காதல் கூறுவானுக, அக்குறிப்பறிந்து தலைவி கவன்றவிடத்து "நின்னெடுபட்ட தொடர்ச்சி எழுமையும் வருகின்றதொன்ருதலால். இத்தகைய நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன், அன்றி அறனல்லது செய்தேனுமாவேன்' என்று நயப்பக்கூறித் தலைமகளைத் தேற்றுவன். இங்ஙனம் இவன் கூறுதலின்பயன்-புணர்ச்சி யெய்திய தலைவிக்கு "இவன் எவ்விடத்தான் கொல்லோ" இன்னும் இது கூடுங் கொல்லோ, என்பால் இவன் அன்புடையோன் கொல்லோ" என்று நிகழ்தற்குரிய ஐயம் நீக்குதலேயாம். இதனல். தலைவி ஐயம் நீங்குமேனும், தலைமகனது பிரிதற்குறிப்பறிந்து அதற்குப் பெரிதும் ஆற்ருது பசந்து காட்டுவள்.காட்ட, மற்றும் அவளைவற்புறுத்தவெண்ணி 'என்னுடையபதி, நின்னூர்க்கு மிகவும் அண்ணியது' என்று சொல்லித் தான் அடுத்தடுத்து இங்கு வருதல் எளிது என்பதைக் குறிப்பித்துத் தலைவியை ஆற்றுவித்துப் பிரிவன். இங்ஙனம் பிரிதலும் வற்புறுத்தலும் முறையே பிரிவச்சம், வன்புறை என்று கூறப்படும் (பக். 235).

இங்ஙனம் கூறித் தலைமகளைத் தேற்றிப் பிரியுந் தலைமகன் அவளைத் தனியளாக நிறுத்தி நீங்குமோ எனின், நீங்கான். தலைவியை நோக்கி. 'இனி, நீ முற்பட்டு உன் தோழிய

ரோடு சேர்ந்துகொள்; யான் இவ்வழியாகச் சென்று ஆங்கு வருவேன்' என்று அவளை விளையாடுந் தோழியரிடத்து உய்த்து அகன்றுபோய்த் தன்னை அவள் காணமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் ஒரு பொதும்பரில் மறைந்து நின்று, தலைவியின் ஆயக்கூட்டத்தையும் அவ் விடந்தன்னையும் நோக்கி, 'இவளை யான் எய்தினன் என் பது மாயமோ! இனி இவள் நமக்கு எய்தற்கரியள்போலும்' என்று அவளது அருமையறிந்து வருந்தி, ஆண்டு நின்று நீங்குவான். இவ்விடத்தே, தலைவியோடு இணைபிரியாது செல்லுகின்ற அவள் காதற்றோழியைத் தலைவன் குறிப்பா லறிந்துகொள்ளுதலையும் பின்னூல்கள் கூறும். ஆயினும், "பெட்ட வாயில்பெற்றிரவுவலி யுறுத்தலும்" (பக்.245)என்று, தோழியிற்கூட்டம் நிகழுமிடத்தே வைத்துத் தொல்காப்பி யத்துக் கூறப்பட்டுளது. இவ்வாறே வேறுசில துறைகள் கிளவிக் கோவைகளிற் கூறப்படுவனவு முள. இன்னோரன்ன வெல்லாம் இயற்கைப் புணர்ச்சியாமென்று கொள்க. பேரா சிரியர் "காட்சியும் ஐயமும் துணிவும் புணர்ச்சியும் பிரி வச்சமும் வன்புறையுமென்று இன்னோரன்னவெல்லாம் இயற்கைப் புணர்ச்சி என்னும் ஓரிலக்கணத்தான்முடியுமென் பது" என்றெழுதியதுங் கண்டுகொள்க (பக். 756). "இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தினெய்துழி-முயற்சியின்றி முடிவதாகும்" என்றார் நம்பியார். இப்புணர்ச்சியைத் தெய் வப்புணர்ச்சி, முன்னுறுபுணர்ச்சி காமப்புணர்ச்சி என்றுங் கூறுவர் (திருக்கோவை-18).

2. இடந்தலைப்பாடு.

இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்து இருவரும் பிரிந்தபின்னர், அப்பிரிவாற்றது வருந்திநின்ற தலைமகன் தலைவியை மறுநாளுங் கூடவெண்ணி, "யான் அவளை எய்தியது விதி யானே: இன்னும் அவ்விதி தருமேற் காண்பல்" எனத் துணிந்து அதனைத் தன் தோழற்குங் கூறுது, முன்னை நாளில் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். தலைவி

யும் பிற்றை ஞான்று தன் ஆயவெள்ளத்தோடும் வந்து விளையாடிவருகின்றவள், நேற்றை 'நின்னிற் பிரியேன்: பிரியின் ஆற்றேன்' என்று நீங்கிய தலைவன், அறியாது 'இவ்வாயத்துள்ளே வருவான்கொல்லோ' என்னும் பெரு நாணினாலும், 'நம்பிரிவு ஆற்றாமையால் இறந்துபட்டான் கொல்லோ' என்ற அச்சத்தினாலும் மீதூரப்பட்டு, நெரு நலிற் றலைபகனை வழிபட்ட இடமெதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளேபோலப் பரவசமாய் நின்றாள், ஆயங்களும் முன் னுளிற் பிரிந்தாற்போன்று. தழை விழையத்தக்கன தொடு த்துமென்றும், கண்ணி தண்ணறுநாற்றத்தன செய்து மென்றும், போது மேதக்கன கொய்து மென்றும் இவ்வாறு விளையாட்டு விருப்பாற் றனித்தனியே பிரிந்தநிலையில், தலைமகனும் அவ்விடநோக்கிச் சென்று தனியளாய்நின்ற தலைமகளை எதிர்ப்படத் தலைவியுங் கண்டு 'இவன் நம்பால் அன்பிலனே' என்று முன்பு நிகழ்ந்த ஐயநீங்கிப் பெரிய தோர் மகழ்ச்சிபெற்றாள். ஆயினும், தன்னியற்கைக் குணங் களாகிய நாண் முதலியன அக்குறிப்பை வெளிப்படுத்தா வகை தடுத்து நின்றன; நிற்ப இவ்வொழுக்கம் புறத்தார்க் குப் புலனாக, அதனால் வேறுபட்டாளோ, அன்றிக் 'களவு வெளிப்படுதலால் இனி மணஞ்செய்து கொள்ளினல்லது இக்கூட்டத்துக்கு உடம்படாள்கொல்லோ' என்று கருதிய தலைவன், அது வெளியாமாறு அவளை மெய்யுறத்தீண்டிக் குறிப்பறியலாயினான். இது 'மெய்தொட்டுப்பயிறல்' எனப் படும். நச்சினார்க்கினியர், புலையன் தீம்பால்போல் மனங் கொள்ளுதலுங் கொள்ளாமையுமாகித் தலைவி நிற்கின்ற காலத்தே தொட்டான் என்பர். மெய் என்பது ஈண்டுத் தோளாம்; "உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்-கமிழ்தி னியன்றன தோள்" என்றார் வள்ளுவரும். இக் கிளவியை வண்டோச்சி மருங்கணைதலென்பர் பின்னுள் ளோர். அஃதாவது தலைமகளைச் சாரவெண்ணிய தலைவன் அவள் குழலை நோக்கிவந்த வண்டை யோட்டுவதுபோல

நெருங்கி ஓட்டுமிடத்துதன்கைபட்டதுபோலத்தொடுதலாம்[1] இங்ஙனம் மெய்தொட்டுப்பயின்றவன், தலைவியின் உடம்படற்குறிப்பறிந்து. அவ்வழகிய சோலையிடத்தே அவளைக் கூடவெண்ணிப் பலவாறு புகழ்ந்துகொண்டு அவளைநெருங்கினன். நெருங்கத் தன்னியற்கைக் குணங்கள் தடுத்தலால் நாணிக் கண்புதைத்துக் கொண்டும், ஆங்குள்ள கொடி கொம்பர்களில் மறைந்து நின்றும் அக்கூட்டத்திற்கு இடையூறு சில தலைவியால் நிகழ்த்தப்பெற. அவற்றுக் காற்றுது தலைவன் பலபடக்கூறியபின் அவளோடு கூட்டம் நிகழ்கின்றது. அது நிகழ்ந்தபின் பெரிதும் மகிழ்ந்தவனாய்த் தலைவியைப் பிரிதற்கெண்ணி அவளைத் தேற்றுதற்கு 'எஞ்ஞான்றும் இனிப்பிரியேன்' எனத் தெய்வத்தோடு சார்த்திச் சூளுறுத்து 'இனி இவளைக் கூடுவது அரிதாமோ' என்றிரங்கித் தலைவன் அச்சோலையைவிட்டுநீங்குவானாயினன். இத்துணையும் இடத்தலைப்பாடாமென உணர்க.

ஆசிரியர் 'மெய்தொட்டுப்பயிறல்' என்ற சூத்திரத்தே (102) இவ்விடந்தலைப்பாட்டுக்குரிய தலைவன் கூற்றாக, எட்டுக்கிளவிகள் கூறுவர். அவற்றாலும் அவற்றினுரையாலும் மேற்கூறிய செய்திகளெல்லாம் விளக்கமாகும். நாற்கவிராசநம்பி முதலியோர், மெய்தொட்டுப் பயிறன் முதலியவற்றை, முந்திய இயற்கைப் புணர்ச்சியின் வகைகளாகக் கொண்டு வழங்குவர். இவ்விடந்தலைப்பாடு, தலைவன் தானேசென்று கூடியது. இனிப் பாங்கனாற் றலைவன் முற்குறித்த இடந் தலைப்பட்டுப் புணர்ச்சி எய்தவும் பெறுவன்; எனவே, தானேகூடுவது,பாங்கனாற் கூடுவதென இடந்தலைப்பாடு இருவகைப்படுமென்பர்(பக்-239). பேராசிரி

[1] சகுந்தலை துஷ்யந்தர்களது காந்தர்வக் கூட்டத்தே வண்டோச்சி மருங்கணைதல் கூறிக் காளிதாஸ மகாகவி சிறப்பித்தலும் (சாகுந்தளம்—அங்—3.) காதம்பரியில் புண்டரீகமுனி மஹாச்வேதையைக்கண்டு காதலித்தபோது, பூவளித்தல்வாயிலாக அவள் மெய்தொட்டதாகப் பாணகவி கூறுதலும் ஈண்டு ஒப்பிடத்தக்கன.

யரும், "துணையின்றி நிகழுங் களவு சிறப்புடைத்தாதலால், 'பாங்கன் கழறும்' (இடித்துரைப்பன்) என்றஞ்சி அவனை முந்துறத் தலைவன் மறைத்தொழுகுமாதலின்" தன்னுற் கூடும் இடந்தலைப்பாடு நிகழ்ந்தபின்பே, பாங்கனைத் தலைவன் துணையாக வேண்டுவன் என்று கூறினர் (பக்.749). ஆனுற் களவியலுரைகாரர் "பாங்கற் கூட்டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழிற் பாங்கற் கூட்டம் நிகழாது; என்னை? அத்துணையாகத் தலைவி எளியள் அல்லள் ஆகலான்" (பக்-55). எனக் கொண்டார். இக்கொள்கைப்படியே திருச்சிற்றம்பலக் கோவையுரை (49) முதலியனவும் கூறுவன என உணர்க.

3. பாங்கற்கூட்டம்.

இவ்வாறு இடந்தலைப்பட்டுத்தானே தலைமகளைக்கூடி, ஆற்றுவித்து நீங்கிய தலைமகன், 'நின்னிற்பிரியேன்' என்று சூளுறுத்தப்பெற்றுப் பிரிந்தவள், தன்னைக்காணுத [என் னிலைமை நினைந்து ஆற்ருளாங்கொல்' எனவும், 'ஆற்ருமையால் வந்த மெய்வேறுபாட்டைப் புறத்தாரறியாமல் மறைக்கத் தெரியாது மயங்கினளோ' எனவும், இவை முதலாக நினைந்து வருந்தாநின்ருன். இங்ஙனம் நின்ற நிலைமையிற் பிற்றைஞான்று சென்று எதிர்ப்பட்ட பாங்கன், தலைவனை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி 'இளஞாயிற்றின் வனப்புடைய திருவொளி மழுங்கும்படி, எம்பெருமாற்கு இன்று நேர்ந்த வாட்டம் என்னையோ?' என்று உசாவ, இவ்வகை வினவிய தோழனுக்கு- 'நெருநல் இத்தகைய வனப்புடையாள் ஒருத்தியைக் கண்டு என்னுள்ளம் பள்ளத்திழியும் வெள்ளம்போல ஓடி, இவ்வகைத்தாயிற்று' என்று நடந்த வரலாறெல்லாங் கூறினன். கூறியதுகேட்ட பாங்கன் தன்னன்பனுன தலைவனிடந் தீயனகண்டால் அன்பிற்றலைப் பிரியாத சொற்களால் இடித்துக்கூறுமவனுதலால்—'இஃது இவன் தலைமைப்பாட்டிற்குச் சிறிதுந் தகாது' என்று உட்கொண்டு 'அன்பனே! நின்னுள்ளம் நின்வரைத்தன்றிக்

கைம்மிக்கோடுமே எனின், பின்பு நின்னைத் தெளிவிப்பவர் யாவர்? இத்தகைய நீ, இன்ன விடத்து இன்ன உருக் கண்டு என்னுள்ள மழியப்போந்தேன் என்றல் நின் கற்பனைக்குப் போதாது' என்று கழறிக்கூறினன். இவ்வாறு காதற்பாங்கன் கழறவுங்கேளாது பின்னும் வேட்கை வயத்தனாய் நின்ற தலைவன் 'நண்ப! என்னாற் காணப்பட்ட வடிவை நீ கண்டிலை; கண்டனையாயின் இங்ஙனம் கழறாய்' என்று வருந்தியுரைக்கக்கேட்ட பாங்கன் 'நம் அன்பனுக்குக் கவற்சி பெரிதாயிற்று. இனி யானும் இவனுடன்கூட வருந்தினல் இவனை ஆற்றுவிப்பாரில்லையாம்' என்று தன்னைத் தேற்றிக்கொண்டு 'அது கிடக்க; எம்பெருமான்! நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்தது; எத்தன்மையது?' என்று இயல் இடம் இவை உசாவ, அதுகேட்ட தலைவன் அவனை எய்தினாற்போலப் பெரியதோர் ஆறுதலடைந்து "நண்ப! இன்னசோலையில் இன்ன அழகு உடையதுகாண், யான் கண்ணுற்ற அவ்வின்ப உருவம்" என்றான். என "ஆங்குள்ள அத்தகையவளை என்னால் ஆவதுண்டேற் கண்டு வருவல்; அத்துணையும் நீ ஆற்றியிரு" என்று தலைவற்குக் கூறிவிட்டுத் தனியனாய்ப் பாங்கன் அவ்விடநோக்கிச் சென்றான். செல்லவும், முன்போல ஆயவெள்ளம் விளையாட்டு விருப்பாற் பிரியத் தனியளாய் நின்ற தலைவியைத்—தன்னை அவள் காணாமல் தான் அவளைக்காண்பதோர் அண்மையில் மறைந்து நின்று கண்டு, 'இச்சோலையே அவனாற் காணப்பட்ட இடம்; ஈண்டு நிற்கும் இவள்போலும் எம்மிறைவனை வருத்தியவள்' என்று துணிந்து 'இத்தகைய பேரெழிலுடையாளைக் கண்டு இங்கு நின்றும் பிரிந்து என்பால் வந்து யானிடித்துக்கூறவும் ஆற்றி நின்ற அண்ணலே திண்ணியான்' என்று தலைவனை வியந்து, அவ்விட நீங்கி விரைந்து சென்று, நிகழ்ந்த செய்தியைத் தலைமகற்குக் கூறினான். கூறக்கேட்ட தலைவன் அவ்விடஞ் சென்று, முன்பு இடந்தலைப்பாட்டிற் கூறியவாறு போலத் தனியளாய் நின்ற தலைவியை எதிர்ப்பட்டுக் கலந்து மகிழ்ந்தனன். இங்ஙனம் மகிழ்ந்து தலைவியைப் பிரிவாற்றுவித்து நீங்குமவன்—'இனி

நீ வருமிடத்து நின்காதற்றோழியோடும் வருக" என்று அவட்குக் கூறியும், இவ்வாறு தலைவி கூட்டத்திற்குத் துணை நின்று உதவிய காதற்பாங்கனை வாழ்த்தியும், தலைமகனை முன்போல ஆயவெள்ளம் அடையச்செய்து பிரியலாயினன் என உணர்க.

இனிப் பாங்கற்கூட்டமென்பது, (தோழியிற் கூட்டம் போலப்) பாங்கனுந் தலைவிக் கிடைநின்று உரையாடிக் கூட்டாமையின், "இடந்தலைப்பாட்டுக்குப் பின்பு தலைமகன் பாங்கனைக் கூடுங்கூட்டம்" என்பதே பொருளென்பர் நச்சினார்க்கினியர். இக்கூட்டத்துக்கும், பிற்காலக் கோவைகள் பற்பல கிளவிகள் விரித்துக்கூறுவதுண்டு.

4. தோழியிற் கூட்டம்

மேற்குறித்தவாறு, பாங்கற் கூட்டம் நிகழ்ந்தபின்னர், தலைவன் மறுமுறையுந் தானே இடந்தலைப்பட்டும் தலைவியைக் கூடமுயலாமல், அவளை முன்பு ஆயத்துய்த்தபோது அவள் காதற்றோழியைக் குறிப்பாலறிந்தவனாதலின், அத் தோழியை இரந்து குறையுற்று அவள் வாயிலாக நிரந்தரந் தலைவியைக் கூட எண்ணுவோனாயினன் (களவியல். சூ. 5). இங்ஙனம் நிகழும் தோழியிற் கூட்டம் பல பிரிவுடையதாகத் தொல்காப்பியங் குறிப்பிடுவதால், இக்களவியலிற் பெருவரவிற்றாயுள்ளது இப்பகுதியாகவே தெரிகின்றது. இக்கூட்டத்தை நாம் அடியில் வருமாறு வகைப்படுத்துக் கூறலாம்:- அவை—பாங்கிமதியுடம்பாடு, மடல் விலக்கல், குறியிடஞ் சேர்த்தல், வரைவுகடாதல், அறத்தொடு நிற்றல், உடன் போக்கு என்பனவாகும்.

பாங்கிமதியுடம்பாடு:—முற்கூறியபடி, தோழியிற் கூட்டங் கருதிய தலைவன், அக்காதற்றோழியை மதியுடம்படுத்த பின்னல்லது தன்குறை முடிக்கவேண்டுமென்று அவட்குத் தன் கருத்தைக் கூறுன் என்பர் (128). மதியுடம்படுத்தலாவது–தோழியினறிவை உடம்படச் செய்தல். தெளிவாகத்

தன் குறைகூருது கரந்த மொழியாற் றலைவன் தன் கருத்தறிவிக்க, அதுகேட்டுத் தோழி இருவர் கருத்தினையுந் தன் மதியோடு ஒன்றுபடுத்து உணர்வளென்க. இவ்வாறு மூவர் மதியினையும் ஒற்றுமைப்படுத்து உணர்தல் பற்றி, மதியுடம்படுத்தலாயிற்று என்பர் நச்சினார்க்கினியர். இம்மதியுடம்பாடு—(1) குறையுறவுணர்தல், (2) முன்னுறவுணர்தல், (3) இருவருமுள்வழி அவன்வரவுணர்தல் என மூவகைப்படும் (127).

இவற்றுள், (1) குறையுறவுணர்தலாவது இரந்து வேண்ட எண்ணிய தலைவன், தலைவியுந் தோழியும் ஒருங்கு தலைப்பெய்த செவ்விபார்த்தாயினும், தோழி தனித்துள்ள இடத்தாயினும் புதியவன்போலப் புகுந்து "இங்கே சில விலங்கு போந்தன உளவோ? இளையர் போந்தனருளரோ" எனவும் "நும் பதியும் பெயரும் யாவை?" எனவும்—இவ்வகை உசாவ, 'எம்மினையதோர் குறையுடையன் இவன்' எனத் தோழி கருதுதல் (பக். 246).

(2) முன்னுறவுணர்தலாவது-'இருவரது குறிப்பானே மிகவும் உணர்தல்' என்பர் நச்சினார்க்கினியர். [முன்-குறிப்பு] அஃதாவது-முன்கூட்டங்களில் தலைவனைக் கலந்த தலைமகள் பாங்கிமுன்பு அடைந்தபோது அவளது மெய்வேறுபாடு கண்டு, 'இவ்வேறுபாடு, இங்குப் பலகாலும் வந்து செல்லும் ஆண்மகனேடு கூட்டமுண்மையால் இவட்கு வந்தது போலும்' என்று உட்கொண்டு, அதனைப் பல்வேறு வகையாகச் சொல்லாடித் தோழி ஆராய்ந்தறிதலாம். இவ்வாராய்ச்சியில் தலைமகள்பால் நிகழும் குறிப்புவேறுபாடுகளால், தோழிக்குத் துணிவுபிறக்குமென்க. அம்முறையாவன—அந்திவானத்தெழுந்த பிறைநோக்கி 'அன்னாய்! இதனைத் தொழுதும் வா' என்று தோழி கூறத் தலைமகள் தான் கொண்ட காதலனையன்றி வேறு தெய்வம் தொழுமிடத்துத் தன் கற்பழியுமென்று கருதித் தொழாதுநிற்றலால், 'இவள்—அன்ன தலைவனைச்சார்ந்த அன்பினள்' என உய்த்துணர்

தலாம். இவ்வாறே தோழி தலைவியை நோக்கி, 'நம்புனத்தே உதிரம் அளைந்த கொம்புடையதோர் களிறொன்று போந்தது' என்றுகூற, அதுகேட்டுப் 'பலகாலும் இங்கு வந்து செல்வான் நம் காதலனுதலால் அவற்கே அக்களிறு ஏதஞ் செய்தது கொல்' என்று கருதித் தலைவி நடுங்குதல் நோக்கி இருவர்க்குங் கூட்டமுண்மை உணரப்படும். இங்ஙனமே, 'பல்வேறு கவர்பொருணாட்டத்தால்' தோழி கூறியுணர்வன எல்லாங் கொள்க (பக் 296). களவியலுரைகாரர் 'முன் உறவு உணர்தல்—முன் கூட்டமுண்மை உணர்தல்' எனக் கூறுவர் (9)

(3) இருவரும் உள்வழி யவன்வரவுணர்தலாவது-தலைவியுந் தோழியுந் தினைப்புனங்காத்து நின்றவிடத்துத் தலைவன் கையுறை கொண்டுவந்துநின்று 'இத்தழை நுமக்குடையாதற்கு[1] ஏற்ற'தெனவும் 'இவ்வணி நீவிர் அணிதற்குரிய' தெனவும் கூறி, அவள்பாற் குறை வேண்டுவான் போல நிற்க, தோழி அப்போது நிகழும் அவ்விருவர் மெய்ப்பாடுகளையும் உணர்ந்து அவ்விருவர்க்கும் கூட்டமுண்மை துணிவள்.

"ஏனல் காவல் இவளு மல்லள்
மான்வழி வருகுவ னிவனு மல்லன்
நரந்தங் கண்ணி யிவளொ டிவனிடைக்
கரந்த வுள்ளமொடு கருதிய து பிறிதே
நம்மு ணுணுநர் போன்று தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே"

---

[1]தழையுடையின் தன்மை- "முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்- செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு—சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை-திருந்துகா ழல்குல் திளைப்ப உடீஇ" என்னுந் திருமுருகாற்றுப்படை யடிகளாலும் 61, 116, 248, 340-பாட்டுக்களாலும் அறிக. இவற்றால், மலைநாட்டுவழங்கிய பண்டையுடை தழையாலமைந்திருந்தமை விளங்கும். "பிடிமுதி ரிடையினுடன் தழைத்துகிற் பெண்ணி

என்ற அழகிய செய்யுளில் தோழியின் உய்த்துணர்வு கூறப்படுதல் காண்க. இம் மதியுடம்பாட்டின்வகை மூன்றும் களவியலுரையினும் நம்பியகப்பொருளினும் வேறுபடவுங் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனந் தோழி மதியுடம்படுங்கால், அவள் ஆராயும் ஆராய்ச்சி 'நாட்டம்' கூறப்படுமெனவும் அது தலைவனுக்குந் தலைவிக்கும் கூட்டமுண்மையுணர்த்துங் கருவியாமென்றுங் கூறுவர். இந்நாட்டம் எழுவகைப்படும். அவை:-நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைப்பு, செலவு, பயில்வுஎன்பன. இவற்றுள், நாற்றமாவது—ஓதியும் நுதலும் பேதைப்பருவத்துக்குத்தக நாருது தலைவன் கூட்டத்தான் மான்மதச்சாந்து முதலியனவும் பல்பூக்களும் விரவி நாறுதல். தோற்றமாவது—நீண்டு பிறழ்ந்தும் பிள்ளைப் பருவத்து வெள்ளைநோக்கின்றி உள்ளொன்றுகொள்ள நோக்குங் கண்ணும், தந்நிலைதிரிந்து துணைத்துமெல்கிப் பணைத்துக்காட்டுந் தோளும் முலையுமென்று இன்னோரன்ன. ஒழுக்கமாவது-பண்ணையாயத்தோடு முன்றிலில் மணற்கொழித்துச் சோறமைத்தன்முதலியன முனிந்த குறிப்பினளாய்ப் பெண்டன்மைக்கு ஏற்ப ஒழுகுதல், உண்டியாவது-பண்டு பால்முதலியனகொண்டு ஒறுத்தூட்ட உண்டு வருகின்ருள், இப்பொழுது ஆசாரமும் நாணுங் காதலும்

னேடும்-தொடுமரைத் தோலன் வில்லன் மரவுரி யுடையயன் தோன்ற'' என்ருர் சிந்தாமணியினும் (பதுமை-66.). இனி, ஒருத்தியோடு மனமொத்துக்கூடும் கூட்டத்துக்கு முன்பு அவளுடுத்தற்குக் கையுறையாகத் தலைவன் இத்தழையுடை கொடுத்தல் முன்னை வழக்காகத்தெரியலாம் (திருக்கோ-91). மெய்ப்பாட்டியலிலும் தலைவி கையுறை யேற்றல் ஆசிரியராற் கூறப்படுகின்றது. பண்டைத் தமிழ்வழக்குக்கள் மிகுந்து காணப்படும் மலையாளநாட்டிலே, இப்போதும் நிகழ்ந்துவரும் காந்தருவ விவாகத்திலே, உடையொன்று கொடுத்துக் கூடுதல் பெருவழக்காம். ஆயின், இவ்வுடை, காலத்திற்கேற்பச் சிறிய நூலாடையாக வழங்குகிறது, "உண்பன நாழி உடுப்பன இரண்டே'' (புறம்-189) என்று முன்னோர் கூறிய உடையி னளவும் இம் மலைநாட்டிற்ருன் காணப்படுதலுங் காண்க,

மீதூர அவற்றின்மேல்உவப்பு ஆண்டின்றி ஒறுத்த உள்ளத்த ளாதல். செய்வினைமறைப்பாவது இக்காலத்து நினைவுஞ் செயலும் தலைவனொடுபட்டனவேயாகலான் அவை பிறர்க்குப் புலனாகாமை மறைத்தல், செலவாவது-பண்டுபோல் வேண் டியவாறு நடவாது சீர்பெறநடந்து ஓரிடத்துச் சேறல். பயில்வாவது—செவிலி மார்பிடத்துத் துயில்வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல் (114)—எனவுணர்க. இங்ஙனந் தோழியால் ஆராயப்படும் நாட்டம் தலைவி நாணும்படி நாடுதல், அவள் நடுங்கும்படி நாடுதல் என இரு பிரிவினவாம், மதியுடம்பாட்டின் வகையாகிய முன்னுற வுணர்தலிற் காட்டியவற்றுள்ளே, 'பிறைதொழுக' என்றாற் போல்வன நாணநாட்டமாம். 'நம் புனத்து உதிரமளைந்தது ஓர் கோட்டுக் களிறு வந்தது' என்பதும் பிறவும் நடுங்கநாட் டம். இவ்விரண்டும் "நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி-காணுங்காலைத் தலைமகள் தேஎத்து" என்ற விதிப்படி, அகப் பொருள் வழுவாமென்பர் களவியலுரைகாரர் (பக் 93) நச்சி னார்க்கினியரும் "இஃது இறந்து பாடுபயத்தலிற் கந்தருவத் துக்கு அமையாது" என்றார் (பக் 297). பேராசிரியரோ, இந்நாட்டங்களைத் தோழி செலுத்தும்போது, பெருநாண மும் பேரச்சமுமுடைய தலைவி இறந்து படவுங் கூடுமென்று கருதி முகமலர்ந்து நகையாடுதல்போன்று கூறுமாகலின், இவை பொருந்தாக் காமமாகிய பெருந்திணைப்பாற்படினும் அகத்தமிழிற்கு ஆமென்று அமைத்துக் கொண்டனர் (திருக் கோவை 96, 72). இம்மதியுடம்பாட்டுவகைகளில் ஒரோ வொன்றாலன்றி மூன்றனாலுஞ்சேர ஆராயப்படுமென்பர் நச் சினார்க்கினியர் (பக். 335).

மடல்விலக்கு:- இங்ஙனந் தோழி பலவகையாலும் நாடி மதியுடம்பட்டதனை அறிந்தபின்பே, தலைவன் தன்குறை முடிக்கவேண்டி அவளை நெருக்கத் தொடங்குவன். பலபடியாக அவன் வேண்டியுந் தோழி எளிதில் இணக்கங் காட்டாது மறுத்தும், நகையாடியும், 'இவ்விடத்துக் காவ லர், கடுகுவர்; நீவிர் விலகிச் செல்லுதிர்' என்று அவனைத்

தம்பால் நெருங்கவொட்டாமலும் விலக்கி நிறுத்துவள்(298-300-பக்.). இங்ஙனம் நிறுத்தி அலைக்கும் பகுதியைச் 'சேட்படை' எனக்கூறி பல கிளவிகளால் விரிப்பர் பின்புள்ளோர். இனி நெடுக இவ்வாறே தலைவனை நிறுத்தி யலைப்பளாயின், தலைவன் மனநொந்து தோழியை நோக்கி, 'நின்னுதவியாற் றலைவியைக் கூடலாம் என்று இதுகாறும் நெடுக உழந்தேன். நின்னுன் அக்காரியம் முடியாமை உணரப்பட்டது. அதனுல் இனி இளிவந்த செய்கைபுரிந்தாயினும் என்குறையை யானே முடித்துக்கொள்வல்' என்று அவட்குத் தன்னுட்கிடை யுரைப்பான். இளிவந்த காரியமாவது மடலேறுதல், வரைபாய்தல் முதலியன. மடலேறுதல் என்பது, முற்காலத்தே தாம் விரும்பிய பெண்டிர்பொருட்டுச் செய்துகொள்ளுந் தற்கொலைமுறை என்பது முன்னரே விளக்கப்பட்டது. இவ்வாறு தலைவன் மடலேறுதலைப்பற்றிய வரலாறு கலித்தொகை 138–141-ம் பாடல்களிற் கூறப்படுதல் காணலாம். இம் மடற்செய்தி, தோழி தலைமகனுக்கு இடங்கொடாது சேட்பட நிறுத்துதலின்பின்னரே நிகழ்வதென்பது, "தோழி, நீக்கலி னுக்கிய பகுதியும் நோக்கி-மடன்மா கூறுமிடனுமா ருண்டே" என ஆசிரியர் கூறுதலால் (சூ-102) பெறப்படும்.

இவ்வாறு, மடலேறுவேன் என்று தலைவன் கூறக்கேட்ட தோழி, 'இது பெரிதுங் கவற்சிக்கு ஏதுவாம்' என்றஞ்சி, 'நீவிர் மடலேறத் தகாது: நுமக்கு இக்குறை முடித்துத் தருவன்; நும்மால் விரும்பப்படுவாள் என்மாட்டுப் பேரருளுடையாள்' என்று கூறி, தலைவனை மடல்விலக்கித் தலைமகள் பாற்சென்று, முன்னிகழ்ந்த இருவர் கூட்டமுந் தானறிந்தமை தலைவிக்குக் குறிப்பா னுணர்த்திவிட்டுப் பின் "அன்னுய்! பெருந்தகையா னொருவன் தழையுங் கண்ணியுமேந்தி என் மாட்டுப் பெரிதுங் குறையுடையனுய், இப்புனத்துக்கண் அடுத்தடுத்து வாராநின்றுன். யான் அவன் குறைமுடியாமையின் மிக வருந்துவானுயினன், அன்னுன் ஏந்திநின்ற கையுறையை நீ ஏற்றுக்கொண்டு அவன்குறை முடித்தற்கு

இஃது ஏற்ற இடம்; யான் கூறுவது கொள்ளாயாயின், நினக்கு மிக்க அன்புடையார்மாட் டுசாவியேனும் இதனை நிறைவேற்றுவாயாக; இனி நீ இதனை மறுப்பின் அவன் மடலேறியேனும் வரைபாய்ந்தேனும் மாய்வதாகத் துணிந்துள்ளான்" என்று கூறிக் குறைநயப்பிக்க முதலில் தலைவி அதற்கிணங்காதவள்போற் காட்டினும், முடிவில் தான் உடம்பட்டதைக் குறிப்பான் உணர்த்தினள். அவ்வளவில், தோழி தலைமகனை அடைந்து, நடந்த செய்திகூறி "இன்ன குறியிடத்து நீவிர் வருதிர்" என்று இடமுணர்த்திச்செல்ல, ஆண்டுத் தலைமகன் சென்றான். சென்றவன் வரவுணர்ந்த தோழி தலைமகளைக் குறியிடங் கொண்டுசென்று "யான் செங்காந்தட்பூக் கொய்துகொண்டு வருவேன்; அவ்விடம் தெய்வமுடைத்தாதலால், நீ வரற்பாலையல்லை; அத்துணையும் இப்பொழிலகத்தே விளையாடி இரு" என்று அவளைத்தனியிருத்தி நீங்கினள். நீங்க, தலைமகன் ஆங்குநின்ற தலைவியை எதிர்ப்பட்டுக் கூடிமகிழ்ந்து பின் பிரிந்துசென்றனனாக, அவ்வமயம் விலகிநின்ற தோழி விரைந்துவந்து "நின்கைபோலக் காந்தண்மலர்ந்தன கொணர்ந்தேன்; எம்பெருமாட்டி! தோழி நீட்டித்தாள் என்று சீறுது போந்தருள்" என்று ஒன்றுமறியாள்போன்று கூறி அவளை அழைத்துச் சென்று ஆயவெள்ளத்து உய்த்தனள். இவற்றைக் 'குறைந்தவட் படரினும் மறைந்தவள் அருக-நன்னயம் பெற்றுழி நயம்புரி யிடத்தினும்" என்பதனுலும் (பக்-302-4) அதனுரையாலும் உணர்ந்துகொள்க.

பகற்குறி இரவுக்குறிகள்:—இனி இவ்வாறு கூடிப்பிரிந்த தலைவன் தலைவிபால் வேட்கைமீதூர மற்றைநாட்களினும் வந்து தோழிக்குத் தன் குறிப்புணர்த்தி முன் கூடியதுபோற் கூட்டவும் பெறுவன். இவ்வாறு நிகழுங் கூட்டம், பகற்குறி இரவுக்குறி என இருபகுதிப்படும் (130). அவை தலைவியாலும் தோழியாலும் முன்போலக் காட்டப்பெற்ற குறியிடத்தைத் தலைவன் அடைந்து பகலிலும் இரவிலும் (120-1) தலைவியைச் சார்தலாம். இக்குறியிடங்கட்குத் தேர் யானை

குதிரைகளை ஊர்தியாகக் கொண்டும், அவன் வருவதுண்டு (212). இவற்றுட் பகற்குறியிடம்,[1] தலைவியின் மனையாகாது அம்மனைமதிற்குப் புறம்பாமெனவும், இரவுக் குறியிடம் அம் மதிற்கும் மனைக்கும் இடையிலுள்ள இல்வரைப்பாமெனவுங் கூறுவர் (131). இல்வரைப்பாவன :- "அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி" முதலாயின என்பர் (களவியலுரை பக்-112). "புணர்ச்சிவேண்டினும்" என்றதோழிகூற்றுக்கூறுமிடத்து (தொல். பக்-305). இவ்விரு குறியினும் நிகழும் பகுதிகளை மேற்கோள்களுடன் காணலாம்.

இவற்றுள், இரவுக்குறியிலே. தலைமகன் வருமிடத்துப் பற்பல அடையாளங்கள் தலைவனால் நிகழ்த்தப்படும். அவை- புனலொலிப் படுத்தல், புள்ளெழுப்புதல் முதலியன. இங்ஙனம் தலைவன் தன்வரவறிவிக்கச் செய்தற்குரிய குறிகள், அவன் செய்கையாலன்றிக் காய்கனிகள் காற்றால்விழுந்து நீரில் ஒலியெழும்பல், வேற்றுப்புட்கள் வந்த அச்சத்தாற் பறவைகள் கலைதல் முதலிய இயற்கைகளாலும் நிகழுமிடத்து அக்குறிகளைத் தலைவன்வரவு குறிப்பனவாகக்கொண்டு, தோழி தலைவியை "அல்லகுறி"ப்படுத்தித் தவறிப்போதலும் (133) உண்டாம், "அல்லகுறிப்படுதலும்" என்ற சூத்திரத்தும் "குறியினொப்புமை மருடற் கண்ணும்" (பக்-281) என்னுங் கூற்றினும் உரைகாரர் காட்டிய உதாரணச் செய்யுட்களால் இதனை அறிக. இங்ஙனம் அல்லகுறிப்பட்ட மறுநாட் காலையில் தலைவியுந்தோழியும் குறியிடம்வந்து நோக்க, தலைவன் குறித்த குறியிடத்தே தான் வந்து சென்றதற்கு அடையாளமாகக்கோட்டினுங் கொடியினும் இட்டுவைத்த மோதிரம் மாலை முத்தம் முதலியவற்றைக்கண்டு மயங்கி அவர் வருந்

[1] பகலுங் கூட்டமுண்மை களவில் உண்டென்பது "மறைந்த ஒழுக்கத் தோரையு நாளுந்—துறந்த ஒழுக்கங் கிழவோற் கில்லை" என ஆசிரியர் குறிப்பித்தலால் அறியலாம், பகற்குறி நெய்தனிலத்துக்கேற்றது. பரதவர் திமிலேறித் த மகளிரைவிட்டு விலகுதல் அக்காலத்தாகலின் (குறுந்-123).

துவர் (பக். 291); தலைவனும், அவரிட்டகுறி பிழைத்தமைக்கு இரங்கிச் செல்வனென்க (134). இங்ஙனம் இரவுக்குறியிற் பலகாலுந் தலைவன் வருமிடத்து, வேறு சில இடையூறுகளாலும் தலைவி குறியிடஞ்சேறற்கியலாமல் நேர்தலுண்டு; அவ்விடையூறுகள்-தாய்துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவு வெளிப்படுதல் போல்வனவாம் (பக்-290). "களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே" என்றார் இறையனாரும் (சூத்-16). இவ்வாறு குறியிடநோக்கி இரவில் வருதற்கண்ணே "ஆறின தருமையு மழிவு மச்சமு-மூறும்" (136) தலைவனுக்கு உண்டாகா என்றும், இக்களவொழுக்கத்தே தீய ராசிகளையும் நாள்களையும் நீக்கியொழுகுதல் இல்லையென்றுங் (135) கூறுவர்.

வரைவுகடாதல்:—இவ்வாறு தலைவன் இருவகைக்குறிகளினும் பலகாலும் வந்தொழுகுமிடத்து, இக்களவு வெளிப்படச் சுற்றத்தார் இற்செறிப்பரோ என்றும் (பக்-303), வழியாலும் பொழுதாலுந் தலைவற்கு ஏதம்வருங்கொல் என்றும் பக்-312) தோழி அச்சமுற்று, இவ்வொழுக்கமொழுகல், நுங்குடிப்பிறப்புக்குஞ் சிறப்புக்கும் பொருந்தாமையின், இனி நீவிர் இவளை மணந்துகொள்வதே தகுதியென்று தலைவனை வரைவுகடாவத் தொடங்குவள். [வரைவுகடாதல்-மணந்து கொள்ளுதலைப்பற்றி உசாவுதல்]. இங்ஙனங்கடாவுமுறை-குறிப்பு, வெளிப்படை என இருவகையாம் (களவியலுரை பக்-105). குறிப்பாவது தோழி தலைவனை நோக்கி "எம்மன்னை தலைமகளது வேறுபாடுகண்டு, இஃது இவட்கு எதனால் வந்ததென்று ஆராய்வாளாயினள்" எனப் பொய்தலைப்பெய்து (சூத்-237) கூறுதல்போல்வது. இதனாற் போந்தது, அன்னை அதன் காரணமறிந்து இற்செறிக்கக் கூடுமாதலின், அதற்குள் நீவிர் வரையாது தாழ்ப்பதென்?—என்பதாம். வெளிப்பட வரைவுகடாதலாவது, 'நுங் களவொழுக்கம் ஊராரால் அறியப்பட்டு, முதலில் அம்பலாய் முளைத்துப் பின் அலராக வளர்ந்தது; இனி வரையத் தாழ்க்கற்பாலிர் அல்லிர்' என்றாற்போல்வது. [பரவாதகளவை அம்பலென்

றும் பரந்தகளவை அலரென்றுங் கூறுவர் பேராசிரியர் (திருச்சிற்-150) அம்பல்-முகிழ்முகிழ்த்தல்; அலர்-பலரறியச் சொன்னிகழ்த்தல் என்பர் நச்சினர்க்கினியர் (139)]. இங்ஙனம் வரைவுகடாவும் விகற்பங்களைக் 'களனும்பொழுதும்... கிளவியொடு தொகைஇ' (பக். 314-6) என்ற தோழி கூற்றிற்கு நச்சினர்க்கினியரெழுதிய உரைவிரிவினும், வள்ளுவனர்கூறிய "அலரறிவுறுத்தல்" என்ற் அதிகாரத்தும் பிற சான்ருேர் செய்யுட்களினும் கண்டுகொள்க. 'அலரிற்ருேன்றுங் காமத்திற் சிறப்பே" என்ற கற்பியற் சூத்திரத்தால் (163) இவ் வலரானே தலைவன் தலைவிய ரிருவர்க்கும் உள்ள காமம் மிகுந்து நிற்கும் என்பர் ஆசிரியர். இருவர்க்கும் அங்ஙனம் காமஞ்சிறத்தலை, "அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்-பலரறியார் பாக்கியத் தால்", "ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல்-நீராக நீளுமிந் நோய்" என்ற திருக்குறள்களானு முணர்க,

அறத்தொடு நிற்றல்;—இங்ஙனந் தலைவனை வரைந்து கொள்ளுமாறு, தோழி பலபடியாக வேண்டவும், அவன் அங்ஙனஞ் செய்யாது, கள வொழுக்கத்தையே நோக்குடையனுயின், அதனற் றலைவிக்கு ஆற்ருமை கைம்மிக்கு ஏதம் பலவாகும். எவ்வாறெனின்-அக்களவுக் கூட்டம் சிறிதுசிறிதாகச் சிலர்பலர்க்கு வெளியாகிப் புறம்பழித்தல் நிகழ, அது காரணத்தை அன்னை முதலியோர் ஆராய்ந்து, தலைவியை இற்செறித்துக் காவற்படுத்தலால் அவளுக்குத் தன் காதலனைக் காணப்பெருத வருத்தம் பெரிதுண்டாம்; உண்டாகத் தலைவி மெய் வேறுபாடு அடைந்து வருந்துதலைத் தாயர் முதலியோர் அறிந்து அதன் உண்மைக்காரண முணராது, வேலனைக்கொண்டு வெறியாட் டயர்வித்துக் குறிகேட்கத் தொடங்கவும் (பக்-318) அக்குறியால், 'தன் களவொழுக்கம் ஒருகால் வெளியாங்கொல்' என்று தலைவி அஞ்சிக் கலங்கும். அன்றியும் தலைவிக்கு மணம் புரிதற்குரிய பருவமாதலின், ஏதிலர் மகட்பேச வருதலுங் கூடுமன்றே? அக்காலத்துந் தலைவிக்கு வருத்தம் பெரிதாம்; இன்னும் தலைமகள்

இரவுக்குறி ஒழுகாநின்ற நிலையில், அவன் வரும்வழி "எண்கும் (கரடி), வெண்கோட் டியானையும் அரவும் புலியும் வரையரமகளிரு முடைய" தாதலால், 'அவற்றுல் தலைவற்கு ஏதம் வருங்கொல்' என்றும் ஆற்றுளாம். இவ்வாறு ஆற்றுமை பலவாகித் தலைவி வருந்துகின்ற நிலையில் தோழி இவற்றையெல்லாம் உணர்ந்து "இனி இக்களவினைத் தமர்க்கு வெளிப்படச் செய்து அவரால், குறித்த தலைவனுக்கே கொடுக்கச் செய்தல் தக்கது" என்றுகொண்டு, அவர்க்குக் களவொழுக்கத்தை மெல்ல வெளிப்படுத்தத் தொடங்குவள் (பக்-441). [தலைவியே தன்னிலையைத் தோழிக்கு முதலில் வெளிப்படுத்து முறையுமுண்டு (பக்-291-444)]. இங்ஙனம் வெளிப்படுத்தலையே 'அறத்தொடுநிற்றல்' என்று ஆன்ருேர் வழங்குவர். இதற்கு அறனழியாமைநிற்றல் என்பதும், கற்பின்றலைநிற்றல் (அறன்-கற்பு.) என்பதும் பொருளாகும் (களவியல் 26, 28-உரை). அறத்தொடுநிற்கு முறையாவது தலைமகளது கவற்சிபற்றிய வேறுபாடு கண்டு வருந்திய செவிலி 'அன்னுய்! இஃது எதனுல் ஆயிற்று' என்று தோழியை உசாவ, அவள் 'அம்மே! என்னுல் அறியப்படுவதுஞ் சிறிதுண்டு; யாங்கள் இம்மலைப் பொழிலிடத்தே ஒருகால் விளையாடி நின்றேமாக, ஒருதோன்றல், அழகிய சுனைக்குவளைப்பூக்கொண்டுஅவ்வழியேபோந்தான்; போதர நின்மகள் அவனை நோக்கி, 'இப்பூவை எம் பாவைக்கு அணியத் தம்மின்' என்ருள். அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது, அதனை அவட்குக் கொடுத்து நீங்கினுன்; அன்றியும், மற்ருெருகால் யாங்கள் ஆண்டு விளையாடுகையில்— "புனஞ்சேர் தினையுஞ் சிதைத் தெம்மைப் போகா வகை புகுந்த–சினஞ்சேர் களிறு கடிந்திடர் தீர்த்தனன்"[1] இன்னும், "பொன்னுர் புனலெம்மை வாங்கும் பொழுதங்கோர் பூங்கணைவேள்–அன்ன ஞெருவன் அணைந்தெமக்குச்செய்த

---

[1]புனத்துள்ள தினைப்பயிர்களையும் அழித்து, எம்மையும் வெளியேறவொட்டாமல் எதிர்த்துப் போந்த யானையை, அம்பாற் கடிந்து இடர்தீர்த்தான்.

ஆரருளும்" உண்டு.[2] இத்தகைய பேருதவிசெய்த பெருந் தகையான் ஒருவனால், பூத்தருபுணர்ச்சியும் களிறுதரு புணர்ச்சியும் புனல்தரு புணர்ச்சியும்[3] முன்னரே பெற்ற என் தலைவி, நீவிர் அவள் வேறுபாடு உணர்தற்கு வெறியாட்டயர்ந்தும் சிலர்க்கு மணம்பேசியும் போந்த செய்திகேட்டுக் கவற்சியுற்றதனால், அவட்கு இந்நோய் உண்டாயது போலும்" என்று கூறினாள்; கூற, அச்செய்தியுணர்ந்த செவிலி அவ்வுண்மையை நற்றாய்க்குக்கூறி அறத்தொடு நிற்ப, நற்றாய் அதனைத் தலைவியின் தந்தை தன்னையர்க்கு முறையே அறத்தொடுநிற்ப, இங்ஙனந் 'தனக்குரிய காதலனைக்கூடிக் கற்புக்கடம் பூண்டாள் தங்குலமகள்' என்ற செய்தி சுற்றத்தார்க்கு வெளியாம்-என உணர்க (பக். 319, 320, 341). இவ்வறத்தொடு நிற்குமுறை ஏழுவகையாக விரித்துக் கூறப்பட்டுள்ளது. (207). இவற்றுள் "ஏதீடு" என்னும் பகுதிப்பட்டன, மேற்கூறிய பூத்தருபுணர்ச்சி

---

[2] யாம் சுனையாடுகையிலே நீரால் இழுக்கப்பட்டு இறக்கும் நிலைமையி லிருந்தேமாக, காமனை யொத்தா னொருதோன்றல் திடீரென்றுவந்து எம்முயிர் காத்த பேரருள் என்க. கலித்தொகையுள் 39-ம் பாட்டுள் இப்புனறரு புணர்ச்சி கூறப்படுதல் காண்க.

[3] இப்புணர்ச்சி மூன்றனையும்பற்றித் திருவாய்மொழி யீட்டுரையிற் கூறப்படுவன வருமாறு;— "**பூத்தருபுணர்ச்சியாவது** (தலைவி) உத்யானவனத்திலே பூக்கொய்யவென்றுபுறப்பட்டுப் பூக்கொய்யாநிற்க, அருங்கொம்பில் எட்டாதே நின்ற பூவை இவளாசைப்பட, அத்தைத் தன்னைப்பேணாதே (தலைவன்) ஏறிப் பறித்துக்கொடுக்க, 'இவன் தன்னைப் பேணாதே நம் நினைவைத் தலைக்கட்டினான்' என்று அதுக்காகத் தன்னைக் கொடுக்கை. **புனல்தருபுணர்ச்சியாவது**, (தலைவி) புதுப்புனலாடப்போய் நீரிலேயிழிந்து விளையாடாநிற்க, அமிழ்ந்த அதினின்றும் (தலைவன்) எடுத்தேறவிட்டதற்காகத் தன்னைக் கொடுக்கை. **களிறுதருபுணர்ச்சியாவது**, (தலைவி) வீதியிலே நின்று விளையாடாநிற்க யானையின் கையிலே (தான்) அகப்படப்புக, அதன் கையினின்றும் மீட்டதற்காகத் தன்னைக் கொடுக்கை" (5, 3. 8.) எனக் கண்டுகொள்க.

முதலியனவாம் [ஏது ஈடு-காரணம் இடுதல்]. ஏனைய பகுதிகளை ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலின், உரைநோக்கி யுணர்ந்து கொள்க.[1]

மேற்கூறிப்போந்த அறத்தொடு நிற்குமுறையிற் றோழி கூற்றுகவும் செவிலி கூற்றுகவும் வருங் கிளவிகள் பலவாக உள்ளன. அவற்றுள், தலைவியின் வேறுபாடு நோக்கி, இஃது எதனுல் ஆயிற்றென்று தெரிதற்குச் செவிலி வேலனைக்கொண்டு வெறியாடச் செய்து கழங்குபார்த்தலும் கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்டலு முண்டென்பது—"கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்-ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (பக். 325) "களம்பெறக் காட்டினும்" (பக். 318) என்பவற்ருல் தெரிகின்றது. 'கட்டினுங் கழங்கினும்' என்பதற்குக் 'கட்டுவிச்சியும் வேலனுந் தாம் பார்த்த கட்டினுலும் கழங்கினுலும்' என்று பொருள் கூறப்படுதலால், கட்டுவிச்சிக்குக் கட்டெடுத்தலும் வேலற்குக் கழங்கு பார்த்தலும் முறையே உரியவாதல் விளங்கும். இவற்றுள், கட்டெடுத்தலாவது, கட்டுவித்தியால் நெற்குறியறிந்து சொல்லப்படுவதென்பதும், அந்நெல்லாற் பிறரெண்ணிய எண்ணம் ஒரு வடிவுகொண்டு தோன்றி அவட்குரைப்ப அவள் அதனை வெளியிடுவளென்பதும், "விறற்சேய்கடவும்—மயிலி தன்றேகொடி வாரணங் காண்கவற் சூர்தடிந்த—அயிலி தன்றேயிதன் றேநெல்லிற் றேன்று மவன்வடிவே" (285) எனத் திருக்கோவையாருள் வரும் அடிகளாற் புலனுகின்றது. திருமால்பாற் காதல்கொண்டு மயங்கிய பெண்ணெருத்தியின் பொருட்டு அவள் சுற்றத்தார் கட்டுவித்தியிடங் குறிகேட்டதாகத் திருமங்கை மன்னன் அருளிச்செய்யுமிடத்தில்,

---

[1] கபிலர் பாடியருளிய "குறிஞ்சிப்பாட்"டில் பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் முறைகள் அழகாகக் கூறப்படுஇன்றமை காண்க.

"அஃதுகண்டு மற்றுங்கே
ஆரானு மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்
பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல்
ஆரானும் மெய்ப்படுவ னென்று ரதுகேட்டுக்
காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைம்மோவாப்
பேரா யிரமுடையா னென்றுள் பெயர்த்தேயுங்
காரார் திருமேனி காட்டினுள்"

எனக் கட்டுவித்தி கூறு முறையைச் சிறியதிருமடலில் அழகு படப் பாடுதல் அறியத்தக்கது. மலைநாட்டாராகிய குறக் குடி மகளிரே கட்டுவித்தியாய்த் தோன்றிக் குறிசொல்லுதல் பண்டை வழக்காம்.[1] குறமகள்-குறி எயினி என்னும் பெண்பாற் புலவரொருவர்க்குக் குறிகூறுதல் பற்றிப் பெயர் வழங்குதலும் நோக்குக (நற்றிணை. 357, புறம் 157). குறி கூறும் பெண்டிர் பெரும்பான்மை மலைக்குறத்தியராதல் குறம் என்ற பிரபந்தங்களாலும், இன்றுமுள்ள வழக்காலும் பலரும் அறிந்ததாம். முற்காலத்துக் குறக்குடிச் சிறுவர் களும் குறியிறுக்க வல்லராயிருந்தனரென்பது— "குறமக ளீன்ற குறியிறைப் புதல்வரொடு" என்னும் ஐங்குறு நூற்றடி யால் விளங்கும் (394).

---

[1] இம் மலைக்குறத்தியர் நெல்லாற் குறிசொல்லுமுறையை, மீனுக்ஷியம்மை குறத்துள் (26) அடியில்வருமாறு குமரகுருபர முனிவர் குறிப்பிடுவர்.

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெலையென் முன்னேவை யம்மே
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்
உனக்கினியெண் ணினகரும மிமைப்பினிற்கை கூடும்
என்னுணை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே.

இச்செய்யுளிற் கண்ட நெற்குறிச் செய்தியோடு முற் குறித்த கட்டுவித்தி நெற்குறி காணுமுறை ஒப்பிடத்தக்கது.

இனி வேலன் என்பான் 'முருகபூசைபண்ணுமவன்,' முருகக்கடவுட்குரிய வேலைக் கையிற் றாங்குதல்பற்றி'வேலன்' எனப்பட்டான். இவன் கழங்குபார்த்துக் குறிசொல்வது முற்காலத்து வழங்கிய செய்தி யென்பது,

"பெய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கோட்ட சினைஇய வேலன்
கழங்கினு லறிகுவ தென்றான்"

"அறுவை தோயு மொருபெருங் குடுமிச்
சிறுபை ஞாற்றிய பல்தலைக் கருங்கோல்
ஆகுவ தறியு முதுவாய் வேலல
கூறுக மாதோ கழங்கின் திட்பம்"

எனவரும் பாடற்பகுதிகளால் உணர்க. இத்தமிழ்நாட்டு வசிக்கும் 'தொட்டியர்' என்ற வடுகரில், 12-கழற்சிக்காய் களைக் கலப்ப ஒரு பேழையுளிட்டு, ஒருவனைக்கொண்டு அவற்றை எடுக்கச்செய்யும்போது, வெள்ளிகட்டியகழற்சி தோன்றியநிலையில், அதனைக்கொண்டு இராசி முதலியன வறிந்து குறிசொல்வது இன்றும் வழக்காக உள்ளது. வேலன் கழங்குபார்த்துவந்தமுறை இதுபோன்றதாதல் வேண்டும். இங்ஙனம் கழங்குபார்க்குமிடத்து, அணங்குற்ற பெண்ணின் நோய் தணித்தற்கு அவள் 'படிமம்' ஒன்று பண்ணிக்கொடுத்தலு முண்டென்று தெரிகின்றது (ஐங்குறு நூறு-245). இனி, வெறியாட்டென்பது, முருகக்கடவுள் பொருட்டுப் பலியிட்டு அக்கடவுள் ஆவேசிக்க ஆடுங் கூத்தாகும். இது பெரும்பான்மை மேற்கூறிய வேலனால் நிகழ்த்தப்படுவதாம்.[1] அணங்குற்ற பெண்டிர்பொருட்டு, வேலன் வெறியாடிக் குறிகூறும் செய்தி, பழைய நூல்களில் மிகுதியாகப் பயிறல் காணலாம். "வெறியறி சிறப்பின் வெவ் வாய் வேலன்-வெறியாட் டயர்ந்த காந்தளும்" என்ற புறத்

---

[1]சிறுபான்மை குறமகளிரும் வெறியாட்டெடுத்தலுண் டென்பதும், அவ்வெறியாட்டின் இயல்புகளும் திருமுருகாற் றுப்படையிலே, 222-அடி முதல் 244-அடிவரை கூறப்படுதல் கொண்டு அறியத்தக்கன,

திணையியற்சூத்திரத்தே (60) ஆசிரியர் இதனைக் காந்தள் எனவும் கூறுவர். இவற்ருல், வேலனது கழங்குபார்த்த லாலும் வெறியாட்டாலும் கட்டுவித்தியது கட்டெடுத்த லாலும் குறிகேட்டல், தொல்காப்பியர் காலத்துக்குமுன் பிருந்த தமிழ்வழக்குகள் என்பது நன்கு விளங்கும்.

இக் குறிகூறுவோரில் 'வேலன்' என்பார், பழைய நூல் களிற் கூறப்பட்டபடியே, இன்றும் கடன்மலைநாட்டில் வாழ்தல் அறியத்தக்கது. கொச்சிராஜ்யத்தே மந்திரவாதிக ளாயுள்ள இச்சாதியார்–பாரதவேலன், வாகைவேலன், பாணவேலன், மண்ணவேலன் என நான்கு வகையினரா யுள்ளார் எனப்படுகின்றது. கேரளப்பட்டியில், இன்னோர் மாந்திரீகஞ்செய்யுமுறை பலபகுதிப்படுமென்றும், அவற்றுள் வேலன் துள்ளல் என்பது சிறந்ததொன்றென்றும், அது, திருஷ்டிதோஷங்களையும் தெய்வத்தாலும் பேய்களாலும் பெண்கட்கு நேருங் கேடுகளையும் விலக்குவதற்கு இவரால் நிகழ்த்தப்படும் ஒருவகை ஆட்டம் அல்லது கூத்தென்றும், இவ்வாட்டக்காலத்தில் ஆடு கோழி முதலியவற்றைப் பலி கொடுப்பதுண்டென்றும், இப்பலிகள் இடுவான்பலி, குழிப் பலி, கிடங்குப்பலி, அழிபலி. திக்பலி, கும்பபலி முதலாகப் பலவகைப்படுமென்றும், இவர்கள் அக்காலத்து உச்சரிக்கும் மந்திரவகைகள் இவையென்றும். மலையாளத்திற் கோயில் களுக்கு 32–அடி தூரம் விலகியிருந்தே இவர்கள் தெய்வ வழிபாடு செய்கின்றனரென்றும், அந்நாட்டில் முக்கியமான வேறுபல தொழில்கட்கும் இவர் உபயோகப்படுகின்றன ரென்றும் பிறவரலாறுகளுங் கூறுவர்.[1] இங்ஙனங் கூறிய வேலன் வரலாறுகளிற் பலவும், பழையநூல்களிற்கண்ட செய்திகளேயாதல் அறியத்தக்கது. இவற்றுள், 'வேலன் துள்ளல்' என அந்நாட்டில் வழங்குவது, பழைய வெறி யாட்டேயாதல் காண்க. நிற்க,

உடன்போக்கு:—இனி, செவிலி முதலியோர், 'தங்குல மகள் தனக்குரிய காதற்றலைவனைக் கூடிக் கற்புக்கடம்பூண்

[1] Castes and Tribes of Southern India. (See Velan)

டாள்' என்று அறத்தொடு நிற்கு முறையில், பெற்ருேர் அதனை உற்றுணர்ந்து (137), உரியவனுக்கே அவளை மணம்புரிய முயல்வராயின், அது பெரிதுஞ் சிறந்துகாட்டும்: அங்ஙனமன்றி வேருேர் அயலானுக்குத் தம்மகளை மணம் பேசினும், தலைவனைக் காணப்பெருவண்ணம் அவளைக் கடுங்காவற்படுத்தினும் தலைவிக்கு ஆற்ருமை கைம்மிக்குத் துயரம் பெருகுதலால், 'இனி இவள் இறந்துபடவுங் கூடும்' என்று தோழி உணர்ந்து கவன்று, வேறு உபாயமொன்றுந் தோன்ரு நிலையில், பின்வருமாறு செய்வள். பண்டு தலைவன் பயின்ற குறியிடத்துக்கு அவள்சென்று தலைவனை எதிர்ப் பட்டு அவனைத் தொழுது வலஞ்செய்து "நும்மாற் றலைவி மாட்டுச் செய்யப்பட்டதலையளி (பேரன்பு), உண்மையாகவே பலரான் அறியப்பட்டதோடு, சுற்றத்தாரது சீற்றத்திற்கும் ஏதுவாயிற்று. இவ்வாறு ஆகியது நீவிர் முன்னரே மணந்துகொள்ள முயலாது களவொழுக்கத்தே கருத்துக் கொண் டொழுகியதாலன்ருே? அல்லதூஉம், ஏதிலரும் வரைந்தெய்தற்குப் பரிசமொடு புகுந்து பொன்னணிய முந் துற்ருர்; இனி என்செய்வோம்" என்று கூற, அதுகேட்ட தலைவன், 'இந்நிலையில் என்னுற் செயற்பாலது யாது?' என்று உசாவ, 'நீரே சூழ்ந்து சொல்லுதிர்' என்ருள். என, தலைவனுஞ் சூழ்ந்து 'ஆயின், என்காதலியை என் ஊர்க்கே உடன்கொண்டுபோக வலித்தேன் ; இச்செய்தியை அவட்கு உணர்த்தி உரியவற்றை விரைந்துசெய்க' என்ருன். அது கேட்ட தோழி மகிழ்வுற்று, 'நன்று எம்பெருமான் அருளிச் செய்தது: அவட்கு இச்செய்தியுணர்த்தி விரைந்து கொணர் வேன்' என்று கூறிப்போந்து, தலைமகள்பாற்சென்று "எம் பெருமாட்டி! தலைவர் நின்னைத் தம்மூர்க்கு உடன்கொண்டு செல்லக் கருதுகின்ருர் ; இஃதறிந்தேன் ; நின்குறிப்பென் னையோ" என்று உசாவினள். அதுகேட்ட தலைவி, "உயிரி னுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்-செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (113) என்றவாறு, நாணழியவரினுந் தன்கற்பைக் கைவிடாமை துணிந்து தலைவனது உடன் போக்கிற்குத் தானும் மனநேர்ந்தகுறிப்பை வெளிப்படுத்தி

ளுள். இங்ஙனந் தலைவி உடன்பட்டதும், அவள் வெளியேறுதற்கு வேண்டுவன புரிந்து முன்பு இரவுக்குறியிற் போல ஒருவரும் அறியாவகை தோழி அவளைக் குறியிடத்துக் கொண்டுசென்று தலைமகன்பாற்சேர்த்து அவனை நோக்கி, "கொங்கை தளரினுங் கூந்தல் நரைப்பினும், ஏந்தல்! மற்றிவ்—வங்கை அடைக்கலம் என்றே கருதி அருளக் கண்டாய்" என்று தன் ஆற்ருமையும் இரக்கமுந் தோன்ற "ஓம்படை" (அடைக்கலம்) கூறி (பக். 309), அவர்களை வழிவிடுத்துப் பிரிவாளாயினள். இஃது உடன்போக்குவரலாருமென்று உணர்க. இங்ஙனம் தலைவி உடன்செல்லத் துணிந்ததற்கு ஏது, தான் இல்லறத்தினின்று நல்லறஞ் செய்ய முடியாமையாலும், அடுத்தடுத்துத் தலைவன் பிரிதலால் வருத்தமிகுதி நிகழ்தலாலும்; அம்பலும் அலரும் பரந்து துன்பம் விளைத்தலாலும், தாய் முதலியோர் அயிர்த்தலால் தலைவனைக் குறியிடத்துக் கூடுதல் தடைப்படலாலும், இவையெல்லாம் நீங்கித் தலைவனுடன் இணைபிரியாச் சேர்க்கையைத் தலைவி விரும்புதலே எனக் கூறுவர் (225).

இவ்வாறு ஒருவரும் அறியாவண்ணம், காதற்றலைவனுடன் தலைவிசெல்லாநிற்கப் பிற்றைஞான்று வெளிப்பட்ட மகள் செய்தி கேட்டறிந்த சுற்றத்தார் தலைவன்செயற்கு மிக வெகுண்டு அவ்விருவர்செலவையுந் தடுத்தற்பொருட்டுத் திரண்டு விரைந்தெழுவர். இவரறிந் தெழுவதற்குமுன்பே, செவிலி கேட்டு மயங்கிக் கவலைமேற்கொண்டு, தலைவன் தலைவியர் சென்ற இடைச்சுரத்தைநோக்கித் தேடிப்போந்து, வழியில் எதிர்ப்பட்ட முக்கோலந்தணரையும் மற்றவரையும் உசாவி அவரால் அவ்விருவரும் அகமகிழ்ந்து வழிச்சேறலையும் அவ்விருவரும் அறநெறியி னிற்றலையும் அறிந்து, ஆற்ருமையால் மேற்செல்லவியலாது மீண்டு வருவள்.[1] ஆனல், தலைவியைப்பெற்ற நற்ருய், இவள்போல நெடுந்

[1] முக்கோற்பகவர், செவிலிக்குஅவ்விருவரது உடன்போக்கைப்பற்றிக் கூறுமுறையைக் கலித்தொகை 9-ம் பாட்டுட் காண்க.

தூரஞ் செல்லாளாயினும், தம்மூர்த் தெருவரையுந் தேடுதற் குரியள் எனப்படுகின்றது (37).

இங் கிவ்வாருக, தலைவன் தலைவியை உடன்கொண்டு செல்லும்போது, இடைவழியிற் சுற்றத்தார் திரண்டுவந்து தலைவனை மேற்செல்லாவண்ணந் தடுத்து நிற்க, அப்போது தலைவி, அவர்செயற்கு மனமொவ்வாது தன் காதலனைச் சார்ந்து கற்பொடுபுணர்ந்து நிற்பது கண்டு, இவள் செய்கை அறநெறிப்பட்ட தாதலால் நாம் இதற்கு இடையூறு விளைத்தல் கூடாதென்றும், விளைப்பினும் தலைமகன் எடுத்துக் கொண்ட வினைமுடித்தல் ஒருதலையென்றும் கருதி, அவ ருடன்போக்கிற்கு உடன்பட்டுத் தம்மூர்நோக்கி மீள்வர். இதனை "இடைச்சுர மருங்கி னவள்தம ரெய்திக்–கடைக் கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்திக்–கற்பொடு புணர்ந்த கௌவை" என்பர் ஆசிரியர் (40). அங்ஙனம் அவர் மீண்டதும், தலைவியி னச்சந்தீர, இடைச்சுரமருங்கில் 'நாம் இவ்வாறு உடன்போவது, நம்மிருவர் மாட்டுமன்றிப் பழமையாக வழங்கும் உலகியலாம்' (57) என்று தலைவன் அவளைத் தெருட்டியும் வழியிளைப்புத்தீர மருட்டியும் உட னழைத்துச்சென்று தன்பதி சேர்வனென உணர்க. இவ் வாறு களவுப்புணர்ச்சிக்குரிய தலைவியைத் தலைவன் உடன் கொண்டுசேறல் பண்டைத் தமிழ்வழக்காதலோடு, அது தன்மமார்க்கமாகவும் கருதப்பட்டுவந்த தென்பது,

> "சுரநனி இனிய வாகுக தில்ல
> அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
> பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே" (ஐங்குறு. 371)
>
> "இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
> சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
> அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே" (கலித். 9)

என்னுஞ் சான்றோர் கூற்றுக்களால் உணர்க. இவ்வுடன் போக்கைக் "கொண்டுதலைக்கழிதல்" எனவுங்கூறுவர் (பக்-57)

இதுகாறுங் கூறியவற்ருல், தோழியிற் கூட்டம் என்ற பகுதி ஏனையவற்றினும் பல பிரிவுடையதாக முன்னோரால்

மொழியப்பட்டுள்ளமை வெளியாகும். மேற்குறித்த பாங்கி மதியுடம்பாடு முதல் உடன்போக்கீறுக உள்ளனவற்றையே, நம்பியகப்பொருள் முதலிய இலக்கணங்களும், திருச்சிற்றம் பலக்கோவை தஞ்சைவாணன்கோவை முதலிய இலக்கியங் களும் மற்றுஞ்சில வேறுபாடுபடப் பகுத்துக்கொண்டு, வேறு வேறு கிளவிகள் அமைத்து விரித்துக்கூறுவன. அன்றியும், அவை ஆசிரியர் கூறியவற்றினுஞ் சில கூட்டியுங் குறைத்தும் மாற்றியும் மொழிவனவாம். ஆயினும், தொல்காப்பியனர் கருதிய முறையை நாம் நுணுகி ஆராயுமிடத்துத் தோழியிற் கூட்டமென்பது மேற்கூறிய வரலாறுகளைக் குறிப்பிடுவதே என்பது புலப்படத் தடையில்லை. இனி, இவ் வுடன்போக் கோடு களவொழுக்கம் முடிவுறுவதென்றும், மேல்வருஞ்செய் திகள் கற்பொழுக்கத்தின்பாற் படுமெனவும் உணர்க; என்னை? செய்யுளியலிற் கற்பென்னுங் கைகோளின் இலக் கணங் கூறப்புக்கவிடத்தே "மறைவெளிப்படுதலும்" என, உடன்போக்கிற்குப் பின்னிகழும் மறைவெளிப் பாட்டைக் கற்புமுறையின் தொடக்கமாக ஆசிரியர் கூறுதலால் என்க. அதனுரையிற் பேராசிரியர் "எம்மனை முந்துறத் தருமோ, தம்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே" எனத் தலைவி உடன்போயகாலத்து வருந்திக் கூறிய நற்றாய்கூற்றை அம் மறைவெளிப்பாட்டுக்கு உதாரணங் காட்டுவர். திருவள்ளு வரும், அலரறிவுறுத்தலோடு களவியலை முடித்துப் பின் கற் பியல் கூறத்தொடங்குதலும் நோக்கத்தக்கது.

இக் களவுக்கூட்டம் இரண்டு மாதங்களுள்ளே முடிதற் குரியதென்று இறையனர் களவியல் கூறிய செய்தி முன்னரே குறிக்கப்பட்டது (சூத்-32). அதுகூறிய சூத்திரத்தில் "திங்க ளிரண்டி னகம்" என, இரண்டுமாத மாவதற்குச் சிலநாள் நிற்க, தலைவன் வரைந்துகொள்வது நல்லதென்று கருதி யெழுதிய உரையாசிரியர் கொள்கைப்படி, இக்களவொழுக்க முடிந்து ஐம்பத்தாரும்தாள் மணம் நிகழுமென்றும், இன்ன வின்ன செய்திகள் இன்னவின்ன நாட்குரியனவென்றும், தஞ்சைவாணன் கோவை யுரையாசிரியர் முதலியோர் வரை

யறை கூறுவர் (366-உரை). இப்பாகுபாடு காட்டுங் குறிப் பொன்றுந் தொல்காப்பியத்துக் காணப்பட்டிலது.

இனிக் களவுக்கூட்டங் கூடிவந்த தலைமகன் தான் காத லித்த தலைவியை மணந்துகொள்வதில் இரண்டு முறை யுண்டு; அவை களவு வெளிப்படுதற்குமுன் வரைதல்— களவு வெளிப்பட்டபின் வரைதல் என்பன (140). பிற் கூறிய பகுதியைச் சேர்ந்தனவே, முன்பு எழுதப்பட்டவை. களவு வெளியாவதற்குமுன் வரைதல் என்பது, பகற்குறி இரவுக்குறிகட்குப்பின், தோழியால் வரைவு கடாவப்பட்டு நிகழ்வதாம். இங்ஙனம் வரைதற்கண் தலைவிக்கு உடன் போக்கில்லை என்பது உணரத்தக்கது. இந்நிகழ்ச்சியில், தலைவியை மணம்பேசி அவள் சுற்றத்தாரைத் தலைவன் வேண்ட, அவர் மிகுந்த பரிசங் கேட்குமிடத்து அப் பரிசத்தின்பொருட்டு அவன் வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிந்தும், வேறு வினைமேற்கொண்டு (வேந்தர்க் குற்றுழி முதலியவைபற்றி) ஒருவழித் தணந்தும் சிலகாலம் நீங்கியுறைதலும் நிகழுமென்றும், ஆனல், இக் கள வொழுக்கத்திடையே ஓதல் தூது பகைகள் காரணமாகத் தலைவியைப் பிரிதல் கூடாதென்றுங் கூறுவர் (141). மேற் கூறியவாறு "வரைவிடை வைத்துப் பொருள்வயிற்" பிரியும் பிரிவென்று கூறப்படுதலின், விவாகத்தில் மகள்பொருட்டுப் பரிசம் வாங்கும் வழக்கம் தமிழ்நாட்டார்க்குள் முன்னுளில் இருந்தமை புலப்படும். "பொருளென மொழியினும்" என்ற சூத்திரமுங் காண்க (214). இவ்வழக்கம் மலைச்சாதியார் பலரிடத்து இன்றும் உள்ளதேயாம். ஆரியர்க்குள் கன்னியா சுற்கம் பெறுதல் பண்டைக்காலத்தில்லை என்றும், சூத்திர ரும் பெண்ணுக்கு அது வாங்குதல் தகாதென்றும் மனு கூறுவர் (அத்.9; 98. 100). இவ் வரைவின் பொருட்டுப் பிரிதலை முன்னூல்களும் பின்னூல்களும் விரித்துக் கூறுகின் றன. இங்ஙனமாக இயற்கைப் புணர்ச்சிமுதல் தோழியா லாயகூட்டம் முடியவுள்ள பொருட்பகுதியே அகத்திணையுட் பெரிதுஞ் சிறந்ததாம். இதனை "அகத்திணையின் மிகத்திக

மூம் இன்பக் கலவி யின்பப்பகுதி முற்றிற்று'' எனப்பேராசிரியர் அப்பகுதியிறுதியில் எழுதுதலாலும் அறியலாம் (திருக்கோ. 300).

III. கற்பியல்.

இதுகாறும், இல்வாழ்க்கைக்குமுன்னிகழுங் களவொழுக்கத்தின் வரலாறு ஆராயப்பட்டது. இனி அடுத்த நிலையாகிய கற்பைப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றைநோக்குவோம். கற்பாவது—கொள்ளுதற்குரிய தலைவன், வேள்விச் சடங்கொடுகூடத் தலைவியை அவள் பெற்றோர் கொடுப்பக் கொள்ளுதலாம் (142). "கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும், அவனை இன்னவாறு வழிபடுக எனவும், இருமுதுகுரவர் (பெற்றோர்) கற்பித்தலாலும், அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் கடவுளர்—இவர்களிடத்து ஒழுகும் ஒழுக்கத்தைத் தலைமகன் கற்பித்தலாலும், வேதத்தும் சடங்கினும் விதித்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்துச் செல்லுந்துணையும் இல்லற நிகழ்த்துதலாலும் கொண்டதலைவனை இன்னவாறு பாதுகாப்பாயென்றும், அவற்கு நீ இன்னவாறு குற்றேவல் செய்தொழுகென்றும் அங்கியங்கடவுள் சான்றாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலாலும் 'கற்பு' எனப் படுவதாயிற்று'' என்பர். (பக் 345) களவுப் புணர்ச்சிக்குப்பின்பு இக்கற்புமுறை நிகழ்வதாகவே புலனெறிவழக்கஞ் செய்யப்படுமென்பது, "முற்படப் புணராத சொல்லின் மையிற்—கற்பெனப்படுவது களவின் வழித்தே" என முன்னோர் கூறுதலால் நன்கறியப்படும். (மெய்யுறு புணர்ச்சியாகிய களவின்வழித்தாகாத) வேறு உலகியன்மணங்களும் உள்ளப்புணர்ச்சியாகிய களவுமுறையானே பெரும்பான்மை நிகழ்வன வாதலின், அவற்றையும் களவுக்கூட்டத்திற்குப் பிற்பட்டனவாகவே கொள்வர் முன்னோர். அதனை நச்சினார்க்கினியர் "பொருளாற் கொள்ளும் மணமும், இருவர்சுற்றமும் இயைந்துழித் தாமும் இயைதலிற் கந்தருவப் பாற்படும்'' (பக். 226) எனவும் "உலகத்து மன்ற

லாவது, ஒரவர் கொடுப்பதற்கு முன்னர் ஒருவற்கும் ஒருத்திக்கும் கண்ணும் மனமுந் தம்முளியைவதே என வேதமுங் கூறிற்று" (பக். 223) எனவும், "இருவர் கண்ணுற்றுக் காதல் கூர்ந்தவழியெல்லாம் கந்தருவமென்பது வேதமுடிபாதலின், இவ்வுள்ளப் புணர்ச்சியுங் கந்தருவமாம்" (பக்.232) எனவும் கூறுதலால் உணர்க. இனி, இக்கற்பினது வகையைத் தொல்காப்பியனார்,

> "மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
> இவைமுத லாகிய வியனெறி திரியாது
> மலிவும் புலவியு மூடலு முணர்வும்
> பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே." (500)

என்ற செய்யுளியற் சூத்திரத்திற் பாகுபடுத்துக் கூறுகின்றார். ஈண்டுக் காட்டப்பட்ட முறைகொண்டு நோக்குமிடத்துக் கற்புமுறையைப்பற்றிய உலகியலும் புனைந்துரையுமாகிய புலனெறி வழக்கத்தை அடியில் வருமாறு தெரிதல்கூடும்.

மறைவெளிப்படுதலுந் தமரிற்பெறுதலும்.

முன்பு உடன்போக்கிறுதியில் உரைத்தவாறு, தலைவனுந் தலைவியும் ஒருவரும் அறியாவகை உடன்செல்ல "இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்-கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்திக்-கற்பொடு புணர்ந்த" தலைவியினிலைமை கண்டு அவள் சுற்றத்தார் மீண்டதும், தலைவன் அவளுடன் சென்று தன் பதியை அடைவன். அடைந்து சில நாளாகியபின், தலைவியின் தமர் அவளிருப்பறிந்துவந்து, தலைவனைத் தம்மூரகத்தே மணம்புரிந்துகொள்ளும்படி வேண்டுவர். அவ்வேண்டுகோளுக்குத் தலைவன் உடன்பட்டானாயின், அவன் தலைவியின் ஊர்சென்று அவளை வதுவைபுரிந்து வாழ்வுறுவன். இனி, அவ்விருவரது உடன்போக்கில், தலைவியின் சுற்றத்தார் இடைவழியில்வந்து தடைபுரியாமலும், அவர் தலைவி யிருப்பறிந்துவந்து தலைவனைத் தம்மூரில் மணப்புரிந்துகொள்ள வேண்டாமலும் போவராயின், தலைவன் அவளைத் தன்மனையில்வைத்து 'வதுவைக்

கல்யாணம்" செய்துகொள்வான். இம்மண நிகழ்ச்சிக்கு முன், தலைவன்தாய், அவனாற் கொண்டுவரப்பட்ட தலைமக ளின் பொருட்டுச் "சிலம்புகழிநோன்பு" என்பதொன்று செய்தல் பண்டைமரபென்று தெரிகின்றது (ஐங்கு 399-;நற் 279) இங்ஙனந் தலைவியை ஒருவருமறியாவகை உடனழைத் துச்சென்று, அவள் சுற்றத்தார் கொடுத்தலின்றியே மணஞ் செய்துகோடல், முற்காலத்து அறநெறியாகக் கருதப்பட்ட தென்பது,

> "கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
> புணர்ந்துடன் போகிய காலையான" (143)

என ஆசிரியர் கூறுதலால் அறியலாம். ஆயினும், களவு வெளிப்பட்ட பின் தலைவியின்தமர் உடன்பட்டுக் கொடுத் தலே முற்காலத்துப் பெரு வழக்காகவேண்டுமென்பது, "மறைவெளிப் படுதலுந் தமரிற்பெறுதலும்",என்று ஆசிரியர் குறிப்பித்தலால் தெளியப்படும். ஆரிய விவாக முறையாகிய காந்தருவத்திலும், ஒருவன் கந்தருவமுறையால் ஒருத்தி யைக் கூடியபின்னர், அக்கூட்டம் அவள் பெற்றோர்முதலிய வரால் பின்பு அங்கீகரிக்கப்படுமென்பது "காந்தர்வ மென்னும் விவாகத்தால் ராஜரிஷி கன்னியர் பலர் மணஞ் செய்துகொண்டனரெனவும், அவர்கள் தாய் தந்தையராற் பின்பு ஆமோதிக்கப்பட்டனரெனவும் நாம் கேள்விப்படுகின் ரேம்" என்று மஹாகவியாகிய காளிதாஸரும் (ஸாகுந்தலம் அங்கம் 3),

> "காந்தர்ப்ப மென்ப துண்டாற் காதலிற் கலந்த சிந்தை
> மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும் மறைகளே வகுத்த கூட்டம்
> ஏந்தற்பொற் றோளினுயீ திசைந்தபின் எனக்கு மூத்த
> வேந்தற்கும் விருப்பிற் றாகும் வேறுமோ ருரையுண் டென்றாள்'

[இராமா. ஆரண்ய சூர்ப்ப. 54]

என இராமனை நோக்கிச் சூர்ப்பணகை கூறியதாகக் கம்ப நாடரும் பாடுதல் காண்க. இனிக் காந்தருவமணம் நிகழ்ந்த பின்பு கரணம் (சடங்கு நிகழ்தல்) உண்டென்று ஆசிரியர்

குறிப்பிக்கின்றூர் (கற்பியல். 1, 2). ஆயின், வடநூல் வழக்கிலே கரண நிகழ்தலும் நிகழாமையுமாகிய இரண்டு முறையும் காணப்படுகின்றன. அருச்சுன சுபத்திரைகளின் காந்தருவ மணத்துக்குப்பின் கூறப்படும் கரணச்செய்தியும்[1] சகுந்தலை துஷ்யந்தரது தனிக்கந்தருவமணமும்[2] மேற்கூறிய இரண்டுக்கும் முறையே ஏற்ற உதாரணங்களாம். "(பத்தினி பாரியை தாரம் ஜாயை பிரஜாவதி எனப்பட்ட) ஐவகை மனைவியருள், முதல்நால்வர்மட்டும் அங்கிசான்ருகத் தர்ம சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட கிரியைகளோடு விவாகஞ் செய்யப்படுவர்; காந்தருவ விவாகத்திற்கு கிரியைகளில்லை; அது விருப்பத் தானே நடக்கத்தக்கது; இருவர்க்கும் காதலால் மறைவில் மந்திரமில்லாமற் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது" எனவரும் பாரத வசனம் கரணமில்லாத ஆரியக் காந்தருவ முறையைக் காட்டுதல் காண்க. இங்ஙனமே தமிழரது களவுக் கூட்டத்துக்குப்பின்னும் கரணம் நிகழ்தல் முன்னுளில் வழங்கியதில்லை என்றும், பிற்காலத்தே தான் அம்முறை அவர்களுள் அமைந்து வழங்கலாயிற்றென்றும் ஆசிரியர் குறிப்பிடுவர், இவற்றை,

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே"
"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப"

என்ற கற்பியற் சூத்திரங்களிற் காண்க. ஆரியராகிய அந்தணர் அரசர் வணிகர் மூவர்க்கும் இருடிகள் ஒருகாலத்தே விதித்துப்போந்த சடங்கொடுகூடிய கற்புமுறையைத் தம் புராதனமுறையொன்றில் நின்றொழுகிவந்த தமிழ்நாட்டார்க்கும் ஐயர் விதிக்கும்படி நேர்ந்த காலமுமுண் டென்றும், அங்ஙனம் விதிக்க நேர்ந்ததன் காரணம்—பொய் வழு முதலிய குற்றங்களின்றி நடைபெற்றுவந்த புராதன ஒழுக்கமாகிய

---

[1]வியாசபாரதம்; தமிழ்மொழிபெயர்ப்பு-ஸ்ரீ ம.வீ. ராமாநுஜாசாரியாரவர்கள் பதிப்பு, ஆதிபர்வம். பக். 859.

[2] ௸ ௸ ௸ பர்வம், 330-முதல் 344-ம் பக்கம்வரை.

தமிழர் மணத்தில், பிற்காலத்தே அவை புகுந்து அதன் பழஞ்சிறப்பைக் கெடுத்தமையால் அந்தமணம் ஒழுங்காக நிகழ்தற்பொருட்டேயாம் என்றும் ஆசிரியர் கருதினராதல் மேற்சூத்திரங்களால் உய்த்துணரப்படும். ஈண்டு முதற் சூத்திரத்திற்கண்ட "கீழோர்" என்ற சொல் ஐவகை நிலத்துக்குரிய பண்டைத் தமிழ் மக்களையே பெரும்பான்மை உணர்த்துவதாம்.[1] என்னை? களவியற்குப்பின் கற்பியலை வைத்து ஆசிரியர் விதித்துப் போந்தனவெல்லாம் "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்-தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கே" யன்றிப் பிறநாட்டுவழக்கு ஆகாமையால் என்க,

நச்சினர்க்கினியர், "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்-கீழோர்க் காகிய காலமு முண்டே" என்பதற்கு ஆதியூழியில் (கிருதயுகத்து) நான்கு வருணத்தாருந் தம்முள் மணம்புரிந்துவந்தனரென்றும், இரண்டாம் ஊழி (திரேதாயுகம்) தொடங்கி, வேளாளர்க்கு மற்ற மூவருடன் மணம் புரிதல் விலக்கப்பட்டதென்றும் கருத்துப்பட உரைகூறி, முதலூழியில் வேளாளர் மற்றைமூவருடன் மணம்புரிந்ததைக் குறிக்கும் இலக்கியம் பிற்காலத்து வீழ்ந்ததென்று எழுதுவர். அதனை அச்சூத்திரவுரைநோக்கி உணர்க.

இனிப் "பொய்யும் வழுவுந் [தோன்றிய பின்னர்-ஐயர் யாத்தனர். கரண மென்ப" என்ற சூத்திரத்திற்கு அவ்வுரையாளர், "வேதத்திற் கரணமொழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதன் காரணமுங் கூறுகின்றது"

---

[1]நாற்கவிராசநம்பியாரும் "மொழிந்தோர்நால்வரு மொழிந்த நிலத்துறை-இழிந்தோர் தம்முளு முயர்ந்தோரு மெய்துப" (31) "இழிந்தோர் தமக்கு மிவற்றுண்மேம் பட்டவை-யொழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்" (76) என்ற சூத்திரங்களினும் அவற்றினுரையினும் நால்வகை வருணத்தவரை உயர்ந்தோர் என்றும், ஐந்திணை நிலமக்களை இழிந்தோர் என்றும் கூறினர். ஆரியவருணப் பாகுபாட்டுள் இவ்வைந்திணை மக்கள் அடங்காமைபற்றி இவ்வாறு அவர்கள் ஆரியராற் கருதப்பட்டனராதல்வேண்டும்.

என்று அவதாரிகையும், "ஆதியூழி கழிந்தமுறையே அக் காலத்து அந்தந்தொடங்கி இரண்டாமூழி முதலாகப் பொய்யும் வழுவுஞ் சிறந்து தோன்றிய பிற்காலத்தே, இருடிகள் மேலோர்கரணமுங் கீழோர்கரணமும் வேறுபடக் கரணங்கள் கட்டினர்" என்று பொருளும், "இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல்செய்தலின், முதனூலாசிரியர்கூறியவாறே களவுநிகழ்ந்தபின்னர்க் கற்புநிகழுமாறுங் கூறித் தாம் நூல்செய்கின்றகாலத்துப் பொய்யும் வழுவும்பற்றி, இருடிகள் நூல்கள் யாத்தவாறுங் கூறினர், அக் களவின்வழிவந்தகற்புங் கோடற்கென்றுணர்க" என்று விசேடமுங் கூறினர். இதனல், மேலோர்கரணமும் கீழோர் கரணமுங் கூறியதே இச்சூத்திரமென்பது. அவ்வுரைகாரர் கருத்தாதல் காண்க.

இவ்வாறு இருடிகளால் விதிக்கப்பட்ட பிற்கால விவாகமானது. 'இவளை நீ இன்னவாறு பாதுகாக்க' எனத் தலைவனுக்கும், 'இவனுக்கு இன்னபடி நீ குற்றேவல் செய்தொழுக' எனத் தலைவிக்கும் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திர வகையால் வேள்வியாசான் கற்பிப்பதாகும். இதனைக் "கரணம்" என்றுளுவர் தொல்காப்பியர், கரணம் விவாகத்துக்குச் சிறப்புடைய காரணம். முற்காலத்து நிகழ்ந்துவந்த கரணச்செய்திகள் சில அடியில்வரும் அகநானூற்றடிகளில் அழகாகக் கூறப்படுதல் காண்க:—

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்

புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரித மலரி
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூட்டிய உடன்புணர் கங்குல்" (அகம்-86)

இக்கரணத்தை "வதுவைக்கலியாணம்" என்பது பண்டை வழக்கு (களவி-பக். 127; அகநா. 86 அரும்).

இங்ஙனம். வேள்வியாசான் காட்டியமுறையே, அங்கி சான்றாக மணமுற்றியபின், தலைவன் தலைவி யிருவரும் இல்லறநிகழ்த்துங் காலத்தே—தம்முட்கூடிமகிழ்தலும், சிறு கோபத்தாற் புலவியும், அது முற்றிப் பெருங்கோபமாகு மிடத்துப் பிரணயகலகமும், அக்கோபங்களைத் தீர்த்துக் கொண்டு இருவரும் கூடலும், பலதொழில்களின் பொருட்டு இடையிடையே பிரிதலும், அதுபற்றி இருவர்க்கும் ஆற்றாமை பெருகுதலும், பிரிந்துவந்து கூடிக்களித்தலும், பின்பு இல் லிருந்து நல்லறஞ்செய்கையும் உலகத்துத் தலைமக்களாயுள் ளாரிடம் இயல்பாக நிகழ்வனவன்றே? இவற்றையே ஆசிரியர் மலிதல், புலவி, ஊடல், உணர்தல், பிரிவு என வகுத்துக் கற்பியலிற் கூறுவாராயினர். இவற்றுள் மலிதல் என்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலியவற்றால் இருவரும் மகிழ்தலாம். புலவி என்பது இருவருங் கூடுங் காலத்துச் சிறிது மனம் வேறுபடுதல். ஊடல் என்பது அவ்வேறுபாடு நீட்டித்தல். இங்ஙனம் புலவியு மூடலும் நிகழ் தற்குக் காரணம், தத்தம் மனங்கட்கு ஒவ்வாத செய்திகள் சில நடந்தனவாக ஒருவரையொருவர் ஐயப்படுதலாம். இவ் வையம் தலைவிகண்ணே பெரிதும் நிகழ்வதென உணர்க. இதனைக் காரணங்காட்டியேனும் வேறுவகையாலேனுந் தெளிவித்தல், உணர்த்தல் எனப்படும், இவற்றுட் புணர்ச்

சியின் மகிழ்தலாகிய மலிவு, தலைவன் தலைவியைப் பிரியாது நின்று இல்லறநிகழ்த்துங் காலத்தும், ஏனையவை அவன் கரந்த ஒழுக்கமுடையனாய்ப் பின்பு தலைவியை அடைந்த காலத்தும் நிகழ்வன. இவ்வாறு மலிவு முதலிய ஐந்தும் பற்றி நிகழ்வனவே இக்கற்பியலில்வருங் கூற்றுக்கள் பெரும் பாலுமென உணர்க. இக்கூற்று நிகழ்த்தற்குரியார் பன்னிருவர் என்பர்; அவர்:—பாணர், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்ற அறுவரும், முன் களவியலிற் கண்ட பார்ப்பான் பாங்கன் முதலிய அறுவருமாவர், அவருள்—

பாணர்:—பண்ணுக்கு உரியரானமையால், இவர்க்கு இப்பெயர் வழங்கியது. இவர் யாழ்வாசினை முதலியவற்றால் தமிழ்த்தலைவரை மகிழ்வுறுத்துபவர். இக்கூட்டத்தாரில் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் எனப் பல பிரிவினர் உண்டு. (பக் 212). பாணரைப் பற்றிய செய்திகளாகப் பண்டைநூல்களாற் றெரியவருவன வருமாறு:— இவர் பண்டைத் தமிழ்க்குடிகளுள் ஒருவரென்பது "துடியன் பாணன் பறையன் கடம்பனென்-றிந்நான் கல்லது குடியுமில்லை" என்னும் புறப்பாடற்பகுதியால் (335) விளங்கும். இவர் இயலிசைகளிற் பெரிதும் வல்லோராக இருந்தமையால், தமிழரசரும் ஏனைத்தலைவர்களும் இன்னோரை ஆதரிப்பதைத் தங்கள் பெருமையாகக் கொண்டொழுகினர், "பாணர் சுற்றத்துப் பசிப்பகை யாகி" "பாணர் நாளவை" என்பன முதலாக அவ்வரசர் சிறப்பிக்கப்படுதல் காண்க. ஆசிரியர்கள் இவரை "மாதங்கா"[1] என வழங்குவர்; இதற்குக் கிராமமத்தியத்தை அடையாதவர் என்பது பொருளாம். இதனால், இவர் இழிகுலத்தாராகக் கருதப்பட்டு வந்தமை புலனாகும். 'புலைமகனாதலிற் பொய்ந்நின் வாழி" (பக்-394) 'புலையாத்தின்னி' (திருக்கோ-386) என இவரை வழங்கலுங்

[1] கள்மயக்கமுள்ள பிராமணப்பெண்ணினிடம்சூத்திரனான நாவிதனுக்குப்பிறந்தவராதலால்,சண்டாளசாதியின ரென்பர். வியாசபாரதம், தமிழ் மொழிபெயர்ப்பு-ஸ்ரீ ம. வீ. ராமாநுஜாசார்யர்பதிப்பு-அநுசாஸன பர்வம். பக்-18.

காண்க. இவர்க்கு அரசர் வழங்கிவந்த பரிசுகளிலே, பொற்ருமரைப் பூச்சூட்டுதலைத் தமிழ்நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. தமிழ் நாட்டில் இவர் பிரபலம்பெற்றிருந்தனர் என்பது–பாணகவி இயற்றிய காதம்பரியின் தொடக்கத்தே, கிளியொன்றேந்தி வடநாட்டரசனெருவனிடஞ் சென்ற மதங்கஜாதிப்பெண்ணின் வரலாறு கூறுமிடத்தில் அவளைத் தென்னுட்டவளாகக் கூறிச்செல்லுதலாலும் விளங்கும். "அம் மாது (அரசனைப்) பார்த்துவிட்டுத் தூரத்திலிருந்தவாறே தன்வரலவ அரசற்கு உணர்த்தவிரும்பி மூங்கிற்கழியொன்றெடுத்து அச்சபையின் தரையில் ஒருமுறை அடித்தாள்" என்று அக்கவி எழுதுகின்ருர். இதனுல் மூங்கிற்கோல் கொண்டு சபையிற்செல்லுதல் பாணரது பழைய முறையென்பது புலப்படும். இவ்வழக்கு, "நுணங்குநுண் சிறுகோல் வணங்கிறை மகளிரொ டகவுநர்" "நுண்கோல் கொண்டு களம்வாழ்த்தும் அகவலன் பெறுக மாவே" எனவரும் அகநானூற்றினும் "வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்" எனக் குறுந்தொகையினும் (298) வரும் செய்திகளுடன் ஒப்பிடத்தக்கது. பிறவும் இப்பாணர்செய்திகள், "பழந்தமிழ்க்குடிகள்"[1] என்ற தலைப்பெயரின்கீழ் யாமெழுதிய கட்டுரையுட் காண்க.

இத்தகைய பாண்கூட்டத்தார், மலையாளநாட்டிலே இன்றும் தம் பழந்தொழிலுடையராய்வாழ்தல் குறிப்பிடத் தக்கதாம். இவர் அந்நாட்டில் திருவரங்கப்பாணன், மீன்பிடிபாணன், குடைகட்டிப்பாணன், புள்ளுவன் என நான்கு பிரிவினராக உள்ளனரென்றும், ஆடல் பாடல் மத்தளங் கொட்டல் முதலியவற்றில் இவர் வல்லவரென்றும், ஒவ்வோராண்டினும் வரும் கற்கடகமாதத்து வைகறைகளிலே, பிராமணர் நாயரிவர்களின் வீட்டுமுகப்புக்களில் நின்றுகொண்டு நல்லிசைப்பாடல் பாடியும் மத்தளம் கொட்டியும் "துயிலுணர்த்தல்" என்ற விசேடம் இவரால் நடைபெறுகின்றது என்றும், அந்நாட்டில் தாழ்ந்தவகுப்பினராகவே இவர் கருதப்படுகின்ருரென்றும் தோல்வேலை குடைகட்டுதல்

[1] "செந்தமிழ்" தொகுதி—1 பகுதி—6, பக்—243.

மத்தளங் கட்டுதல் முதலியன இன்னோர் தொழில்களாமென்றும் பிறவாறுங் கூறப்படுகின்றன.[1] மீன் பிடித்தல் இவரது பழந்தொழிலென்பது,

> "பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
> கோள்வல் பாண்மகன் தலைவலித் தியாத்த
> நெடுங்கழைத் தூண்டில்" (பெரும்பாண்-283-284)
> "அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகன்
> சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்
> யாணரூர" (ஐங்குறு-47-9)

என்பனவற்றால் அறியத்தகும். இங்ஙனமே துயிலுணர்த்தும் தொழிலும் இவர்க்குயதென்பது "விறலியும் பாணனும் நம்வேந்தற்குத் துயிலெடைமங்கலம் பாட வந்து நின்றார்" எனப் பேராசிரியர் கூறுதலானும் உணரப்படும். (திருச்சிற்றம்-375).

கூத்தர்:—இவர் நாடகமாடித் தமிழ்மக்களை மகிழ்விப்பவர். நாடகமாவது கதைதழுவிவருங் கூத்தென்பர் அடியார்க்குநல்லார் (சிலப்பதி-பக். 64). இவர் "பாரசவரும் வேளாளரும் பிறரு மவ்வாடற்றொழிற்கு உரியோர்களும், பாரதிவிருத்தியும் விலக்கியற்கூத்தும் கழாய்க்கூத்தும் ஆடுபவராகச் சாதிவரையறை யிலர்" என்றும், எண்வகைச்சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் போந்து புலப்பட்ட இவர் ஆடவல்லவரென்றும் கூறுவர் (பக். 211-212). அன்றியும், "அரசர்க்குத் தொன்றுதொட்ட நன்றுந் தீதும் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக் காட்டுவதற்கு இவர் உரியர்" எனவும் கூறப்படுவர் (பக். 415) இவர்க்குரிய கூற்றுக்களில் தொல்லவையுரைத்தல் நுகர்ச்சியேத்தல் ஊடல்தணித்தல் உறுதிகாட்டல் முதலியவை சிறந்தன என்பர் (பக். 168). இக்கூற்றுக்கட் கெல்லாம் "இலக்கியம் இக்காலத் திறந்தன" என்றார் நச்சினார்க்கினியர். இக்கூத்தர் "நாடகசாலையர்" எனவும் படுவர். இவர்க்கும் மேற்கூறிய பாணர்க்கும் உரிய புறத்திணையியற்

[1] Castes and Tribes of Southern India. See Panan.

பகுதிகளைத் "தாவினல்லிசை" (91) என்ற சூத்திரத்தால் உணர்க.

விறலியர்:- தாமே ஆடலும் பாடலும் நிகழ்த்திக் கூத்தரைப்போலவே நாடக நவிற்றவல்ல பெண்பாலர். இவர் புறத்துப்போந்து[2] விறல் படப் பாடி யாடுதலால், 'விறலியர்' எனப் பெயர் பெற்றனரென்றும், கூத்தர் போல இவருஞ் சாதி வரையறையிலரென்றுங் கூறுவர் (பக். 212) இவர் தெருவில்நின் ருடுவது முண்டு (பதிற்-47).

பரத்தையர்:— இவர் காமக்கிழத்தியராவர், நச்சினார்க்கினியர் இவரைப்பற்றிக் கூறுவன வருமாறு:—"காமக்கிழத்தியராவார்-கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமை பூண்டு இல்லற நிகழ்ந்தும் பரத்தையர்; அவர் பலராதலிற் பன்மையாற் கூறினர். அவர், தலைவன் இளமைப் பருவத்திற் கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்றொழுகப்படும் இளமைப் பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோரும், காமஞ்சாலா இளமையோருமெனப் பல பகுதியாவர். இவரைக் "கண்ணிய காமக்கிழத்தியர்" எனவே, கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று; அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவரும் சேரிப் பரத்தையரும் குலத்தின்கண் இழிந்தோரும் அடியரும் வினைவலபாங்கினோரும் பிறருமாம். இனிக் காமக்கிழத்தியரைப்-பார்ப்பார்க்குப் பார்ப்பனியை ஒழிந்த மூவரும், ஏனையோர்க்குத் தங்குலத்த ரல்லாதோரும், வரைந்துகொள்ளும் பரத்தையருமென்று உரைப்பாரும் உளர்" என்பது (397-8). நம்பியாரும் "ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு-வருகுலப் பரத்தையர் மகளிராகிக்-காமக்கு வரைந்தார் காமக்கிழந்தியர்", "யாரையும் நயவாவியல்பிற் சிறந்த-சேரிப்பரத்தையர் மகளிராகிக்-காதலிற் புணர்ந்தோர் காதற் பரத்தையர்". "அவருளும் வரைதற் குரியாருளரே" என்றார் (113-5) இவர் கூற்றுக்களை யெல்லாந்

---

[2] வீறல், சத்துவம், மெய்ப்பாடு, குறிப்புவரையறை என்பன ஒரு பொருட் கிளவிகள்.

தொகுத்துப் "புல்லுதன் மயக்கும்" (151) என்ற சூத்திரத்து ஆசிரியர் கூறுவர்.

அறிவர்:—இவர் மூன்றுகாலமுந் தோன்ற நன்குணர்ந் தோரும் புலனன்குணர்ந்த புலமையோரும் ஆவர் (பக்.756) குற்றமற்ற ஒழுக்கங்கள் முக்காலத்தும் வழங்கும் முறைமையை ஆராய்ந்துணரும் முழுதுணர்வுடையார் இவரென்றும் (பக்-165) "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் இவ்வறிவரில் ஒருசாரர் என்றும் (பக்-167) கூறுவர் நச்சினர்க்கினியர். நம்பியார் "அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கு-முறுதி மொழிந்த வுயர்பெருங் குரவர்" (112) என்ருர். தலைவனுந் தலைவனுந் தலைவியும் இவ்வறிவரது ஏவலைக் கடவாது ஒழுகுவர். முக்காலத்துக்கும் தம்குலத்துக்கும் பொருந்துமாறு அவர்க்கு நல்லனவற்றைக் கூறுதலும் தீயவற்றை விலக்குதலும் இடித்து உறுதிகூறி ஒரெல்லையிலே அவரை நிறுத்துதலும் இவ்வறிவரது இயல்புகளாம். (153-5). இவர் மலைநாட்டாரது கல்யாணத்துக்கு நல்லநாள் பார்க்கவல்ல சோதிடராகவும் கலித்தொகை கூறும் (39).

கண்டோர்:—இவர் வரையறையிலர்; "தீதுடைப்புலவி தீர்த்தலும் அவன்வரல்-காதலிக் குணர்த்தலும் கண்டோர்க் குரிய" என்பர் நம்பியார் (99).

இவ்வறுவரோடு களவியலிற் கண்ட பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி தலைவன் தலைவி என்பார் கூற்றுக்கள் இக்கற்புமுறைக்கேற்பவரும. இவருட் பார்ப்பார்க்குக் 'காம நிலையுரைத்தல்' (177) முதலிய கூற்றுக்கள் ஆசிரியராற் கூறப்பட்டனவாயினும். இவை கடைச்சங்ககாலத்தேயே வழக்கு வீழ்ந்தன என்பது—"இவையெல்லாந் தலைச்சங்கத் தாரும் இடைச்சங்கத்தாருஞ் செய்த பாடலுட்பயின்ற போலும்; இக்காலத்தில் இலக்கியமின்று" என நச்சினர்க் கினியர் எழுதலால் விளங்கும். மேற்கூறிய பன்னிருவரு மன்றி ஊரார் அயலோர் சேரியிலுள்ளோர் ஆகிய பெண்டி

ரும், நற்ருய் தந்தை தன்னையரும் இக்கற்புப்பற்றிய செய்யுள் வழக்கில் வருதற்குரியராயினும், இவர் பேசியதாக முற்குறித்தவர்களாற்கொண்டு கூறப்படுவதல்லது தாமே கூற்று நிகழ்த்தற்குரியரல்லர் (சூ. 504). இவருள், பார்ப்பார் அறிவரென்ற இருவர் கூற்றுக்களும் எல்லாரும் கேட்டற்குரியர் (510) எனவும், ஏனையர்கூற்றுக்கள் சிலர்பலராற் கேட்கப்படுமெனவும் புலனெறிவழக்கஞ் செய்யப்படுமென்பர், இனி, மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு என்று கற்பியல்வகைகளாக ஆசிரியர் கூறியவற்றை முறையே நோக்குவோம்.

மலிவு

இவற்றுள் 'மலிவு' என்பது கூடிமகிழ்தலாம். தலைவன் கரண முறைப்படி தலைவியை மணம்புரிந்தபின்னர் நிகழுஞ் செய்திகளையும், அக்காலத்து அவ்விருவரும் கலவியான் மகிழும் "மலிவை"யும்பற்றி ஆசிரியர். "கரணத்தினமைந்து முடிந்தகாலை" என்னுந் தலைவன் கூற்றுணர்த்துஞ் சூத்திரத்தில் (149) "மெல்லன் சீறடி புல்லியவகையினும்" என்பது வரை கூறுகின்ருர், இவற்றிற்கண்ட செய்திகள் சில, தொல்காப்பியர்காலத்து வழங்கிய இல்லற முறைகளை விளக்குதலால் அவற்றைக் குறிப்பிடுவோம்.

"கரணத்தினமைந்து முடிந்த காலை-நெஞ்சுதளையவிழ்ந்த புணர்ச்சி":—"கரணச் சடங்குகளால் ஒரு குறைவுமின்றி, மூன்றிரவில் முயக்கமில்லாது, மதியுங் கந்திருவரும் அங்கியுமாகிய மூவர்க்கும்ஏற்றவாறு பள்ளிசெய்தொழுகி, நான்காம் பகலெல்லை முடிந்தகாலத்து மூன்றுநாளுங் கூட்டமின்மையால் நிகழ்ந்த மனக்குறைதீர நான்காம்நாள் அவ்விருவருங் கூடுதல்"[1] என்பர் நச்சினர்க்கினியர். இவர் கூறிய செய்தி விவாககாலத்துச் செய்யத்தக்கதாக இருடிகளால் விதிக்கப்பட்ட ஒருவகை விரதமாகும். இதனையே, "மூன்றிரவு தம்பதிகள் உப்பில்லாத ஆகாரம் உட்கொண்டு பிரமசரிய

[1] நாலாநாள் இருவரும் உடன்புணரும் அறையைச் 'சதுர்த்தியறை' என வழங்குவர் (அகநா, 86 அரும்).

விரதம் பூண்டவர்களாய்த் தரையிற் சயனஞ் செய்யவேண்டும்" என்று போதாயனமும் (படலம் 3; காண் 8.) ஏனைய கற்பசூத்திரங்களும் கூறுவன. இவ்வாறு மூன்றுநாட் கூட்டமின்மைக்குக் காரணம்—அந்நாள்களிற் சோமன், கந்தருவன் அக்கினி என்ற மூவரும் முறையே பெண்ணை அநுபவிப்பதாகவும், நான்காநாளே அக்கினி அவளைத் தலைவனுக்கு அளிப்பதாகவும் கருதப்பட்டமையேயாம். ஆரிய விவாகத்தில், வரன் வதூவை நோக்கிக்கூறும் வேதமந்திரங்களும் இச்செய்தி பற்றியனவேயாம். அவை வருமாறு:—"சோமன் முதலில் உன்னையறிந்தான்; பின் கந்தர்வன் உன்னையறிந்தான்; உன் புருஷரில் மூன்றும் வரன் அக்கினி; மானுஷபுத்ரனாகிய நான் உன் நான்காம் புருஷன். சோமன் உன்னைக் கந்தர்வனுக்குக் கொடுத்தான்; கந்தர்வன் உன்னை அக்கினிக்குக் கொடுத்தான்; அக்கினி உன்னை சம்பத்துடனும் சந்தானத்துடனும் எனக்குக் கொடுத்தான்" எனக் காண்க. இனி, மூன்றுநாள் வதூவரர்கள் ஓரமளியிலிருந்தும் கூடாதுறைவராயின். அவர்க்கு உத்தமபுத்திரன்பிறப்பான் என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு விவாக முடிவில் "நெஞ்சுதளையவிழ்ந்த புணர்ச்சி" கூறப்படுதலால், இவ்விரதம், இக்காலத்துப்போலப் போலியாகக் கொண்டாடப்படுதலன்றி, ஆசிரியர் காலத்துத் தமிழ்நாட்டில் ஒழுங்காக அனுஷ்டிக்கப்பட்டமை தெரியவருகின்றது. அகநானூறு 86, 136-ம் பாடல்களிலே இக்கூட்டம் கூறப்படுதல் காண்க.

"சொல்லென, எனது சுவைப்பினும் நீ கை தொட்டது, வானோ ரமுதம் புரையுமா லெமக்கென, அடிசிலும் பூவுந் தொடுதல்":—அமிர்தத்துக்கு மாறாகிய நஞ்சைநுகரினும் நீ கையாற் றீண்டின பொருள் உறுதியைத் தருதலால், தேவர்களுடைய அமிர்தத்தை ஒக்கும் எமக்கெனப் புனைந்துரைத்துத் தலைவன் புகழ, அடிசிலும் பூவுந் தலைவி தொடுதல். இதனால், தலைவி கையாற் படைக்கப்பட்ட உண்டியைத் தலைவன் முதலில் உண்ணுதற்குச் சடங்கு

நிகழ்தல் உண்டென்பது விளங்கும். இது, பிராமணருள் விவாகம் அல்லது ருதுசாந்தி முகூர்த்தத்துக்குப்பின் அமாவாசைகழித்துத் தொடங்கிப் பௌர்ணமி காறும் நிகழ்த்தப்படும் "ஸ்தாலீபாகம்" என்ற சடங்குபோன்றதாகத் தோற்றுகின்றது. அன்றேல், தலைவியைப் புகழ்வதுமட்டிற் றலைவன் குறிப்பெனல்வேண்டும்.

"அந்தணர் தேத்தும் சான்றோர் தேத்தும்—அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும் ஒழுக்கங் காட்டிய குறிப்பு":- வேட்பித்த ஆசிரியனும் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப்பாரிடத்தும், முற்றுமுணர்ந்து ஐம்பொறிகளை அடக்கியவரிடத்தும் முடிவில்லாத சிறப்பினையுடைய தேவர்களிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைத் தான் (தலைவன்) தொழுது காட்டிய குறிப்பு, இதனால், தன்னையன்றித் தெய்வந் தொழாதாளுக்கு- இத்தன்மையோர் தொழற்குரியர் என்று தொழுது காட்டியவாறும்.

'அந்தரத் தெழுதிய எழுத்தின் மான—வந்த குற்றம் வழிகெட ஒழுகல்":- களவுக்காலத்து உண்டாகிய பாவம் ஆகாயத்தெழுதிய எழுத்து அழியுமாறுபோல அழியும்படி, பிராயச்சித்தஞ்செய்து ஒழுகுதல். களவுக்காலத்துண்டாய பாவமாவது-தீண்டத்தகாத நாள்களிலும்,தீய விராசி நாள்களிலும் தலைவன் கூடியது முதலியனவாம். "மறைந்தவொழுக்கத் தோரையு நாளுந்-துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை" (135) என ஆசிரியரும்,"பூப்புநிகழ்காலத்து வரையாது களவொழுக்கம் நிகழ்த்தினர்க்கு 'அந்தரத்தெழுதிய............ஒழுகல்' என்றதனாற் பிராயச்சித்தம் விதிப்பராகலின்" (பக்-333) என்று நச்சினார்க்கினியருங் கூறுதலால் இதனை அறிக. இதனால், பண்டைக்காலத்தே காந்தருவ விவாக முறையில், நாட்கோள்களைப்பற்றிய விதிவிலக்குகள் தமிழ்மக்களுள் விசேடமாக வழங்கியதில்லையென்பது தெரியலாம். ஆனால், ஆரியமக்களாற் பிற்பட்டு விதிக்கப்பட்ட கற்புக்காலத்தில் நல்ல நாளிராசிகளே கூட்டத்துக்குக்

கொள்ளப்பட்டன என்பது ஈண்டு ஆசிரியர் கூறிய பிராயச் சித்தத்தாற் பெறப்படும்.

"நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிய-பன்னல்சான்ற வாயிலொடு பொருந்தித்-தன்னி னாகிய தகுதி";- அஃதாவது-பொறையும் பெருமையுமுடைய மகவைத் தலைவி தன்வயிற்றகத்தே கொள்கையினாலே, ஆராய்ச்சி மிக்க அந்தணரோடுகூடிச் செய்யத்தகுஞ் சடங்குகளைச் செய்யுந்தகுதியாம். இதனாற் குழவி பிறந்ததும் செய்யத்தகுஞ் சடங்குகளைத் தொல்காப்பியனார் காலத்தே, தமிழ்மக்கள் நடத்தி வந்தமை புலனும். "அரிமயி ரொழுகுநின் னவ்வயி றருளி, மறைநவி லொழுக்கஞ் செய்து மென்றனர்-துனிதீர் கிளவி நந்தவத்தினும்-நனிவாய்த் தனவால் முனிவர்தஞ் சொல்லே" என்பது இதற்கு இலக்கியமாகும்.

"புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதில்-நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி-ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்-செய்பெருஞ் சிறப்பொடு சேர்தல்":- அவ்வாறு புத்திரனைப் பெற்ற புனிறு (ஈன்றணிமை) சேர்பொழுதில், சுற்றத்தோடும் எண்ணெயாடும் மயக்கம்புரிந்த தலைவியை முகமன் கூறுதற்கு, முனிவர்பொருட்டுந் தேவர்கள் புத்திரனைப் பாதுகாத்தற்பொருட்டும் செய்யுஞ் சிறப்பொடு சேர்தல். சிறப்பாவன-பிறந்த புதல்வன் முகங்காண்டல், ஐம்படை பூட்டுதல், பெயரிடுதல் முதலியன. [ஐம்படை-காவலாகக் குழந்தைகளின் கழுத்திற் பூட்டுவதோர் அணி. காத்தற்கடவுளாகிய திருமாலினது பஞ்சாயுதங்கள் போலப் பொன்னாற் செய்யப்படுதலின் அப்பெயர்பெற்றது) இனி, ஆசிரியர் கூறியதற்கொப்பப் புதல்வரைப்பெற்ற புனிறுதீர மகளிர் இரவிற் சென்று நெய்யணிமயக்கத்தோடு குளத்தி னீராடலை-

"விரவிய மகளி ரேந்திய தூமத்துப்
புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கந்
தீர்வினை மகளிர் குளனா டரவமும்" (மணிமே 7,74-76)

"கணவ ருவப்பப் புதல்வற் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயர" (மதுரைக்காஞ்சி-600-3)

என்னுஞ் சான்றோர் கூற்றுக்களிலும், "யதுபுத்திரியாகிய குந்தியோ பத்தா நாள் புத்திரனுடன் கூடமிக அழகான தடாகத்திற்குப்போய் ஸ்நானஞ் செய்து பிள்ளையை எடுத்துக் கொண்டு தேவதா பூஜை செய்வதற்காக ஆசிரமத்தினின்று புறப்பட்டாள்" எனவரும் மஹாபாரதவசனத்தும்[1] ஆபத்தம்பத்தின் 15-ம் காண்டத்துள்ள 8-ம் சூத்திரத்தும் கண்டு கொள்க. இதனால், வாலாமை, (தீட்டு) நீங்கத்தலைவி சுற்றத்தாருடன் புரியும் இந் 'நெய்யணிமயக்கம்' பிரசவித்த பத்தாம் நாள் நிகழ்வதென்பது தெரியலாம். இவ்வழக்கம் தென்பாண்டி நாட்டார் இன்றுங் கொண்டொழுகுவதென்பது அறியத்தக்கது. இதனால், மகப்பேற்றுக் காலத்து நிகழும் வைதிகக் கிரியைகள் பலவும் தொல்காப்பியனார் கற்பியலிற் கூறுதல் கண்டுகொள்க. இவ்வாறு, கரணம் நிகழ்ந்து தலைவன் தலைவியுடன் கூடி மகிழ்கின்ற மலிவுக் காலத்தில் நிகழும் வைதிகமும் இலௌகிகமுமாகிய செய்திகள் 146-ம் சூத்திரத்து "உறலருங்குண்மையின்" என்னுங் கூற்றுவரை ஆசிரியராற் கூறப்படுதல் உணர்ந்து கொள்க.

புலவி ஊடல் உணர்வுகள்

மேற்கூறியவாறு, தலைவனுந் தலைவியும் இல்லறத்தில் நின்று நல்லறஞ் செய்தும், புணர்ச்சியின் மகிழ்ந்தும், புத்திரப் பேறடைந்தும் வாழுங்காலத்தே, தலைவன் வேறுசில பெண்டிரை விரும்பிக்கொள்ளுதலும் உண்டு. இவர் பின்முறையாக்கிய வதுவையருங் காமக்கிழத்தியரும் காதற்பரத்தையரும் ஆவர். இவருட் பின்னிருவரையும் பற்றிப்

---

[1] வியாஸபாரதம், ஆதிபர்வம், 475-ம் பக்கம் காண்க. (ஸ்ரீ: ம. வீ. இராமாநுஜாசாரியரவர்கள் பதிப்பு).

"பரத்தையர்" என்ற தலைப்பின்கீழ் முன்னர் விளக்கப்பட்டது. "பின்முறைவதுவை"யரென்பார், தலைவியோடொத்த தகுதியுடையராய்த் (பக். 491) தலைவனால் அங்கிசான்றாக வேள்விமுடித்து மணக்கப்பெற்ற வேறு மனைவியராவர். அந்தணர், தம்மிற்றாழ்ந்த அரசர் முதலிய மூன்று வருணங்களிலும், அரசர் அங்ஙனம் இரண்டு வருணங்களிலும், வணிகர் சூத்திரவருணத்திலும் இம்மனைவியரை மணப்பரெனவும், மகப்பேறுபற்றி ஒத்தகுலத்தும் வேறு மணந்து கொள்வ துண்டென்றுங் கூறுவர் (பக். 418). இப்பின்முறை வதுவையாளைத் தலைவி தன்னின் இழிந்தாளாகக் கருதாது, கணவன் ஏவற்படி, அவளை ஒப்பக்கருதி உரிய சிறப்புச் செய்தல் அவள் கற்புமுறைக் கடுத்ததாம் (174). இதனால், பண்டைக்காலத்திற் பலதாரமணம் இந்நாட்டிற் பரவியிருந்தமை விளங்கும். இனிக் காமக்கிழத்தியரும் ஒருவற்கே உரியவராய்க் கற்புக்கடம் பூண்டவரேனும், பரத்தையர் குலத்தவராதலின், பின்முறை வதுவையர் போலத் தலைவியராதற்கு உரியரல்லர். இங்ஙனம், பரத்தையரிற் கற்புக்கடம் பூண்டவரும் முற்காலத்து இருந்தனரென்பது, கோவலன் காமக்கிழத்தியாகிய மாதவியின் சரிதம் மணிமேகலையிற் கூறப்படுதலால் நன்கு விளங்கும். இவ்வாறு பலவாறு விரும்பிக்கொள்ளப்பட்ட பரத்தையர் முதலியோரிடத்துக் காதல்கொண்டு, தலைவன் அவர் மனைகளிற் றங்கி மகிழுங் காலத்துத் தலைவிக்குப் பெருவருத்தமும், அவர்களை நீங்கித் தலைமகள்பால் அவன் வருங்காலத்து அவட்குப் புலவியூடல்களும், அவற்றைத் தலைவன் தீர்த்துக் கூடலும் இக் கற்புக்காலத்து நிகழ்வனவாம். "புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்-இரத்தது மீதலு மிவையுள் ளீடாப்-பரத்தையுள் ளதுவே." என்னும் பரிபாடலடிகளில் (16-18), தலைவன் பரத்தைமை கற்புக்காலத்துக் குரியதாகவே கூறப்படுதல் காண்க. "ஆடவர்க்குப் பிரிவொன்று உளதாதன் மேலும், அதுதான் பரத்தையர்மாட்டாதலும், அதனையறிந்து மகளிர் ஊடி நிற்றலும், அவ்வூடலைத் தவறு செய்தவர் தாமே தம் தவறின்மை கூறி நீக்கலும், பின்னும் அவ்விரு

வரும் ஒத்தவன்பினராய்க் கூடலுமன்றே-முன் வரைந்தெய் தினர் பெற்றபயன்'' என்று, "ஊட லுணர்தல் புணர்த லிவை காமம்-கூடியார் பெற்றபயன்'' என்ற குறள் (1109) உரை யிற் பரிமேலழகரும் எழுதுவர். இங்ஙனம் புலவியூடல்கள் தலைவியிட முண்டாதற்குக் காரணமான தலைவனது பரத்தை யர் கூட்டத்தை, இல்லறக் காலத்து நிகழும் சிறந்த செய்தி யாகக் கொண்டு, அதன் வகைகளை ஆசிரியர் கற்பியலில் விரித்துக் கூறுகின்றார். இதனால், முந்நாளில் தமிழ் நாட்டார் தமக்கென்று மனைவியர் சிலரை மணந்திருந்தும், பரத்தை யர்பாலுங் காதல் செலுத்திப் போந்தவரென்பது, நன்கறி யப்படும். இவ்வாறு நிகழ்ந்துவந்த குற்றம்பற்றிப்போலும், வள்ளுவனர் பொருட்பாலில் வரைவின்மகளிர் என்ற தனி யதிகாரத்தால் இவ்வொழுக்கத்தின் இழுக்கத்தை வற்புறுத்து வாராயினர் என்பது. தஞ்சைவாணன் கோவையுரைகார ரும், இவ் வள்ளுவர் கருத்தைக் குறித்தல் அறியத்தகும் (380). இனி, காமத்துப்பாலில், தலைவன் வேறு மகளிரைக் கலந்தானாகக் கருதித் தலைவி யூடியதாகக் கூறவந்த குற ளெல்லாம், அவன்மாட்டு அச்செயல் நிகழ்ந்ததோ என்ற ஐயத்தால் தலைவி கருதிச் சொல்லியனவேயன்றி, பிறநூல் கள்போல, உண்மையினிகழ்ந்ததாகக் கொண்டு தலைவனை இழித்துக்கூறுங் கருத்துடையன ஆகாமை உய்த்துணரத் தக்கது. இதனை வள்ளுவரே "இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்-வல்ல தவரளிக்கு மாறு'' என்பதனாற் குறிப்பித்தல் காணலாம். இவ்வாறே, அப்பெரியார், தாம் கூறப்புக்க காமப்பகுதியை எல்லா நாட்டார்க்கும் ஏற்குமாறு தூய்மைப் படுத்திக் கூறுவதை—ஏனைத் தமிழ்நூல்களிற் பயின்றுவரும் "குல்தொடர்ந்த அன்மொழி''யும் தம் பொதுமறையில் வாரா மல் அவர் விலக்கிப்போந்ததனால் உணரலாகும். இப் பரத் தையிற் பிரிவுபற்றிப் பேராசிரியர் எழுதுவன வருமாறு:—

"பரத்தையிற்பிரிதல் என்பது தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலே நுகர்வான் இடையே புளிங்காடி யையும் நுகர்ந்து அதன் இனிமை யறிந்தாற்போல, அவள் நுகர்ச்சியினிமை அறிதற்குப் புறப்பெண்டிர்மாட்டுப் பிரியா

நிற்றல்; அல்லதூஉம் பண்ணும் பாடலும் முதலாயினகாட்டிப் புறப்பெண்டீர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கும் இன்பஞ் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கின்பம் வேண்டிப் பிரிவனாயின், 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணே யுள' என்பதனால் இவளுக்குத் தலைமகளென்னும் பெயரொடு மாறுபட்டுத் தனது பெருமையொடும் மாறுபடாநிற்கும்" எனக் காண்க, செய்யுள் வழக்கில் இப்பிரிவைக் குற்றமற்றதாகக் கொண்டு பேராசிரியர் மேற் குறித்தவாறு அமைத்தாராயினும், உலக வழக்கில் இவ்வொழுக்கம் நிகழ்ந்துவந்தமையால் இது வள்ளுவர் போன்றோரால், தம் நூலில் இழித்துக்கூறப்பட்டதென்பதில் ஐயமில்லை.

இனித் தலைவனது பரத்தைமை காரணமாகத் தலைவி மாட்டுப் பெரும்பான்மைநிகழும் புலவியூடலுணர்வுகளைப் பற்றி, ஆசிரியர்கூறிய பொதுவிதிகள் அடியில் வருமாறு:— தலைவன் தலைவியர்க்குள், புலவிமுதலியன நிகழுங்காலத்து அவ்விருவர்பாலும் வாயிலாக (தூதாக) நின்று பேசுதற்குரியார் பன்னிருவராவர்.[1] அவர்–தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், (அவன்மனைவியாகிய) பாடினி, ஏவலாளர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்பார். வண்ணாத்தியும் இத்தூதிற்குரியவளாகக் கலித்தொகை கூறும் (72–14). இவர்களைத் துறவுக்காலத்துக்குரிய தூதுவராகக்கொண்டு நச்சினார்க்கினியர் பொருள் கூறினராயினும் (193), அஃது அத்துணையாகச் சிறந்து காட்டிற்றில்லை என்பது நோக்குவார்க்கெல்லாம் வெளியாம். நம்பியாரும் இவரைக் கற்புக்காலத்துக்குரிய வாயில்களாகவே கருதுதல் காண்க (68). இவ்வாயில்களோடு, தலைவ

[1]'ஊடினமகளிரை நாயகரோடுசேர்க்கும் ஆற்றலுடையரை; சேடர்' எனப் பிரதாபருத்ரீயத்திற் கூறப்பட்டுள்ளதென்பர் (சிந்தாமணி 2-ம் பதிப்பு விசேடக்குறிப்பு 99-ம் பக்கம் பார்க்க).

னது ஆற்றுமை தன்னையும், அவன்புதல்வனையும் சேர்த்துக்கூறலுமுண்டு (பக்கம் 422). இவரெல்லாம், தலைவன் தலைவியரிருவரும் மனமகிழச் சொல் நிகழ்த்துதலையே நோக்கமாகவுடையரெனவும் (178), தலைவன்பால் இவர் குறை வேண்டும்போது, அவனை நோக்கிப் பிறரைக் கூறுமாறு போல முன்னிலைப் புறமொழியாகவும் (197) தலைவிமுன்னர்த் தலைவனை இழித்துரையாமலும் (195), அன்பில்லாக்கொடுஞ் சொற்களைக் கூறுமிடத்து, அவ்விருவரெதிர் நில்லாது, ஒன்றன்மேல்வைத்துச் சிறைப்புறமாகவும் (179) கூற்று நிகழ்த்தற்குரியர் எனவும் ஆசிரியர் விதிப்பர். இனித் தலைவிபால் வேறுபாடு உண்டாங்கால், தலைவன் அவள் கோபத்தை ஆற்றுதற்பொருட்டு (190) நெருங்கிவந்து பணிந்துழி, தலைவியும் அகத்து நிகழும்தன் அன்பினைக் கரந்துகொண்டு, வேறுபொருள்பயக்குஞ் சொற்களால் தன் பணிவை அவற்குக்காட்டுவள் (191). இப்புலவியுள், உட்கும் நாணுமின்றித் தலைவன் பணிவை தலைவி ஏற்றுக்கோடலும் (227), ஒருவரை யொருவர் புகழ்ந்து கோடலும் (228) நிகழ்வனவாம். தலைவன், தலைமைக்கு மாறுகப்பணிதல் இப்புலவியுள் உண்டென்பது "கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி—அடி மேல்வீழ்ந்த கிழவன்" (பக் 375) என்பதனுல் உணர்க. இங்ஙனம் மனைவியுயர்வுங் கிழவோன்பணிவும் கலித்தொகை 128ம் பாடலுள், தலைவிகூற்றுள் வருதல் காணலாம்.

இப் புலவியும் ஊடலும். பெரும்பாலுந் தலைவிக்குரியவேனும், தலைவனற் பலவாறு வேண்டப்பட்டும் அவள்தன் பிரணயகோபம் தணியாளாயின், தலைவனுக்கும் அத்தகைய முனிவு நிகழ்ந்து (159) துன்பந்தருவதாகும். இஃது உணர்ப்பு வயின்வாரா ஊடல்" எனப்படும் (களவி-50) இக்காலத்துத் தோழியே, தலைவனை நெருங்கிப் பணிமொழியுங் கடுமொழியுங்கூறி அவனூடல் தணிக்க முயல்வாள் (157-158) என்க. அதனில், அவ்விருவருந் தங்கள் ஊடனிங்காது பிணங்கியே நிற்பராயின், மேற்கூறிய அறிவரென் போர் முன்வந்து, அவ்விருவர் வாழ்க்கையிலும் தமக்குள்ள

வருத்தந்தோன்றக் கழறிக்கூறுவரென்றும் (பக் 455).) இடித்துரைக்கும் அவராணையை அவ்விருவரும் ஓதுபோதுங் கடவாரென்றும் (455) கூறப்படுகின்றன. பேகனென்ற வள்ளலும் அவன்மனைவியும் ஊடனீட்டித்துப் பெரிதும் பிணங்கி நின்றபோது அவ்விருவரையும் கூட்டுதற்கு. கபிலர் முதலிய அறிஞர் முன்வந்து அவ்வள்ளலுக்கு உறுதிகூறிய செய்தி புறநானூற்ருல் அறியலாகும். இது, புறச்செய்தியாயினும் 'உணர்ப்புவயின்வாரா ஊடல்' வழக்கைக் குறிப்பிக்கத்தடையின்று. சோழன்மனைவி ஊடனீட்டித்தவிடத்துப் புகழேந்தியார் சென்று அவ்வூடல் தீரக் கூறியதும் இது. இனிக்காமச் சிறப்பைப் புலவிசெய்யவல்லதாயினும், அது சிறிது நீளினும் அது சுவை கைக்குமென்க. "உப்பமைந் தற்ருற் புலவி யது சிறிது-மிக்கற்ரு னீள விடல்" (குறள் 1303) என்ருர் வள்ளுவனரும். அதனல், இப்புலவியிறுதியில், தலைவனை அன்போடும் இடித்துக்கூறி அவனைத் தழுவுதலே தலைவிக்கு முறை என்பர், (173) மிக்க சீற்றத்தினும் தலைவி தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் முறையன்றேனும், அவனுடைய காமக்கிழத்தியரிடத்துத்தான் நடந்தொழுகும் மரியாதைபற்றியும், தலைவனது பரத்தைமை கருதாதுதான் கூடியொழுகுதல்பற்றியும், குறிப்பிற் றன்னை வியந்துகொள்ளுதலும் கூடுமென்பர் ஆசிரியர் (180)

இனி பரத்தையிற்பிரிந்து தலைவன் கரந்தொழுகுதல் தன்னூரின்கண்ணேயல்லது வேற்றுநாடு ஊர்களில் ஆகாதெனவும் (களவியல் 42), ஆயின் அவன் பரத்தையருடனும் மற்ற மனைவியருடனும் தன்னூர்க்குப் புறம்பாயுள்ள நதி சோலை குளங்களிற்சென்று [1]இன்ப நுகர்ச்சி எய்தவும்பெறு

---

[1]ஈண்டு 'யாறுங் குளனுங் காவு மாடி' என்னும் ஆசிரியர் கூற்றிற்கு. நச்சினர்க்கினியர், "காவிரியுந் தண்பொருநையும் வையையும்போலும் யாறுகளிலும் இருகாமத்திணையேரி போலுங் குளங்களிலும் |திருமருதந் துறைக்காவேபோலுங் காக்களிலும் விளையாடி" என எழுதுவர். காவிரிப்பூம் பட்டினத்தையடுத்து இருகாமத்திணை யேரிகள் இருந்தமை பட்டினப்பாலை (39) சிலப்பதிகாரங்களாலும் (9,560,) மதுரையில் வையையையடுத்துத் திருமருதந்துறை என்னும் உய்யானம்

வனென்றுங் கொள்க (191). அவ்வாறு, தலைவன் பரத்தைமைசெய்து ஒழுகுமிடத்து, ஊரில் அவனைப்பற்றி அலர் எழும். அதனாற் றலைவனை நினைந்து தலைவிக்கும், தலைவியைநினைந்து தலைவற்கும் காமம் மிக்கு நிகழும் என்பர் (193) இங்ஙனம் நிகழும் பரத்தையிற் பிரிவுபற்றிக் களவியலுரைகாரர் எழுதுவன—"அஃதேயெனின். மற்றைப்பிரிவெல்லாம்வேண்டுக, ஆள்வினை மிகுதியுடைமையான்; இப்பிரிவு எற்றுக்கோ எனின்:—பரத்தையிற்பிரிந்தான் தலைமகனென்றால், ஊடலே, புலவியே, துனியே என்றிவை நிகழும்; நிகழ்ந்தால் அவைநீங்கிக் கூடினவிடத்துப் பெரிதோர் இன்பமாம்; அவ்வின்பத் தன்மையை வெளிப்படுப்பன அவையெனக் கொள்க" -என்பது. இப்பரத்தையர் எல்லாக் குலத்தார்க்கும் உரியராவர் (224) என்பர்.

இனித் தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தே தலைவி பூப்பெய்தினளாயின், அச்செய்தி அவனுக்கு அறிவிக்கப்படும் (பக் 426) எவ்வாறெனின்—"தலைமகட்குப் பூப்புத் தோன்ற வாயில்கள் (தூதுவர்) அதனைச் சென்றுணர்த்தத் தலைமகன் உணரும்; என்னை வாயில்கள் உணர்த்துமாறெனின்—தலைமகன் வாயில்களுந் தலைமகள்மாட்டு உளவாம்; தலைமகன் வாயில்களுந் தலைமகள்மாட்டு உளவாம் ஆதலான், அவர்கள்உணர்த்த உணருமென்பதாம்"[2] எனக் காண்க (களவியலுரை. 174-75). இங்ஙனமன்றி, தலைவிக்

இருந்தமை கலித்தொகைப் (26) பரிபாடல்களாலும் விளங்கும். இவை இன்பவிளையாட்டிற்குரிய இடங்களாதல் அந்நூல்களாலுணர்க. [அச்சுப் பதிப்புக்களில் 'மிருகாமத்திணையேரி' என்றுள்ளதனை 'இருகாமத்திணையேரி' என்று திருத்திக்கொள்க.]

[2] இவ்வாயில்களுட் பாணரும் ஒருவரென்பது முன்னரே கூறப்பட்டது. பாணர்சாதியினராக மலைநாட்டுள்ளவர், அந்நாட்டு ஈழுவச்சாதி பெண்கள் இருதுவான செய்தியை அவர் கணவர்க்கு அறிவிப்பதை, இன்றுந் தங் குலவொழுக்காக உடையர் எனப்படுகின்றது. (Cstes and Tribes of Southern India: See Panan).

குப் பூப்பு நிகழ்ந்தநாளில், சேடி செங்கோலஞ்செய்து. செப்புப்பாலிகையுட் செம்பூவும் நீருங் கொண்டுசென்று, தலைமகனை வலம்வந்து பூவும்நீரும் அவனடிமேற்பெய்துபோகப் பூப்பு நிகழ்ந்ததென்று தலைமகன் உணருமென்றும், இம்முறை மேலாயினரிடங்களிற் பூப்பு உணர்த்துமாறென்றுங் கூறுவர் (ஷை) "ஊரற்குல கியலுரைப்பான்•சிவந்தபைம் போதுமஞ் செம்மலர்ப் பட்டுங்கட்டார்முலைமேற்•சிவத்தவஞ் சாந்தமு தோன்றின வந்து திருமனைக்கே" (161) என்னுந் திருக்கோவையடிகளும் காண்க. செவ்வணியணிந்து சேடியைவிடுப்புழி-அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்" என்றார் நம்பியாரும் (205). இவற்றால், முக்காலத்தே: கணவர்க்கு மனைவியின் பூப்புச்செய்தியைச் சென்றுணர்த்தும் வழக்கம் ஒன்றிருந்தமை புலப்படுகின்றது. இப்பூப்புணர்த்தச் செவ்வணியணிந்து சேடியர்செல்வதுபோலத் தலைவனது பரத்தையிற் பிரிவில், தலைவிக்குப் புதல்வன் பிறந்தசெய்தியறிவித்தற்கு, அவர் [1]வெள்ளணியணிந்துசெல்வதும் பண்டைவழக்கமாம் (நம்பியகப். 209). இவ்வாறு அறிவிக்கப்பெற்ற தலைவியின் பூப்புச்செய்தி கேட்டதும் தலைவன் தாழாது சென்று, அதுநிகழும் மூன்று நாளும் அவளை அணுகியிருக்க வேண்டுமென்றும், நான்காநாள்முதற் பன்னிரண்டுநாள் வரை அவளை அவன் கூடியுறைய வேண்டுமென்றும்கூறுவர். இதனைப் "பூப்பின் புறப்பா டீராறு நாளும்-நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்-பரத்தையிற் பிரிந்த காலையான"(187) என்னும் சூத்திரத்தால் அறிக. இதனுள் "பூப்பின் புறப்பா டீராறு நாளும்" என்பதற்குப் 'பூப்பு நிகழும் மூன்று நாளுக்கும் புறம்பாகிய 12 நாள்' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். ஆனால், இறையனார் களவியலில் வருகின்ற இதுவேயடிக்கு (43), அதனுரைகாரர், 'பூப்புப் புறப்பட்ட நாண்முதற் பன்னிரண்டு நாளும்' என்று பொருள் எழுதுகின்றார். மற்றும் இவர் கூறுவன வருமாறு:-'தலைவன் பூப்புணர்ந்துசென்று தலைமகளிடத்தனாய், முந்நாளும் சொற்

[1] 'வெள்ளணி-பிறந்தநாளி லொப்பனை' என்பர் நச்சினார்க்கினியர் (சீவக-காந்த-122).

கேட்டும் வழி உறைவானுவது. முந்நாளும் சொற்கேட்கும் வழி உறைதற்குக் காரணம் என்னையெனில்-தலைமகன் பரத் தையர்மாட்டானுக, முன்னின்ற பொருமை யுண்டென்று (அதனைத் தணிக்கத் தலைவிமாட்டு) எய்தும். முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறையவே, (அப்பொருமை) நீங்கும்: நீங்கியபின்னைக் கூடும். ஆகவே, கருவு நின்று மாட்சிப் படும்.........முந்நாளுங் கூடியுறையப்பெறிற் குற்றமென்னே என்ருர்க்குப்-பூப்புப் புறப்பட்டஞான்று நின்ற கரு வயிற் றிலே அழியும்; இரண்டாநாளில்நின்ற கரு வயிற்றிலே சாம்; மூன்ரும்நாள் நின்ற கரு குறுவாழ்க்கைத் தாம்; அதனுற் கூடப்படாதென்பது; "பூப்புமுதன் முந்நாட் புணரார் புண ரின்-யாப்புறு மரபின் முனிவரும் அமரரும்-யாத்த கரணம் அழியுமென்ப" எனப் பலரும் ஓதினராகலான் அமையா தென்பது' எனக்காண்க. "மாதர்க்கு ருதுகாலம் வழக்க மாகப் பதினறுநா ளெனப்படுகின்றது; அதனுள் மாத விடாய்முதல் நான்குநாள் பெரியோரால் நிந்திக்கப்பட்டு ளது" என்று மனுவுங் கூறுதலால் (அத்-3; சுலோ-46) முற் கூறிய நச்சினர்க்கினியர்கொண்டபொருளே வடநூல்வழக் குக்கு ஏற்றதென்பது தெரியலாம். இனி, மேற்கூறியவாறு வாயில்களால் உணர்த்தப்பட்ட தலைவன் தன்மனையடைந்து தலைவியோடு கூடிப் பள்ளியிடத்தனுய் இருக்கின்றகாலத்தே புலவியூடலுணர்வுகள் நிகழுமெனவும், தலைவனுல் பின்பு வதுவைசெய்யப்பெற்ற மனைவியர்க்கும் பரத்தையர்க்கும் இப்புலவிமுதலாயின உண்டாமெனவும் கொள்க. இங்ஙனம் நிகழுமிடத்து அவரவர் கூறுங் கூற்றுக்களின் விகற்பங்க ளெல்லாம், ஈண்டு விரிப்பின் விரியும்; அவற்றைத் தலைவன் தலைவி தோழி காமக்கிழத்தியர் முதலியவர்க்குரிய சூத்திரங் களாலும், பண்டையிலக்கியங்களாலும், பிற்காலத்துக் கோவை முதலிய நூல்களாலும், உணர்ந்துகொள்க.

பிரிவு.

இனி, இல்வாழ்க்கைக் காலத்தில், தலைவன், பலகாரியங் களைக்கருதிக் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியும் பிரிவு

கள் உண்டு; அவை-ஓதல், பகை, தூது, வேந்தற்குற்றுழி (உதவி), பொருள் என்பவைபற்றி நிகழ்வன; இவற்றைக் குறித்த விதிகள் முன்பே விளக்கப்பட்டன. இவற்றுள் ஓதற் பிரிவு, தலைவன் வரைந்துகொண்டபின் நிகழும் முதற்பிரிவு என்பர் பேராசிரியர் (திருக்கோ. 308). இப்பிரிவுகளோடு மேற்கூறிய பரத்தையிற் பிரிவையும் ஒன்றாகவைத்துக் களவியல், நம்பியகப்பொருள் முதலியன கூறுகின்றன. ஆனால், ஊருக்குள்ளே பரத்தையர் மனைகளில் தலைவன் தங்கிவருதலைத் தொல்காப்பியனார் ஏனையவைபோல ஒரு பிரிவாக வேண்டவில்லை என்பது, அகத்திணையியலிற் பிரிவுகளை வகுக்குமிடத்து, இதனையும் ஒன்றாக அவர் எண்ணாமையால் உய்த்துணரப்படுகின்றது. ஆயினும், "அயலோ ராயினும் அகற்சி மேற்றே" என்னும் உடன்போக்குப் பற்றியசூத்திரத்தில் "இதனால் மனையயற்கட் பரத்தையிற் பிரிவும் பாலையாமென உணர்க" என்பர் நச்சினார்க்கினியர் (பக்-63). இனி, கல்வி முதலியனபற்றித் தலைவன் பிரியும்போது, அக்கல்வியும், கொடையும், பொருள்செயலும் முற்றகப்பட்டோனை முற்றுவிடுத்தலுமாகிய காரியங்களின் ஆள்வினைச்சிறப்பைத் தான் எடுத்தோதித் தன்னைப் புகழ்வனென்க. இதனால், தான் பிரியநேர்ந்திருத்தலையும், தலைவி யாற்றியிருக்கவேண்டிய இன்றியமையாமையையும் குறிப்பித்தபடியாம் (181). அன்றியும், பிரியுமுன்பு, தலைவிபால் தலைமகன் புரியும் தலையளியும் (பேரன்பும்,) பாராட்டும் அவன் பிரிவையும் அதனால் நிகழும் அவனது அச்சத்தையும் தலைவிக்கு வெளிப்படுத்தும் (184-232). இங்ஙனம், தலைமகன் பிரியக்கருதலைத் தோழியுணர்ந்து, தலைவியது பிரிவாற்றுத்தன்மையைத் தலைவற்குக் குறிப்பாலுணர்த்தி வற்புறுத்துவன் (231)[1]. இனி, தலைவன்

---

[1] குறிப்பாற் கூறலாவது இறைச்சி வகையாற் கூறுதல். இறைச்சி என்பது-குறித்த கருத்தைக் கருப்பொருள்களுள் ஒன்றன்மேல்வைத்து, வெளிப்படையாலன்றிக் கூறுவது. "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" (229) எனக் காண்க. "இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்து-வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற-சூள்பேணான் பொய்த்தான்

பிரிவுகேட்டுத் தலைவிக்கு வருத்தமிகுமாயின், அவளை ஆற்று வித்தற்பொருட்டுச் சிலகாலம் அவன் செலவழுங்கியிருத்த லும் (185), இதனாலும் அவள் ஆற்றாளாயின், தோழிக்குத் தன் காரியத்தின் இன்றியமையாமை கூறித் தலைவியறியாமற் பிரிதலும் உண்டு (பக்-424).

தலைமகன் இவ்வகையாற்பிரிந்து, மேற்குறித்த ஓதல் பகை முதலிய காரியங்களில் மூண்டுநிற்குங்கால், 'ஆண்டு அவன் தலைவியை நினைந்து ஆற்றானாயினான்' என்று கூறு தல் புலனெறிவழக்கிற்கு ஏற்புடைத்தன்று; ஆனால், எடுத் துக்கொண்ட வினையில் அவன் வெற்றியடைந்தபின், தலை வியை நினைந்து இரங்கினானாகக் கூறுதல் உளதாம் (186). இனித் தலைவன் பிரிவாற் றலைவிக்கு ஆற்றாமை கைகடத்த லும் (236), அக்கலக்கத்தாற் பல்வேறுவகைப்படச் சொல் நிகழ்த்தலும் (196), கனா நிகழ்ச்சிகளும் (197) நிகழ்வன வாகும். வள்ளுவனாரும், இவற்றையே 'தனிப்படர்மிகுதி' நினைந்தவர் புலம்பல், கனவுநிலையுரைத்தல்' என்ற மூன்று அதிகாரங்களால் முறையே கூறுவர். இங்ஙனம் நிகழும் தலைவியின் வருத்தங்களை அறிந்து பரிகரிப்பது, நல்லறி வுடையளான தோழியின் கடமையாம் (239). இனி, மேற் கூறிப்போந்த ஓதல் முதலியவற்றின்பொருட்டுத் தலைவன் பிரிதற்குரியகாலம் வேனில் பின்பனிப் பருவங்களென்பதும், அவன் விரைந்து பரித்தேரூர்ந்து பாசறையினின்று ஊர் வயின் வருங்காலம், கார்ப்பருவமாகிய ஆவணி புரட்டாதி மாதங்களென்பதும் அறியத்தக்கன (பக்-13). இக்கார்ப் பருவமே, பிரிந்தவர்க்குக் காமச்சிறப்பை மிகுத்துத் தலைவன் தலைவியரிருவரையும் கூட்டிமகிழ்விக்கும் என்பது—

மலை'' என்னும் பாட்டில், சூளைப்பொய்த்தான் என்பதே கூறக் கருதிய பொருள்; அதனைப் 'பொய்த்தான் மலையகத்தே இன் னது நிகழ்ந்தது' என வேறுபொருள்பற்றிக் குறிப்பித்தல் கண்டுகொள்க.

"அளவில் காரெனு மப்பெரும் பருவம்வந் தணைந்தால்
தளர்வ ரென்பது தவம்புரி வோர்கட்குந் தகுமால்
கிளவி தேனினு மமுதினுங் [1]குழைத்தவள் வளைத்தோள்
[2]வளவி யுண்டவன் வருந்துமென் றுலது வருத்தோ."

(இராமா. கார்கா. 50)

"பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற்
குருள்தரு தேர்மிசை யுயிர்கொண் டுய்த்தலால்
மருடரு பிரிவெனு மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே."

(கார்காலப்படலம் 22)

எனக் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடர், கார்காலத்தி னியற்கைத் தன்மைகளை எடுத்துச் சிறப்பித்தலால் விளங்கத் தக்கது. இவ்வாறு பிரிந்த தலைவியைக் கூடுதற்குரிய காலத்தே, தலைவன் எத்துணைத் தூரத்திருந்தானாயினும், இடைவழியில் தங்குதல்செய்யாது, பறவைபோல விரைதற் குரிய தன் பரிமாக்களின் உதவியால் தலைவியைவந்துகூடி மகிழ்விப்பதாகவே புலனெறிவழக்கஞ்செய்யப்படும். இவ்வா றன்றி, இடைச்சுரத்தே தங்கித் தாழ்த்துவந்தானாகக் கூறல் தகாது (194). இங்ஙனம் தேரூர்ந்து ஊர்நோக்கிவருங் கால், தலைவியின் தனிநிலைக்குக் கவன்று, அதனைத் தன் பாங்கனாகிய தேர்ப்பாகனுக்குக் கூறிக்கொண்டு அவனை விரைந்து செலுத்தத் தூண்டுவனென உணர்க. இங்ஙனம் ஓதல் பகை முதலிய பிரிவுகள் நிகழ்தற்குத் தக்க காரணங் கள், இறையனார் களவியலுரைகாரரால் விரித்துக் கூறப் படுதல், படித்தறிதற் குரியது (35-ம் சூத்திரவுரை.)

இங்ஙனம், தலைவனுந் தலைவியுங்கூடி இன்புற்று, அறம் பொருளின்பமென்னும் உறுதிப்பொருள் மூன்றையும் அடை தற்குரியர் என உணர்க. மேற்கூறிய பிரிவுகள், அறனும் பொருளும் அடைதற்கு ஒருவகை ஏதுவேயாயினும், இன்

---

[1] 'இளைத்தவெள் வளைதோள்'.

[2] 'அளவி யுண்டவன்' என்பன பாடபேதங்கள்.

டப்பகுதியாகிய இக்கற்பியலிற் காமஞ் சிறத்தற்குரியன வாகவே ஆசிரியராற் கருதிக் கூறப்பட்டன என்பதும், அவ் வுறுதிப் பொருளிரண்டையும் அடைதற்கு உபாயமும் பயன் களும் புறப்பொருளில்வைத்து விளக்கப்படுவன என்பதும் அறியற்பாலன.

இங்ஙனம், இல்லறநின்று நல்லறஞ் செய்யாநின்ற தலை வனுந் தலைவியும் நிகழ்த்திப்போந்த அவ்வில் நிலையின்பயன் மெய்யுணர்ந்து வீடு பெறுதலேயாம்.

ஆதலால் தாம் ஒழுகிய அவ்வில்லற நிலையில் மக்கட் பேறுமுதலிய வாய்க்கப்பெற்று, அனுபவமுதிர்ந்து அதனில் வெறுப்புவருங் காலத்தே, வீட்டின்பம் பெறுதற்கு வழியா கிய வானப்பிரத்தம் சந்நியாச நிலைகளை அடைந்து, அந் நெறிகளில் அவ்விருவரும் அடிப்படவேண்டுமென்பதை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன்பயனே"

என்ற கற்பியற் சூத்திரத்தால் ஆசிரியர் விளங்கக் கூறுகின் றார். இதிற்கண்ட "சிறந்தது" என்பது வீட்டினை; "சிறப் பென்னுஞ் செம்பொருள்" (குறள் 358) "சிறப்பீனும்" (31) என வள்ளுவனாரும் இவ்வாறு வழங்குதல் காண்க. வீட் டினைச் 'சிறந்தது' என்றது, சிரேயஸ் என்று மோக்ஷத்திற்கு வழங்கிய உபநிடத வழக்குப்பற்றியதென்பர்; (கடம் அத்-1 வல்லி-2; மந்-1, 2).

இதுவரை கூறிப்போந்தவற்றால், களவியல் கற்பியல் கள் ஆசிரியர் கூறிய முறையே ஆராயப்பட்டனவாம். ஆசிரி யர் அகப்பொருளுணர்த்தற்கு அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்-என நான்கியல்கள் கூறினராயினும் அகத்திணையியலிலும் பொருளியலிலுங்கண்ட செய்திகள் இவ்வியாசத்து முதலில் விளக்கப்பட்ட பொதுவிதிகளிலும்,

களவியல் கற்பியல்களிலும் ஏற்றபெற்றி ஆராய்ந்து சேர்த்துக்கூறப்பட்டுள்ளன. ஆகவே யாம் இவ்வாராய்ச்சிக்குப் பகுத்துக்கொண்டவை-பொதுவிதி, கற்பியல், களவியல் என மூன்றேயாயின. இனி, இவ்வகைப் பொருட்செய்திகள்-குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைக்கும் உரியவாமாறு முன்னூல்கொண்டு உணரத்தக்கன. நச்சினார்க்கினியர், இங்ஙனம் உரிமையாகுமுறையை 12-ம் சூத்திரவுரையிற் சிறிது கூறுவர். ஆண்டுங் கண்டுகொள்க.

IV. புறத்திணையியல்.

பொருளதிகாரமானது அகம் புறம் என்று இருபகுதியாக ஆசிரியராற் கூறப்பட்டமையும், அவற்றுள் அகப்பொருள்கள் இன்னவென்பதும் மேலே விளக்கப்பட்டன. இனிப் புறப்பொருளின் இலக்கணங்களையும் ஆசிரியர் கூறிய முறையே ஆராய்வோம். புறமாவது-அகம்போலஒத்த அன்புடையார் இருவரால்மட்டுமன்றி, எல்லாராலும் தாமே துய்த்து உணரப்படுவதும், 'இஃது, இவ்வாறிருந்தது' எனப் பிறர்க்குப் புலப்படக் கூறப்படுவதுமாகும், அவை, பெரும்பான்மை அறமும் பொருளுமாம். இப்புறப்பொருள் பற்றிய செய்யுள் வழக்குக்களும், அகம்போலத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்குக்களினின்று விரிந்தனவே என்க. அவ்வாறு செய்யுள் வழக்கம்பெறுங்கால், அவை வரம்புகடவா வண்ணம் அவற்றையும் முன்னோர் இலக்கணத்தால் வரையறைப்படுப்பாராயினர். அங்ஙனம் வகுத்த இலக்கண நூல்களில் ஒன்றான இத்தொல்காப்பியத்துள், இப்புறப்பொருள்கட்கும் திணை துறைகளை ஆசிரியர் வகுத்தோதுகின்றார். அஃதாவது-குறிஞ்சி முதலாகிய ஐந்திணையும் கைக்கிளை பெருந்திணைகளுஞ் சேர்த்து எழுதிணையாக்கி அகப்பொருள் விளக்கப்பட்டாற்போல; புறப்பொருளும்-வெட்சி, வஞ்சி. உழிஞை, தும்பை வாகை, காஞ்சி, பாடாண் என எழுதிணையாகவகுத்து விளக்கப்படுகின்றது. இத்திணையெல்லாம் பண்டைக்காலத்தே தமிழ்நாட்டில் வழங்கிய போர்முறைகளையும், அம்முறையிற் காட்டப்படும் வீரச்செயல்களையும் பெரும்

பான்மையாகவும், ஏனை அரசியல், கொடை, புகழ், நிலையாமை முதலிய வற்றைச் சிறுபான்மையாகவும் உணர்த்துவன இத்திணைகளுள்:-வெட்சியாவது-இகல்குறித்தவேந்தர் இருவருள் ஒருவன், போர்த்தொடக்கமாகப் பகைவனுடைய ஆனிரைகளைக் கவர்வதும், அவன் கவர்ந்தவற்றை உரிய அரசன் மீட்பதுமாகும். வஞ்சித்திணையாவது—பகைவனுடைய நாட்டைக் கொள்ளநினைந்து போர்செய்தற்கு ஒரு வேந்தன் மேற்சேறலும், அவனை நாட்டுக்குரிய வேந்தன் எதிர்த்து நிற்றலுமாகும். உழிஞைத் திணையாவது-அங்ஙனம் வந்த வேந்தன் பகைவன் மதிலை வளைத்து நிற்க, உள்ளிருந்த வேந்தன் அதனைக் கைக்கொண்டு காத்தலாம். தும்பைத்திணையாவது-வந்தவேந்தனை இருந்த வேந்தன் எதிர்த்து அவன் வலியை அழித்தல். வாகைத்திணையாவது-பகைவரை வெல்லுதலும் அவரவர் தத்தம் தொழில்களில் மேம்படுதலுமாம். காஞ்சித்திணையாவது-பல்வேறு நிலையாமைகளைப்பற்றிய சான்றோர் குறிப்பு. பாடாண்டிணையாவது-பாடப்படுந்தலைவனது ஒழுகலாறு.

இந் நிரைகோடல் மீட்டல் முதலிய புறத்திணைகள், வெட்சி முதலாகப் பெயர்பெறுதற்குக் காரணம்-வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்னும் பூவிசேடங்களை அவ்வவ்வொழுக்கத்தின் அடையாளமாகக்கொண்டு பண்டைத் தமிழ்மக்கள் வழங்கிவந்தமையேயாகும். நச்சினார்க்கினியர் "இதற்கு (வெட்சிக்கு) அப்பூச்சூடுதல் உரித்தென்று கொள்க" (பக். 103). "தும்பையென்பது சூடும்பூவினாற் பெற்றபெயர்" (பக் 146) எனக் கூறுதலாலும் "கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" என வரும் பதிற்றுப்பத்தடிக்கு (58) 'தாங்கள் சூடிய போர்க்கண்ணிக்கேற்ப வினை செய்யக்கருதிய வயவர்பெருமகன்' எனப் பொருள் கூறப்படுதலாலும் இதனுண்மை யுணர்க. எனவே, முற்காலத்துத் தமிழ்மக்கள், போர்முதலாய புறவொழுக்கங்கட்கும், அன்பு பற்றிய அகவொழுக்கங்கட்கும், ஒவ்வொருபூவை அடையாளமாகக்கொண்டிருந்த செய்தி வெளியாதலான் அவர்க்குப்

பூவணிவதிலிருந்த பெருவிருப்பம் புலனவதாம். "வாங்கரும் பாதநான்கும் வகுத்த வான்மீகி" முனிவரும் தமிழரது இவ் வழக்கத்தைத் தம் இராமாயணத்திற் குறித்திருப்பது இங்கே குறிப்பிடற்பாலது. அயோத்தியாகாண்டம், 93-ம் சருக்கத்தில் அம்முனிவர் பரதநம்பி கூற்றில்வைத்துக் கூறும் சுலோகத்தின் மொழிபெயர்ப்பாவது ,'நம் யுத்தவீரர் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன், தென்னுட்டாரைப்போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்" என்பதாம். இதனுல் தென்னுட்டாரெல்லாம் பொதுவாகப் பூவணிபவர் என்பதும், "நம் யுத்தவீரர்" என்றதனுல் தென்னுட்டு மக்களிற் போர்வீரராயுள்ளார்க்கு அவ்வாறு பூவணிதல் சிறந்தது என்பதும் புலப்படுதல் காணலாம். ஆகவே, அம்முனிவர் தென்னுட்டாருக்குப் பொதுவாகவும் அவருள் வீரர்க்குச் சிறப்பாகவும் பூச்சூடுதல் உரியதென்பதைக் குறிப்பித்தாராவர். தமிழ்த்தலைவர் தமக்கென்று சூடும்பூவொன்றும், தம் குலத்துக்குரிய அடையாளப்பூவொன்றும்(நெடுநல் 176) ஆக இருவகைப் பூக்களுடையராயிருந்தமையும் நோக்கத்தக்கது. இக்காலத்தும், தென்னுட்டாரைப்போல வேறெந் நாட்டாரும் பூவை மகிழ்ந்தணிதல் இல்லையென்பதை நாம் உசாவித் தெரிந்துகொள்ளலாகும். இவற்ருல், வால்மீகியார் குறித்த தமிழரது புராதனவழக்கமொன்று. பண்டைத் தமிழ் நூல்களின் ஆதரவுபெறுதல் காண்க. இவ்வாறே அம்முனிவர்பெருமான் தென்னுட்டுச் செய்திகளில் வேறு சிலவுந் தெரிந்து கூறுவர். இவற்றை வான்மீகருந் தென்னுடும் என்ற தலைப்பின்கீழ் யாமெழுதிய ஆராய்ச்சியுரையிற்கண்டு கொள்க[2]

இனி, மேற்குறித்த புறத்திணைகளால், பண்டைத்தமிழ்த் தலைவருடைய போர்முறையானது, வெட்சியாகிய நிரைகோடல் நிரைமீட்சி என்பவற்றைத்தொடக்கமாகக்கொண்டு

---

[2] "செந்தமிழ்" தொகுதி-5 பகுதி-10.

நிகழ்வதென்பது விளக்கமாகும். இம்முறை, ஆரியமக்கள் வழக்கன்றென்பதற்கு,சாணக்கியங் காமந்தக முதலிய அர்த்த சாஸ்திரங்கள் அவற்றைப்பற்றி ஒன்றுங் கூருமையே சான்ருமாயினும், பாரதகாலத்தே இரவில் நிறைகோடலும் மீட்டலும், யுத்தமுறையின் தொடக்கமாக வழங்கியசெய்தி வெளியாகின்றது. பாண்டவர்கள் விராடநகரத்தில் மறைந்துறையுங்காலத்து, அங்ஙனம் உறைதலறிந்த அவர் பகைவராகிய துரியோதனுதியர், போர்க் கோலங்கொண்டெழுந்து, அப்போரின் தொடக்கமாக விராடனது பசுக்கூட்டங்களை கவர்ந்துசென்றதும், விராடராசன்பக்கத்தார் பாண்டவரின் உதவியால் அவரை எதிர்த்துப் பகைவர் கவர்ந்த நிரைகளைமீட்கும்போது பெரும்போர் விளைந்ததும் பிரசித்தமான சரித்திரங்களாம். ஆகவே, தமிழ் மக்களது போர்முறை. ஒரு காலத்திற் பரதகண்டமெங்கும் வழங்கியதாகல்வேண்டுமென்று தோற்றுகின்றது. அன்றி, விராடநாடு, விந்தமலையையடுத்த தக்ஷிணப் பிரிவுகளில் ஒன்ருதலால், அத்தென்றேய முறைப்படி நிரைகவர்ந்து மீட்கப்பட்டது என்று கொள்ளினும் பொருந்தும். இவை நிற்க.

மேற்கூறிய வெட்சி முதலிய எழுதிணைகளையும், குறிஞ்சி முதலிய அகத்திணை ஏழற்கும் முறையே புறமாக ஆசிரியர் வகுக்கின்ருர். அஃதாவது—குறிஞ்சிக்கு வெட்சியும், முல்லைக்கு வஞ்சியும், மருதத்துக்கு உழிஞையும், நெய்தற்குத் தும்பையும், பாலைக்கு வாகையும், பெருந்திணைக்குக் காஞ்சியும், கைக்கிளைக்குப் பாடாணும் புறமாகும் என்பதாம். "அகங்கையிரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறுபோல, அகத்திணை ஏழற்கும் புறத்திணை ஏழென்றலே பொருத்தமுடைத்தாயிற்று" (பக்-4) என்பர். இவ்வாறு இவை முறையே புறமாதற்கு, நச்சினுர்க்கினியர் கூறுங் காரணம் அடியில்வருமாரும்:- களவொழுக்கமுங் கங்குற்காலமும், காவலர் கடுகினுந் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின்— (கள

வின்க ணிரைகொள்ளும்) வெட்சி குறிஞ்சிக்கும்[1] (பக்-103). முதலெனப்பட்ட காடுறையுலகமும், கார்காலமும், அந்நிலத்திற்கேற்ற பொருளும், அரசர் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்திருத்தலும், அவன் றலைவி அவனைப்பிரிந்து மனைவயி னிருத்தலுமாகிய உரிப்பொருளும் ஒப்பச் சேறலின்—வஞ்சி முல்லைக்கும் (பக்-125) இருபெருவேந்தர் தம் முண் மாறு கொண்டவழி, முற்றப்பட்டிருந்த வேந்தனதுமதில் பெரும் பான்மை மருதநிலத்தது ஆதலானும், அம்மதிலை முற்று வோனும் அந்நிலத்திருத்தலானும், மருதம்போல இதற்கும் பெரும்பொழுது வரை=வின்மையானும் விடியற்காலமே போர் செய்தற்குரிய சிறுபொழுதாதலானும்—உழிஞை மருதத்திற்கும் (பக்-134) நெய்தற்குரிய பெருமண லுலகம் போலக் காடும்மலையுங் கழனியுமல்லாத களரும் மணலும் பொருகளமாகவேண்டுதலானும்.[2] பெரும்பொழுது வரை வின்மையானும், எற்பாடு (பிற்பகல்) போர்த்தொழில்முடியுங் காலமாதலானும், இரக்கமும் தலைமகட்கே (நெய்தற் றிணையில்) உளதாயவாறுபோல (போரிற்) கணவனையிழந் தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும். பிறவிரங்கல்க ளானும்—தும்பை நெய்தற்கும் (பக்-146), பாலைக்குப் புணர்ச்சியினீங்கி ஓதல் முதலியவற்றுற் புகழெய்தற்குப் பிரிவுநிகழுமாறுபோலச் சுற்றத்தொடர்ச்சியினீங்கி அறப் போர் நிகழ்த்தித் துறக்கம்பெறுங்கருத்தினுற் சேறலானும், வாளினுந் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றி யெய்துவோரும் ஏனையோரை நீங்கிச் சேறலானும்—வாகை

---

[1] நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்தநிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயினுர் பிறநாட்டு ஆனிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்குரித்தாகிய களவொடு ஒத்தலானும், சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனுயிற்றென்பர் இளம்பூரணர் (59).

[2] 'அந்நிலங் கடல்சார்ந்தவழியல்லது இன்மையானும்' என வேறோர் ஏதுவுங் கூறுவர் இளம்பூரணர் (70).

பாலைக்கும்[1] (பக்-157), "ஏறிய மடற்றிறம்" (சூத்-51) முதலிய நான்குந் தீயகாமமாயினாற்போல, உலகியலைநோக்க நிலையாமையும் நற்பொருளன்றாகலால்[2]—காஞ்சி பெருந்திணைக்கும் (பக்-177), ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒருபுலவன் பொருள் முதலிய பரிசு வேண்டலால், ஒரு தலைக்காமமாகிய கைக்கிளையோடொத்தலின் — பாடாண்டிணை கைக்கிளைக்கும் (பக்-189) முறையே புறமாக ஆசிரியராற் கொள்ளப்பட்டன என்பர். இவற்றுக்கு வேறுசில ஏதுக்களும் கூறப்படுமாயினும் ஏற்றபெற்றியே ஈண்டுக் காட்டப்பட்டன.

இனி அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவராலும் இயற்றப்பட்டதென்று சொல்லப்படும் பன்னிருபடலத்தின் வழிநூலும், ஐயனாரிதனார் இயற்றியதுமாகிய புறப்பொருள் வெண்பாமாலையுள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை—எனப் பன்னிரண்டுதிணை வகுக்கப்படுவதோடு, அவற்றுள் வெட்சிமுதல் தும்பையிறாக ஏழும் புறமென்றும், வாகை, பாடாண், பொதுவியல்-என்ற மூன்றும் புறப்புறமென்றும், கைக்கிளை பெருந்திணையிரண்டும் அகப்புறமென்றும் கூறப்படுகின்றன, வெண்பாமாலை கூறுமாறு, வெட்சியென்பது நிரைகோடல் மட்டுமேயாம். தொல்காப்பியனார் நிரைமீட்டலையும் வெட்சியி லடக்கிக் கூற, இந்

[1] "பாலையாவது தனக்கென ஒருநிலமின்றி எல்லா நிலத்தினுங் காலம்பற்றிப் பிறப்பதுபோல, இதுவும் (வாகையும்) எல்லாநிலத்தினும் எல்லாக்குலத்தினுங் காலம்பற்றி நிகழ்வதாதலினாலும்" என வேறோரேதுவுங் கூறுவர் இளம்பூரணர்.

[2] "ஏறியமடற்றிறமுதலாகிய நோந்திறக் காமப்பகுதி அகத்திணையைந்தற்கும் புறனாயவாறுபோல, இது புறத்திணையைந்தற்கும் புறனாகலானும்" என வேறும் கூறுவர் இளம்பூரணர். [நோந்திரம் - கழிபேரிரக்கம்; செந்திறம் அஃதல்லாதன; நோதிறம் என்று வழங்குவதுமுண்டு].

நூல் அதனைக் 'கரந்தை' எனத் தனித்திணையாக்குகின்றது.[1] "கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணைபோல ஒழுக்கமன்று......'நாகுமுலையன்ன நறும்பூங் கரந்தை, விரகறி யாளர் மரபிற் சூட்ட, நிறையிவட் டந்து' (புறம். 261) என்றவாறு காண்க" என்பர் நச்சினார்க்கினியர். இனி, போர் செய்தற்கு ஒரு வேந்தன் படையெடுத்துச் சேறலும் அவனை நாட்டுக்குரிய வேந்தன் எதிர் சென்று தாக்குதலும் வஞ்சியென்று ஆசிரியர் கூறினராயினும், வெண்பாமாலை பகைவர்மேற் செல்வது மட்டில் வஞ்சியாமென்று கூறி, அவ்வாறு மேற்சென்றவனை இருந்த வேந்தன் எதிர் சென்று ஊன்றுதலைக் காஞ்சியென வேறு திணையாக வகுக்கின்றது. "வஞ்சியும் காஞ்சியுந் தம்முண் மாறே" என்பது பன்னிருபடலம். இக் காஞ்சி பல்வேறு நிலையாமை குறிப்பதென்பதே நம்மாசிரியர் கொள்கை. ஆயின், வெண்பாமாலை, அந்நிலையாமை முதலியவற்றை உணர்த்தப் பொதுவியல் என வேறோர் இயல் கூறும். இனி, நொச்சி என்று ஒரு தனித்திணையை ஆசிரியர் குறித்தனரில்லையேனும், அந்நூல், (வந்த வேந்தன் பகைமதிலை வளைத்தலாகிய) உழிஞைக்கு மாறாக, இருந்த வேந்தன் தன் மதிலைக் காத்தற்கு 'நொச்சி' என்ற பெயர் கொடுத்து வேறு திணையாகக் கூறிச்செல்லும்.[2] இந்நொச்சிபோலக் கைக்கிளை

---

[1] இவ்வாறு வேறு கூறுகின்ற வெண்பாமாலைக்கு முதனூலாகிய பன்னிரு படலத்துள் வெட்சிப்படலத்தைத் தொல்காப்பியனார் இயற்றினார் என்று கூறுவாரை மறுத்துத் தந் நூலுக்கு முரண்பட ஆசிரியர் இவ்வாறு கூறாராதலால், அவ் வெட்சிப்படலம் தொல்காப்பியர் இயற்றியதன்று என்பர் இளம்பூரணர் (60)

[2] பன்னிருபடலமுடையார்கொள்கை அடியில்வரும் யாப்பருங்கலவிருத்தி வாக்கியங்களால் அறியத்தக்கது (பக். 53( ) - "வெட்சி ஆ கவர்தலானும், கரந்தை உட்குவரச்சென்று விடுத்தலானும் 'வெட்சியுங் கரந்தையுந் தம்முண் மாறே'; வஞ்சிமேற்சேறலானும், காஞ்சி அஞ்சாதெதிர்சென்று ஊன்றலானும் 'வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே'; உழிஞை

பெருந்திணை என வேறிரண்டு தனித்திணைகளையும் அது வகுப்பதாகும். ஆயின், அவ்விரண்டினையும் அகப்புற மென்றேகொண்டு தொல்காப்பியங் கூறுகின்றது. அன்றியும், அகத்திணைகளில் 'இன்னவின்னதற்கு இது புறம்' என்று ஆசிரியர் கூறியவாறு வெண்பாமாலை கூறிற்றில்லை. இங்ஙனம், இரண்டு நூல்கட்குமுள்ள வேறுபாடுகளை நோக்குமிடத்து, புறப்பொருள் முற்காலத்தே வெவ்வேறு வகையாக இலக்கணம் வகுக்கப் பெற்று வழங்கிவந்தமை புலப்படக் கூடியதாம். வெண்பாமாலையுள், வெட்சிமுதல் வாகையிறுய திணை எட்டனுக்கும் அவ்வப் பூச்சூடுதல் உரித்தென்று தெளிவாகக் கூறப்படுதல் நோக்கத்தக்கது. மற்ற வேறு பாடுகளை அந்நூல் நோக்கி உணர்ந்துகொள்க. இனி. வெட்சி முதலிய திணைவிகற்பங்களைத் தொல்காப்பியனுர் கூறிய முறையில் வைத்து விளக்குவோம்,

1, வெட்சித்திணை

புறப்பொருளின் முதற்றிணையாகிய வெட்சி என்பது, வேந்தனல் விடுக்கப்பட்டு முனைப்புலங் காத்திருந்த தண்டத்தலைவர், பகைநிலத்துச் சென்று களவினுலே ஆநிரையைக் கைக்கொண்டுபோந்து, அவற்றைப் பாதுகாத்தலைச் செய்வதாம் (57). இதனை-''வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்-ஆதந் தோம்பன் மேவற்றாகும்'' என ஆசிரியர் கூறுமாற்ருல் அறிக. இதனுள் ''வேந்துவிடு

ஆரெயின் முற்றலானும் நொச்சி விழுமிதி னவ்வெயில் காத்தலானும் 'உழிஞையு நொச்சியுந் தம்முண் மாறே'; 'பொருதல் தும்பை புணர்வ தென்ப'. இவ் விகற்பமெல்லாம் பன்னிரு படலத்துட் காண்க.'' 'வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம் - வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் - உட்கா - தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி - அதுவளைத்தலாகு முழிஞை யதிரப்-பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்-செருவென் றதுவாகை யாம்'' என்னும் வெண்பாவும் (பிங். 1473; வீரசோழியம். பொருட்பட, 22 உரை.) இங்கு ஒப்பிடற்பாலது,

முனைஞர்'' என்றதனால் (போர் செய்யத் தொடங்கிய] இரு வேந்தரும் தத்தந் தண்டத் தலைவரை ஏவிவிடுவரென்றும், 'ஆதந்து ஓம்பல்' என்றதனால் களவில் ஒருவர்கொண்ட நிரையை உரியவர் மீட்டுத்தந்து ஓம்புவரென்றும் பொருள் தருதலின், அவ் விருவேந்தர் தண்டத் தலைவரும் அவரேவலால் நிரைகோடற்கும் மீட்டற்கும் உரியரென்றும், இங்ஙனம் இருவர்க்குங் கோடற்றொழில் உளதாயிற்றாதலின் அடித்துக்கோடலும் மீட்டுக்கோடலும் வெட்சியாயிற்றென்றும், மீட்டலைக் 'கரந்தை எனத் தனித்திணையாக்கிக் கூறுவாருமுண்டெனினும், அதனை இச் சூத்திரத்தாலும் வருஞ் சூத்திரத்தாலும் தொல்காப்பியனார் 'வெட்சி' என்றே கொண்டனரென்றும் நச்சினார்க்கினியர் எழுதுவர். ''இருபெரு வேந்தரும் பொருவது கருதியக்கால், ஒருவர் ஒருவர் நாட்டுவாழும் அந்தணரும் ஆவும் முதலிய தீங்கு செய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றவேண்டிப் 'புறம்போக' எனப் புகறலும், அங்ஙனம் போதற்கு அறிவில்லாத ஆனிரையைக் களவாற் றாமேகொண்டுவந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமேயாம் என்பதை, ஆசிரியர் 'ஆதந்தோம்பல்' என்றதனாற் குறித்தாரென்க. இந் நிரைகோடற்கெழும் வீரர் வெட்சிப்பூ[1] சூடுதல் மரபு; ''வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச் - சுரியிரும் பித்தை பொலியச் சூடி'' (புறம். 100) எனக் காண்க.

இவ் வெட்சித்திணையானது, படையியங்கரவம்முதற் கொடையீறாகப் பதினான்கு துறைகளாக ஆசிரியராற் பகுக்கப்பட்டுள்ளது. இப்பதினான்கனையும் நிரைகோடல் நிரை மீட்டல் என்னும் இரண்டுவகைக்கும் உரியனவாகப் பொருள் கொண்டு நச்சினார்க்கினியர் இருபத்தெட்டாக விரிப்பர். பழைய போர்முறையின் தொடக்கமாகிய இந் நிரைகோடல்

---

[1] 'இது பிரகாசமும் செந்நிறமுமுடைய பூக்களைக்கொண்ட ஒருவகைச்செடி என்றும், மேல்நாட்டார் இதனை ''Flame of the forest'' ''The country geraniam'' என்பரென்றும் கூறுவர் டாக்டர் ஜீ. யூ போப். (Siddhanta Dipika, Vol. III.)

மீட்டல்களின் வரலாறுகளை இத்துறைகளாற் சுருக்கமாக உணரலாம். அவை வருமாறு - தம் தலைவனது கட்டளை பெற்றேனும் பெறுமலேனும் வேந்தனொருவனுடைய படை வீரர் பகைவரது ஆனிரையைக் கவர்தற்கு ஆரவாரித் தெழும்போது, தாம் புறப்பட்ட இடத்தே அசரீரியாக எழு கின்ற நற்சொல் கேட்டல் மரபு, இது விரிச்சி[1] எனப்படும். [விரிச்சி-நற்சொல்] அங்ஙனம் நற்சொல்கேட்டுப் புறப்பட் டோர் பகைப்புலத்துள்ள ஒற்றர் உணராமற் சென்று தம் மொற்றர் வாயிலாகப் பகைவர்செயலை அறிவர். இங்ஙனம் உணர்வது வேய் எனப்படும். அறிந்தபின், பகைவர் நிரைப் புறத்தே ஓடுங்கியுறைந்து, சமயம் நேர்ந்ததும் அந்நிரையை வளைந்துகொண்டு நிரைகாவலரைக் கொன்று எதிர்ப்பா ரற்று அவற்றைக் கவர்ந்துமீள்வர். இங்ஙனம் மீண்டுசெல் லும்போது, அவர்பின்னே தொடர்ந்துவந்து வேறுசிலர் போர்விளைப்பராயின் அவரையும் வென்று, தாம்பற்றிய பசுக்களுக்குத் துன்பமில்லாமற்செய்துகொண்டு, பாடிவீட்டி லுள்ளோர் மகிழ்ந்தெதிர்கொள்ளும்படிவந்து கொணர்ந்த நிரைகளை ஊர்ப்புறத்தே நிறுத்திப்பின், தங்கள் தலைவன தேவலால் அவற்றைத் தமக்குட் பகுத்துக்கொள்வர். இது பாதீடு எனப்படும் [பகுத்து இடுதல், கூறிடுதல் என்பது பொருள்]; பகுத்துக்கொள்ளுங்கால், தம் வெற்றிமகிழ்ச்சி யாற் சுற்றத்தோடு கள்ளுண்டுகளித்து விளையாடுதலும், ஆங்கு வந்த இரவலர்க்கு அந்நிரையிற் சிலவற்றை மன முவந்தளித்தலும் போர்வீரரால் நிகழ்த்தப்படுவனவாம். இவையே, நிரைகொண்டோர் செய்திகளாகப் பதினான்கு துறைகளிலுந் தொல்காப்பியனாராற் கூறப்படுவன என

---

[1] நச்சினார்க்கினியர் "விருச்சிகன்-கணி: காரணப்பெயர்" எனக் கூறுவர் (சிந். காந்த. 129). இதற்கு மஹாமஹோ பாத்தியாய-ஐயரவர்கள் 'விருச்சிகன் = ப்ருச்சகன்- கணி. கேள்விகேட்கப்படுகிறவன்" என் றெழுதியிருத்தல் அறியத் தக்கது. (ஷை இரண்டாம்பதிப்பு, பக். 1041). விரிச்சி என்பது இவ் வடசொல்லின் திரிபுபோலும்.

உணர்க. இனி, இந் நிரைமீட்டோர்க்கும்[1] இப்பதினன்கும் ஏற்றபெற்றி அமைத்துக்கொள்ளப்படும். அவ்வாறு அமைக்குமிடத்து, மீட்டபசுக்களை இழந்தோர்க்குப் பகுத்திடுதலைப் 'பாதீடு' என்று பொருள்கொள்க. இங்ஙனம், நிரைகொண்டேனும் கொண்டதனை மீட்டேனும் வெற்றி வீரர்,[2] தமக்கு வழிவழியாகத் துடி என்ற இயம் இயக்கி வரும் 'துடியனை' உபசரித்துப் புகழ்ந்தும், தம் வீரச்செயற்குக் காரணமான கொற்றவைக்குப்[3] பரவுக்கடன் செலுத்தியும் மகிழ்வர் (59). துடியன் என்பான் தமிழ்ப் பழங்குடிகளுள் ஒருவன் என்பது "துடியன் பாணன் பறையன் கடம்பனென்-றிந்நான் கல்லது குடியு மில்லை" என்ற புறப்பாடற்பகுதியால் (335) விளங்கும். போர் நிகழ்ச்சியில், தனக்குரிய வீரனுக்கு உள்ளக்கிளர்ச்சியுண்டாகத் துடியியக்குதலும் வேற்படை முதலிய ஆயுதங்களைக் கொண்டுசென்று வீரனுக்கு உதவுதலும் (புறம்-285) இத்துடியரின் தொழில்களாகத் தெரிகின்றன. இவர் இழிபிறப்பினரென்பது, "இழிபிறப்பாளன் கருங்கை சிவப்ப-வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கருந்துடி" (புறம். 170) என்பதனுல் அறிக. மேற்குறித்த வெட்சிச்செய்திகளுள், ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பகுதிகள் கூறி, அவற்றுக்கும் மேற்கோள் காட்டிச் செல்வர் உரைகாரர். ஐயனரிதனர், இத்திணைக்கு இருபது துறை கொண்டார்.

---

[1]இம் மீட்டலைக் 'கரந்தை' எனத் தனித்திணையாக வெண்பாமாலை கூறும். இதன்படி, இவ்வொழுக்கத்துக்குக் கரந்தைப்பூச் சூடுதல் உரித்தாம். வயல்களிலுள்ள் கொட்டைக் கரந்தை என்னும் பூடே இக்கரந்தை என்பர் (பதிற் 40). இது குறிஞ்சிநிலப்பூக்களிலொன்ருய் நாறுகரந்தை எனவும் வழங்கும் (குறிஞ்சிப். 76 உரை).

[2]நிரைகொண்ட வீரரை வெட்சிமறவர் எனவும், நிரைமீட்ட வீரரைக் கரந்தைமறவர் எனவும் முன்னூல்கள் வழங்கும். இவற்றை 'ஆவூரெறிந்து நிரையொடு பெயர்ந்த வெட்சி மறவர்' எனவும் 'கரந்தை மறவர்...நிரைமீட்டதோள்' (பக். 107) எனவும் வருந் தொடர்களால் உணர்க.

[3]கொற்றவை வனதுர்க்கை (திருமுரு 258 உரை), மலையாளநாட்டார் பகவதியைக் கொற்றி என்பர்.

2. வஞ்சித்திணை.

இனி, வஞ்சித்திணையாவது. இருபெருவேந்தர்கள், மண்ணிடத்துள்ளவேட்கையாலே நாட்டில்வாழ்வார் அஞ்சும்படி சென்று, ஒருவன் மற்றொருவனைக் கொற்றங்கோடல் குறித்தது (92). [1] ஒருவன் மண்ணைவிரும்பி மேற்செல்லின், இருந்தவனும் அம்மண் அழியாமற் காத்தற்கு எதிர்த்து மேற்செல்வானாதலின், அவ்விருவரும் 'வஞ்சி வேந்தர்' எனப்படுவர். இவ்வஞ்சிவேந்தருடைய செய்திகளை விரித்துரைக்குஞ் சிறப்புடைத்துறைகள் பதின்மூன்றாகும். இவ் வஞ்சித்திணையின் வரலாறு அடியில் வருமாறு:— இருவர் படைகளும் ஆர்ப்பரித்து பகைப்புலத்துப் பரந்துசென்று அப்புலத்தை எரியாற்கொளுத்தலும்; ஒருவர் ஒருவரை மேற்செல்லுமிடத்துப் பிறவேந்தர் அவர்க்குத் துணையாகவர அப்போதுண்டாம் பெருமிதமும்; அவ்விருவருந் தத்தம் படையாளர்க்கும் பரிசிலர்க்கும் படைக்கலமும் பரிசிலும் அளித்தலும்; இருவரும் இரவும் பகலும் பலகாலும் முட்டிச் சென்று அந்நாட்டைக் காவல்புரியும்வீரரைக் கொல்லுங் கொற்றமும்; போரில் வீரச்சிறப்பைக் காட்டிய தானைத் தலைவர், வேந்தனாற் சிறப்பெய்திப் புகழப்படும் நெடுமொழியும்; [2] [சிறப்பாவன-ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும்

---

[1] இதற்கு வஞ்சிப்பூச் சூடுதல் உரித்தாம். வஞ்சி என்பது பொதுவாக எல்லாக்கொடிகளையும் உணர்த்துமேனும், ஈண்டுக்குறித்தது, ஆண்டுமுழுதும் பச்சைநிறமுடையதாக உள்ள ஒருவகைக்கொடியின் மஞ்சணிறப் பூவாம், என்பர், டாக்டர் போப்.

[2] "மாராயம் பெற்ற நெடுமொழி-வேந்தனாற் சிறப்பெய்தியதனாற்பெற்ற மீக்கூற்று" என்பர் நச்சினார்க்கினியர் [மா + ராயம்-பேரரசனாற் பெறுஞ் சிறப்பு]. இனி, 'மாராயமாகிய உவகைபெற்ற நெடுமொழியும்' என்பர் இளம்பூரணவடிகள். மாராயம்-உவகை (திவா).

நாடும் ஊரும்[1] பெறுதல்.] பகைவேந்தரை ஒருபொருளாக மதியாது படையைச் செலுத்தும் பேராண்மையும்; தன்படை நிலையாற்ருது பெயர்ந்தவிடத்து விசையோடுவரும்வெள்ளத்தைக் கல்லணை தாங்கிறற்போலத் தன்மேல் வரும்படையைத் தானே தடுத்து நிற்கும் பெருமையும்; வேந்தன் பெரும்போர்புரிந்த பிற்றைநாள், அப்போர்வீரர்செயலைப் புகழ்ந்து ஊக்கமுறுத்தற்குத் தானே அவருடன் உண்பவன்போல வந்து, அவர்க்கு வேண்டிய உண்டியை அளிக்கும் பெருஞ்சோற்றுநிலையும்; இவ்வாறு பொருதுநின்ற இருபெருவேந்தருள், ஒருவர் ஒருவரது வலிமிகுதியைக்கண்டஞ்சித் திறை கொடுத்தற்குடம்பட அது பெற்றோர்க்கு உளதாகிய விளக்கமும்; அங்ஙனம் திறைகொடுத்தோனது குறைபாடும்; வென்றவேந்தன் பகைநாடழித்தமைக்கு இரங்கித் தோற்றோனைச் சிறப்பிக்கும் கொற்றவள்ளையும்[2] [வள்ளை-உரற்பாட்டு]; அங்ஙனம் வென்றுந் தோற்றும் மீண்ட வேந்தர் தம் படைவீரரில்-கணைவேல் முதலிய பாய்ந்து துன்புற்றவரிடந் தாமேசென்று உசாவியும் பொருள் கொடுத்தும் தழுவி யுபசரித்தலாகிய தழிஞ்சியும் பிறவுமாம். [தழுச்சுதலால் தழிஞ்சியாயிற்று; தழுச்சுதல்-தழுவுதல்: "தழுஞ்சிய புண்டீர் மார்பின்" எனக் காண்க] ஆசிரியர்கூறிய உட்பிரிவுகளாகிய துறைகளும் இவற்றுள் அடங்கியுள்ளமை உரைநோக்கியுணர்க.

இத்துறைகளால், பழையவேந்தர். தம்படையாளரைத் தம்மைப்போலவே மதித்துப் போற்றிவந்தசெய்தி புலப்

[1] தஞ்சை ஜில்லா, அறந்தாங்கித் தாலூகாவில் மாராயக்குடி என்றும், கும்பகோணந்தாலூகாவில் மாராயம் என்றும், சாஸனங்களில் மாராயப்பாடி என்றும் காணப்படும் ஊர்களின் பெயர்கள் இவ்வழக்கைக் குறிக்கவல்லன. "தானுதியாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே-ரேனுதிப் பட்டத் திவன்" (பக். 128) என்பதனாலும், காவிதிப்பூ, காவிதிப்புரவு என்னும் வழக்குக்களாலும் (நன். 158, மயிலைநாதருரை), அரசனுல் மோதிரம் பொற்பூ முதலிய அடையாளங்களும் ஊர்களும் பட்டங்களுடன் பெறுவது பண்டைவழக்கென்பது விளங்கும்.

[2] 'கொற்றவள்ளை-தோற்ற கொற்றவன் அளிக்குந் திறை' என்பர் இளம்பூரணவடிகள்.

படும். இவ்வாறு வஞ்சிப்பூச்சூடி வெற்றிகருதி மேற்செல்லும் வழக்கம் கடைச்சங்ககாலத்தும் நன்கு வழங்கியதேயாம்; இதனைச் சேரன்—செங்குட்டுவன், கண்ணகியின்படிமஞ் செய்யக் கற்கொணர்தற்கும், தன்னையிகழ்ந்த ஆரியவரசராகிய கனக விசயரை வெற்றிகொள்ளுதற்கும் 'யாத்திரை' (போர்குறித்தசெலவு) தொடங்குங்காலத்துத் தன்படையாளர்க்கு—"குடை நிலை வஞ்சியுங் கொற்ற வஞ்சியும், நெடுமா ராய நிலைஇய வஞ்சியும், வென்றோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும், குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும், வட்கார் போகிய வான்பனந் தோட்டுடன், புட்கைச் சேனை பொலியச் சூட்டி" யதைக் குறிப்பிட்டுக் கூறுதலால் அறியலாம் (சிலப். 25, 141-147).

—.—

3. உழிஞைத்திணை.

உழிஞையாவது—மேற்சென்றவேந்தன் வேற்றுவேந்தனது பேரரணை வளைத்துநிற்றலும், அதனுள் இருந்தவேந்தன் அவ்வரணைக் கைக்கொண்டு காத்தலுமாம். இத்திணையுள், சென்றுவளைத்த வேந்தன் செய்திகளுக்கு நான்கும், இருந்துகாத்த வேந்தன் செய்திகட்கு நான்கும் ஆக எட்டுத்துறைகள் கூறப்படுகின்றன. அவற்றுள், சென்றவேந்தன் செய்திகள் நான்காவன— (1) கொள்ளார்தேஎங் குறித்த கொற்றம்; அஃதாவது பகைவர் நாட்டைத்தான் கொள்வதற்குமுன்பே, அதனைக் கொண்டவன்போல வேண்டியோர்க்கு அந்நாடு அளித்தலைக் குறித்துவிடும் வெற்றி; "கழிந்தது பொழிந்தென" (203) என்ற புறப்பாட்டினுள் "ஒன்னார் ஆரெயில் அவர்கட் டாகவும்—நுமதெனப் பாண்கடனிறுக்கும் வள்ளியோய்" என ஊன்பொதி பசுங்குடையார், சோழனொருவனது கொள்ளார்தேஎங் குறித்தகொற்றத்தைக் கூறுதல் காண்க. "இராமன் இலங்கை கொள்வதன்முன்பு (அதனை) வீடணற்குக் கொடுத்த துறையும் அது" என்பர் நச்சினார்க்கினியர்.

(2) இங்ஙனம் குறித்தகொள்கையை முடிக்கவல்ல வேந்தனது பெருமையைப் படைத்தலைவர் தூதர் முதலியோர் சென்று பகைவேந்தற்கு எடுத்துப் புகழ்வது; இவருள் தூதன், புறத்துள்ள உழிஞைவேந்தன்பால் தன்னரசன் சிறப்புக் கூறுவனென்க. (3) ஒருகாலத்தும் அழிவில்லாத மதிலை, இற்றைப்பகலில் அழிப்போம் என்று கூறி அங்ஙனமே அழிக்கவிரும்புதல்; (4) அங்ஙனம் அழித்தலை விரும்பியவன், பகைமதின்மேற் சென்றவிடத்து, அம்மதிலகத்துள்ளோர் பொழியாநின்ற அப்புமாரியை விலக்குதற்குக்—கிடுகு கேடகம் பரிசை பலகை முதலிய தோற்கருவிகளை மிகுதியாகக்கொண்டு செல்லுதல் எனக் காண்க.

இனி, உள்ளிருந்து தன்மதிலைக் காக்கும் உழிஞை வேந்தன் செய்திகள் நான்காவன—(1) அவ்வுழிஞையோனது படைகுடி கூழ் அமைச்சு நட்பு நீர்நிலை ஏமப்பொருள் ஏமப்பண்டங்கள் முதலாகிய பெருஞ்செல்வங்களைக் கூறுதலும், (2) புறத்தோனை அவ்வகத்தோன் செல்வத்தாலன்றிப் போர்த்தொழிலால் வருத்தியது கூறுதலும், (3) அகத்திருந்தோன் தன் அரசனுக்கு அழிவு தோற்றியவழி அவன் புறத்துப்போந்து போர் செய்தலைக் கூறுதலும், (4) புறத்தோன் அகத்தோன்மேல் வந்துழி, அவன்பகையைப் பொருட்படுத்தாது அகத்தோன் இகழ்ந்திருத்தற்கேற்ற மதிலின்பெருமைகூறுதலும் ஆகும்.

இனி, இவ்வுழிஞைத்திணையில். இருபெருவேந்தர்க்கும் ஒன்ருய் வரும் வேறு பன்னிரண்டுதுறைகளும் ஆசிரியர் கூறுவர். அவையாவன :- (1,2) அவ்விருவரும் தம் ஆக்கங் கருதியும் குடிகளைக் காத்தற்கும் உயர்த்திய குடைகளையும் வாள்களையும் நாட்கொள்ளுதல்; "நாட்கொள்ளுதலாவது—நக்ஷத்திரமும் இராசியும் தத்தமக்கு ஏற்பக்கொண்டு காரியந் தொடங்கும்போது, அக்காலத்துக்கு இடையூறுதோன்ற, அதுபற்றித் தமக்கு இன்றியமையாக் கருவிகளை அத்திசை நோக்கிக் குறித்த காலத்திலே முன்செல்லும்படி விடுதல்." இதனைப் "பரஸ்தானம்" என்பர் வடநூலார். (3) புறத்

தோரும் அகத்தோரும் எயில்மதிலில் ஏணிமிசைநின்று போர்செய்தல்; இஃது "ஏணிமயக்கம்" எனப்படும்;

"பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவற்
கொருவ னுடன்றெழுந்த காலை—யிருவரும்
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்"

எனக் காண்க. (4) அவ் விருபகைவரும், புறத்தும் அகத்தும் தம் படைகொண்டு போர்தொலைத்து, அம்மதிலைக் கைப்பற்றிய வினை முதிர்ச்சி; (5) உண்மதிலில் வளைத்து நின்றவன், போர்செய்யும் உள்ளத்தை விடாமலும், வளைக்கப்பட்டவன் மதிலைவிடாமலுங் காத்தலை விரும்பிய நொச்சி; நொச்சியாவது மதில்காவல்; "இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலும் உரித்து"[1] என்பார் நச்சினார்க்கினியர். இந் நொச்சியை ஒரு தனித்திணையாகக் கொண்டு ஐயனாரிதனார் கூறுதல் மேலே குறிக்கப்பட்டது. (6) இடைமதிலில், அகத்தோனிடத்தைப் புறந்தோனும், புறத்தோனிடத்தை அகத்தோனும் விரும்பிக் கைப்பற்றிய புதுமை; (7) அவ்விருவரும் எயிற்புறத்துள்ள அகழியின் இருகரையும்பற்றிக்கொண்டு, அங்குநின்று போர்புரியும் பாசி; நீர்ப்பாசிபோல அவ்விருவரும் நீங்காமல் நிற்றலால், "பாசி" எனப்பட்டதென்பர். (8) அம்மதிற்புறத்தன்றி, ஊரகத்தே போர்குறித்து நின்ற பாசிமறன்; நீர்ப்பாசிபோல, இருவரும் ஒதுங்கியுந் தூர்ந்தும் பொருதலின் இதனையும் "பாசி" என்றார். (9) புறஞ்சேரிமதிலும் ஊர்மதிலுமல்லாத கோயிற்புரிசை (அரண்மனை மதில்) மீது ஏறிநின்று அவ்விருவரும் போர்செய்தல்; (10) அங்ஙனம் போர்செய்த மதிற்கண்ணே, ஒருவர் ஒருவரைக்கொன்று, பட்டவேந்தன்பெயரானே வென்றவேந்தன் முடிபுனைந்து நீராடும் மங்கலம்; இதனை "மண்ணுமங்கலம்"

---

[1] "நீரற வறியா நிலமுதற் கலந்த-கருங்குர னொச்சிக் கண்ணார் குவவுத்தழை" (புறம். 271) என்பதனால் இப்பூவினியல்பு காண்க. இஃதோர் காட்டு மரமென்றும், பல வினமுடையதாகவும், ஐந்திலைகள்கொண்டதாகவும் உள்ளதென்றும், இதன்பூ மங்கின நீலவர்ணமும் சுத்தமும் இனியமணமுமுடையதென்றுங் கூறுவர் டாக்டர்-போப்.

என்பர்.[1] (11) அங்ஙனம் வெற்றிக் கேதுவாய்நின்ற தன் வாளைக் கொற்றவை (மாகாளி) மேல் நிறுத்தி அதற்கு நீராட்டும் வாண்மங்கலம்: (12) அவ்வாண்மங்கலம் நிகழ்ந்த பின்னர், வென்றவேந்தன் தன்படைக்கெல்லாம் சிறப்புச்செய்தற்காக அவற்றை ஒருங்குகூட்டி மகிழ்வித்தல்; ஆகப் பன்னிரண்டு துறைகளுங் காண்க. இனித் தேவர்க் குரிய உழிஞைத்துறைகள் சிலவும், வேறுபல துறைகளும் இப்பன்னிரண்டுடன் சேர்த்து உழிஞைத்திணைக்குக் கூறு வர், ஐயன் ஆரிதனர். நக்சினர்க்கினியர் "இனித் தேவர்க் குரிய உழிஞைத்துறைகள்பலவுங் கூறுவரால் எனின்–அவை, உலகியலாய் எஞ்ஞான்றும் நிகழ்தலின்றி, ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வன வாகலின், தமிழ்கூறுநல்லுலகத் தன அல்லவென மறுக்க" என்பர். இத்திணையில், உழிஞைக் கொடியும்[2] சூடுதலுண்டென்பது, "நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து–செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி" (புறம்–76) என்பதனல் அறியலாகும்.

4, தும்பைத்திணை

தும்பையாவது, தன்வலியை உலகம்புகழ்தலே பொரு ளாகக் கருதிப் பகைமேற்சென்ற வேந்தனைப் பகைவேந்த னும் அப்புகழே கருதி ஒருகளத்தெதிர்த்து அவன்வலியினை அழித்தலாம். இத்தும்பைத் திணை, படையாளரது அரிய பெரிய வீரச்செயல்களை விளக்குவதாம். அஃதாவது–பல ரும் ஒருவனை அணுகிப் பொருதற்கஞ்சி விலகிநின்று, அம்பா லெய்தும் வேல்கொண்டெறிந்தும் போர்புரிய, அவ்வாயு

---

[1] "வீராபிடேகம்" எனவும் கூறுவர் (சீவகசிந், மண். 225).

[2] "பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டி" என்ற புறநானூற்றடியின் (150) விசேடவுரையில் "உழிஞை- கொற்றான்; அது குடநாட்டார்வழக்கு" என்பர் உரைகாரர். (Malabar Gazetteer P. 150, Foot-note "Cardiospermum Halicacalum") இது, பருத்தியில் ஓரின மென்பர், டாக்டர் போப்.

தங்கள் அவனுடம்பிற் பாய்தலாற் குற்றுயிரான நிலையிலும் வீரச்செயலில் அவன் துளங்காமையும், வாள்முதலியவற் ருல் அவனுடம்பேனுந் தலையேனும் அறுபட்ட நிலையினும் நிலத்துச்சாயாது அவனுடம்பு வீரச் செயல்காட்டி ஆடுவதும் போல்வன. இந்நிலையினை "அட்டையாடுதல்" என்பர். அட்டை, உடலிரண்டானபொழுதும் ஊர்ந்துசெல்லுமாறு போலப் படையோடு தான் பட்டவிடத்தும் அவனுடம்பு ஆடுதலின் இப்பெயர் வழங்கியதென்பர்.[1] "விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்—ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" என வள்ளுவனாரும் இத்தும்பைச்செயலையே குறித்தல் காண்க. இத்தும்பை, ஏனைத்திணைகட்கும் பொதுவாம் எனப்படுகின்றது. அஃதாவது—நிரைகொள்ளப்பட் டோன் அவற்றை மீட்கும்போது முற்குறித்த வீரச்செயல் காட்டுதலும், நிரைகொண்டோனும் அவ்வாறுகாட்டுதலும் வெட்சிப் புறத்துத்தும்பையெனப்படும்; இவ்வாறே மற்றைத் திணைகளின் புறத்தும் இத்தும்பை நிகழ்தல் அறிந்துகொள்ளற்பாலது,

இனி, இத்தும்பைத்திணைக்கு ஆசிரியர் பன்னிரண்டு துறைகள் கூறுவர். அவை மேற்காட்டிய வீரச்செய்திகளைப் பற்ருது, மேற்சென்றவனும் அவனை எதிர்த்துநின்றவனுமாகிய வேந்தர்செய்திகளையே குறிப்பன; அவை வருமாறு:- (1) பகைவர் அஞ்சத்தக்க தானை (=காலாள்) நிலை; (2) யானை நிலை; (3) குதிரை நிலை; இம் மூன்றுநிலைகளும்பற்றிய செய்திகள், தனிச்செய்யுள்களிற் சிறுபான்மையாகவும், தகடூர் யாத்திரை பெருந்தேவனர்பாரதம் போன்ற தொடர்நிலைச் செய்யுட்கண்ணே பெரும்பான்மையாகவும் வரும் என்பர். (4) தன் படைவீரர்போலத் தானும் நேர்நின்று பொருகின்ற வேந்தனைப் பகைவர் சூழ்ந்து மொய்த்தவிடத்து அவ

---

[1] கன்னடத்தில் 'அட்டெ' என்பதும், தெலுங்கில் 'அட்ட' என்பதும் உடற்குறைக்குப் பெயராதலின், அவ்வழக்குப் பற்றிக் 'குறைபட்ட உடற்றுண்டம் ஆடுதல்' எனினும் அமையும்.

னுடைய படைத்தலைவன் ஒருவன், தான் வேறிடத்துச் செய்துநின்ற போரைக் கைவிட்டுத் தன்வேந்தனோடு பொருகின்றாரை வென்ற தார்நிலை; தார் என்பது முந்துற்றுப் பொருகின்ற படையாதலின், இது தார்நிலையாயிற்று, "தார் தாங்கிச் செல்வது தானை" (குறள் - 767) எனக் காண்க. (5) அத் தானைத்தலைவரே தம்மிற் பொருது வீழ்தல்: (6) தனது உடைந்தபடையிடத்தே ஒருதலைவன் சென்று அதன் பின்னணியை மதர்த்த எருமைபோலத் தாங்கிநிற்கும் எருமை; இதனை "எருமைமறம்" என்பர்[1] ஐயனாரிதனார் (தும்பை. 13). (7) கையிலுள்ள ஆயுதத்தை எறிந்துவிட்டு மெய்யாற் பொருதல், (8) பகைவேந்தன் ஊர்ந்துவந்த களிற்றை எறிந்து வீழ்த்தல்; (9) அங்ஙனம் களிற்றோடு வீழ்ந்த அரசனை, மற்றவேந்தன்படையாளர் கொன்று, அக் கொல்லப்பட்டவனைச் சூழ்ந்துநின்று ஆடும் அமலை; இதனால் வீழ்ந்த அரசனைச் சூழ்ந்துநின்றாடி, வென்றவர் மரியாதை செய்தல் பண்டைமரபாதல் விளங்கும்.

"ஆளுங் குரிசி லுவகைக் களவென்னும்
கேளன்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து."

என்னும் வெண்பாவாலும் இச்செய்தி உணர்க. (10) இருபெருவேந்தரும் அவர்க்குத் துணையாகவந்த அரசரும், தானைத்தலைவரும் வாளாற்பெரும்போர் புரிந்து, ஒருவரும் ஒழியாமற் களத்துவீழ்ந்த தொகைநிலை; (11) போரிடத்தே, தன்வேந்தன் மாற்றரசனது வஞ்சத்தாற்பட்டானாக, அது கண்டு சினங்கொண்ட மனத்தனாகிய பெரும்படைத் தலைவனொருவன், தலைமயங்கிப் போர்புரிந்த நல்லிசைநிலை; "அது குருகுலவேந்தனை (துரியோதனனை)க் குறங்கு (துடை) அறுத்தஞான்று, இரவு ஊரெறிந்து, பாஞ்சாலரையும் பஞ்சவர்மக்களையும் கொன்று வென்றிகொண்ட அச்சுவத்

[1] மற்போரும் இவ் வெருமைமறமாம் என்பர் (சீவகசிந், மண், 158).

தாமாவின் போர்த்தொழில்போல்வன" என்பர் நச்சினார்க்கினியர், (12) அவ்வஞ்சத்தாற் கொல்லப்பட்ட வேந்தனுடைய பல்படையும் புறங்கொடுத்தலால், அப்புறங்காட்டியவரைக் கொல்லுதல் அறனன்று என்று கருதாது, அவரையுங் கொன்றுகுவிக்கும் நூழிலாட்டு (நூழில்-கொன்றுகுவித்தல்); ஆகத்துறை பன்னிரண்டுங் கண்டுகொள்க. இத்திணையிற் சூடுதற்குரிய தும்பைப்பூ, பொன்னாலும் அரசர் அணிந்துகொள்வதுண்டென்பது, "பொலம்பூந்தும்பை'[1] (புறம் - 2) என்னும் மேற்கோளால் அறியப்படும்.

---

5. வாகைத்திணை

வாகையாவது வலியும் வருத்தமுமின்றி, இயல்பாகிய ஒழுக்கத்தானே நான்கு வருணத்தோரும் அறிவரும் தாபதர் முதலியோரும் தம்முடைய தொழிற்கூறுகளை மிகுதிப்படுத்தலாம்; "தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்-பாகுபடமிகுதிப் படுத்த லென்ப" என்பர் தொல்காப்பியனார். ஐயனாரிதனார்—"வாகைப்பூவைப்[1] புனைந்து மாறுபாட்டோடு பகைவேந்தைக் கொன்று ஆரவாரித்தல்" என்பர்; "இலைபுனை வாகை சூடி யிகன்மலைந்து— அலைகடற் றானை யரசட் டார்த்தன்று" எனக் காண்க. இவ்வாசிரியர்

[1] இதனில் "கொத்தான்வாகை" என்ற இனத்தின் பூவைச் சூடுதலே பழையவழக்கென்று தெரிகிறது (புறப், வெண். 8-1 உரை). இது வெண்மை நிறமுடைய பூக்கள்கொண்ட ஒருவகைமரமென்றும், இதனை "Mimosa flectuosa' என்பரென்றும் கூறுவர் டாக்டர் போப். ஐரோப்பாவிலும்-'ஆலிவ்' (Olive) என்ற சிதவிருக்ஷத்தின் இலைகளால், கிரீடம்போலச் செய்யப்பட்டமாலையைப் பண்டைக்காலத்து ரோமர் யவனர்கள், போரில் வெற்றிகொண்ட வீரர்க்குப் பரிசாக அளித்துவந்தசெய்தி—"ஹோமர்" (Homer) என்ற பூர்வகவி இயற்றிய "ஒடஸ்ஸி" "இலியட்" என்ற காவியங்களால் அறியப்படுவன என்றும், தற்காலத்தே, எல்லா மேல்நாடுகளிலும் இவ்விருக்ஷத்தின் பூமாலையைச் சாந்தத்துக்கு அடையாளமாக வழங்கிவருகின்றனரென்றும் கூறுவர்.

கூற்றுப்படி தத்தம் தொழிற் கூறுகளை மிகுதிப்படுத்தல் என்பது. தம்மைத் தாமே மிகுதிப்படுத்தலும், தம்மைப் பிறர் மிகுதிப்படுத்தலும் என இருவகையாய். இரணியனைப் போல வலியாலும் வருத்தத்தாலும் பிறரைக்கொண்டு கூறுவித்துக் கொள்ளுதல் வாகையன்றென்றும், ஒரு தொழிற்கண்ணே வெற்றியானது உறழ்ச்சியால் (மாறுபாட்டால்) வருமாயின் அது வாகை எனவும், இயல்பான் வருமாயின் அது முல்லையெனவும் நச்சினர்க்கினியர் எழுதுவர். அகத்திணையுட் பாலை பெருவரவிற்ருய் நூல்களுள் வருமாறு போல, அதன்புறமாகிய இவ்வாகையும் பெருவரவிற்ருய் வரும் எனப்படுதலால் (பக். 157), புறப்பொருள் பற்றிய செய்யுள் வழக்கில், இத்திணை மிகுதியாகப் பயில்கின்றமை உணரப்படும்.

இனி, இவ்வாகைத் திணைப்பகுதிகள் பரந்துபட்டனவாயினும் அவற்றை ஏழாக ஒருவாறு தொகுத்துரைப்பர் ஆசிரியர். அவையாவன: (1) அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம், பார்ப்பார்க்குரிய ஆருவன—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என்பன. (2) ஐவகை மரபின் அரசர் பக்கம்; ஐவகையாவன—ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய்தல் என்பன (புறப்-வெண். 8-3 உரை). (3) இருமூன்று மரபி னேனேர் பக்கம்; ஏனேர்-வணிகரும் வேளாளரும், வணிகர்க்குரிய ஆறு:—ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் என்பன. வேளாளர்க்குரிய ஆறு:—வேதமொழிந்தன ஓதல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம், வழிபாடு என்பன. "இனி வேளாளர்க்கு வழிபாடுகொள்ளாது, அரசர் இவரிடம் பெண்கோடல்பற்றி வேட்டலுடைத்தென்று வேட்டலைக்கூட்டி ஆறு என்றும், அரசரால் அச் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்றுங் கூறுவாருமுண்டு" என்பர். (4) மூவகைக்காலமும் நெறியினாற்றிய அறிவன் தேயம்—குற்றமற்ற ஒழுக்கங்களை மூவகைக்காலத்தும் வழங்கு நெறிப்படியமைத்த முழுதுணர்வுடைய அறிவர்

பகுதி; இவ்வறிவர், கலசயோனியாகிய அகத்தியன்முதலி யோர் என்பர். (5) "நாலிரு வழக்கிற் றாபத பக்கம்" எண் வகைமார்க்கத்திற் றவம்புரியும் முனிவர்பகுதி; இப்பகுதி-தவஞ்செய்வார்க்குரிய எட்டும், தவம்புரிந்து யோகஞ்செய் வார்க்குரிய எட்டும் என இருவகையாமென்பர்; இவற்றுள், தவம்புரிவார்க்குரியவையாவன உணவினும் நீரினும் சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநடுவிலும் நீர்நிலையி லும் நிற்றலும், கடலுங் காடும் மலையுமுதலியவற்றில் நிற்ற லும், தாமரையும் ஆம்பலும் யாமையுமுதலிய ஆசனத்திருத் தலும், உண்டற்காலை உரையாடாமையும், துறந்தகாலந் தொட்டு வாய்வாளாமையும் (மௌனம்) ஆகுமென்றும்; தவம்புரிந்து யோகஞ்செய்வார்க்குரியவாவன :- இயமம், நியமம், ஆசனம், வளிநிலை (பிராணாயாமம்), தொகைநிலை (பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை), நினைதல் (தியா னம்), சமாதி என்பன என்றுங் கூறுவர் நச்சினார்க்கினியர் (பக்-165). (6) "அறிமரபிற் பொருநர்கட்பால்"-தத்தம் தொழில்முறையானே போர்புரிவார்பகுதி; அவை, "சொல் லானும் பாட்டானுங் கூத்தானும் மல்லானுஞ் சூதானும் பிற வற்றானும் வேறலாம்." (7) அனைநிலைவகை-மேற்கூறிய மூன்றுவருணத்தாரும் பிறரும் அடியாக-அவரிடத்துத் தோன்றி வேறுபட்டோர் பகுதி; இவர்கள், வருணசாங்கரி யத்தால் வந்த கலப்புச்சாதியராவர். இச்சாதியாரின் வேறு பாட்டுவிரிவை மனு முதலிய நூல்களிற் கண்டுகொள்க. "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுமுணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றேயத்து அனைநிலைவகையோ ராவர்; அவர்க்கு மாணாக்கராகித்தவஞ்செய்வோர் தாபத பக்கத்தராவர்; தகர் (ஆடு) வென்றி, பூழ் (சிவல்) வென்றி, கோழிவென்றி முதலிய பகுதிகள் பொருநர்கண் அனைநிலை வகையாம்" என்பர் உரைகாரர். இனிப் பார்ப்பனப்பகுதி முதலியவற்றின் விரிவு ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலால் உரைநோக்கி உணரற்பாலன. மேலே பார்ப்பனப்பக்க முதலியவற்றுக்கு ஆசிரியர் கூறிய எண்கள், "அவைகூறிய வடநூல்களில் வேறே எண்ணுதற்குரியன சில இல்லாமல்

எண்ணப்பட்டன" என்பர் நச்சினார்க்கினியர் (பக்-279). இங்ஙனம் அவ்வுரைகாரர் கருதிய வடநூல்களிலே கௌடில்யரது அர்த்தசாஸ்திரம் தலைமையானதாகும்.[1]

6. காஞ்சித்திணை.

காஞ்சித்திணையாவது, பெரும்பான்மை வீட்டின்பம் ஏதுவாக. அறம்பொருளின்ப மென்றவற்றானும் அவற்றின் பகுதியாகிய உயிர் யாக்கை செல்வம் இளமை முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலகியற்கையைக் கூறுவதாகும். இக்காஞ்சி வீடு ஏதுவாகவன்றிச் சிறுபான்மை நிலையாமைக் குறிப்பே ஏதுவாகக் கூறவும் படும் என்பர். பிற்கூறிய நிலையாமைக்குறிப்பே பற்றி நிகழுங் காஞ்சியை, ஆண்பாற் காஞ்சி பெண்பாற்காஞ்சி என இரண்டு துறைகளாக

---

[1] ஈண்டுக் கூறப்பட்டவாறே, கௌடில்யரது அர்த்தசாஸ்திரத்தும் (பிரகரணம்-1, அத்-3.) அந்தணர் முதலியோர்க்குரிய தொழில்கள் கூறப்படுவனவாயினும், அரசரைந்தொழில்களுள் தண்டஞ்செய்தல் என்பதற்குப் பிரதியாகப் படைக்கலம் வழங்கல் என்பதும், சூத்திரரறுதொழில்களுள் ஓதல் ஈதல்களுக்குப் பிரதியாகக் காருகத்தொழில் குயிலுவத்தொழில் என்பனவும் அந்நூலுள் வேறுபடுவனவாம். திவாகரரும் (12, 81), வீரசோழியவுரைகாரரும் (பொருட். 19, உரை) அர்த்தநூன்முறையையே பெரும்பான்மை தழுவிக் கூறுவர். ஆயின், ஈண்டுப் படைக்கலம் வழங்கல் என்றுள்ளது, படைக்கலம் பயிறல் எனத் திவாகரத்தும், புறப்பொருள்வெண்பாமாலையுரையினும் (8, 3) வேறுபடக் காணப்படுகின்றது. காருகமும் குயிலுவமும் இன்னவென்பதனை முறையே—"பருத்தி நூல் பட்டுநூ லமைத்தாடை யாக்கலும், சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்" "குயிலுவம் வாத்தியங் கொட்டுதலாகும்" எனவரும் திவாகர சூத்திரங்களால் உணர்க. இனித் தாபதர்க்குரிய எண்வகைத்தொழிலை—"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇச், சோர்சடை தாழச் சுடரோம்பி—யூரடையார் கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் துய்க்கும் வழி" என ஐயனாரிதனார் கூறியது கௌடில்யரது அர்த்தசாஸ்திர முறைபற்றியதே (பிரக-1, அத்-8) என்பதும் அறியத்தக்கது.

வகுத்து ஒவ்வொன்றும் பத்துப் பகுதிப்பட ஆசிரியர் விரிக்கின்றார். அவற்றுள். ஆண்பாற்காஞ்சி பத்தாவன:— (1) பிறரால் தடுத்தற்கரிய கூற்றம் வருமென்று சான்றோர் கூறும் பெருங்காஞ்சி. (2) இளமைத்தன்மை நீங்கிய அறிவுமிக்கோர், அவ்விளமை கழியாத அறிவின்மாக்கட்குக் காட்டிய முதுகாஞ்சி. "வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கைக்-கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்" என்றார் இளங்கோவடிகளும் (சிலப்-காதை-25-131-2). (3) போரில் விழுப்புண்[1] பட்ட பெருவீரனொருவன், அதனை ஆற்றிக்கொண்டு வாழும் வாழ்க்கையை வேண்டாது, அப்புண்ணைக் கிழித்து இறக்கும் மறக்காஞ்சி. "தன்னொடு—முன்மலைந்து மடிந்த ஒடா விடலை-நடுகல் நெடுநிலை நோக்கி யாங்குத்தன்-புண்வாய் கிழித்தனன் புகழோன்" என இலக்கியமும் காண்க. (4) போர்நிகழ்ந்த இரவிற் புண்பட்டுக் கிடந்தவீரனைக் காத்தற்குரிய சுற்றமில்லாமையால், அவனைப் பேயே காத்ததாகக் கூறும் பேய்க்காஞ்சி: அஃதாவது-அவனுயிர்போந்துணையும், ஓரியும் பேயும் நாயும் நரியுங் கடிந்து அவன் தசையைக் கொள்ளாவண்ணம் பாதுகாத்தல் என்பர். (5) ஒரு வீரன் இறந்தவிடத்து அவன் இத்தன்மையன் என்று கழிவுபொருள்படும்படி, ஏனையோர் இரங்கிக்கூறும் மன்னைக்காஞ்சி; இது பெரும்பான்மை, மன் என்ற இடைச்சொற்பற்றியே வருவதால், உடம்பொடுபுணர்த்து 'மன்னைக் காஞ்சி' எனப்பட்டதென்பர். அதியமான் இறந்தபோது ஔவையார் இரங்கிப்பாடிய "சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" என்ற புறப்பாட்டு இக்காஞ்சிக்கு ஏற்ற உதாரணமாம். (6) 'இத்தன்மைய தொன்றைச் செய்ய ஆற்றேனாயின் இன்னவாருகக் கடவேன்' என்று கூறும் வஞ்சினக்காஞ்சி: இது தான் செய்யக்கருதியது பொய்த்துப்போக, அதனால் வந்த குற்றம் பொறுக்காது உயிர் விடுதலாம். (7) போரிலே புண்ணுற்றுக்கிடந்த தன்கணவனை அவன்மனைவி பேய்

[1]விழுப்புண்-போர்முகத்து "முகத்தினும் மார்பினும் பட்ட புண்" என்பர் பரிமேலழகர் (குறள்-776).

தீண்டாதவண்ணங் காத்துத் தானும் அவனைத் தீண்டாது நிற்கும் தொடாக்காஞ்சி. (8) உயிர்நீத்த கணவன்மேல் வேல்பாய்ந்த வடுவைக் கண்டு அவன் மனைவி அஞ்சிய ஆஞ்சிக்காஞ்சி: எஞ்ஞான்றும் தனக்கு இன்பஞ்செய்துவந்த வீரனுடம்பு அடையாளந்தெரியாமற் புண்பட்டதனால் அச்சம் நிகழ்ந்ததென்க (ஆஞ்சி-அச்சம்). இக்காஞ்சியை-உருத் தெரியாமற்செய்து தன் கணவன்மேற் பாய்ந்துகிடந்த வேலைப் பிடுங்கிக்கொண்டு அவன்மனைவி தன்னுயிரைப் போக்கிக்கொள்ளுதலாகவுங் கொள்வர்;

"கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்–அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று"

என இச்செயல் காண்க. (9) தம் பெண்ணை மணம்புரிந்து கொடுக்காது மறுத்தல்பற்றிப் பகைவனாய் அப்பெண்ணை வலிந்துகொள்ளுதற்குப் படையெடுத்துவந்த அரசனோடு, முதுகுடியிற்பிறந்த மக்கள் தம் மகளிரைக்கொடுத்தற்கு அஞ்சிய மகட்பாற்காஞ்சி; இச்செய்தி பண்டைக் காலத்தில் இராக்கதமணம் வழக்கிலிருந்துவந்தசெய்தியைக் குறிக்கும். இம் மகட்பாற்காஞ்சிபற்றி இவ்வாராய்ச்சித் தொடக்கத்தே (பக். 10-14) விளக்கப்பட்டுள்ளது. (10) போரில் வீழ்ந்து கிடந்த தன் கணவன் தலையைத் தன் முலையினும் முகத் தினுஞ் சேர்த்துக்கொண்டு, அவன் மனைவி மனமுடைந்து இறந்தநிலை-என ஆண்பாற்காஞ்சி பத்துங் கண்டுகொள்க. இவற்றுள்ளே ஈற்றில் நின்ற சிலபகுதிகள் பெண்பாற் குரியனவாகத்தோன்றினும் ஆண்பாலாரது வீரத்தையே சிறப்பிக்கும் நோக்கமுடையன என்க.

இவற்றுள், போரிடை யே, மனைவியர் களத்திற்சென்று தம் கணவரை உபசரித்தலும், அவரிறந்தால் ஆண்டே தாமும் உடனிறத்தலும் முதலாய வீரச்செயல்களைப் பெண் பாலார்க்கும் ஆசிரியர் கூறுதலால், அக்காலத்து விளங்கிய

வீரபத்தினிகளின்பெருமை வெளியாம். பெண்டிற்குள் மிக்க வீரம் முற்காலத்திருந்தசெய்தியை "வீரத்தாய்மார்" என்ற வியாசத்து விளக்கியுள்ளேம் (செந்தமிழ். தொகுதி-5. பகுதி-10, பக். 459-469).

இனிப் பெண்பாற்காஞ்சி பத்தும் முறையே வருமாறு:— (1) பெரும்புகழுடையனாக மாய்ந்தானொருவனை, அவனைச் சேர்ந்த பெண்கிளைச்சுற்றம் சூழ்ந்துகொண்டு அழுங் கூப்பீடு; இது சுற்றத்தாரது அழுகைக்குரல் விரவியெழுந்த ஓசையாம். இது முதலிய துறைகள், போரிடத்தன்றி வேறிடத்து நிகழ்வனவென்க. (2) சுற்றத்தாரில்லாமல் மனைவியர் தாமே தத்தம் கொழுநரைத் தழுவிக்கொண்டு அழுவதனைக் கண்டோர்க்கு உண்டாகிய துக்கம். (3) தன் கணவன் முடிந்தபொழுதே உடனுயிர்நீத்த மனைவியின் உழுவலன்பை அறிந்தவர் பிறர்க்குக்கூறிய மூதானந்தம். [முதுமை-உழுவலன்புபற்றிய: ஆனந்தம்—சாக்காடு]. ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன், கண்ணகிகணவன் கோவலனைக் கொன்று தான் அவட்கு அநீதிபுரிந்தமை தெரிந்து உயிர்நீத்தகாலத்து, அவன்மனையி பெருங்கோப்பெண்டும் ஒருங்குடன்மாய்ந்ததும் (சிலப். காதை 25, 78.86) சூரபதுமன் முருகக்கடவுளால் அழிவுண்டமைகேட்டதும், அவன் "தேவியாகிய பதுமகோமளையெனுந் திருமங்கை ஆவி நீத்ததும்" இம் மூதானந்தத்தின்பாற்படுமென உணர்க. கணவனிறந்தசெய்தி காதில்விழுந்ததும், மனைவியினுயிர் இயல்பாகவே நீங்கிவிடுந்தன்மையே ஒப்புயர்வற்ற அன்பாகும்; இதன் சிறப்பினை இறையனார்களவியலுரைத் தொடக்கத்தே, அதனுரைகாரர் தடைவிடைகளால் நன்கு விளக்குதல் காணலாம். (4) கொடியவழியிலே தன் கணவனையிழந்து அவன்மனைவி தனித்துப்புலம்பிய முதுபாலை; பாலை என்பது பிரிவாதலால், இது பெரும்பிரிவாதல் (மரணம்) பற்றி 'முதுபாலை' எனப்பட்டது. (5) கணவனொடு மனைவியரிறந்தவிடத்து அவர்பால் முன்புநிகழ்ந்த

[1] கந்தபுராணம் - இரணியன்புலம், 2.

செய்திகளையெல்லாம் பிறர்க்கறிவுறுத்தி, அவர் சுற்றத்தார் பரிசிலாளர்-முதலியோர் துக்கப்படுகின்ற கையறுநிலை. (6) தன் மனைவியைக் கணவனிழந்துநிற்கும் தபுதாரநிலை; (தபு-தாரம்=இழந்த தாரம்). (7) காதலனையிழந்த மனைவி தவம்புரிந்தொழுகிய தாபதநிலை. (8) கற்புடைமனைவி தன் கணவனிறந்தவிடத்து அவனோடு எரிபுகுதலை வேண்ட அச்செயலை விலக்குவாரொடு அவள் மாறுபட்டுக் கூறும் பாலைநிலை [பாலை-புறங்காடு]. கணவனொடு மனைவி உடன் கட்டை ஏறாது தவம்புரியும் தாபதநிலையும், உடன்கட்டை யேறும் இப்பாலையும், கணவன் இறந்ததும் உடனுயிர்மாயும் மூதானந்தமும், முறையே கடையன்பு, இடையன்பு, தலை யன்புபற்றி நிகழ்வன என்க. மணிமேகலையில், இம் மூன்று செயலையும் சீத்தலைச்சாத்தனார்—

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்புஅடுவர்
பத்தினிப் பெண்டிர்"

என்று கூறுதல் ஈண்டறியத்தக்கது. (9) தன் சிறுவன் போரில் வீரச்செயல்காட்டி இறந்தசெய்தி கேட்டேனும், அச்செயல்காட்டாமற் புறங்காட்டி ஓடியசெய்தி கேட்டேனும் தாய் இறந்துபடுநிலை. இவ்வாறு பண்டைத்தாயர் வீரத்தாற் பெரிதும் விளக்கமுற்றிருந்த செய்திக்குப் பழைய மேற் கோள்கள் பலவுண்டு. அவற்றை யீண்டுவிரிப்பிற் பெருகும்.[1] (10) இவ்வாறு, தன்கண்ணே பலரும் இறந்தொழி

[1] 'வீரத்தாய்மார்' என்ற தலைப்பின்கீழ் யாம் எழுதிய வியாசத்தால் பண்டை மகளிரது வீரச்செயல்கள் நன்கு விளங்கத் தக்கன (செந்தமிழ், தொகுதி-5, பகுதி-10).

யவும் தானொழியாது உலகத்தினிலையாமையை அறிவித்து நிற்கும் புறங்காட்டைப் புகழும் காடுவாழ்த்து. ஆகப் பெண்பாற்காஞ்சி பத்துங் கண்டுகொள்க. இனி, ஐயனரிதனர், காஞ்சி என்பது–வேற்றுமன்னன் வந்துவிடக் காஞ்சி[1] என்ற பூவைச் சூடித் தன் காவலிடத்தைக் காப்பதென்பர்.

7. பாடாண்டிணை.

பாடாணுவது, புகழ்முதலியவற்றை விரும்பிய ஆண்மகனொருவனிடம் பரிசில்வேண்டி, ஒருபுலவன் அவன் குணஞ் செயல் முதலியவற்றைப் புகழ்ந்து பாடுவதாம். பாடாண்–பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு. வெட்சி முதலாய திணைகளும் புலவனல் இவ்வாறு பாடப்படுவன வேனும், அவை பெரும்பாலும் தலைவனொருவனிடம் ஒன்றை விரும்பிக் கூறப்பெருமையாலும், அத்தலைவன்பெறும் புகழ் பிறரைவேண்டிப் பெறுவதன்றித் தாமே தலைவராய்ப் பெறப் படுதலாலும் அவற்றின்வேருக இத்திணை கூறப்பட்ட தென்பர். ஆயினும், சிறுபான்மை அவ்வெட்சிமுதலிய திணைகள், புலவன் ஒன்றைப் பெறவிரும்பினும், தலைவன் ஒன்று கொடுக்கவிரும்பினும் வெட்சிப்பாடாண் என்பது முதலிய பெயர்பெறுமெனவும், அத்திணைகள் இரண்டும் பலவுங்கூடிப் பாடாண்டிணையொடு கலந்துவருமெனவும், பதிற்றுப்பத்து நூறுபாட்டும் இவ்வகைப் பாடாண்டிணையேயாம் எனவும் கூறுவர் நச்சினர்க்கினியர். இத்திணை தேவரும் மக்களுமாகிய இருதிறத்தார்க்கும் உரியன.

---

[1] இது குறிஞ்சிநிலப்பூக்களில் ஒன்ருகக் குறிஞ்சிப்பாட்டுக் கூறும். இதனை, இலையுந் தளிரும் கருநிறமுடைய ஒருவகை மரத்தின் பூ எனவும், "Ulmus Integrifolia" அல்லது "Elm-tree" என இம்மரத்தினை வழங்குவரெனவும் கூறுவர். டாக்டர் போப். நிலையாமை அல்லது துக்கமிகுதியை உணர்த் தற்குக் காஞ்சி என்னும் பெயர்வழங்குவது இப்பூவை அவற் றுக்கு அடையாளமாக முன்னோர்கொண்ட.தனுலாகும். "Weeping willow" என்ற பூவிசேடத்தை, ஐரோப்பியர் துக்கமிகுதியைக் குறிக்கும் அடையாளமாகக் கொண்டிருத் தலும் ஈண்டு ஒப்பிடற்பாலது.

இவற்றுள், தேவர்க்குரிய பாடாண் இருவகைப்படும். முதலாவது-பிறப்பினலன்றிச் சிறப்பினல் தேவசாதியைச் சார்ந்தனவாகச் சொல்லப்படும்-முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகு என்னும் அறுவரையும் வாழ்த்துதல். இஃது "அறுமுறைவாழ்த்து"[1] எனப்படும், இதனுற் பிறப்புமுறையாற் சிறந்த கடவுளரை வாழ்த்துதல் சொல்லாமையே அமையும். தொகைநூல் களிலும் கீழ்க்கணக்கிலும் உள்ள கடவுள் வாழ்த்தெல்லாம் இவ் வறுமுறை வாழ்த்தின்பாற்படுமெனக் கூறுவர். இரண்டாவது-அத்தேவரிடத்தே சிறப்பில்லாத இம்மைப்பயன் களைவேண்டி அவர்பால் அக்குறிப்பைக் கூறுதல். இம்மைப் பயனைவேண்டுதலாவது, தன்பொருட்டேனும் பிறர் பொருட்டேனும் இம்மைச்செல்வங்களைக்காமுறுதல். இக் காமவகையில், புணர்ச்சி வேட்கையைக் கடவுளிடத்துக் கூறும் பகுதியுமுண்டு; "அது கடவுண்மாட்டுக் கடவுட் பெண்டிர்நயப்பனவும், அவர்மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுளர் மானிடப்பெண்டிரைநயப்பனவும் பிறவுமாம்" (83.).

இனி, மேற்கூறிய அறுமுறைவாழ்த்தோடு-கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள்வாழ்த்துடன்வரு மென்பர் ஆசிரியர்;

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனக்காண்க.

இவற்றுட் கொடி நிலை என்பதற்குக் கீழ்த்திசையில் நிலைபெற்றுத் தோன்றும் சூரியன் என்றும் (கொடி-கீழ்த் திசை), கந்தழி என்பதற்கு ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள் என்றும் (கந்து அழி-பற்றுக்கோடு அழிந்தது), வள்ளி என்பதற்குச் சந்திரன் என்றும் பொருள் கூறுவர் நச்சினார்க் கினியர். ஐயனரிதனர் இம்மூன்றுபகுதியையுங் கூறு

மிடத்து, கொடிநிலையாவது-அரிஅயன் அரன் என்ற மூவர் கொடிகளுள் ஒன்றனோடு உவமித்துத் தன் அரசன் கொடியைப் புகழ்தல் என்றும், கந்தழியாவது-திருமால் வாணாசுரனது [1]சோநகரத்தரணை அழித்த வெற்றியினைச் சிறப்பித்தலென்றும், வள்ளியாவது-முருகக்கடவுள் பொருட்டுப் பெண்டிர் வெறியெடுத்தாடுவது என்றும் கூறுவர். இளம்பூரணர்க்கும் இதுவே கருத்தாதல் மேற்குறித்த சூத்திரத்துக்கு அவர் எழுதிய உரை நோக்கி யறிக. "கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவது. கந்தழியாவது செருவிற் றெட்பமுடைமை. வள்ளி யாவது முருகவேளைக்குறித்தது" என்பர், வீரசோழியவுரை காரர் (பொருட். உக, உரை). இவற்றால், பழைய ஆசிரியர் கள் இவற்றுக்குக் கூறும் பொருள்கள் தம்முட் பெரிதும் மாறுபட்டுநிற்றலாற் கொடிநிலை முதலியவற்றின் உண்மைப் பொருள்கள் துணியக்கூடாததாகின்றன. இனி, இச்சூத்தி ரத்துக்கு எங்கருத்திற்றோன்றியபொருளொன்றும் அறிஞர் ஆராய்ச்சிக்கு உரியதாகும். அஃதாவது-தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், தம் பெருநூற்றொடக்கத்தே கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத் தல் என்ற நான்கதிகாரங்களைப் பாயிரமாகத் தனியே நிறுத்திக் கூறியினரன்றோ? "ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்-பாயிரத்தி னோடு பகர்ந்த தற்பின்" என்று சங்கப்புலவர் ஒருவர் இவற்றை வேறுபிரித்துச் சிறப்பித்த னுங் காண்க. இங்ஙனம் இந் நான்கதிகாரங்களைமட்டும் பாயிரமாக வள்ளுவனார் தனியேகொண்டது எக்காரணம் பற்றி என்ற கேள்வி நெடுக நிகழ்ந்துவருவதுண்டு. இதற் குத் தக்கவிடை இதுகாறும் பெறப்பட்டதில்லை. ஆயினும், தொல்காப்பியனார்கூறிய "கொடிநிலை கந்தழி" என்ற இச் சூத்திரம் அக்கேள்விகளுக்கு ஏற்ற விடைதரவல்லதென்பதே எங்கொள்கை. அஃதாவது - இச்சூத்திரத்திற் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள்வாழ்த்தோடு வரும் என, உயர்பின்வழிவரும் ஒரு வினையொடுச்சொல்லைக்

[1] சோணிதபுரம்.

கடவுள்வாழ்த்துக்குக் கூறுதலால், அவ்வாழ்த்து முதற்கட் கூறுஞ் சிறப்புடைய தென்பதும், மற்றவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்கு உரியவென்பதும் அறியத் தக்கன. இவற்றுட் 'கொடிநிலை' என்பது மேகத்தை உணர்த்தும்; கீழ்த்திசைக்கண்ணே நிலைபெறுதலுடையது, நீடனிலையுடையது என்பது இதன் பொருளாம். [கொடி-கீழ்த்திசை[1]] நச்சினார்க்கினியரும் இவ்விரு பொருள்களே பற்றிச் சூரியனுக்கு இப்பதத்தை இணக்குதல் காண்க. மேக வாகனனாகிய இந்திரனது திசை கிழக்காதலின் அத்திசையே மேகத்துக்கும் உரியதென்பதும், அங்குநின்றெழுந்த கொண்டல்களே உலகதாபந்தீரப் பெய்வன என்பதும் அறியத்தக்கன. குணக்கினின்று எழுவதுபற்றியே மேகம் கொண்டலெனப் பெயர்பெற்றதென்க[2] "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு – காலத்திற்றோன்றிய கொண்மூப் போல்" என்பதனால் (கலித். 82) கிழக்கிலெழூம் கொண்டல்களே பெயலிற் சிறந்ததாதல் அறியப்படும். இவ்வாறன்றி மின்னற்கொடிக்கு நிலைக்களமாதல்பற்றி மேகம் 'கொடிநிலை' எனப்பட்டதெனினும் அமையும். இவற்றால், கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்கவல்லதாதல் தெளியலாம். இரண்டாவது கந்தழி என்பது-கந்து-பற்று, அழி-அழிவு; அஃதாவது பற்றழிந்தார் ஆகிய நீத்தாரது தன்மை என்றபடியாம். மூன்றாவதான வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும். என்னை? அவ்வறம் சிறப்பாக வண்மைபற்றியே நிகழ்வதாகலின்; 'ஈதலறம்' என்றார் ஔவையாரும். நச்சி

---

[1]கொடி-கீழ்த்திசையாதலால், 'குன்றிவர்ந்து கொடிக் கொண்ட கோடையால்' (150), 'கொடிமிசை மையறு மண்டிலம்' (141) எனவரும் கலித்தொகையடிகளானும், 'கொடிமுதலா வீங்கிவற்றைக் கொண்டெண்ணும் காலை' என்னுஞ் சினேந்திரமாலைத்தொடரானும் (37) அறிக.

[2]வடக்குக் குடக்குக்களினின்று எழும் காற்று வாடை கோடை எனவும், தெற்குக் குணக்குக்களினின்றும் எழுங் காற்றுத் தென்றல் கொண்டல் எனவும் கிரிந்து பெயர்பெறுதல் காண்க.

ஞர்க்கினியர் தங்கொள்கைக்கியையச் சந்திரனுக்கு இப்பதத்தை இணக்குமிடத்து, "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்கலான் வள்ளியென்பதூஉமாம்" என்று கூறுதலி னின்று, வண்மையடியாகவே வள்ளி என்ற சொல் வழங்கிய தென்பது அவர்கருத்தாதல் தெரியப்படும், படவே, வண்மையாகிய அறத்துக்குரிய கடவுள் வள்ளி யெனப்பட்ட தென்க. இங்ஙனம் மேகம் நீத்தார் அறக்கடவுள் என்ற மூன்றும், முதற்கடவுளை முதலாகக்கொண்டு வாழ்த்தப்படுதலும் இப்பாடாண்பகுதியாம் என்பது, சூத்திரப்பொருளாதல் கண்டுகொள்க. எனவே வள்ளுவனார்கூறிய பாயிரமும் இவ்விலக்கணம்பற்றியே அமைந்த தென்பது விளக்கமாம். ஆயின், மேற்கூறிய அறுமுறைவாழ்த்தில் வானையும் முனிவரையும் வாழ்த்துதல் கூறப்பட்டுள்ளதே எனின்;-"அமரர்கண் முடியும் அறுவகை யானும்"[1] என்றே தொல்காப்பியனார்கூற நச்சினார்க்கினியர் அவ்வறுவகை இன்னவின்ன என்று எழுதியதன்றி, மூலத்தால் அப்பகுப்பொன்றும் அறியப்பட்டதில்லை; அதனாலும், 'அமரர்கண்முடியும்' எனப்பிறப்புவகைப்பட்ட தேவசாதியையே ஆசிரியர் கருதுவதனாலும், அவ்வறுவகையின்கண்ணே செங்கதிர்க்கடவுள், தண்கதிர்க்கடவுள் முதலிய தேவர் அறுவர் அடங்கியவரென்றும், அறுமுறையுளடங்கியவராக நச்சினார்க்கினியர்கருதிய வானையும் முனிவரையும் 'கொடிநிலை கந்தழி' என்பதனால் ஆசிரியர் தனிப்

---

[1]இளங்கோவடிகள், சிலப்பதிகார மங்கலவாழ்த்துக் காதையுள் இவ் வறுமுறையே கூறுதலும், சந்திரசூரியர் இவற்றுள் அடங்குதலும் காண்க. அவ்வடிகள்—திங்கள், செங்கதிர், மழை, புகார் (உலகு) உயர்ந்தோர் (முனிவர்). சோழன் (அரசு) என அறுவகை கொண்டு வாழ்த்துதல் அக்காதையால் உய்த்தறியற்பாலது. தம் பொதுக்கொள்கைக் கேற்ப, ஆவையும் பார்ப்பாரையும் விலக்கி அவ்விடங்கட்கு மழையையும் முனிவரையும் கொண்டு இளங்கோவடிகள் அறுமுறை கூறினர் என்றே தோற்றுகின்றது. இங்ஙனம் தெளியக் கிடப்பவும், அடியார்க்குநல்லார் இம்மங்கலவாழ்த்துக்களை அறுமுறைப்பாற் பட்டனவாகக் கொள்ளாது சென்றமைக்குக் காரணந் தெரிந்திலது.

படக் கூறினரென்றும் நாம் கருதுவது இழுக்காதென்க. மேற்கூறிப்போந்த எம் அபிப்பிராயங்கள் அறிஞர்க்கு ஏற்புடையவாயின், தெய்வப்புலவர், தம் பொதுமறைத் தொடக்கத்தே பாயிரமாக நான்கதிகாரங் கூறிப்போந்தது, தொல்காப்பிய முறைபற்றியதே என்பது வெள்ளிடைமலை யாகும். இவை நிற்க. தேவர்க்குக் கூறும் பாடாண் பகுதியில் நிரைகோடல், நிரைமீட்சி (வெட்சி), மேற்சேறல் (வஞ்சி) என்ற செய்திகளை அத்தேவரும் நிகழ்த்தினராகப் புலனெறிவழக்கஞ்செய்தல் கூடாதென்றும், உழிஞை முதலிய திணைகள் அவர்க்கும் உரியவாமெனவும் கூறுவர் (89).

இனி, மக்கட்பகுதியாகிய பாடாண்டிணைக்குத் தொல்காப்பியனார் இருபதுதுறை கூறுவர் ; இவையும் பழையவழக்குகளேகுறித்தலால் முறையே அவை வருமாறு:— (1) கொடுப்போரை ஏத்திக் கொடாரைப் பழிப்பது. (2) தலைவன் எதிர்சென்று அவன்செய்தியேயன்றி, அவன் குலத்தோர்க் கியல்பானசெய்தியையும் அவன்மேல் ஏற்றிப் புசழ்தல் (இஃது இயன்மொழிவாழ்த்தெனப்படும்). (3) சான்றோர் வாயில்காக்கின்றவனுக்குத் தம்வரவைத் தலைவனிடமுணர்த்தும்படிகூறுங் கடைநிலை ; (இழிந்தோர் தம் வரவை அரசனுக்கறிவிக்குமிடத்துத் தத்தம் வாத்தியங்களை இயக்குதலால் உணர்த்தி, வாயிற்கண் நிற்றற்குரியர் என்ப). (4) அரசரும் மற்றைத் தலைவரும் அவையில் நெடும் பொழுது இருந்தவிடத்து, மருத்துவரும் அமைச்சரும் அவர் கண்படுத்தலைக்கருதிக்கூறுங் கண்படைநிலை. (5) இன்னல்வந்துற்றகாலத்து, உயர்ந்தோர் மொழிப்படி, சேதாவைப் பார்ப்பார்க்குத் தானமாகக்கொடுத்தலைக் கருதும். வேள்வி நிலை(6) தம் செங்கோலோடு திருவிளக்குப் ஒன்றுபட்டு ஓங்கும்படிசெய்த விளக்குநிலை. இது கார்த்திகைத்திங்களிற் கார்த்திகைநாளில் ஏற்றியவிளக்கு. கீழுமேலும் வலமுமிடமும் திரிபரந்து சுடரோங்கிக் கொழுந்துவிட்டது என்றுற்போல் அறிந்தோர் ஆக்கங் கூறுவ தென்பர். (7) ஒருதலைவன் விரும்பாதவிடத்தும்,

அவனுக்கு உறுதிபயத்தலைச் சான்றோர்வேண்டி, வாய் மொழிபட அவனை வாழ்த்திக்கூறும் வாயுறைவாழ்த்து. (8) ஆடம்பரமின்றிப் பெரியோர்நடுவில் தங்கிவாழ்வதே கடப் பாடு எனக் கூறும் செவியறிவுறூஉ. (9) 'இன்ன கடவுள் காப்ப நீ வாழ்க' எனக் கூறும் புறநிலைவாழ்த்து. (10) முன்பு ஒத்த அன்பினராயிருந்து, பிற்காலத்தே தலைவன் வேறு மகளிர்வயப்பட்டு நீத்ததனால் வருந்திய பெண்பாலைப்பற்றி, இடைநின்ற சான்றோரும் பிறருஞ் சென்று கூறும் கைக்கிளை வகை; இதற்குப்பேகன் என்ற வள்ளல், தன்மனைவி கண்ணகியைத் துறந்தது காரணமாகப் பரணர் முதலிய நல்லிசைப்புலவர் அவன்பாற்சென்று இரக்கந்தோன்றப் பாடிய பாட்டுக்கள் உதாரணமாம் (புறநானூறு பார்க்க). (11) தம் வலி மிகுதியால். பாசறையில், ஒரு மனக்கவற்சியு மின்றித் துயின்ற அரசரை, அவரது நற்புகழ்கூறிச் சூதர்கள் துயிலெழுப்புந் துயிலெடைநிலை. இவ்வாறு, அரசர்க்கு அவர்புகழ்கூறித் துயிலுணர்த்துமுறை தொன்று தொட்ட வழக்கென்பது வடநூல்களாலும் அறிந்தது. சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் என்ற அரசர்புகழ் கூறுதற்கு உரிய வருள், சூதரே வீரத்தாற் றுயின்ற அரசரைத் துயிலுணர்த் தற்குரியராவார். இவரைப் பிராமணர்க்கு க்ஷத்ரியப் பெண்ணிடம் பிறந்தவர் என்பர். "துயிலெடைமங்கலம்" பாடல் பாணரது தொழிலு மாகும். இதனால், இப் பாண ரைச் சூதர்போன்றவராகத் தமிழ்மக்கள் கருதினர்போலும். (12) கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்ற நால் வரும், தாம் அரசனொருவனிடம் பெருஞ்செல்வம் பெற்ற வகையை வழியெதிர்வந்த வறியவர்க்கு அறிவுறுத்தி, அவரும் அவ்வரசன்பாற்சென்று தாம் பெற்ற பெருநலம் பெறுமாறுகூறும் பகுதிகள், இக் கூத்தர் பாணர் விறலி யரைப்பற்றி முன்பு[1] விளக்கப்பட்டன. பொருநரென்பவர்— ஏர்க்களம் பாடுவோரும்[2] போர்க்களம் பாடுவோரும் பரணி

[1] இந்நூல், 91—93-ம் பக்கம் பார்க்க.

[2] இவர் "இணைநிலைப்பொருநர்" எனப்படுவர்; இணைப் பறைகொட்டி வேளாளரைப் புகழ்பவர்.

பாடுவோரும் எனப் பலவகையாராவார். இந்நால்வரும் தாம்பெற்ற பரிசிலை எதிர்வந்தவர்க்குக் கூறி அவரையும் அதுபெறச் செலுத்துவது "ஆற்றுப்படை" எனப்படும் (ஆறு-வழியில்; படை-படுத்தல், செலுத்தல்). இவ்வாறு ஆற்றுப்படுக்கும் முறைகளைப் பத்துப்பாட்டில் வரும் பாணாற்றுப்படைகள், பொருநராற்றுப்படை கூத்தராற்றுப் படை (மலைபடுகடாங்களால்) உணர்க. (13) அரசன் தான் தினமும் மேற்கொண்டுநடத்தும் சிறைசெய்தல் செருச் செய்தல் முதலாய செற்றங்களை நீக்கி, சிறைவிடுதல் செரு வொழிதல் முதலிய சீரியகாரியங்களைச் செய்யத்தொடங்கும் பெருமங்கலம்; இது "வெள்ளணி" எனவும்படும்; "மங்கல வண்ணமாகிய வெள்ளணியணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின், அதனை வெள்ளணி[1] என்ப" என்றார் நச்சினார்க்கினியர் (சீவக. காந்தருவ. 111). இதனால், சமா தானசித்தத்துடனிருந்து அருள்புரியு நிலைக்கு வெண்மை நிறம் முற்காலத்தே அறிகுறியாக வழங்கியமை பெறப்படும்.[2] (14) அரசன் முடிபுனைந்தகாலந்தொடங்கி ஆண்டுதோறும் அவன் முடிபுனைந்துகொண்டு ஆடும் நீராட்டு மங்கலம். (15) உலகுடனிழற்றும் அரசனது கொற்றக்குடைநிழலின் சீரிய இயல்பு கூறுதல். (16) அவ்வரசனது வாளை, அதனாற் பசிதீர்ந்த பேயும் பிறரும் வாழ்த்துவதாகக் கூறும் வாண் மங்கலம். (17) மாற்றரசன் வாழ்ந்த மதிலையழித்துக் கழுதையேரால் உழுது, வெள்ளைவரகுங் கொள்ளும் வித்தி மங்கலமல்லாதவற்றைச் செய்து அரசன் மங்கலநீராடுதல். "இருங்களந்தோறும்-வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி-வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்-வைகலுழவ" (புறம்-392) என ஒரு தலைவன் புகழப்படுதல் காண்க. (18) பரிசில்விரும்பிவந்தவன், தன் குடும்பத்தின் இடும்பைகூறித் தான் விரும்பியபொருளை வேண்டிக்கேட்டல். (19) வேண்டிய பரிசிலைப் பெற்றவன், தான்பெற்றதைஉயர்த்துக் கூறித் தலைவன்பால் விடைபெற்றபின்பேனும் தானே

---

[1]வெள்ளணிநாள் — பிறந்தநாளென்பர் புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர் (1. 24.).

[2]இக்காலத்து மேனாட்டார் போர் நிகழ்ச்சியிலும், வெள்ளைக்கொடிபிடித்துப் போரிடையே பகைவர் வருவா ராயின் அது சமாதானத்தைக் குறிப்பதாகக் கருதப்படுதல் ஈண்டு ஒப்பிடற்பாலது. போர்நிறுத்துதற்குறியாகத் "தூத் துகில் வீசும்" பண்டைவழக்கும் அறியத்தகும் (சீவகசிந்-1863.)

அவன்பால் விடைகொண்டேனும் செல்லுதல். (20) பல வகைத் தீயசகுனங்களாற் பாடாண்டலைவர்க்குத் தோன்றிய தீங்கு கண்டு, அவரால் உதவி பெற்றவர். 'அவர்க்குத் தீங்கின்ருக' என்று ஓம்படைகூறுதல்; இவை மக்கட்பகுதி யாகிய பாடாண் துறைகள் என உணர்க.

இனி, மக்கட்பாடாணிலன்றித் தெய்வப்பாடாணிலும் புணர்ச்சி வேட்கைபற்றி நிகழும் காமப்பகுதிகளும் சேர்க்கப் படுமெனவும் (83), குழவிப் பருவமுள்ள மக்களிடத்தும் அன்புபற்றிக் கூறும் காமப்பகுதிகளுண்டென்றும் (84) [அவை—பிள்ளைப் பருவத்துக்குக் கூறும் செங்கீரை தால் சப்பாணி முத்தம் முதலியபற்றிய கூற்றுக்கள்], ஊரிற் பொதுமகளிரொடு கூடியொழுகும் தலைவனொருவனது பவனிமுதலிய விளக்கமும் புணர்ச்சிவேட்கைபற்றிய காமப் பகுதியாகுமென்றும் (85) [இது, பின்னுள்ளோர், ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாற் செய்கின்ற உலாச்செய்யுளாம். இது பரத்தையர்க்கன்றிக் குலமகளிர்க் குரித்தன்று என்பர்]—இவையெல்லாம் சான்றோர் புலனெறி வழக்கத்தோடுபொருந்தக் கூறுதற்குரியன என்றுங் கூறுவர் (பக். 197, 198).

மேற்கூறியவாற்ருல், வெட்சிமுதற் பாடாண்டிணையிறுதி யாகவுள்ள புறத்திணை ஏழனிலக்கணங்களும் அவற்றின் பகுதிகளும் குறிக்கப்பட்டன. அவ்வெழுதிணைக்கும் பொது வாகவழங்கும் வேறுசில துறைகளும் உள. அவற்றை ஆசிரியர் "வெறியறிசிறப்பின்" (90) "கூதிர்வேனில்" (76) என்ற சூத்திரங்களாற் கூறுகின்ருர். அவற்ருலும் பழைய தமிழ் வழக்கங்கள் பல அறியக்கிடத்தலின், அவற்றுட் சிறப் புடையனவற்றை ஈண்டுக் கூறுவோம். (1) வேலன்வெறி யாடல்—இது முன்பே நன்கு விளக்கப்பட்டது.[1] (2) மூவேந் தருடைய படையாளரும் போரில் 'இன்னவேந்தரைச் சார்ந் தவர்' என்பது தெரியும்படி அவ்வரசர்க்குரிய போந்தை (பனம்பூ), வேம்பு, ஆர் (ஆத்தி) என்ற அடையாளப்

[1] இந்நூல் 77-ம் பக்கம் பார்க்க.

பூக்களைச் சூடிக்கொள்ளுதல்[1]. (3) வள்ளிக்கூத்து—இஃது இழிந்தோர் ஆடும் ஒருவகையாடல். (4) கழனிலைக்கூத்து-இளம்பிராயத்தானொருவன் போரில் ஓடாது வீரச்செயல் காட்டி நின்றதற்கு வியந்து அவற்கு வீரக்கழல் கட்டி ஏனை வீரர் ஆடுகின்ற கூத்து; இங்ஙனம் கழல் கட்டுதலே யன்றிக் கொடி முதலியவும் அவற்குக் கொடுப்பதுண்டு என்பர் நச்சினார்க்கினியர். (5) உன்ன நிலை-போரிலே வைத்தகால் வாங்காது முன்னின்று பொருத வேந்தனை உன்ன மரத் தோடு சேர்த்திப் புகழ்வது, இம்மரம்[2] தெய்வத்தன்மை யுடையதாய்ப் பின்னிகழும் நிமித்தங்களைக் காட்டுவதாகும் (பதிற்று. 40.) (6) பூவைநிலை-மாயோன் புகழை மன்னர் புகழுக்கு உவமையாக்கிக் கூறுவது; பிற கடவுளர் புகழை உவமையாக்கினும் இத்துறையாம். (7) பிள்ளையாட்டு—வாளாற் போர்செய்துயர்ந்த அரசிளங்குமரனுக்கு, அந்நாட் டார் பறையொலி முழங்க அரசுகொடுப்பது. இதனாற் குடி களே அரசிளங்குமாரரைத் தம் வேந்தனாக நியமித்துக்கொள் ளுதல் பண்டைமரபென்பது அறியப்படும்.

(8) நடுகல்:-போரிற் சிறந்த வீரனொருவன் பட்டுவீழ்ந்த போது, அவன் வீழ்ந்தவிடத்தே கல் நடுதல். இங்ஙனம் கல்நடுதற்கு ஆறுசெய்திகள் கூறுவர் ஆசிரியர். அவை-கல் லிருக்கும் இடங்கண்டு உரியகல்லை ஆராய்ந்துகொள்ளுதல்; அங்ஙனம் ஆராய்ந்துகொண்ட கல்லை அவ்வீரனது உரு

---

[1] சேனைத்தலைவர் அரசர்மாலையே சூடுதல், பதிற்றுப் பத்து 31-ம் பாட்டாலும் அறியலாகும். 'லங்காஸ்டிரியன்ஸ், (Lancastrians) யார்க்கிஸ்ட்ஸ் (Yorkists) என்ற இரு பகுதி யாரும் இங்கிலாந்தின் முடிகருதிப் போர்புரிந்த காலத்து' தங்கட்கு அடையாளங்களாக வெள்ளையும் சிவப்புமான ரோஜாமலர்களை அணிந்துகொண்டு போர்விளைத்தமையும், அவ்ரோஜாக்கள்— "Wars of the Roses" என ஆங்கில சரி தத்து வழங்குதலும் ஈண்டு அறிதற்பால.

[2] "உன்னம் என்பது மரம்; அது தன்னாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும் வாராதகாலங் குழைந்தும் நிற்கும்" என்பர் இளம்பூரணவடிகள். இலந்தையை உன்னமென்பது மலையாள நாட்டு வழக்கு.

வாக்கி அவன் பெயரும் பீடுமெழுதற்கு நல்ல நாள்கோடல்; நாட்கொண்ட பின்னர்க் கல்லை நன்னீராட்டித் தூய்மை செய்தல்; அவ்வாறு தூய்மைசெய்தபின் அக்கல்லைக் குறித்த விடத்தே நடுதல்; நட்டபின்பு அக்கல்லைத் தெய்வமாகக் கருதி அதற்குப் பெருஞ் சிறப்புப்படைத்தல்; படைத்து எல் லாருங்கூடி வாழ்த்துதல்–என்பன. இவற்றை முறையே ஆசிரியர்– "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்–சீர்த்த மரபிற் பெரும்படை வாழ்த்தல்" என்பர். உரைகாரர் வேறு சில செய்திகளையும் இவற்றுடன் கூட்டியுரைப்பர். ஐயனா ரிதனாரும் இந்நடுகற் செய்திகளை விரித்துக்கூறினர். இஃது "என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை–முன் னின்று கன்னின்றவர்" எனத் திருக்குறளிலும், "ஆடவர் பீடும் பெயருமெழுதி யதர்தொறும்–பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" என அகப்பாட்டிலும் (131) புறநானூறு முதலிய நூல்களிலும் பெரிதும் சிறப்பிக்கப்படுதல் காணலாம். இவற்றாற் போரில் இறந்த வீரரைத் தமிழ் மக்கள் எத்துணை யாகச் சிறப்பித்து வந்தவரென்பது விளங்கும். இத்தகைய கற்களுள் பழமையானதொன்று, திருவனந்தபுரம் காட்சிச் சாலையில் உள்ளது.[1] இந் நடுகற்கள் சேலம் வடஆற்காடு ஜில்லாக்களிலும் கன்னட நாட்டிலும் மிகுதியுங் காணப்படு வனவாம். "வீரக்கல்" என்று கன்னட நாட்டார் இதனை வழங்குவர். இக்கற்களுள் முற்பட்டதையும் பிற்பட்டதையும்

---

[1] இந் நடுகல்லில் ஒருபுறம் வீரனுருவமும் மறுபுறம் அவன் செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளன. இது கி. பி, 770–ல் விளங்கிய மாறஞ்சடையன் காலத்தது என்பர், இதனுள் வரையப்பட்டசெய்தி வருமாறு:—"ஸ்ரீ கோமறஞ்சடையற் [கு இ] இருபத்தேழாமாண்டு சேரமானார்படை விழுஞத்து புறத்து விட்டுழக்கக் கரைக்கோட்டை அழிப்பான்வர பெருமா னடிகளுள [ன் பு] மிக்கூள இரணகீர்த்தியும் அமர்க்கழியும் உள்வீட்டி னெற்றைச்சேவகர் கோட்டை அழியாமை காத் தெறிந்து பலரும் பட்ட இடத்து இரணகீர்த்தி உள்வீட்டுச் சேவகன் கொழுவூர்க்கூற்றத்துத் தாதம்பெருந்திணை அத்திரத் தாற் பலரொடுங்குத்திப் பட்டான் இருபது-கமாளி" எனக் காண்க.

குறிக்கும் இரண்டு மாதிரிகைப் படங்களை ஸ்ரீமான் T. A. கோபிநாத நாயர் செந்தமிழ்ப் பத்திரிகையில் முன்பு வெளியிட்டுள்ளார். (தொகுதி- 3, பகுதி- 2. பக். 55). ஆடவர் பெயரும் பீடு மெழுதிய நடுகற்கள், ஆசிரியர் கூறிய முறையிற் பிற்காலத்தும் அமைக்கப்பட்டு வந்த சாஸனங்களிலும் இந்நடுகற் செய்திகள் கூறப்படுகின்றன என்பர்.

இனி, போர்த்தொழில் கருதிய வேந்தன் தங்கியுறையும் பாசறை, வேனிற்பாசறை கூதிர்ப்பாசறை என இரண்டாம் (76). "கூதிர்வேனி லென்றிரு பாசறைக்-காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்" என ஆசிரியர் கூறுதல் காண்க. இதனால், வேனிற் பருவமும் கூதிர்ப்பருவமும் யுத்த யாத்திரைக்குச் சிறந்தனவாகக் கொள்ளப்பட்டமை விளங்கும், 'பலமுள்ள காலத்தேயே பகைவர் நாட்டை எதிர்க்க விரும்பின் (வேனிற் பருவமாகிய) பங்குனி சித்திரை மாதங்களிலும் புறப்படலாம்' என்று மனுவும் (அத். 7.9.182), "ஒருவரோடொருவர் வயிரங்கொண்டு வெல்ல வெண்ணும் அரசர் யுத்தத்திற்கு ஆயத்தஞ்செய்தற்கேற்ற காலம் (கூதிர்ப்பருவம்) வந்துவிட்டது; இதுவே அரசர் படையெடுத்துச் செல்லுதற்குச்சிறந்தகாலம்" என வான்மீகி முனிவரும் (இரா. கிஷ்கிந் சர். 30) வேனில் கூதிர்ப்பருவங்களை யுத்தத்துக்குரியகாலங்களாக முறையே கூறுதல் கண்டுகொள்க. இனி, வேளாண் மாந்தர் விளையுட்காலத்துக் களத்துச்செய்யுஞ்செய்கைகளைத் தேரேறிவந்த கிணைப்பொருநர் முதலியோர் அந்நெற்போர்க்களத்தே விளங்கப்பாடுவதேயன்றி, பொரும் போர்க்களத்திற் புலவர் தேர் ஏறிவந்து 'களவழிச்செய்யுள்' பாடுவதுமுண்டென்பதும் (பொய்கையார்பாடிய களவழி நாற்பது இத்தகையதாம்), போரில் வென்றவேந்தன் அவ்வெற்றிக் களிப்பாலே, தன் னட்பினராய அரசரோடும் தானைத்தலைவரோடும் சேர்ந்து கைபிணைந்து தேர்த்தட்டில் நின்று குரவைக் கூத்தாடுவ துண்டென்பதும், வீரர்க்குரிய ஆயுதங்களுள் வேற்படையே மிகுதியாக முற்காலத்து வழங்கியதென்பதும், தாம் குறித்த காரியத்தை நிறைவேற்றமுடியாவிடத்துத்

தமிழ்வீரர் தம்முயிரை அங்கியங்கடவுட்கு அவிப்பலிகொடுப்பவரென்பதும், அரசன் வெறுப்புவந்தபோது தன் சிங்காதனத்தைத் துறப்ப துண்டென்பதும் (இச்சிங்காதனம் 'கட்டில்' எனப்படும்), தர்மசபைகளில் (நீதிஸ்தலங்கள்) குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை என்ற எண்குணங்களாற் சிறந்த பெரியோரே விளங்கிவந்தனரென்பதும் ஒழுக்கமும் கொடையும் பிழைத்தவை பொறுத்தலும் பிற உயர்குணங்களுமுடையராகி, முடிவில் துறவுள்ளம் பிறந்து பற்றற்றவராகப் பண்டைவேந்தர் விளங்கின ரென்பதும், பிறவும் "கூதிர் வேனில்" என்ற பொதுவியல்கூறுந் துறைப்பகுதிகளினின்று நாம் தெரிந்துகொள்ளலாகும்.

ஆகவே புறத்திணையியலானது, பண்டையரசருடையவும் போர் வீரருடையவும் ஏனைமக்களுடையவும் அரும் பெருங் குணங்களையும் செயல்களையும் பழங்காலத்து வழங்கிய முறைதவருது கூறுவ தென்பதும், ஆதலால் அப் பகுதிமுழுவதும் பழைய சரித்திரக்கூறுகளே என்பதும் ஆராய்ந்துகொள்ளத்தக்கன. இப் புறத்திணைத்துறைகளைப் புனைந்து பாடிய சிறப்புப்பற்றியே புறத்திணை நன்னுகனர், நொச்சி நியமங்கிழார், வெறிபாடிய காமக்கணியார் முதலாகப் பண்டைப்புலவர் பெயர்பெற்று விளங்கியதும் இங்கு அறியத்தக்கது.

V. மெய்ப்பாட்டியல்

இனிப் பொருளதிகாரத்துள், தொல்காப்பியனுர் அகம் புறமென்ற இருபகுதிப்பட்ட பொருள்களையே கூறப்புக்காராயினும், அவ்விருபகுதியும் பற்றிய சான்ருேர் வழக்குக்களுக்குப் பெரிதும் உபகாரப்படுதலுடைய மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்பவற்றின் இலக்கணங்களையும் அப் பொருட்கூறுகளோடு அமைத்து விளக்குவாராயினர்

அவற்றுள், மெய்ப்பாடாவது, உலகத்தாரது உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகள், ஆங்கு நிகழ்ந்தவாறு புறத்தார்க்குப் புலப்படுவதோர் வழியால் வெளிப்படுதலாம். வீரசோழிய உரைகாரர் "மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்" என்பர். இதனைச் சத்துவம் என்பது வடநூல் வழக்காகும். இம் மெய்ப்பாடுகளின் வகையும் இலக்கணங்களும் அகம்புற மென்னும் பொருட்பகுதிகட்கு ஏற்பவைத்து இவ்வியலிற் கூறப்படுவன என உணர்க. இம் மெய்ப்பாடுகள்:—நகை (சிரிப்பு), அழுகை (அவலம்), இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (உருத்திரம்). உவகை-என எட்டாக ஆசிரியர் வகுக்கின்றார். நாடக நூலார்-இவ்வெட்டோடு சமநிலை (சாந்தம்) ஒன்று கூட்டி ஒன்பதென்று கூறுவரென்பதும், [1]இவற்றுள், உருத்திரமொழிந்த எட்டையும் 16-ஆகவும், 32-ஆகவும் விரிப்பரென்பதும், "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும், கண்ணிய புறனே நானான் கென்ப" என்ற சூத்திரத்தாலும் அதனுரையாலும் தெரியவருகின்றன. வடமொழியலங்கார நூலார், இவ்வெண்வகை மெய்ப்பாடுகளாலும் நடப்பதே சுவையென்னும் அணியாம் என்பர், சுவையாவது-"வடிவம் இளமை முதலிய விபாவங்களாலும் (விபாவம்-விசேடித்துத் தோன்றியது), கட்பார்வை, மயிர் சிலிர்த்தல் முதலிய அநுபாவங்களாலும் (பின்னர்த் தோன்றியது), வெறுப்பு பலக்குறை முதலிய சஞ்சாரி பாவங்களாலும் (துணைசெய்வதாகத் தோன்றியது) உண்டாகும் விருப்பு முதலிய மனச்செய்கை"யாம்.

இனி, மெய்ப்பாடு எட்டனுள், நகை-எள்ளல் இளமை பேதைமை மடன் என நான்கு பகுதியும்; அழுகை-இளிவு

[1]சிலப்பதிகாரத்தில் இச்சுவையொன்பதும் சுருங்க விளக்கப்படுதல் காணலாம் (3. 13, அடியார்க். பக், 83, 84), இவ்வொன்பதுடன் "வற்சலம்" ஒன்றுகூட்டிச் சுவை பத்தென்பாரு முளர். வற்சலம்-புத்திரர் முதலியோரிடத்துக் காணப்படும்- வீரம் கல்வி முதலியவற்றால் உண்டாய அன்பு.

(இகழப்படுதல்), இழவு, அசைவு (பண்டை நிலைமைகெட்டு வருந்தல்), வறுமை என நான்குபகுதியும்; இளிவரல்—மூப்பு பிணி, வருத்தம், மென்மை என நான்கு பகுதியும்; மருட்கை —புதுமை, பெருமை, சிறுமை, அச்சம் என் நான்கு பகுதியும் உடையவாம். ஆக இவை நானான்குபதினாறும் தன்கட் டோன்றுதல் பிறர்கட்டோன்றல் என்ற இருபகுதிப்பட்டு முப்பத்திரண்டாக நடக்கும் என்றும்; இனிவரும் அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற நான்குமெய்ப்பாடுகளும் நானான்கு பதினாறு பகுதிப்படுமேனும், முன்னவைபோல ஒன்றிரண்டாகி முப்பத்திரண்டாகாது, பதினாறேயாமெனவும் உரைகாரர் கூறுவர். பிற்பட்ட அந்நான்கனுள் அச்சத்தின்வகையாவன:- அணங்கு (பேய் பூத முதலியவை), விலங்கு. கள்வர், இறை (அரசன்) என்பன. குவலயானந்த முடையார்- "குரூரமுடைய வற்றைப் பார்த்தல் முதலிய வைகளால் உண்டாம் மனக் குலைவு" அச்சமென்பர். பெருமிதத்தின்வகையான:—கல்வி, தறுகண் (அஞ்சத்தக்க வற்றுக்கு அஞ்சாமை), இசைமை, கொடை என்பன. வெகுளியின்வகை:—உறுப்பறை (அங்கவீனம்), குடிகோள் (தாரம் சுற்றமுதலியவற்றிற் கேடுசூழ்தல்) அலை (கோல் கொண்டு அலைத்தல் முதலியன). கொலை என்பன. உவகையின்வகை:— செல்வம், புலன் (அறிவுடைமை), புணர்ச்சி, விளையாட்டு என்பன. இவ் வெட்டுமெய்ப்பாடு களேயன்றி, உடைமைமுதல் நடுக்கமீறாக வேறு 32 பொருளுங் கூறி, அவையும், மெய்ப்பாட்டின்வகையே என்பர் ஆசிரியர், அவற்றின் விரிவு உரை நோக்கி உணரற்பாலன. இவ்வாறு கூறப்பட்ட மெய்ப்பாடுகள்,அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவானவை என உணர்ந்துகொள்க.

இனி, அகத்திணைக்கே பெரும்பான்மையுரிய மெய்ப்பாடு களை ஆசிரியர் 15—சூத்திரங்களாற் கூறி இவ்வியலை முடிக் கின்றார். இங்ஙனம் கூறும் முறையிலே, ஒருவனும் ஒருத்தி யும் எதிர்ப்பட்டவிடத்து, அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் மூன்றுபகுதியாகவும், புணர்ச்சிப்பின்

களவுவெளிப்படுந்துணையும் மூன்றுபகுதியாகவும், இவ்வாறும் தனித்தனி நந்நான்கு பிரிவுடையவாகவும் மெய்ப்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், எதிர்ப்படுதல் தொடங்கிப் புணர்ச்சிவரையுள்ள மூன்றுபகுதியிலே முதற் பகுதிக்குரிய நான்குவகையும் தலைவிமாட்டே நிகழ்வன; அவை வருமாறு:—

(1) தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டவிடத்துத் தன்னை அவன் நோக்குதலைத் தலைவி விரும்பும் உள்ளநெகிழ்ச்சி; இது 'புகுமுகம் புரிதல்' எனப்படும். "யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற் றானோக்கி மெல்ல நகும்" (குறள்-1094) எனக் காண்க. (2) தலைமகன் தன்னை நோக்கிய வழி, உட்கும் நாணும் ஒருங்குவந்தடைதலால், வியர் உண்டாகிய நெற்றியினளாதல். (3) அதன்பின்னர்த் தலைவனிடந்தோன்றிய குறிப்புக்களால் தலைவி உள்ளமுவந்தவழியும், நகாது நிற்றல்; "முகை மொக்கு ளுள்ளது நாற்றம் போற் பேதை—நகை மொக்கு ளுள்ளதொன் றுண்டு" (குறள்-1274) என உதாரணம் காண்க. (4) அங்ஙனம் நகையை மறைத்தவழியும், உள்ளஞ் சிதைந்து நிறையழிதலியல்பாதலால் அச்சிதைவு பிறர்க்குத் தெரியாவகை அவள் தன் நெஞ்சினை நிறுத்தல்.

"யான்தற் காண்டொறுந் தான்பெரிது மகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகைவெளிப் படாது நகைமுகங் கரந்த
நன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையால் நெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே"

என, இயற்கைப்புணர்ச்சிபெற்றுநீங்கிய தலைவன் தன்னெஞ்சிற்குச்சொல்லிய செய்யுளில், இந் நான்குமெய்ப்பாடுகளும் முறையே நிகழ்ந்தனவாகக் கூறப்படுதல் காண்க.

இனி, இரண்டாம்பகுதிக்குரிய நான்கு மெய்ப்பாடுகளாவன:— (1) மெய்யும் மெய்யுந் தீண்டியவழி மெல்லியன்

மகளிர்க்குத் தலைமயிரின் முடி உள்ளநெகழ்ச்சியாலே தன் வயமன்றியும் நெகிழ்தல். புணர்ச்சிக்காலத்து மகளிர்க்கு இஃதியல்யாமென்க. (2) உறுப்புக்களிற் பூட்டப்படாது பெய்துவைக்கப்பட்ட தோடு முதலாயின எளிதின் வீழ்தல். (3) நெகிழ்தற்குரிய வளைமுதலியவற்றை முன்கையில் இறுகச் செறித்தல் மோதிரந்திருத்தல் முதலியன. (4) உடுத்த உடையைப் பலகாலும் அழித்துடுத்தல் என இவை.

> "விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்
> கண்ணீ னோக்கிய தல்லது தண்ணென
> உரைத்தலு மில்லை மாதோ அவனே
> வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
> ஓதிமுந் துறக் காதொன் று நெகிழ
> நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழலத்
> துகிலும் பன்முறை நெடிது நிமிர்ந்தனவே
> நீயறி குவையதன் முதலே
> யாதோ தோழியது கூறுமா றெமக்கே"

எனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநின்ற செய்யுளில், இந்நான்கு மெய்ப்பாடுகளும் முறையே கூறப்படுதல் காண்க.

மூன்றுவது பகுதிக்குரிய மெய்ப்பாடுகள் நான்காவன:– (1) மேற்கூறியவாறு, அவிழ்ந்த உடையினைப் பெயர்த்து உடுத்துங்கால், அதுபெரிதும் நெகிழ்ந்துகாட்ட, அவ் வற்றம் மறைத்ததற்குத் தன் மறைந்த தானத்தைக் கையாற் பொத்துதல். (2) இடையில் அணிந்த அணிகளைத் திருத்திக் கோடல். (3) புணர்ச்சியை வேண்டாதாள்போல் ஒருவன் செய்கையைப் படைத்துக்கொண்டு புரிதல், (4) அங்ஙனம் படைத்துக்கொண்டதிலும் நிற்காது தன்னிறையழிதலாற் கைகள் தாமே முயங்கல்விருப்பத்தால் எழுதல் என்பன. இங்ஙனம் கூறப்பட்ட (நால்வகையான) மூன்று பகுதிகளும், முதலிற் குறித்தவாறு, எதிர்ப்படுதல் முதற் புணர்ச்சிவரை நிகழ்வனவாதல் நோக்கிக்கொள்க. இனி வருவன, புணர்ச் சிப்பின்னர்க் களவுவெளிப்படுந்துணையுமுள்ள பின் மூன்று பகுதிகளாகும்.

நான்காம்பகுதி மெய்ப்பாடுகள் நான்காவன- (1) புணர்ச்சி நிகழ்ந்த பின்பு, தலைமகனைத் தன்னவனாகப் பாராட்டுங் குறிப்பு நிகழ்தல், (2) விளையாடும் பருவத்து நிகழ்ந்த மடம் நீங்கக் காமப்பொருட்கண்ணேசிறி தறிவு தோன்றுதல். (3) சுற்றந்தாற் கூறப்படுங் கடுஞ்சொற்களை வெறுக்காது ஏற்றுக்கொண்டு,புறத்தார்க்கு இவ்வொழுக்கம் புலனாகுங்கொல் என்று நாணுதல். (4) தலைமகனாற் கொடுக்கப்பட்ட தழையுங் கண்ணியுந் தாரு முதலியன கொண்டு கையுறைபாராட்டுதல்—என்பனவாம்.

ஐந்தாம்பகுதிமெய்ப்பாடுகள் நான்காவன:- (1) இங்ஙனம் தலைவன் தலைவி யிருவர்க்குங் கூட்டமுண்மை சிலர் பலர்க்குப் புலனாக, அதனால் எழுகின்ற அலருக்குத் தலைவி நாணமுற்று, அச்செய்தியைத் தோழிக்குந் தமர்க்கும் அறிவுறுத்தற்குறிப்பைத் தெரிந்துடம்படுதல். (2) அங்ஙனம் உடம்பட்ட பின்பு, பண்டுபோலப் பகற்குறியினும் இரவுக் குறியினும் தலைவனுடன் கூடுதலை அவள் மறுத்தல். (3) அக்காலத்தே தலைவி இற்செறிக்கப் படுதலால் தலைவன் முன் வெளிப்படாது ஒழுகுதல். (4) அங்ஙனம் கரந்து ஒழுகுங் காலத்துத் தலைவனை ஒரு ஞான்று கண்ட தலைவி கழியுவகை கொள்ளுதல். இங்ஙனம் தலைவனைக்கண்டு மகிழ்தல், "புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்-பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்"[1] (பக்-291) "வேளா ணெதிரும் விருந்தின் கண்ணும்" நிகழுமென அறிக.

ஆறும்பகுதி மெய்ப்பாடுகள் நான்காவன:- (1) தலைவனைக்கூடப் பெறுமையால், புறத்தே கோலஞ்செய்த வழியும் அகத்தே சிதைவுண்டாதல், (2) அக்கவற்சியானே சுற்றத்தாரிடையிருந்தும் தமியாள்போன்ற குறிப்பை வெளிப்

---

[1] "உண்டிக்காலத்துத் தலைவியில்லத்துத் தலைவன் புக்கெதிர்ப்பட்டவழி அவனை விருந்தேற்றுக்கொள்ளும் பகுதிக் கண்ணும்: எ-று, இவ்வாறு விருந்தேற்றல், கலித்தொகை51-ம் பாட்டுள் அழகாகக் கூறப்படுதல் காணலாம்.

படுத்தல். (3) கையொடுபிடிபட்ட கள்வரைப் போலச் சொல்லுவனவற்றைத் தடுமாறிச் சொல்லுதல். (4) கலங்காது சொல்லிய வழியும் தன்பாலுள்ள கவற்சிதோன்றக் கூறுதல்— என்பன. இங்ஙனம் கூறிய ஆறுபகுதி மெய்ப்பாடுகளும் முறையே காமக்கூட்டத்துக்கு நிமித்தமாய்த் (297) தலைவி பால் நிகழ்வனவாதல் காணலாம். இவை (அறுநான்கு) இருபத்திநான்கு மெய்ப்பாடுகளிற் சில குறைந்தும் (298) சில கூடியும் (பக்-500) வருவன வுளவென்றும், கைக்கிளை பெருந்திணைகட்கு மெய்ப்பாடுகள் வரையறையில்லை யெனவுங் கூறுவர். (பக்-499). களவு கற்புக் காலங்களில், மேற்குறித்த இருபத்து நான்கன்றி வேறுபலவும் நிகழ்தலை 'இன்பத்தைவெறுத்தல'' (270) ''முட்டுவயிற்கழறல்'' (271) ''தெய்வமஞ்சல்'' (272) என்ற சூத்திர உரைநோக்கி உணர்க. இனித் தலைமகன்கண் நிகழும் மெய்ப்பாடுகளில், நிம்பிரி (=அழுக்காறு: இச்சொல் இப்பொருளில் ஆசிரிய ரால் அருமையாக வழங்கப்படுவதாம்.), கொடுமை, தன்னை வியத்தல், புறங்கூறுதல், வன்சொல், உறுதியின்மை, சோம்பல், தன்குடியைமேலாக மதித்தல், இருவருள் ஒருவர் தானே இன்பம் பெரிதும் அடைவதாக நினைத்தல், அறி வின்மை, மறவி. இன்னுளையொப்பள் இவளென்று அன்பு செய்தல் என்பவை உயர்ந்தகாமக்குறிப்பிற்கு ஆகாதன என்பர் ஆசிரியர் (274).

முடிவாக, கண்ணாலும் செவியாலும் நுண்மையாக அறியும் உணர்வுடைமாந்தர்க்கல்லது மற்றவர்க்கு, மெய்ப் பாடுகளை ஆராய்ந்து கொள்ளுதல் அரிதாம் என்று கூறுவர் ஆசிரியர்; அஃதாவது—''எள்ள லிளமை பேதைமை மட னென்—றுள்ளப் பட்ட நகை நான்கென்ப'' என்று, நகைக் கேதுவாகிய பொருள் கூறப்பட்டதாயினும், அப்பொருள் பற்றிப் பிறக்கும் நகையுணர்வு இவ்வாறு புலப்படுமென்று அவர் கூறினரில்லை; இவ்வாறு ஏனையவும். இவற்றைக் கண்ணும் செவியுங் கருவிகளாக அறிவுடையோர் நுனித் துணர்ந்துகொள்ளக்கடவர் என்பதாம்.

VI. உவமவியல்

மேற்கூறிய மெய்ப்பாடுகள்போல, அகப்பொருள் புறப் பொருள்களை அறிவதற்கு உபகாரப்படுமவற்றுள் இவ்வுவம வியலும் ஒன்றாகும். உவமமாவது—ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதலாம். இவ்வுவமையைத் தொல் காப்பியனார் உள்ளுறையுவமம், ஏனையுவமம் என இரண் டாகப் பகுத்தோதுவர். இவற்றுள், பின்னதான ஏனையுவம மாவது-வெளிப்படையுவமமாம்; இஃது உள்ளத்தான் உணரவேண்டாது, சொல்லிய சொற்றொடரே பற்றுக் கோடாகத் தானே உணரப்படுவது. "ஏனை யுவமந் தானுணர் வின்றே" (49) எனக் காண்க. வடநூலார் வழங்கும் பலவகையணிகளிலே உவமையணியொன்றே இவ்வியலிற் கூறப்படுவதென உணரற்பாலது. இவ்வுவ மத்தின் விகற்பங்கள் நான்காகும்:—வினை, பயன், மெய் (வடிவு), உரு (வண்ணம்)என. 'புலியன்னமறவன்' என்பது வினையுவமம்; புலி பாயுமாறுபோலப் பாய்வன்எனத்தொழில் பற்றி வந்தமையின். "மாரியன்ன வண்கைத்-தேர்வேள் ஆய்" என்பது பயனுவமம்; மாரியால் விளைக்கப்படும் பொருளும், வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கும் என்ற வாறு, 'துடியிடை' என்பது மெய்யுவமம்; கீழும் மேலும் அகன்றுகாட்ட இடை சுருங்கித் தோன்றுதலால், உரு வொத்தபடி. 'பொன்மேனி' என்பது உருவுவமம்; பொன் னிடத்தும் மேனியிடத்துமுள்ள நிறமே ஒத்தலின். இந் நான்கு விகற்பங்களில் ஒன்றும் பலவும் ஒருவமையில் விர வியும் வரும்; உதாரணமாக-'பிறையன்ன வையெயிறு' என்ற விடத்து, பிறைக்கும் எயிற்றுக்கும் வண்ணமும் வடிவும் ஒத்தல் கண்டுகொள்க (277). இவ்வுவமை யாண்டும் உயர்ந்து நிற்பதாகல்வேண்டுமென்றும். உவமிக்கப்படும் பொருள் (=உவமேயம்: இதனைப் 'பொருள்' (278) என்று வழங்கலு முண்டு.) இழிந்துவரல் வேண்டுமென்றும், இங்ஙனம் கூறுமிடத்து 'அவ்விரண்டும் ஒத்தன' என்று உலகம் மகிழும்படி அமையவேண்டுமென்றும் (283)

கூறுவர். இவ்வுவமவகை நான்கும்—சிறப்பு நலம் காதல் வலி என்ற நான்கனிடமாகவே பெரும்பான்மை பிறக்கும் (279-280): உவமங்களின் பொதுத்தன்மைகள் நன்கு விளங்காதவிடத்து அவை உய்த்துணர்ந்து அறியப்படு மென்பதும், உவமேயமே உவமையாகக் கூறுதலுமுண்டென் பதும், மிகவுயர்ந்ததையும் மீகவிழிந்ததையும் ஒப்புக்கூறும் போது, கேட்டோர் மனங்கொள்ளும்படி இனிமைபயப்பக் கூறவேண்டுமென்பதும், பிற உவமப்பகுதிகளும் இவ் வியலுட் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் கூறப்படும் உவமங்களை விளக்குதற்கு உரிய உருபுகள் பலவாகும். அவற்றை ஆசிரியர் எட்டுச்சூத்திரங் களாற் கூறுகின்றார். இங்ஙனம் கூறுவதிலுள்ள விசேடம் என்னெனில், வினை பயன் மெய் உரு என்ற நான்குபகுதி களிலும்—இவ்வுருபுகள் வழங்குமிடத்து, இன்ன வின்ன உருபுகள் இன்ன வின்ன உவமைகட்கே உரியன என்று வரை யறைப்படுத்துவதாகும். இதனை "அன்ன ஆங்க மான இறப்ப—என்ன உறழத் தகைய நோக்கோடு—கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்" என்பது முதலிய சூத்திரங்களால் உணர்க. இவ்வாறு, ஒவ்வோர் உவமப் பகுதிக்கு உரிமைப்படுத்து உருபுகளை நியமித்தலின் பிற் காலத்துப்போல எல்லா உருபுகளும் எல்லா உவமைகட்கும் ஆசிரியர்நாளில் வழங்கினவல்ல என்பதும், அங்ஙனம் வழங்காது உரிமைப்பட்டது ஒவ்வொருகாரணம்பற்றியே என்பதும் நன்கு அறியப்படும். இதனுனன்றே, "தத்த மரபிற் றோன்றுமன் பொருளே" என்று, அவ்வுருபுகளின் மரபு வழுவா நிலையையும், ஆசிரியர் வற்புறுத்துவாராயினரென்க. ஈண்டு உரைகாரர் எழுதுவன வருமாறு. "மறுப்ப ஒப்ப என்பன முதலாயின ஒருகாரணமுடையன என்பது, ஆசிரியர் பெருமரபினவாக உரிமைப்படுத்துக் கூறினமை யின் அறிந்தாம்; அல்லதூஉம், 'மரபிற்றோன்றும்' என்றத னுன், இவையெல்லாம், மரபுபற்றியே அறியல்வேண்டும்; எனவே, தலைச்சங்கத்தார்முதலாயினர் செய்யுட்களுள் அவ்வாறே பயின்றுவருமென்பது அறிந்தாமன்றே, இவ்

வாறு சூத்திரஞ் செய்தலான்" எனக் கண்டுகொள்க. இங்ஙனமாக மரபுபற்றிவரும் உருபுகளாக ஆசிரியர் கூறிய வற்றுள்ள "நளிய, நந்த" விரண்டும் பண்டே வழக்கு வீழ்ந்தன என்பது—"அவ்விரண்டும் இக்காலத்து அரிய போலும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க" என உரை காரர் குறித்தலால் அறியலாகும்.

இனி, உவமம் பலவகையாகவிருத்தலாலும், வேறு பல அலங்காரங்கட்கு அடிப்படையாதலாலும், பிற்காலத்து அணியிலக்கணங் கூறும் வடநூல்களுந் தென்னூல்களும் இதனைப் பலவகையாக விரிப்பனவாயின. மகாகவியாகிய தண்டியாசிரியர் வடமொழியிலியற்றிய காவியாதரிசத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகிய தண்டியலங்கார நூல், சொல் லணி பொருளணியென இருபகுதிகொண்டும், அவற்றுட் பொருளணியை முப்பத்தைந்து வகையாக்கியும் விளக்கு கின்றது. இம் முப்பத்தைந்தனுள்ளே, தொல்காப்பியனார் கூறிய உவமும் ஒன்றும். இவ்வணி தன்னையும் பல பகுதி களாக வடநூலார் விரித்துக்கூறுவதேயன்றி, அப்பகுதிகளை வெவ்வேறணியாக்கியும் பேதப்படுத்துவர். தொகையுவமம் என்று தண்டியாசிரியர் கூறுவது 'சுட்டிக்கூறுவுவமம்' என்ற சூத்திரத்தும் (282) விபரீத உவமை என்பது "பொருளே உவமஞ் செய்தனர்" (284) என்றதினும், ஐயம் இதரவிதரம் என்பவை "தடுமாறுவமம்" என்பதினும் (307) அடங்கு தலும், இவ்வாறே சுவையணி என்று தனியாகத் தண்டி யலங்காரங் கூறுவது "பெருமையுஞ் சிறுமையும் (285) என்ற சூத்திரத்தடங்குதலும் உய்த்துணரக்கூடியன.[1] சாகித்திய தருப்பணம், சரஸ்வதீகண்டாபரணம் முதலிய வடநூல் களில், இவ்வுவம வகைகளிற் சில வேறுவேறலங்காரமாகக் கூறப்பட்டுள்ளன என்பர். ஆனல், வடநூலார் கூறிய அணி

---

[1] இன்னும் இவ்வேனையுவமத்தின் பகுதிகளை- 'வேறு படவந்த வுவமத்தோற்றங், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" என்ற செய்யுளியற் சூத்திரத்துள்வரும் உரை காரர் கூற்ருன் உணர்க.

விகற்பங்கள் தொல்காப்பியனார்காலத்து வேறுபட வழங்கின அல்ல என்பதை, உரைகாரர்—"இனி, இவ்வோத்தினுட் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத் துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சிலபொருள் களையும் வாங்கிக்கொண்டு, மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்து ஆசிரியர் நூல்செய்தாருமுளர்; அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று கூறப்படா; ......பொருளதிகாரத்துள் (வரும்) பொருட்பகுதியெல்லாம் செய்யுட்கணியாகலான், அவை பாடலுட் பயின்றன என்ற தனன், அவற்றையுந் தொகுத்து அணியெனக் கூருது, வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்றும் என உணர்க" (உவமவியல், சூத். 37) எனவும் மற்றும் பல ஏதுக் கூறியும் பிற்காலத் தணிவகைகளை விரி வாக மறுத்துரை கூறுதல் காணலாம் (பக். 552). மேலே கூறிய உவமவுருபுகளிலே, "என்ற" எனவும் ஓர் உருபு ஆசிரியர் கூறுதலால், "வாயென்ற பவளம்" என்பதைப் பிற்காலத்து அணிநூலார் உருவகமாகக்கொண்டமுறை யில் தொல்காப்பியர்கொள்ளாது, உவமைப்பாற்படுத்தே கூறினமையும் உய்த்துணரப்படும் (பக். 522).

இனி உள்ளுறையுவமம் ஆராயற்பாலது. அஃதாவது—ஒரு புலவன் 'தான் புலப்படக்கூறுகின்ற உவமத்துடன், புலப்படக்கூருது உவமிக்கப்படும் பொருள் ஒத்துமுடிவதாக' என்று தன்னுள்ளத்தே கருதி, அதனைப் பிறருமறிய உணர்த்துதற்குரிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிப்பதாம் (48). இது தெய்வமொழிந்த உணவு முதலிய கருப்பொருளடியாகப் புலப்படுமென்பர். இவ்வுவமம், ஏனையுவமம்போல உவமையும் உவமிக்கப்படும் பொருளு மாக நிறுத்திக் கூறப்படாது, நல்லுணர்வுடையார் உவமம் போலப் பொருள்கொள்ளும்படி செய்யப்படுவதாய் நேரான உவமம் ஆகாமையால் 'உவமப்போலி' எனவும்படும். இவ் வுவமமும்—வினை, பயன், உறுப்பு (மெய்), உரு, பிறப்பு—என்பவை பற்றி நிகழ்வதாம், உதாரணமாக—"கரும்புநடு

பாத்திக் கலித்த தாமரை—சுரும்புபசி களையும் பெரும்புன லூர." (ஐங்குறு. 65) என்பது, வினைபற்றிவந்த உள்ளுறை யுவமமாம். இதனுள், பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனை விளிக்குமிடத்துத் தலைமகள்—"தாமரையை விளைப்பதற் கன்றிக் கரும்புநடுதற்குச் செய்த பாத்தியுள், தானேமுளைத்த தாமரை சுரும்பின் பசியைத் தீர்க்கும் ஊரனே!" என்று தலைவனை விசேடித்து அழைத்தல் கூறப்படுகின்றது. இக் கூற்ருல், 'பரத்தையர்க்கென்று அமைக்கப்பட்ட தலைவனது இல்லத்தில் யான் இடைவந்து விருந்தோம்புகின்றேன்' என உவமைக்குப் பிறிதொரு பொருள் எதிர்நின்று உவமஞ்செய் யாது, ஆண்டுள்ள கருப்பொருளொடு நோக்கிக் கருத்தி ஞற் கொள்ளவைத்தலின் உள்ளுறையுவமம் ஆதலும், அவ் வுவமத்துள்ளும்—தாமரையானது சுரும்பின் பசிகளையுந் தொழிலோடு, தலைவியின் விருந்தோம்புதற்ருெழில் உவமங் கொள்ள நின்றமையால் இது வினையுவமம் ஆதலுங்கண்டு கொள்க. திருக்கோவை 260-ல் பேராசிரியரும் இவ்வுள் ளுறையை விளக்குதல் அறியத்தகும். இவ்வாறே பயன் உறுப்பு முதலியனபற்றி நிகழும் உவமங்களும் கொள்ளற் பாலன.

இவ்வுள்ளுறை யுவமம்பற்றித் தலைவி கூற்று நிகழ்த்து மிடத்து, மருதம் நெய்தலென்ற இரண்டு நிலங்களில் (302) அவளறியும் கருப்பொருள் கொண்டே உவமஞ் செய்தற் குரியள் எனவும் (301), தோழியும் செவிலியும் இருந்த நிலத் துள்ள எல்லாக் கருப்பொருளாலும், பிறநிலப்பொருள் மயங் காது பொருந்தும் வகையால் உவமஞ்செய்தற்குரியர் என வும் (301,306), தலைவனுயின் தன்னுடைமைதோன்ற எல்லா நிலத்துப் பொருள்களாலும் உவமஞ்செய்தற்குரியன் என் றும் (302, 305), ஏனையோர், தாந்தாம் அறிந்தவகையால், நிலம் வேறுபடாது கூறுவரெனவும் (302), விதிப்பர் ஆசிரியர். இவையெல்லாம் முறைதவருது பண்டு வழங்கி வந்தன வென்பது, பிற்காலத்தார்க்குப் புதியவாகவுள்ள இவ்விதிகளை ஆசிரியர் நியமித்தலால் அறியலாம். அன்றி

யும், பொருளிலக்கணத்துக்கு ஏனையுவமமும் உரியதாயினும், இவ்வுள்ளுறையே சிறந்தது எனப்படுகின்றது (பக். 529). உரைகாரரும் 'மற்றிவையெல்லாம் அகப்பொருட்கே உரியவாக விதந்தோதியது என்னை, புறப்பொருட்கு வாராதன போல: எனின், ஆண்டுவருதல் அரிதாதலின் இவ்வாறு அகத்திற்கே கூறினன் என்பது' (பக்.544) என்றுஎழுதினர். இதுபற்றியே, இவ்வுள்ளுறையுவமத்தை அகத்திணையியலில் வைத்து ஆசிரியர் ஓதுவாராயினர் எனஉணர்க (46-48).

VII. செய்யுளியல்.

மேற்கூறிய அகப்பொருள் புறப்பொருள்களின் புலனெறிவழக்கிற்குரிய மெய்ப்பாட்டின் இலக்கணங்களையும் உவமவிலக்கணங்களையும் கூறிப்போந்த ஆசிரியர் தொல்காப்பியனர், அப்புலனெறிவழக்கை அமைத்து நல்லிசைப் புலவர் பாடிப்போந்த செய்யுள்களின் இலக்கணங்களையும் எட்டாவதியலில் கூறுவாராயினர். இப்போது அச்சிடப் பட்டுள்ள பொருளதிகாரச் செய்யுளியலுக்குள்ள உரைப் பகுதி நச்சினர்க்கினியரதன்றிப் பேராசிரியரதே என்பது, ஸேதுஸமஸ்தானம் மகாவித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் "செந்தமிழில்" எழுதிய ஆராய்ச்சியுரையானும்' பின் வேருக வெளியிட்ட செய்யுளியல்-நச்சினர்க்கினியருரையானும் அறிஞர் அறிந்தவை. இனி, இச் செய்யுளியலை "யாப்பதிகாரம்" எனத் தனியதிகாரமாக்கி வழங்கியதுண்டென்பதும், ஆனல், அது பலர்க்கும் ஒப்பமுடிந்ததன்றென்பதும், "மற்றிதனை யாப்பதிகாரம் என வேருேர் அதிகாரமாக்கி உரைப்பாருமுளர்; இங்ஙனங்கூறின் (மரபியலை) வழக்கதிகாரம் எனவும் வேறுவேண்டுமென மறுக்க. அல்லதூஉம், எழுத்துஞ் சொல்லும் பொருளும் என மூன்றும் மூன்றதிகாரமாக்கி, அதிகாரம் ஒன்றற்கு ஒன்பதோத்தாகத் தந்திரஞ் செய்ததனேடு மாறுகோளாம்" எனப் பேராசிரியர் கூறுதலால் தெரிகின்றன. களவியலுரைகாரர் "எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத்

தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம் என்றார்" எனப் பாயிரத்துக் கூறுவதும், யாப்பதிகாரம் எனத் தனியே வழங்கிய பண்டை வழக்கைக் குறிப்பிக்கின்றது.

இனி, இவ்வியலில், செய்யுள் என்பது முப்பத்துநான்கு உறுப்புடையதாகக் கூறப்படும். அவை வருமாறு:—

(1) மாத்திரை—எழுத்திற்கோதிய மாத்திரைகள் செய்யுளில் விரவிக்கிடக்கும் அளவை.

(2) எழுத்தியல்வகை—எழுத்துக்களை இயற்றிக்கொள்ளுங் கூறுபாடு. இவ்விரண்டுறுப்புகளும் எழுத்ததிகாரத்தில் ஆசிரியராற் கூறப்பட்டன.

(3) அசைவகை—அசைக்கூறுபாடு; இஃது இயலசை உரியசை என இரண்டாகப் பகுத்து ஓதப்படும். குற்றுகர முற்றுகரங்களில் வரும் நேர்பு நிரைபு என்ற அசைக்கூறுகளும், குற்றியலிகர குற்றியலுகரங்கள் அசைக்குறுப்பாகு நிலையில், ஒற்றேபோலப் புள்ளிபெறுதலும் ஆசிரியராற் கூறப்படுதல் ஆராயற்பாலன.[1]

(4) சீர்—அவ்வசைகள் இரண்டானும் மூன்றானுஞ் சேர்ந்து ஓரோர் சொல் இலயம்படமுடிவது சீர் எனப்படும். பேராசிரியர் "உலகத்துச் சொல்லெல்லாம் ஈரசையானும் மூவசையானுமன்றி வாரா" என்று கூறி நாட்டுவர். இனித்

---

[1] தொல்காப்பியனார் "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்" "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்ற சூத்திரங்களால் (எழுத்ததிகாரம்-104, 105) மெய்யீறுபோலக் குற்றிய லுகரம் புள்ளிபெறுதலுங் கூறினார். இச்சூத்திரங்கட்கு உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறிய வேறுரையை, நன்னூல் விருத்திகாரர்—"அற்று, என்னும் மாட்டேற்றிற்கு, மெய்யீறுபோலக் குற்றியலுகர வீறும் புள்ளியொடு நிற்குமெனக் கொள்ளாது, இம்மூன்றுஞ் சூத்திரத்தைப் 'புள்ளியீற்றுமுன்' என்னும் 36-ம் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக்கொண்டார்.........அவ்வாறு கூறுதல் மாட்டேற்றிலக்

தனையென்பதோர் உறுப்பு ஆசிரியர் கூருமை நோக்கற் பாலது. தனைத்தலிற் றனையாகி அது சீரதுதொழிலேயாத லின், தொல்காப்பியனுர் அதனைத் தனியுறுப்பாகக் கொண் டிலரென்பதும் இத் தனை வேண்டினர் பிற்காலத்து ஆசிரி யரே யென்பதும் பேராசிரியர் கொள்கை.

கணம் அன்ரும்'' எனக்கூறி மறுத்தனர். இவ்வாறே சிவஞான முனிவரும்—"குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்னுஞ் சூத்திரத்தாற் குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும் என முற்றுகரத்தோடு இதனிடை வரிவடிவினும் வேற்றுமை தோன்றக் கூறி, உம்மையாற் குற்றியலிகரமும் புள்ளிபெற்று நிற்கும் என்ருேதினமையானும்'' என எழுதல் காண்க (தொல். முதற் சூத். விருத்தி). இவற்ருல் குற்றியலுகரம் மெய்போலப் புள்ளிபெறுதலைக் கூறுவதே பின்னேர் கருத் தென்பது விளங்கும். இக்கொள்கையே யாப்பருங்கலவிருத்தி யுடையாருங் கொண்டதென்பது, அவர், "குற்றியலுகரமுங் குற்றியலிகரமும் புள்ளிபெற்று நிற்கும்; என்னை? 'குற்றிய லுகரங் குற்றியலிகரம்—மற்றவை தாமே புள்ளி பெறுமே' என்பது சங்கயாப்பு'' என்றெழுதலான் உணர்க. இவர் கூற் றில், குற்றியலுகரத்தோடு, குற்றியலிகரமும் புள்ளிபெறுமாறு கூறப்படுதல் அறியத்தக்கது. ஆசிரியர் தொல்காப்பியனுர் காலத்தும், அக்குற்றியலுகரம் புள்ளிபெற்றே வழங்கியதென் பது, பேராசிரியர் "ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்" என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில்—"எனவே எழுத் தோத்தினுள், 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' எனக் கூறிக் குற்றிய லுகரமு மற்றென மொழிப' எனக் குற்றியலுக ரத்துக்குப் புள்ளிபெறுதலுங் கூறினர். அதுபோல, குற்றியலிக ரமும் புள்ளிபெற்று நிற்றல் உடைத்தென்றவாருயிற்று......... இவற்றை யெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்றதனுல் புள்ளி யிட்டெழுதுக'' என்றுகூறுதலால், தெள்ளிதின் உணரப்படும்.

இவற்ருல் நாகு்ழகிது, நாகியாது என்னுங் குற்றுகர குற்றிக ரங்கட்கு, மெய்யெழுத்துப்போல—ககர கிகரங்கட்கு மேலே—புள்ளியிட்டெழுதல் தொல்காப்பியர்காலத்து வழக்காதல் தேறப்படும். மற்றும் இப்புள்ளியெழுத்துக்களின் வரலாறு கள், செந்தமிழில் "தொல்காப்பியனுரும் புள்ளியெழுத்துக் களும்''என்ற கட்டுரைநோக்கியுணர்க (தொகுதி-25, பகுதி-5, பக். 153-168).

(5) அடி—அச்சீர் இரண்டும் பலவுந் தொடர்ந்தாவதோர் உறுப்பு; இது, குறளடி சிந்தடி முதலிய ஐந்துவகையும் 625 விரியுமுடையது. நாற்சீர்கொண்டதே அடியென்று சிறப்பிக்கப்படுமென்பதும் (344), அந்நாற்சீரடி இரண்டும் பலவுந் தொடர்ந்து வருதலே பாட்டாமென்பதும் ஆசிரியர் கொள்கை. இதனற் பண்டைச் செய்யுள்கள் இம்முறைப் படியே அமைந்திருந்தன என்பது உணரப்படும். பேராசிரியரும், "தலையிடை கடைச்சங்கத்தாரும் பிறசான்றோரும், நாற்சீரடியான்வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார்; வஞ்சிப்பா சிறுவரவிற்றுமெனக் கொள்க" எனக் கூறிச்செல்லுதல் நோக்கத்தக்கது.

(6) யாப்பாவது— அவ் வடிதோறும் பொருள்பெறச் செய்வதோர் செய்கையாம். இது பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுமொழி என்ற ஏழனடியாகச் சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தர் ஆட்சிக் குட்பட்ட தமிழ்நாட்டுவழங்கும் செய்யுள்மரபா மென்பர் ஆசிரியர் (387). இதனை உணர்த்துஞ் சூத்திரத்தே "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" என 'மூவர் ஆட்சிக் குட்பட்ட தமிழ்நாடு' என்று குறிக்கப்படுதலால், ஆசிரியர் காலத்தில் மூன்று பிரிவாகவே தமிழகம் பகுக்கப்பட்டிருந்த செய்தி விளங்கும். இனி, மேற்குறித்த பாட்டு உரை நூல் முதலிய ஏழனியல்புகளையும் 478-முதலிய சூத்திரங்கள் நோக்கி உணர்க.

(7) மரபு என்பது. காலமும் இடமும்பற்றி வழக்குத் திரிந்தவிடத்தும், திரிந்தவற்றுக்கேற்ப வழுப்படாமற்செய்வதோர் முறைமை என்பர் (388). இம்மரபுகள் செய்யுட்கே உரியவென்பதும், மரபியலிற் கூறப்படுவன பொதுவென்பதும் வேறுபாடு உணரத்தக்கன.

(8) தூக்கு என்பது, பாவினை வரையறுத்துப் பாடித் துணித்து நிறுப்பதென்பர். அஃதாவது-அகவி (அழைத்துக் கூறும் ஓசையது) அகவல், செப்பலோசையது வெண்பா,

துள்ளலோசையது கலி, தூங்கலோசையது வஞ்சி யெனத் துணிவது.

(9) தொடையென்பது சீரும் அடியுந் தொடுத்து நிற்பது; இது மோனை எதுகை முரண் இயல்பு அளபெடை என ஐந்துவகையும், பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டு விரியும் உடையது (413).

(10) நோக்கென்பது—மேற்கூறிய மாத்திரை முதலிய உறுப்புக்களைக் கேட்டோர்க்கு நோக்குப்படச்செய்வது.

(11) பா-என்பது, சேட்புலத்து இருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங் கால், அவன் சொல்லுகின்ற செய்யுளின் பகுதியறிந்து 'இன்னசெய்யுள்' என்றுணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை என்பர். இப்பா-ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா, பரிபாடல், மருட்பா என அறுவகையாம். இவை, அறம் பொரு னின்ப மென்ற மும்முதற் பொருட்கும் பிறவாழ்த்து வகைகட்கும் உரியவாகும். இவ்வாறு வகைகளுள், பரிபாடலும் மருட்பாவும் ஏனை நான்கனிடமாக முறையே கிளைத்தமையால் அவற்றுள் அவை அடங்குமென்றும் கூறப்படுகின்றன. பிறவிலக்கணங்களெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

(12) அளவியல்—அப் பாவின் வரையறை; இதனுட் பாக்களது பல்வகைப்பட்ட விகற்பங்களும் கூறப்படும்.

(13) திணை—அகத்திணை புறத்திணை என்பவற்றை அறியச்செய்தல். (14) கைகோள்—அகத்திணை விகற்பங்களை அறியச்செய்தல்; அவ்விகற்பம் களவு கற்பு என்பன. (15) கூற்றுவகை-அச்செய்யுள் கேட்டார்க்கு, இது சொல்லுகின்றார் இன்னார் என்பது உணர்த்தல். (16) கேட்போர்—இன்னார்க்குச் சொல்லுகின்றது இது எனத் தெரித்தல். (17) களன் என்பது முல்லை குறிஞ்சி முதலாயினவும், பகற்குறி இரவுக்குறி முதலாயினவும் உணரச்செய்தல். இவ்

விடங்களன்றித் தன்மை முன்னிலை படர்க்கை யிடங்களாகக் கூறுதலுமுண்டு. (18) காலவகை—பெரும்பொழுது சிறு பொழுது முதலாயின. (19) பயன்—சொல்லியவகையாற் பிறிதொன்று பயப்பச் செய்தல். (20) மெய்ப்பாடாவது சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாவது. (21) எச்ச வகை—சொல்லப்படாத மொழிகளைக் கூற்ருனுங் குறிப்பா னும் குறித்துக்கொள்ளச் செய்தல். (22) முன்னம்—உயர்ந் தோர் இழிந்தோர் முதலியோர் தம்தம்வகையான் ஒப்பச் சொல்வதிற் கருத்துப்படச் செய்தல். (23) பொருளென்பது, புலவன் தான்தோற்றிக்கொண்டு செய்வதோர் பேருண்மை. (24) துறைவகை என்பது முதலுங் கருவும் பிறழவந்தாலும் இஃது இதன்பாற்படும் என்று ஒரு துறைப்படுத்தற்குரிய கருவி செய்யுட்கு உளதாகச் செய்தல். களவும் கற்பும்பற்றிய பாட்டுக்களை மேற்கூறிய இலக்கணமுறையால் உரைக்க வேண்டுமென்பது,

" திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் ருங்கப் பத்தே
அகனைந் திணையு முரைத்த லாறே "

என்று இறையனர் களவியலும், ஆசிரியர் கூறியவற் றுள் 13 முதல் 21 வரையுள்ள பகுதிகளைக் கூறுதல் காண்க. இச்சூத்திரத்து ஈற்றில் எஞ்சிநின்ற கோள் என்பது, பாட்டி னகத்துப் பொருள்கொண்டு நிற்கும் நிலை. அஃதாவது விற்பூட்டு, விதலையாப்பு, கொண்டுகூட்டு, பாசிநீக்கு, ஒரு சிறைநிலை என்னும் ஐந்து நிலைகளில் இன்னதோர்பொருள் கொண்டு நின்றது இப்பாட்டு என்பதாம். இங்ஙனம் திணை முதற் கோளீருக வைத்து அகத்திணைப் பாடல்களை உரைத் தல் பண்டை வழக்காகும். உதாரணமாக—

" முளிதரு மேனற்கட் கானவ ரார்ப்ப முகிற்கணங்கள்
தளிதரு தண்சிலம் பாதக்க தன்று தரணிதன்மேல்
அளிதரு செங்கோ லரிகே சரியந்தண் கூடலன்ன
ஒளிதரு வாணுத லாள்நைய விவ்வா றெழுகுவதே"

இப்பாட்டிற்குத் திணை-குறிஞ்சி; கைகோள்-களவு; கூற்று-தோழி கூற்று; கேட்டான்-தலைமகன்; இடம்-முன்னிலை; காலம்-எதிர்காலம்; எச்சம்-நீ என்பது எஞ்சிற்று; மெய்ப்பாடு-அச்சம்; இவ்வொழுக்கம் பிறர் அறியின் இறந்துபடும் நிலைமையள் ஆயினமையின்; பயன்-வரைவுகடாதல்; பொருள்கோள்-'சிலம்பா! இவள் இவ்வாறு நையக் களவொழுக்கம் ஒழுகுவது தக்கதன்று' என முதலுமிடையுங் கடையுங் கூட்டிப் பொருள்கொண்டமையால் விதலையாப்பாம்.—இவ்வாறே அகப்பாட்டுக்களை அமைத்துக்கொள்க.[1] (25) மாட்டு என்பது-அகன்றுபொருள் கிடப்பச்செய்யினும் அணுகிக்கிடப்பச் செய்யினும் இருவகையானும், சென்று பொருள் முடியுமாற்றுற் செய்வது. இது மேற்கூறிய 'கோள்" என்பதன்பாற்படுவதேயாம். (26) வண்ணமென்பது ஒரு பாவின்கண் நிகழும் ஓசை விகற்பம்.

இவ்விருபத்தாறு உறுப்பும் யாப்புக்கு இன்றியமையாத பகுதிகள் எனவும், இனிவரும் எட்டுறுப்பும் அங்ஙனமன்றி ஏற்றபெற்றி வருமெனவுங் கூறுவர். அவையாவன:-அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன. இவற்றுள்—(1) அம்மை என்பது. சிலவாய மெல்லிய சொற்களால் அறம்பொருளின்பம் என்பவற்றின் இலக்கணமும் இலக்கியமும் கலந்துவரச்செய்வது; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும்—இங்ஙனம் இலக்கணமும் இலக்கியமும் கலந்துவரச் செய்யப்பட்டமையின் இவ் வம்மைப் பாற்படும் என்பர். இந்நூல்களில், இவ்விலக்கணமும் இலக்கியமும் தாவித்தாவி (இடையிட்டு) வருதலின், அவை 'தாய பனுவல்' எனவும்படும். "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை—யற்றே தவத்திற் குரு" (குறள்)—இஃது இலக்கணங் கூறியது; "யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்காற்—றானோக்கி மெல்ல நகும்" இஃது இலக்கியங்

---

[1] "அணியு மமிழ்துமென் னாவியு மாயவன்" என்னுந் திருக்கோவையாரிலும் இத்திணை முதலிய உறுப்புக்களைப் பேராசிரியர் கூறுதல் காண்க (5).

கூறியது. இங்ஙனமே ஏனை நூல்களினுங் காண்க. (2) அழகென்பது, திரிசொற்பயிலாது சீர்புனைந்து யாக்கப்படுவது; அகநானூறு முதலிய பண்டை நூல்கள் இப்பகுதியன என்பர். (3) தொன்மை என்பது, உரைவிரவிப் பழைய கதை[1] பொருளாகச் செய்யப்படுவது; பெருந்தேவனாராற் செய்யப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் இப்பகுதியினவாம். (4) தோல் என்பது, மெல்லென்ற சொற்களால் விழுமிய பொருளைக் கூறுவதும் ஆசிரியப்பாட்டாற் பழைய கதையொன்றன்மேல் தொடுக்கப்படுவது மாகும். இது சிந்தாமணி முதலியன என்பர், (5) விருந்தென்பது புதிதாகச் செய்யப்படுவது; அந்தாதி கலம்பக முதலியனவெல்லாம் இவ்விருந்தின் பகுதியாகும். (6) இயைபென்பது, ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்ற பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றை யிறுதியாக வைத்துப் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது; மணிமேகலை பெருங்கதை முதலியவற்றுள் அமைந்த பாடல்கள் னகரவொற்றீற்றான் முடிந்து இப்பகுதியவாதல் காண்க; "மற்றவீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டிலக்கண முண்மையில் இலக்கியம் பெற்றவழிக் கொள்க; இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும்" என்பர் பேராசிரியர். (7) புதன் என்பது ஒருவகை நாடகச்செய்யுள். (8) இழைபு—இஃது ஒருவகை யிசைப் பாட்டாம். ஆக எட்டு வனப்பும் முறையே கண்டுகொள்க.

இனி, சிறப்புடைய இருபத்தாறும் சிறப்பில்லாத எட்டும் ஆகிய முப்பத்துநான்கு உறுப்புக்களின் இலக்கணங்களும் அவற்றின் வகை விரிகளும் இச்செய்யுளியலின்கண்ணே விரித்துக் கூறப்படுகின்றன. இவ்வியற்கு எழுதப்பட்டுள்ள பேராசிரியருரை அருமை பெருமை வாய்ந்ததாகும். இவ்வுறுப்புக்களை யெல்லாம் அவற்றின் உரை நயங்களுடன் முறையே இங்குக் கூறுமிடத்து மிகப்பெருகும். ஆதலின்,

---

[1] உரைதழுவிவரும் இலக்கியம் வடமொழியில் "சம்பு" எனப்படும்.

யாம் மேலே கூறிப்போந்தவைகொண்டு, இவ்வியலிற் கூறப் படுவன இன்ன என்பது சுருக்கமாக ஒருவாறு கண்டு கொள்க.

VIII. மரபியல்.

உலகவழக்குக்கும் செய்யுள் வழக்குக்கும் பொதுவாகிய மரபுகளைத் தொல்காப்பியனுர் ஒன்பதாமியலிற் கூறுகின்ருர். மரபாவது—"எப்பொருளெச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்—செப்பினர் அப்படிச் செப்புதல்" ஆகும். தொல்காப்பியத்தே, சொல்லதிகாரக் கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவும் செய்யுளியலுள் மரபென்று ஓதப்பட்ட னவுமன்றி, இருதிணைப் பொருள்களின் குணங்களாகிய இளமையும் ஆண்மையும் பொருண்மையும்பற்றிய வரலாற்று முறையும், உயர்திணை நான்கு சாதியும்பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றிவழங்கும் உலகியன்மரபும் நூன்மரபும் ஆகிய இவையெல்லாம் இம் மரபியலிற் கூறப்படுவனவாம். அவற்றுள், இளமை ஆண்மை பொருண்மைகள்பற்றி ஆசிரியர்கூறிய மரபுகளை ஆராயு மிடத்து, அவற்றிற் சில இலக்கியம்பெற்று வழங்குவன வேனும், பல, கடைச்சங்கநாளிலே வீழ்ந்த என்பது தெரிய லாம். உதாரணமாக—குழவி என்றபெயர் (மக்கட்கு இக் காலத்து வழங்கினும்), குஞ்சரம் ஆ எருமை கடமை மரை குரங்கு முசு ஊகம் முதலிய விலங்குகட்கும் ஆசிரியர் காலத்துப் பெருவழக்காயிருந்ததென்பது 19-22 சூத்திரங்க ளால் அறியலாம். இவ்வழக்குப்படி, குஞ்சரக்குழவி, ஆக் குழவி, எருமைக்குழவி, குரங்குக்குழவி, முசுக்குழவி என்றிவ் வாறு வழங்கினவாதல்வேண்டும். இதுபோலவே அப்பர் மூடு கடமை என்பவை யாட்டுக்கும், பாட்டி என்பது பன்றி நாய் நரிகட்கும் ஆசிரியர்காலத்து வழக்குக்களாகத் தெரி கின்றன (47, 64, 66). உரைகாரர், 'இவற்றுக்கெல்லாம் இலக்கியம் முற்காலத்தே வீழ்ந்தன' என்று எழுதிச்செல்லு தலால், கடைச்சங்கத்தார் காலத்துக்கு முன்பே இவ்வழக்

குக்கள் அருகினவாதல்வேண்டுமென்க. இக் காலத்தோ எனின், ஆசிரியர் கூறிய மரபுகளிற் பெரும்பாலவும் பழையனவாகவே கழிந்தன; இதற்கு இரண்டுதாரணம் வருமாறு:—'பறப்பனவற்றின் ஆண்பாற்கெல்லாம் சேவற்பெயருரித்து, ஆயின், மயிலுக்குமட்டும் அப்பெயர் ஆகாது' என்னுங் கருத்துப்பட ஆசிரியர் "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்-மாயிருந் தூவி மயிலலங் கடையே" (604) என்றூர். கடைச்சங்ககாலத்தே வழங்கிய இம்மரபு "எழுந்து முன்னுறு மஞ்ஞையஞ் சேவன் மேலேறி" என்ற கந்தபுராணக் கூற்றில் (தேவகாண். தெய்வயானை திருமணப்-192) "மஞ்ஞையஞ் சேவல்" எனப் பின்னுளில் மாறிவழங்கியமை காணலாம். இதுபற்றிப்போலும் உரைகாரர், "செவ்வேளூர்ந்த மயிற்காயின் அதுவும் (சேவலும்) நேரவும் படும்" என்று அமைத்ததூஉம் என்க. இங்ஙனமே, அளகென்ற பெண்பாற்சொல், கோழி கூகை மயில் என்ற மூன்றற்குமன்றி வழங்காதென்பது "கோழி கூகையாயிரண் டல்லவை-சூழுங்காலை அளகென லமையா" "அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே" என்ற சூத்திரங்களால் (611-612) அறியலாம். இவ்வழக்கு "அளகைப் பொறித்தகொடி யிளையோன்" எனப் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தே (அருச்சனைப். 34) ஆண் கோழிக்கும் வந்து மாறியமை காண்க. இவ்வாறே பின்னூல்களிற் காலத்துக்கேற்ப மாறிய தொல்காப்பிய மரபுகள் பலவாமென்க.

இனி, ஆசிரியர் தங்காலத்து அருகிவழங்கிய மரபுகள் சிலவற்றையும் அடியில்வரும் சூத்திரத்தாற் குறிப்பிடுவர்.

'குரங்கி னேற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையு ளாணினைச் சேவ லென்றலும்
இருணிறப் பன்றியை யேன மென்றலும்
எருமையு ளாணினைக் கண்டி யென்றலும்

முடிய வந்த அவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே"

இதனால், தொல்காப்பியர் நாளில் ஆண்குரங்கு-கடுவனென வும், கூகை-கோட்டான் எனவும், கிளி-தத்தையெனவும்' வெருகு-பூசை யெனவும், ஆண் குதிரை-சேவ லெனவும், பன்றி-ஏனம் எனவும், ஆணெருமை-கண்டி எனவும் மருவி வழங்கியன என்பது விளங்கும். "முடிய வந்த அவ்வழக் குண்மையிற்-கடியலாகா கடனறிந் தோர்க்கே" எனக் கூறப் படுவதினின்று, இம்மரபுகள் ஆசிரியர்காலத்தே அமைக்கப் பட்டு ஆன்றோர் வழக்காயின என்பது புலப்படுகின்றது. இம்மரபுப்பெயர்களுள்ளே, ஆண்குதிரையைச் சேவலென் பதும், ஆணெருமையைக் கண்டி என்பதும் ஒழிய, ஒழிந் தவை இக்காலத்தும் வழங்குவனவே. உரைகாரர் இச்சூத் திரவுரையில் எழுதுவன குறிப்பிடற்பால;—" கடுவனு மறியு மக்கொடி யோனையே"—ஆண்குரங்கு (கடுவன் எனப் பட்டது). இதனைக் கடியலாகாதெனப்பட்ட இழுக்கென்னை எனின், மக்கட்கும் வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றன போலும். ... ... குதிரையைச் சேவலென்றல் இக்காலத் தரிதாயிற்று...எருமையேற்றினையும் கண்டி என்பபோலும்: அது காணலாயிற்றில்லை" எனக் காண்க (பக். 794). இவற் றால், தொல்காப்பியனார்காலத்தே குதிரைச் சேவல்,எருமைக் கண்டி என ஆண்பெயர்கள் வழங்கியதோடு, நம்காலத்துப் பெருக வழங்கும் பெயர்களிற் சில அவர்நாளில் அருகிவழங் கியமையும் அறியப்படும்.

உயர்திணை நான்குசாதியும்பற்றிய மரபுகள் சிலவும் ஆசிரியர் கூறுவர். அந்தணர்க்குரிய கருவிகள்—முந்நூல், குண்டிகை (கரகம்), முக்கோல், மணை (ஆதனம்) என்பன; அரசர்க்குரிய கருவிகள்:—படை கொடி குடை முரசு புரவி களிறு தேர் தார் முடி முதலியன. இவற்றுள் அந்தணர்க் குரிய வேள்விக்கருவிகள் அரசர்க்குரியவாகவும் வரும். இனிப் பாடாண்டிணையுள், பரிசில்வேண்டுவதும் விடுப்பது மாகிய துறைகளிலே, கொடுக்குந்தலைவனுக்கு வழங்கும்

காளை இளையோன் நெடுந்தகை செம்மல் என்ற சொற்கள் அரசர்க்குச் சாதிவகையாற் சொல்லத்தக்கன. அந்தணர்க் காயின், புனைந்துரைவகையானே அவை கூறப்படும், எல்லா வருணத்தாரும் அவரவர் ஊர்ப்பெயர் கருவிப்பெயர் என் பனவற்றைச் சார்த்தி இயற்பெயர்வழங்கப்பெறுவர். நான்கு சாதியையுஞ் சிறப்பிக்குமிடத்து அந்தணரைப் பிரமனோடும், அரசரை மாயனோடும், வணிகரை நிதியின்கிழவனோடும் (குபேரன்), வேளாளரை வருணனோடும் ஒப்பித்துக் கூறல் மரபாம். இனிப் படைத்தொழிற்கு உரியவர், அந்தணரும் வேளாளருமொழிந்த அரசரும் வணிகருமேயாவர். இவ ருள் வைசியருடைய சாதித்தொழில், வாணிகவாழ்க்கையும் எண்வகைக்கூலமாகிய பயறு உழுந்து முதலிய விளைத்தலு மாகும். இவர்க்குச் சூடும் பூவும் குலப்பூவும் தனியே உண்டு. இனி, வேளாண்மாந்தர் பலவகைத் தொழிலினராயினும், உழுதூண்தொழிலே மிகுதியுமுடையர். அன்றி, வேந்தர் அபிமானித்துக் கொடுக்குமிடத்து இவர்க்குப் படை கண்ணி (முடிப்பூ)களும் உரியன. அரசர் இல்லாவிடத்து, அந்த ணரே அவ்வரசியல்பூண்டு நாடாளுதற்கு உரியர்: குறுநில மன்னர்க்கும் மேற்குறித்த அரசர்க்குரிய பகுதிகள் கொள் ளப்படுமாயினும், இழிந்தோராகிய திணை நிலமக்களுக்கு இவை கூறப்படா என்பர் (959—940).

அஃறிணைக்குரியமரபுகளாக இவ்வியலிற் கூறப்பட்டன வற்றுட் சிறந்தன சில வருமாறு:—புறத்தில் வயிரமுடைய பனை தெங்கு கமுகு முதலியனவெல்லாம் 'புல்' என்றும், அகத்து வயிரமுடைய இருப்பை புளி ஆச்சா முதலியவை 'மரம்' என்றும் வழங்கப்படும். இவற்றுள், புற்சாதியின் உறுப்புக்கள் தோடு மடல் முதலியன; மரச்சாதியின் உறுப் புக்கள் இலை முறி முதலியன; இவையிரண்டற்கும் பொது வாக வழங்கும் உறுப்புக்கள் காய் பழ முதலியனவாம் (941—944).

இனி, ஆசிரியர், உலகவழக்குக்களுக்கும் மரபுநிலைதிரி யாமற் கூறவேண்டுமென்றும், அம்மரபு திரியவழங்கப்படு

மாயின் உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிது பிறிதாகுமென்றும், உலக நிகழ்ச்சியெல்லாம் உயர்ந் தோரைப்பற்றியே நிகழ்வனவாதலின் "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே" என்றும், பிறவுங் கூறுவர். உலகிய லெல்லாம் மரபிற்றிரியாச்சொல்லோடு தழுவிவரல்வேண்டு மெனக் கூறப்படுஞ்சூத்திரத்தே (945) "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்—கலந்த மயக்கம் உலகம்" என்று ஆசி ரியர் கூறுவர். அதனுல், இவர் பஞ்சபூதக்கோட்பாடுடைய வைதிகமதத்தவர் என்பது தேற்றமாம்.[1] இவ்வாறே "அள பிற் கோடல் அந்தணர் மறைத்தே," "மறையோராறே", "அந்தணர் திறத்தும் ஐயர் பாங்கினும்", "தந்தையரொப்பர் மக்களென்பதனுல்", 'முக்கோல்......அந்தணர்க்குரிய' எனத் தம் வைதிகச்சார்பை எண்ணிறந்த விடங்களில் ஆசிரியர் குறிப்பிட்டுப்போவர்.

நன்னூலார் பாயிரத்துக்கூறியதுபோல, ஆசிரியர், நூன்மரபுகள் பலவும் இவ்வியலின் இறுதியில் விரித்தோது வர். அவை நூலினிலக்கணமும், முதனூல் வழிநூல் என்ற அதன்பகுதியும், தொகுத்தல், வகுத்தல் தொகைவிரி மொழி பெயர்ப்பு என்னும் வழிநூற் பிரிவுகளும் தந்திரவுத்தியும் பிறவுமாம். "மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்" என்ப தனையும் வழிநூல் வகையாக ஆசிரியர் கூறுதலால், அவர் காலத்தே வடநூலினின்று தமிழில் நேர்படப் பெயர்க்கப் பட்ட நூல்கள் வழங்கியமை நன்குணரப்படும். தொல்காப் பியமுடிவிற் கூறப்பட்ட தந்திரவுத்தி முப்பத்திரண்டும், கௌடில்ய—அர்த்தசாஸ்திரத்தின் இறுதியத்தியாயத்தில் அதுவே தலைப்பெயருடன் கூறப்பட்டிருத்தல் ஆராய்ந்து கொள்ளத்தக்கது.

மேற்கூறியவாறு, சூத்திரங்களாற் குறிக்கப்பட்ட வழக் குக்களேயன்றி, உரைகாரர் கூற்றுக்களால் அறியக்கிடப்பன வும் பலவாம். இவ்வியலில்வரும் "மரபுநிலைதிரிதல்" என்ற

[1]பௌத்தர் நான்குபூதவகையே கொள்வர்.

சூத்திரவுரையில், உரைகாரர் மிறைக்கவி (சித்திரகவி)களைப் பற்றிக் கூறுமிடத்து, "இனி நிறைமொழி மாந்தர், மறை மொழி போல்வனசில மிறைக்கவி பாடினருளரென்பதே பற்றி, அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபன்று என்றற் கும் இது கூறினன் என்பது; அவை—சக்கரம், சுழிகுளம், கோமுத்திரிகை, ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று என்றாற்போல்வன. இவை, மந்திரவகையானன்றி, வாளாது மக்களைச் செய்யுள்செய்வார்க்கும் அகனைந்திணைக்கும் மர பன்றென்பது கருத்து; அல்லாதார், இவற்றை எல்லார்க்கும் செய்தற்குரியவென இழியக்கருதி, அன்னவகையான் வேறு சில பெய்துகொண்டு அவற்றுக்கும் இலக்கணம் சொல்லுப. அவை இத்துணை என்று வரையறுக்கலாகா: என்னை? ஒற்றை இரட்டை புத்தி வித்தாரம் என்றாற்போல்வன பலவுங் கட்டிக்கொண்டு, அவற்றானே செய்யுள்செய்யினுங் கடிய லாகாமையின் அவற்றிற்கு வரையறை வகையான் இலக் கணங் கூறலாகா என்பது" என்று எழுதுவர். இதனால், சக்கரம் சுழிகுளம் ஏகபாத முதலிய சித்திரகவிகள் (மிறைக் கவி) மந்திரவகையால் தேவர்பொருட்டுச் செய்யப்படுவன வன்றி, மக்கட்குரியனவாக முற்காலத்தார் கருதினரல்லர் என்பது போதரும். தேவார முதலியவற்றில் ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று முதலிய மிறைக்கவிகள், மேற்கூறியவாறே தேவரைப் பற்றியே அமைந்திருத்தலுங் கண்டுகொள்க.

இன்னும், இம் மரபியற் சூத்திரங்களாலும் அறியப்படும் மரபுகள் பலவேனும், சிறப்பும் சரித்திரக்குறிப்பு முடைய னவே ஈண்டுஎடுத்துரைக்கப்பட்டன. ஏனையவற்றை ஈண்டு உரைப்பிற் பெருகும்.

முற்றும்.

ஸ்ரீ

பொருட் குறிப்பு.

பிழையுந் திருத்தமும்

பக். வரி.	பிழை	திருத்தம்
10– 4	நச்சிஞர்கினியர்	நச்சிஞர்க் கினியர்
5	உலகிலே	உலகியலே
8	(பக்–5–6)	(பக்–5–6)
31	இராக்கத.. எட்டாவ தான	11-ம் பக்க அடிக்குறிப்பு
11–18	கற்ப்பியற்	கற்பியற்
19	குறிப்பிட்டுள்ளனர் (இதன்பின்)	30, 31, 32, 33 வரிகளைக் கூட்டுக
12–33	காண்டன்று	கண்டன்று
34	கா–உ	(62)
14–11	புறநாநூற்றில்	புறநானூற்றில்
15–33	கருந்து	கருத்து
16–28	கூறப்படுத்தால்	கூறப்படுவதால்
22– 4	காடு சார்ந்த இடமும் (இதன் பின்)	பொழுது காரும் மாலையும், குறிஞ்சிக்கு மலையும் மலை சார்ந்த இடமும் நிலம்
32– 9	இப்பிரிவு நால்வகை வருணத்தார்க்கு முரித்தாம்	இப்பிரிவுகள் நால்வகை வருணத்தார்க்கு முரியவாம்
43– 1	கூறிப்போத்த	கூறிப்போந்த
47–13	காக்கியன்	கார்க்கியன்
56–30	குழப்பர்ற்	குழம்பாற்
57–10	புகழ்த்து	புகழ்ந்து
63–25	சேர்த்தல்	சேர்தல்
64–12	செவ்விபார்த்தாயினும்	செவ்விக்கணுயினும்
65– 3	கொம்புடையதோர்	கொம்புடைய
32	61, 116	புறநானூறு 61, 116
66–14	நீண்டு பிறழ்ந்தும்	நீண்டும் பிறழ்ந்தும்
66–19	சோறமைத்தல்	சிறுசோறமைத்தல்
72– 5	விகற்பங்களே	விகற்பங்களை
78–26	பிறவரலாறுகளுங்	பிறவாருகவுங்
91–26	மாதங்கா	மாதங்கர்
93–23	புலப்பட்ட	புலப்பட

பக்: வரி.	பிழை	திருத்தம்
95-12	தலைவனுந் தலைவனும்	தலைவனும்
96-17	மெல்லன் சீறடி	மெல்லென் சீறடி
101-20	மணிமேகலையிற்	சிலப்பதிகார மணிமேகலைகளிற்
106-21	தலைமகன் வாயில்களுந் தலைமகள்	தலைமகள் வாயில்களுந் தலைமகன்
108- 2	கேட்டும்	கேட்கும்
118-20	திணையிரண்	திணையிரண்டும்
23	இந்நூல் அதனை	அந்நூல் இதனை
31	ஸோத்திரம்	ஸோத்திறம்
123-26	சூடுல்	சூடுதல்
126- 8	குடைநிலை	கொடைநிலை
135- 3	வடநூ	வடநூல்களிலே
140-24	உரியது	உரியன
142-16	கூடாததாகின்றன	கூடாதவாகின்றன
143-33	கிரிந்து	திரிந்து
150-27	கோமறஞ்சடையற்	கோமாறஞ்சடையற்
158-20	தானே	தாமே
165-18	ஆராயற்பாலன	ஆராயற்பாலது
169-16	வேண்டுமென்பது	வேண்டுமென்க

இந்நூலாசிரியர் இயற்றிய பிற நூல்கள்.

1. வேளிர் வரலாறு
2. *கட்டுரை மணிகள்
3. சேரன் செங்குட்டுவன்
4. *ஆழ்வார்கள் கால நிலை
5. *சாஸனத் தமிழ் கவி சரிதம்
6. ஆராய்ச்சித் தொகுதி
7. *இலக்கியக் கட்டுரைகள்
8. *வினைத் திரிபு விளக்கம்
9. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
10. சேரவேந்தர் தாய வழக்கு

பதிப்பித்த நூல்கள்

11. *பெருந்தொகை
12. நாற்பொருட் குறிப்பு
13. நிகண்டகராதி
14. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு)

* குறியிட்ட நூல்கள் மேகண்ட விலாசத்தில் கிடைக்கும். இதர நூல்கள் அச்சாகும்.

M. R. நாராயண ஐயங்கார்,

அட்வொகேட், மானாமதுரை.

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை:—60.